இந்திய இலக்கியச் சிற்பிகள்

# ம.பொ. சிவஞானம்

பெ.சு.மணி







ம.பொ. சிவஞானம்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
பட உதவி : நேஷனல் மியூசியம், புது தில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# ம.பொ. சிவஞானம்

பெ.சு. மணி

சாகித்திய அகாதெமி

*Maa.Po. Sivagnanam: Monograph by Pe.Su. Mani In Tamil*
Sahitya Akademi, New Delhi. 2005. Rs. 25.00

© சாகித்திய அகாதெமி
முதல் வெளியீடு: 2005
ISBN 81-260-12085 -7

**சாகித்திய அகாதெமி**

தலைமை அலுவலகம்:
இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லை 110 001.

விற்பனை

'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001.

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக் கட்டிடம்,
டாக்டர் அம்பேத்கார் வீதி, பெங்களூர் 560 001.

443, குணா காம்பளக்ஸ் (பழைய எண் 303),
அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை 600 018.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா 700 053.

172, மும்பய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், மும்பய் 400 014.

**விலை: ரூ. 25/-**

அச்சிட்டோர் : ராஜ் எண்டர்பிரைசஸ், சென்னை - 14.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | வாழ்க்கை | 7 |
| 2. | விடுதலைப் போர் | 41 |
| 3. | தமிழரசுக் கழகத் தலைவர் | 51 |
| 4. | தமிழ் இதழியல் வரலாற்றில் ம.பொ.சி. | 67 |
| 5. | இலக்கியப் பணி | 78 |
| 6. | ம.பொ.சி.யின் மொழிச் சிந்தனைகள் | 87 |
| 7. | ம.பொ.சி. நோக்கில் தமிழ்ப் பண்பாடு | 105 |
| 8. | சமூக சீர்திருத்த நோக்கு | 121 |
| 9. | ம.பொ.சி.யின் நூல்கள் | 129 |
| | பின் இணைப்பு - I | 155 |
| | பின் இணைப்பு - II | 160 |

# நூலாசிரியர் உரை

“பாரதி புகழ் பரப்பும் ம.பொ.சி. “(1982), “தடைகளை வென்று தலைமைபெற்ற ம.பொ.சி.” (1985); “ம.பொ.சி பார்வையில் தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு” (2004) எனும் என்னுடைய நூல்களைத் தொடர்ந்து, “ம.பொ.சிவஞானம்” எனும் இந்நூல் வெளிவருவதைப் பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

ம.பொ.சி.யின் தமிழரசுக் கழகத்தில் 1950-இல் சேர்ந்து தொண்டாற்றத் தொடங்கினேன். போகப்போக அவருடைய “உள்வட்ட” நட்புச் சுற்றத்தில் ஒருவனாக என்னை அவர் ஏற்றுக் கொண்டார். இதனால் அவருடைய அகப்புறச் சிந்தனைகளையும், எழுத்துகளையும், உரையாடல்களையும் மிக நெருங்கித் துய்க்கும் வாய்ப்பு எனக்கு அமைந்தது. இதனால் அவருடையப் படைப்புகளில் “ஆழ்ந்திருக்கும் ஆசிரியர் உள்ளத்தை” அறிந்து புரிந்துக் கொள்வது எளிதாகிவிட்டது. இந்த அனுபவம் இந்நூலைச் சரியானமுறையில் எழுத எனக்குத் துணை புரிந்துள்ளது.

அவருடைய பல்வேறுத் துறைகளின் ஆளுமைத் திறனை, ஆய்வும் புலமையை இயன்றளவு இந்நூலில் வெளிப் படுத்தியுள்ளேன் என உறுதியாக நம்புகின்றேன்.

அவருடைய பிறந்த நூற்றாண்டுவிழா இன்னும் ஓராண்டு இறுதியில் கொண்டாடப்படவுள்ளது. இந்நூல் வெளியீடு அந்த விழாவிற்கு முன்னோட்டமாக கருதத்தக்கது.

சாகித்திய அக்காதமி தக்க தருணத்தில் இந்நூல் எழுத எனக்கு வாய்ப்பளித்தமைக்கு உளமார நன்றி கூறுகின்றேன். இந்திய இலக்கியச் சிற்பிகள் வெளியீடுகள் வாயிலாக சாகித்திய அக்காதமி இந்திய இலக்கிய வரலாற்றைச் செழுமைப்படுத்தி வருகின்றது. இந்தப் பங்களிப்பில் இந்நூலும் இணைகின்றது என்றே எண்ணுகிறேன்.

**பெ.சு.மணி**

# 1. வாழ்க்கை

## "எனது போராட்டம்"

26.06.1906இல் பிறந்து 03.10.1995 இல் அமரரான ம.பொ.சி.யின் தனி மனித வாழ்க்கையும், பொது வாழ்க்கையும் போராட்டங்கள் மலிந்தனவாகும். தமது தன்வரலாற்று நூலிற்கு "எனது போராட்டம்" என்று பெயரிட்டதற்கான விளக்கத்தை நூலின் முன்னுரையில் பின்வருமாறு எழுதியுள்ளார்

"என் கடந்த கால வாழ்க்கை, போராட்ட மயமாகவே இருந்திருப்பதால், எனது விருப்பத்திற்கு மாறாக, போராட்டச் சூழ்நிலையிலேயே இந்தச் சமுதாயம் என்னை வைத்து விட்டதால் "எனது போராட்டம்" என்னும் தலைப்பையே நான் தேர்ந்தெடுத்தேன்."

26.05.1974 இல் சென்னையில் இந்தியக் குடியரசுத் தலைவர் வி.வி.கிரி வெளியிட்ட "எனது போராட்டம்", அவருடைய வாழ்க்கையின் முதல் அறுபதாண்டுக் கால வாழ்க்கையை எடுத்துரைக்கின்றது.

'எனது போராட்டம்' நூலிற்கான இரண்டாவது பாகத்தை 1967 முதல் 1987 வரையிலான தன் வரலாற்றை ம.பொ.சி., தம்முடைய 'செங்கோல்' வார இதழில் 20.3.1988 முதற்கொண்டு எழுதியுள்ளார். இந்த வரலாறு நூலுருவாக்கம் பெறவில்லை.

## பிறப்பும் சூழலும்

சென்னையில் ஆயிரம் விளக்கு எனும் வட்டத்தில் சால்வன்குப்பம் என்னும் பகுதியில் 1906 ஆம் ஆண்டில் சூன் திங்கள் 26-ஆம் நாளில் ம.பொ.சி பிறந்தார்.

மயிலாப்பூர் பொன்னுசாமி சிவஞானம் எனும் விரிவைக் கொண்ட 'ம.பொ.சி.' எனப்படும் மூன்றெழுத்துகள் பிற்கால வளர்ச்சியில் மலர்ந்தன.

ம.பொ.சி.யின் தந்தை பெயர் பொன்னுசாமி கிராமணி; தாயார் பெயர் சிவகாமி. கள்ளிறக்கும் குலத்தொழிலில் ஈடுபட்டிருந்த பொன்னுசாமியின் குடும்பம் வறுமைப் பிடிப்பிலே சிக்கித் திணறியது. தந்தையின் பயங்கர குடிப்பழக்கம் ஒருபுறம் தாக்க, அன்னையின் தேவாரம், திருவாசகம்,

திருவருட்பா முதலான பக்திப் பாடல்கள் போதனை மற்றொருபுறம் துணை நிற்க, ம.பொ.சி.யின் வாழ்க்கைப் பயணம் தொடங்கியது. சோதிடர் வைத்த ஞானப்பிரகாசம் எனும் பெயரைச் சுருக்கிப் பெற்றோர் 'ஞானம்' என அழைத்தனர். இப் பெயர் சிறிய திருத்தம் பெற்றுச் சிவஞானம் ஆயிற்று.

பள்ளியில் வறுமைச் சூழல் பின்தொடரச் சேர்க்கப் பெற்ற சிவஞானம், மூன்றாம் வகுப்பை அடைந்த பொழுது, புத்தகங்கள் வாங்க வழியில்லாததால், மூன்று மாதங்களிலேயே பள்ளிப் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

("என்னுடைய வாழ்க்கையிலே எனக்கேற்பட்ட பெரிய விபத்து ஒன்று உண்டென்றால், கல்வி பயில வேண்டிய பருவத்தில் பாட்டாளியாக மாறிய கொடுமையாகும்" என்று ம.பொ.சி. உளம் நொந்து குறிப்பிட்டுள்ளார்.)

பத்து வயது தொடங்குவதற்கு முன்பாகவே வேலைக்கு அனுப்பப்பட்டார். முன் பணம் பத்து ரூபாய் கிடைக்கும் என்பதற்காக அவருடைய பெற்றோர் வேலைக்கு 'விரட்டி' விட்டனர்.

"பிறந்து பேசத் தெரிந்த நாள் தொட்டு 'வறுமை' எனும் கொடிய அரக்கனோடு போராடிக் கொண்டு" வாழ்க்கையை தொடங்கிய ம.பொ.சி., 'முன் பணம் பத்து ரூபாய்க்காக வேலைக்கு அனுப்பப் பெற்றதை," சரியாகச் சொன்னால் "பத்து ரூபாய்க்கு என்னை அடகு வைத்து விட்டார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த 'அடகு' மீட்டெடுபதற்கு இரண்டு ஆண்டுகள் ஆயிற்று. 'அடகு' பிடித்த எஜமான் அடித்துக் கொடுமைப்படுத்தினான்.

கள்ளிறக்கும் தொழிலாளியின் மகனாகப் பிறந்த ம.பொ.சி. அந்தத் தொழிலில் ஈடுபடாமல், மிகக்குறைந்த ஊதியம் தந்த வேறு பலத் தொழில்களில் ஈடுபட்டார். கட்டிடத் தொழிலில் சிற்றாளாகவும், பீடி சுற்றும் தொழிலாளியாகவும் சில காலம் வேலை பார்த்து நெசவுத் தொழிலில் எட்டாண்டுக் காலம் வேலை பார்த்தார். இதன் பின்னர் தான் அவர் அச்சுக் கோர்க்கும் தொழிலில் நிரந்தரமாக ஈடுபட்டார். அச்சுக் கோர்க்கும் தொழில் ம.பொ.சி.யின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தைத் தந்தது. ஆம்; "மரக் குடிசையில் இருந்து வெண்மாளிகை வரை" என்று ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாகப் புகழ் பெற்றது போல. அச்சுக் கோர்க்கும் தொழிலாளி. அரசியல் தலைவராக வளர்ச்சி பெற அச்சுக் கோர்க்கும் தொழில் வித்திட்டது.

அச்சுக் கோர்க்கும் தொழிலை இயந்திர கதியில் செய்யாமல். அச்சுக்கு வரும் எழுத்துகளையெல்லாம் ஊன்றிக் கற்று அச்சுக் கூடத்தை

கல்விக் கூடமாக மாற்றிக் கொண்டார் ம.பொ.சி. இவ்வகையில் "விநோதினி", "தமிழ் நாடு" எனும் இதழ்களின் அச்சுக்கூடங்கள் பயன் தந்தன.

## அச்சுத் தொழிலாளி வாழ்க்கை முடிந்தது.

புகழ் பூத்த விடுதலைப் போராட்ட வீரர் டாக்டர். பி. வரதராஜுலு நாயுடுவின் 'தமிழ்நாடு' இதழில் அச்சுக் கோர்ப்பாளராகப் பணி புரிந்து வந்த காலத்தில் 1935 தொடக்கத்தில் தமிழ்நாடு அச்சகத்தில் நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ம.பொ.சி. ஈடுபட்டார். வேலை நிறுத்தத்தில் சமரசம் ஏற்பட்ட பொழுது, ம.பொ.சி. தவிர பிற தொழி-லாளர்கள் வேலைக்குத் திரும்பிவிட்டார்கள். டாக்டர் நாயுடு ம.பொ.சி-யை மன்னிப்புக் கடிதம் எழுதித் தரச் சொன்னார். ம.பொ.சி. மறுத்தார்.

"இதற்குப் பின் ஊதியத்துக்கு உழைக்கும் தொழிலாளியாகவோ, வேறுவகை சிப்பந்தியாகவோ நான் எங்கும் எவரிடமும் தொழில் புரியவில்லை" என்று ம.பொ.சி. எழுதியுள்ளார்.

வறுமைச் சூழலில், கையில் காசுகிடைத்தால் 'உணவா? புத்தகமா?' எனக் கேள்வி எழும்போது ம.பொ.சி. பட்டினிக் கிடந்து புத்தகத்தை வாங்கிப் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார். இவ்வாறு, வறுமையானது. அறிவுத் தேடலுக்குத் தடைசெய்யவிடாமல் பார்த்துக் கொண்டார், ம.பொ.சி.

1927 இல் தாய் மாமன் மகள் திலோத்தமையைத் திருமணம் செய்து கொண்டார். ம.பொ.சி. எதிர்பாராத விதமாக இதய நோயால் திலோத்தமை காலமானார். வருவாய்க்குரிய தொழில் இல்லாத நிலையில் நடந்த திருமணமும், அன்பு மனைவியின் திடீர் மரணமும் ம.பொ.சி.யின் எதிர்காலத்தைப் பற்றிக் கேள்விக் குறிகளை எழுப்பின.

## இந்திய தேசிய அரசியல் பிரவேசம்

இந்திய தேசிய அரசியலில் 1919 இல் தோன்றிய காந்தி சகாப்தம் ம.பொ.சி.யை விடுதலைப் போரில் ஈர்த்தது.

"எழுத்தறிவற்ற ஏழைத் தொழிலாளியின் மகனாகப் பிறந்து எழுத்தெண்ணிக் கோக்கும் எளிய அச்சுத் தொழிலாளியாக வளர்ந்த என்னை அரசியல்வாதியாக மாற்றிய பெருமை காந்தியடிகளுக்கே உரியது. அடிகளைத் தலைவராக ஏற்று அவரது காந்தியத் தத்துவத்தில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்து இந்திய விடுதலைப் போரில் நான் ஈடுபட்டில்லையானால். நான் யார்? எனக்கென ஒரு சரித்திரமேது? மக்கள் மத்தியிலே எனக்கேது இடம்?" இவ்வாறு ம.பொ.சி. காந்தியடிகள் மறைவு குறித்து 1-2-1948 ஆம் 'தமிழ் முரசு' இதழில் நெஞ்சக்கனகல்லும் நெக்குருக எழுதினார்.

ம.பொ.சி.யின் அரசியல் வாழ்க்கை அவருடைய பதினேழாவது வயதில் தொடங்கியது 1923 இல் காங்கிரஸின் உட்பிரிவாகத் தோன்றிய சுயராஜ்யக் கட்சி பங்கேற்ற இந்திய சட்டசபை, சென்னை ராஜ்ய சட்ட மன்றத் தேர்தலில் அழைப்பாரின்றியே வேட்பாளர்களுக்கு ஆதரவாகத் தொண்டாற்றினார்.

1927 இல் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் ஆண்டு சந்தா செலுத்தி முறைப்படி உறுப்பினரானார் ம.பொ.சி.

1928 இல் நாடு முழுவதும் நடைபெற்ற சைமன் கமிஷன் பகிஷ்கரிப்பில் ம.பொ.சி. பங்கேற்றார். இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்குவது பற்றி ஆய்ந்து அறிக்கை தர பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தால் சைமன்பிரபு தலைமையில் அமைக்கப் பெற்ற கமிஷன், சைமன் கமிஷன்.

1930இல் சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் 'ஆந்திரகேசரி' டி.பிரகாசம் தலைமையில் நடைபெற்ற உப்பு சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டார் ம.பொ.சி.

## கிராமணி குல மகாஜன சங்கத்தில்

ம.பொ.சி.யின் முதல் மேடைப் பேச்சு, கள்ளுக்கடை மறியலை ஒட்டி நிகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கள்ளிறக்கும் தொழிலாளர்களைக் கொண்ட கிராமணி குலத்தில் பிறந்த ம.பொ.சி., சுயசாதி முன்னேற்றத்திற்குப் பாடுபட்டதும் பின்னர் சாதி முகாமிலிருந்து விடுபட்டதும் அவருடைய வாழ்க்கை நெறிமுறையைப் புரிந்து கொள்ள அறியத்தக்கன.

தமது குடிப்பிறப்பைப்பற்றி 'எனது போராட்டம்' நூலில் கூறியுள்ளதாவது :

"எனக்குச் சாதி பாகுபாட்டிலே நம்பிக்கை கிடையாது. ஆயினும் இன்றைய சமுதாய நியதிப்படி நானும் ஒரு சாதியைச் சேர்ந்தவன்தானே! அந்தச் சாதிக்கு சான்றோர் என்று பெயர். இது, 'சாணார்' எனவும் மருவி வழங்குகின்றது. 'சான்றோர்' என்போர் 'கிராமணி' - 'நாடார்' என்ற இருபிரிவுக்களாக நாளடைவில் பிரிந்துவிட்டனர்."

ம.பொ.சி. அவர்கள் இளமையில் இருந்தே 'சுயசாதிப்பற்று, பிற சாதிப் பகைமை' எனும் சாதிய வாதத்திற்கு அடிமையாகாதவர். ஆயினும், பிற்படுத்தப் பெற்ற, ஒடுக்கப் பெற்ற சாதிகளின் முன்னேற்றம், தேசிய முன்னேற்றம் ஆகும் எனும் நோக்குடையவர். இந்த நோக்கில் சவரத் தொழிலாளர், சலவைத் தொழிலாளர், அரிசன மக்கள் ஆகியோர் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டது போல கிராமணி குல முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார், ம.பொ.சி.

சுயசாதி முன்னேற்றத்திற்கு ம.பொ.சி. பாடுபட்டது 1934 முதல் 1937 வரையிலாகும். இது குறித்து அவர் கூறக் கேட்போம்.

"என்னைப் பொறுத்தவரை சுயசாதித் தொண்டில் நான் ஈடுபட்டிருந்த காலம் நான்கே ஆண்டுகள்தான். அந்த நான்கு ஆண்டுகளிலே சாதி வெறிக்கு நான் இரையானதில்லை. பிற சாதிப் பகைமை எனது நெஞ்சைத் தொட்டதில்லை. பின்னடைந்துள்ள சகோதர சாதியினரின் முன்னேற்றத்திற்குத் தொண்டு புரிவதிலும்நான் கருத்து செலுத்தியிருக்கிறேன். குறிப்பாக, சவரத் தொழிலாளர், சலவைத் தொழிலாளர், தோட்டித் தொழிலாளர் ஆகிய தொழில் வம்ச சாதியினர் சங்கங்கள் எனக்கு அழைப்பு விடுத்தபோதெல்லாம் அந்த அழைப்பை ஏற்று அவர்களுடைய கூட்டங்களிலும் மாநாடுகளிலும் கலந்து கொண்டு அவர்களுடைய முன்னேற்றங்களுக்கு வழிவகைகள் கூறியிருக்கிறேன். அதே உணர்ச்சியில் தான் கிராமணி சாதியினருக்காகவும் நான் சங்கம் அமைத்துப் பாடுபட்டேன்."

ம.பொ சி., கிராமணி குல மகாஜன சங்கத்தின் செயலாளராக பணியாற்றத் தொடங்கிய காலத்திலேயே காந்தியடிகளின் தேசியப் பாதையிலே மகாகவி பாரதியாரைக் கைவிளக்காகக் கொண்டு தலைமைத் தகுதி பெறப் பயணம் மேற்கொண்டார்.

'கிராமணி குலம்' எனும் மாதமிருமுறை இதழ் 1936 முதல் 1937 வரையில் வெளிவந்தது. இதன் ஆசிரியர் உமாபதி கிராமணியார் எம்.ஏ;பி.டி.; பதிப்பாசிரியர் ம.பொ.சி. இக்கால கட்டத்தில் அவர் எம்.பி. சிவஞானம் என்றே குறிப்பிடப்பெற்றார்.

'கிராமணி குலம்' இதழில் காங்கிரசிற்குக் கிராமணி சாதியினர் ஆதரவளிக்க வேண்டும் என்று துணிந்து எழுதினார் ம.பொ.சி. 'துணிவு' என்று குறிப்பிடுவதற்கு ஒரு காரணம் உண்டு. காங்கிரசின் மதுவிலக்கு கொள்கை, கிராமணி சாதியையே அழித்துவிடும் என்று பாமரகிராமணி மக்கள் நம்பினர். மதுவிலக்கு பிரசாரத்தை ம.பொ.சி. முழுமனதுடன் ஆதரித்ததால் அவர் கிராமணி மக்களால் 'குலத்துரோகி' என்றும் தூற்றப் பெற்றார்.

'குலமா? தேசமா?' எனும் கேள்வி எழுந்தபொழுது 'தேசமே' என்ற இலட்சியத் துடிப்புடன் காந்தியடிகளின் மதுவிலக்குக் கொள்கையை முழுமனதுடன் ஆதரித்தார், ம.பொ.சி.

ம.பொ.சி. இலட்சியப் பற்றுடன் மதுவிலக்கு தம்முடைய சுயசாதியின் பிழைப்பிற்கு வழியில்லாமல் செய்துவிடும் எனத் தெரிந்திருந்தும், உறுதியுடன் நின்றது ஒப்பற்றதாகும்.

கள்ளுக்கடை மறியலை காங்கிரஸ் கட்சி நடத்தியபொழுது, காங்கிரஸ் - காந்தி எதிர்ப்புப் பிரசாரம் கிராமணி குலத்தாரிடையே

முடுக்கிவிடப்பட்டது. கள்ளுக்கடை மறியலை எதிர்த்துக் கிராமணி குலத்தினர் நடத்தியக் கூட்டத்திலே பார்வையாளராகச் சென்ற ம.பொ.சி. கூட்டத்தில் பேசியவர்களில் சிலர் காங்கிரசையும், காந்தியடிகளையும், மறியல் தொண்டர்களையும் இழிவுப்படுத்தியதால் பொறுமையிழந்து உணர்ச்சிவசப்பட்டார். பேசுவதற்குத் தமக்கு அனுமதி தர வேண்டுமென்று கூட்டத் தலைவரிடம் அனுமதி கேட்டார். சாதிப்பற்றுக் காரணமாகக் கள்ளு மறியலை தடைசெய்ய வேண்டுமென்ற கோரிக்கையை ம.பொ.சி. ஆதரித்து வருகிறார் என்று தலைவர் தவறுதலாக நினைத்து ம.பொ.சியைப் பேசுவதற்கு அனுமதித்தார். இதைத் தொடர்ந்து நிகழ்ந்ததை ம.பொ.சி. பின்வருமாறு எழுதியுள்ளார்.

"நான் சுமார் அரைமணி நேரம் பேசினேன். கூட்டம் எதற்காகக் கூட்டப்பட்டதோ, அந்தப் பிரச்னையிலே நான் புகவில்லை. புகுவது அபாயமென்பதனை நான் நன்றாக உணர்ந்திருந்தேன். அதனால், கள்ளுக்கடை முதலாளிகளான கிராமணிகள், கள்ளிறக்கும் தொழிலாளர்களான கிராமணிகளுக்கு - சுயஜாதியினருக்கு - இழைக்கும் கொடுமைகளை வருணித்து, அதற்குப் பரிகாரம் காணவும் அந்தக் கூட்டம் முடிவெடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினேன்..... எப்படியோ, பிரச்னையைத் திசை திருப்பிவிட்டேன். ஆயிரக்கணக்கான தொழிலாளர்களிலே பலர் தங்கள் கூலி உயர்வு பற்றியும் கூட்டம் முடிவு செய்ய வேண்டுமென்று கூறினர். அதனால் கூட்டத் தலைவர் கள்ளுக்கடை மறியலைத் தடை செய்யக் கோரும் தீர்மானத்தை முன்மொழியாமலே தந்திரமாக கூட்டத்தை முடித்துவிட்டார்."

ம.பொ.சி.யின் இந்தக் கன்னிப்பேச்சு, பேச்சுக் கலையில் அவர் கண்ட சாதனைகளுக்கு வித்தாக அமைந்தது. "என் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த கூட்டம் இதுதான்" என்று அவரே குறிப்பிட்டுள்ளார்.

சாதிச் சங்கத்தில் மூன்றாண்டுகள் காலமாக பங்கேற்ற ம.பொ.சி., சாதி முகாமிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டார். "பிற்பட்ட அல்லது மிக பிற்படுத்தப்பட்ட சாதிகள் ஒரு சேர முன்னேற வேண்டுமானால் ஒரு பொருளாதாரப் புரட்சியின் மூலம் தான் அது சாத்தியமாகும். இந்த உண்மையைச் சாதி ரீதியில் பணியாற்றிப் பெற்ற அனுபவத்தால்தான் அறிந்து கொண்டேன். அப்படி அறிந்ததன் விளை-வாகவும், சாதி முகாமிலிருந்து நான் விடுதலை பெற்றேன்."

'கிராமணி' என்ற சாதிப் பெயரால்தான் தமிழ்நாட்டு மக்களுக்கு அதிகமாக அறிமுகமாகியிருந்த ம.பொ.சி., சுயசாதியின் புறக்கணிப்புக்கு ஆளானார். பிறப்படுத்தப் பெற்ற சாதி காரணமாக உயர்சாதியினர் புறக்கணிப்பையும் ம.பொ.சி. 'அனுபவிக்க' வேண்டியிருந்தது. இதனால்

குடியிருக்க வீடு கிடைப்பது அரிதாகிவிட்டது இந்தச் சூழ்நிலையில் ம.பொ.சி. குடும்பத்தினர் தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருப்பான அக்கால ‘சேரி’யில் இரண்டாண்டுக் காலம் மனநிறைவோடு வாழ்ந்தனர்.

தீண்டாமை ஒழிப்பிலும், சமூக சீர்திருத்தத்திலும் ம.பொ.சிக்கு ஏற்பட்ட பட்டறிவும் காரணமாயிற்று

1937 இல் ம.பொ சியின் மறுமணம் முதல் மனைவியின் மறைவிற்கு ஒன்பதாண்டுகளுக்குப் பிறகு நிகழ்ந்தது அப்பொழுது ம.பொ சிக்கு வயது 31; மணமகளுக்கு வயது 17 தாய்மாமன் மகளான இராஜேஸ்வரியை மணந்தபொழுது ம.பொ.சி. கிராமணி சங்கத்தின் செயலாளராகவும், சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் செயலாளராகவும் இருந்தார்

மகாத்மாகாந்தியை ம.பொ.சி, தமது அரசியல் வாழ்வு மலர்ந்த வடசென்னையில் முதன்முறையாக வரவேற்று, உபசரித்து, வரவேற்பு மடலை 2.12.1933இல் வாசித்தளித்தார். வடசென்னை அரிசன சேவாசங்கத்தின் பொதுச் செயலாளராகவும், சென்னை நகர அரிசனசேவா சங்கத்தின் முழுநேரப் பிரச்சாரகராகவும் பணிபுரிந்தக் காலத்திலும், வட சென்னையில் மகாத்மாவை வரவேற்பதற்கென்று அமைக்கப் பெற்ற தனிக்குழுவிற்கு ம.பொ.சி. செயலாளரானார்.

## காங்கிரஸ் கட்சிப் பொறுப்புகள்

1923இல் காங்கிரஸ் இயக்கத்துடன் இணைந்த ம.பொ.சி 1954இல் காங்கிரசில் இருந்து வெளியேறினார் இதன்பிறகும் வெளியில் இருந்து 1966 வரையில் காங்கிரசிற்கு ஆதரவளித்து வந்தார்.

1939 முதல் 1954 வரையில் காங்கிரஸ் கட்சி தேர்தல் ஒவ்வொன்றிலும் போட்டியிட்டு பிறர் வியக்கும் வகையில் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று மிகப்பெரியத் தலைவர்களின் அந்தரங்க சதிகளை முறியடித்து வெற்றிப் பெற்றார்.

சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் துணைச் செயலாளரக 1936-37-களிலும், சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் செயலாளராக 1937-47களிலும், சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் துணைத் தலைவராக 1947-48களிலும், தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினராக 1951-52-களிலும் தொண்டாற்றியுள்ளார், ம.பொ.சி.

இக்கால கட்டங்களில் ராஜாஜி, சத்யமூர்த்தி, காமராசர் முதலானத் தமிழகத் தேசியத் தலைவர்களுடன் காங்கிரஸ் கட்சியைத் தமது பேச்சாற்றல், எழுத்தாற்றல் மூலம் வளர்த்தெடுத்தார்.

## சிறைவாசம்

1928 முதல் 1947வரை விடுதலைப் போரில் கலந்து கொண்டு, ஆறுமுறை சிறைத் தண்டனைப் பெற்றார். ஒருமுறை மத்தியப் பிரதேசத்திலுள்ள அமராவதிச் சிறையில் ஓராண்டுக்காலம் அடைக்கப்பட்டார். தமிழக வடக்கெல்லைக் கிளர்ச்சியைத் தொடங்கி, அதிலே 1953இல் திருத்தணியில் ஆறுவார கடுங்காவல் தண்டனை பெற்றார். 1956இல் சென்னைச் சிறையில் ஒருவாரம் காவலில் வைக்கப்பட்டார்.

## தமிழரசுக் கழகம்

காங்கிரசில் இருந்துக் கொண்டே, 1946 நவம்பர் 21இல் ம.பொ.சி. தமிழரசுக் கழகம் எனும் பொது அரசியல் அமைப்பை நிறுவினார்.

சுதந்திர சோஷலிச சுயநிர்ணய தமிழ்க் குடியரசு எனும் கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டார். தமிழகத்தில் மாநில சுயாட்சித் தத்துவப் போராட்டத்திற்காக முதன் முதலில் தோன்றியது தமிழரசுக் கழகம். தமிழகத்தில் இந்திய தேசியத்தையும், தமிழ் தேசியத்தையும் இணைத்து, திராவிட இயக்கங்களின் பிரிவினைவாத, இனவாதக் கொள்கைகளை எதிர்க்க தமிழரசுக் கழகத்தை ஈடுபடுத்தினார், ம.பொ.சி. மொழி வழி மாநிலக் கிளர்ச்சியைத் தமிழகத்தில் தொடங்கி, 1956-இல் தமிழ் மாநிலம் அமையச் செய்தார். தமிழக வடக்கு-தெற்கு எல்லைக் கிளர்ச்சிகளை நடத்தி, வடக்கெல்லையில் திருத்தணியையும் அதைச் சுற்றியுள்ள 320 கிராமங்களையும் தமிழ்நாட்டுடன் இணைக்க வழிவகை கண்டார். தெற்கெல்லை மீட்புப் போராட்டத்திற்கு ஆதரவளித்து குமரி மாவட்டத்திலிருந்து 5 தாலுக்காக்களும், திருநெல்வேலி மாவட்டத்திலும் ஒரு செங்கோட்டை தாலுக்காவும் தமிழகத்துடன் இணையக் காரணமானவர், ம.பொ.சி. சென்னை நகரம் மீது ஆந்திரர் உரிமை கொண்டாடிய பொழுது, 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' என்று முழக்கமிட்டு ராஜாஜி முதலான தலைவர்கள் ஆதரவுடன் தலைநகரைக் காத்தார்.

## திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகள்

1917-19-களில் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் காங்கிரசிற்கு எதிராக நீதிக்கட்சியின் பிரசாரத்தை எதிர்த்து பேச்சாலும் எழுத்தாலும் பாடுபட்டதுபோல, ம.பொ.சியும் 1951இல் திராவிட இயக்கப் பிரசாரத்தை எதிர்த்து மாநாடுகளை நடத்தினார். "திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடு" எனும் பெயரில் 1951 மார்ச் முதல் 1951 நவம்பர் வரையில் மாநாடுகளை நடத்தினார், ம.பொ.சி. இந்த மாநாடுகள் தமிழரசுக் கழகம், காங்கிரஸ் பெயரால் நடத்தப்படாமல் 'திராவிட இயக்க எதிர்ப்பு முன்னணி' சார்பாக நடத்தப்பட்டன.

முதல் மாநாடு 1951 மார்ச் 24, 25 தேதிகளில் இராயப்பேட்டை காங்கிரஸ் திடலில் நடந்தது.

திராவிட இயக்க எதிர்ப்பு மாநாட்டு வரவேற்றுக் குழுவின் சார்பில் மாநாடு கூடுவதற்கு இரண்டொரு வாரங்களுக்கு முன்பாக ம.பொ.சி.யின் 'தமிழ் முரசு' இதழில் (1951 மார்ச்) மாநாட்டின் நோக்கம் பற்றிய ஒரு கருத்து பின்வருமாறு கூறப் பெற்றுள்ளது.

"மாநாடு வெறும் திராவிட இயக்க எதிர்ப்பில் மட்டுமல்லாமல், தமிழகத்தைத் தனி மாகாணமாக்குவது, தமிழை அரசு மொழியாக்குவது போன்ற ஆக்க வேலைகளிலும் கருத்துச் செலுத்தும்"

பகுத்தறிவு வாதம், மூடநம்பிக்கைகளை ஒழித்தல், இனவுணர்ச்சி என்ற பெயரால் தமிழகம், மரபு, பண்பாடு, ஆன்மீகம் ஆகியனவற்றில் இருந்து திசை தவறிச் செல்லாமல் கட்டிக் காத்தன திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகள்.

"திராவிட இயக்க எதிர்ப்பு மாநாட்டைத் தமிழ் உணர்ச்சியை வளர்க்கும் மேடையாகவும் செய்துவிட முனைந்தேன். அம்மாநாட்டின் தொடக்கத்தில் தமிழ்க் கொடியை உயர்த்தவும், முதல்நாளில், சிலப்பதிகார மாநாடு நடத்தவும் ஏற்பாடு செய்தேன்" என்று ம.பொ.சி. அளித்துள்ள விளக்கத்தில் அரசியலையும் இலக்கியத்தையும் இணைப்பதில் ம.பொ.சி. காட்டிய உறுதிப்பாடு தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது. காங்கிரசில் மொழி மற்றும் இனப்பற்று இல்லாதிருந்தோரையும், அவ்விருபற்றுகளைக் கொள்ள ஊக்குவிக்கவும் மாநாடு பயனளித்தது.

## ஆக்கவழிப்பட்டது

திராவிட இயக்க எதிர்ப்பு ஆக்கவழிப்பட்டது என்பதற்கு ஒரு சான்றாக அமைந்தது. 25.1.1950 இல் நடைபெற்ற திராவிட இயக்க எதிர்ப்பு மாநாட்டில் நிறைவேற்றப் பெற்ற பின்வரும் தீர்மானம்.

"ஆந்திரர், கேரளர், கன்னடர் ஆகிய தேசிய இனத்தவர் இன்றுள்ள மாடல் திராவிடஸ்தானாகிய சென்னை மாகாணத்திலிருந்து பிரிந்து தனித்தனி அரசு அமைத்துக் கொள்ள கிளர்ச்சி செய்து வருகின்றனர். தமிழ் மக்களாகிய நாமும் தமிழகம் தனியரசு நாடாக வேண்டுமென்று விரும்புகிறோம் இந்நிலையில் தமிழரில் ஒரு சிறு கூட்டத்தார் தமிழகத்திலிருந்துக் கொண்டே திராவிடஸ்தானுக்குக் கிளர்ச்சி செய்வது அரசியல் தெளிவற்றச் செய்கை.

தமிழகம் தனி மாகாணமாகவில்லையே, தமிழ் அரசு மொழி ஆகவில்லையே என்ற வருத்தம் தமிழ் மக்களிடையேயும் தமிழ் அறிஞர்களிடையேயும் இருந்து வருகிறது. இந்த நிலையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டுதான், 'திராவிடஸ்தான்' கூச்சல்

போடுகின்றனர் திராவிடத்தார்கள். ஆகவே, இதற்கு முடிவுகட்ட காங்கிரஸ் மேலிடத்தாரும், மத்திய அரசினரும் இன்னும் காலந்தாழ்த்தாமல் சென்னை மாகாணத்தை மொழி வழி நாடுகளாக உடனடியாகப் பிரிக்க வேண்டுமென்று இந்த மாநாடு வற்புறுத்துகிறது.

ஆந்திர மாகாணம் பிரிவது தற்சமயம் இயலாதாயின், தமிழகத்தை மட்டுமேனும் சென்னை மாகாணத்திலிருந்து உடனடியாகப் பிரித்துவிட வேண்டும். தமிழகம் தனிமாகாணமாகப் பிரிக்கப்படுமானால் 'திராவிடஸ்தான்' கோரிக்கை மறைந்துவிடும் என்பதில் ஐயமில்லை."

'புதிய தமிழகம் படைத்த வரலாறு' எனும் நூலில் (1986) ம.பொ.சி. கூறியுள்ள பின்வரும் கருத்தும் இங்கு நினைவு கூர்தலுக்குரியது.

"திராவிட இயக்கத்தின் பிரிவினைக் கோரிக்கையும், சமுதாயக் கொள்கையும், 'புதிய தமிழகம்' படைப்பதற்கு எதிரானவையென்று யான் நம்பினேன். ஆகவே, இருமுனை களாகக் கொண்டதாக இருந்த திராவிட இயக்கத்தை அழிப்பதற்காக அல்லாமல் தமிழரசுக் கழகத்தின் கொள்கை வழியில் அதைக் கொண்டு வருவதற்காகவே எதிர்ப்பியக்கத்திற்கு ஆதரவளித்தேன். காலம் என் கனவை நனவாக்கி விட்டதல்லவா?"

## இருவிளைவுகள்

"ஓராண்டுக் காலம் எதிர்ப்பியக்கம் நடத்தியதால் பட்டுப் போன மரமாகியிருந்த தமிழ்நாடு காங்கிரஸ் திரும்பவும் பச்சை மரமானது. தமிழரசுக் கழகம் முன்னைவிடவும் தழைத்து வளர்ந்தது. கலைக்கப்பட்ட திராவிட இயக்க எதிர்ப்பு முன்னணியின் கிளைகளெல்லாம் தமிழரசுக்கழக கிளைகளாக மாறின" என்று திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகளினால் ஏற்பட்ட விளைவுகளில் இரண்டை ம.பொ.சி சுட்டிக்காட்டியுள்ளார்.

## 1967இல் ஏற்பட்ட ஒரு திருப்பம்

காங்கிரஸ் ஆட்சியை வீழ்த்த 1967இல் ராஜாஜியும், அண்ணாவும் உருவாக்கிய ஏழு கட்சி கூட்டணியில் ம.பொ.சி. இணைந்தது, அவருடைய அரசியல் வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு திருப்பமாகும். தேர்தல் களத்தில் அதுவரை பங்கேற்காது இருந்த தமிழரசுக் கழகம் தேர்தலில் பங்கேற்க முற்பட்டது ஒரு திருப்பமாகும். 'பார்லிமெண்டரி கட்சியாக' தமிழரசுக் கழகம் தன்னை அறிவித்துக் கொண்டது.

1966 ஜூனில் நடைபெற்ற ம.பொ.சி. மணிவிழாவில் கலந்து கொண்ட சுதந்திராக் கட்சித் தலைவர் ராஜாஜியும், தி.மு.க. தலைவர் அண்ணாவும் தாங்கள் அமைத்துள்ள தேர்தல் கூட்டணியில் சேருமாறு ம.பொ.சி.க்கு அழைப்பு விடுத்தனர்.

## அறிஞர் அண்ணா பாராட்டுரை

மணிவிழாவில் அண்ணா அவர்கள் ம.பொ.சி.யின் 'பாடுபடு, பலனைத் துறந்துவிடு' எனும் கொள்கையை விமர்சனம் செய்வதுபோல் பின்வருமாறு பாராட்டினார்.

"விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிலே பலர் சுயராஜ்யம் கிடைத்தபின் தங்களுக்கு அறுவடைக்காலம் என்று நினைத்தார்கள். ஆனால், ம.பொ.சிவஞான கிராமணியாரவர்கள் கடைசிவரை - விடுதலைப்போர் முடிந்த பின்னரும் உழவராகவே இருந்து தம் வாழ்நாளைக் கழிக்கிறார். அவர் ஆழமாகவும் உழுதிருக்கிறார், அகலமாகவும் உழுதிருக்கிறார். தாம் உழுததன் பலனை வேறுசிலர் அறுவடை செய்து கொண்டு போவதையும் பார்த்திருக்கிறார் நம் நாட்டு உழவர்களைப் போல, தாம் உழுது பயிரிட்டதை வேறு சிலர் அறுவடை செய்து போவதைக் கண்டு கவலைப்படாமல் நாம் உழுது கொண்டே இருப்போம், யாராவது அறுவடை செய்து கொண்டு போகட்டும் என்றெண்ணி அவர் உழவராகவே வாழ்ந்து வருகிறார். (செங்கோல் : 3.7.1966)"

தமிழரசுக் கழகச் செயற்குழுவைக் கூட்டி தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் இணைய முடிவெடுத்தார், ம.பொ.சி. சென்னை விருகம்பாக்கத்தில் 1966 டிசம்பர் 31இல் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக பொது மாநாட்டில் முதன்முதலாகக் கலந்து கொண்டு ம.பொ.சி. பேசினார். அந்த மாநாட்டு மேடையிலேயே சென்னை தியாகராயநகர், திருத்தணி சட்டமன்றத் தொகுதிகள் தமிழரசுக் கழகத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பதாக அண்ணா அறிவித்தார். இந்த இரு தொகுதிகளின் வேட்பாளர்கள் சின்னம், 'உதயசூரியன்' என்றும், 'ஒருதலையாக' அறிவிக்கப்பட்டது. சந்தர்ப்ப நிர்ப்பந்தம் காரணமாக ம.பொ.சியும் இதற்கு இசைந்துவிட்டார்.

"தகவலறிந்ததும் ராஜாஜி வருத்தப்பட்டார். 'சுதந்திரா கட்சியின் நட்சத்திரச் சின்னத்தைக் கேட்டிருந்தால் கொடுத்திருப்பேனே" என்று என்னிடமே கூறினார். மறுகணமே 'உதயசூரியன்' சின்னம் உங்களை ஜீரணித்து விட முடியாது என்பது எனக்குத் தெரியும் என்றும் கூறினார்." இவ்வாறு 'செங்கோல்' இதழில் (17.4.1988) ம.பொ.சி. எழுதியுள்ளார்.

தேர்தலில் தி.மு.க.வுடன் 'தேசிய பாரம்பரியக் கொள்கைகளைக் கைவிடாது' சேர முடிந்ததைப் பற்றிப் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

"இந்த இரண்டு தொகுதிகளைப் பெற நான் தேசியத்தைக் கைவிட-வோ, பிரிவினையை ஏற்கவோ இல்லை; இல்லவே இல்லை! உண்மை-யிலேயே 1967இல் தி.மு.க. பிரிவினைக் கொள்கைக்கு அடியோடு தலைமுழுக்குப் போட்டுவிட்டுத் தமிழரசுக் கழகத்தின் மாநில சுயாட்சிக்

கொள்கை வழி - அதிகாரப் பரவல் கோரிக்கையைத் தேர்தல் பிரச்சினையாக்கித்தான் போட்டியிட்டது. அதனால், தேசிய பாரம்பரியக் கொள்கைகளை விடாமல் தி.மு.க.வுடன் கூட்டுச் சேர முடிந்தது."

தியாகராயநகர் தொகுதியில் ம.பொ.சி. வெற்றி பெற்றார். ஆனால் திருத்தணியில் தமிழரசுக் கழக வேட்பாளரான வே.கி.குப்புசாமி தோற்றுவிட்டார்.

1971ஆம் ஆண்டில் மயிலாப்பூர் தொகுதியில் தி.மு.க. ஆதரவுடன் உதயசூரியன் சின்னத்தில் ம.பொ.சி. தேர்தலில் நின்று தோல்வியைச் சந்திக்க வேண்டியதாயிற்று. திருத்தணித் தொகுதி தமிழரசுக் கழக வேட்பாளராக ஈ.எஸ்.தியாகராசன் வெற்றி பெற்றார்.

இவ்வாறு 1967 முதல் 1971 வரையிலான தமிழரசுக் கழகம் -திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டணி மேலும் தொடராமல் முற்றுப் பெற்றுவிட்டது. தேர்தல் களத்தில் இருந்து தமிழரசுக் கழகம் நிரந்தரமாக வெளியேறிவிட்டது.

1967 முதல் 1987 வரையிலுள்ள கால கட்டத்தில் "தமிழக அரசியல் கட்சிகளோடு நட்பும் பகையும் மாறி மாறி அமைந்தது" என்றும் ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார். (செங்கோல் : 20.3.1983)

## சட்டமன்ற வரலாற்றில் ம.பொ.சி.

தமிழக சட்டப்பேரவை, சட்ட மேலவை இரண்டிலும் தமிழ் இனத்துக்கும், தமிழ்மொழிக்கும் ஆக்கபூர்வமாகத் தொண்டாற்றியுள்ளார், ம.பொ.சி.

1952இல் சென்னை சட்டமன்ற மேலவை, இந்தியா விடுதலை பெற்ற பின்னர் நடைமுறைக்கு வந்த அரசியல் நிர்ணய சாசனத்தின் வழியே முதன்முதலாக நிறுவப் பெற்றது. அப்பொழுது காங்கிரசின் சார்பிலே ம.பொ.சி. மேலவை உறுப்பினரானார். இரண்டாண்டுக் காலந்தான் அவர் பதவி வகித்தாரென்றாலும் அந்தக் குறுகியக் காலத்தில் சட்டமன்ற மேலவை வரலாற்றில் குறிப்பிடத்தக்க சாதனைகள் புரிந்தார், ம.பொ.சி.

சட்டமன்ற மேலவையில் முதன்முறையாக ம.பொ.சி பேசியபொழுது, தமிழ் மாநிலப் பிரிவினையின் அவசியத்தை வலியுறுத்தினார். அப்பொழுது ராஜாஜி மந்திரிசபையில் நிதி அமைச்சராக இருந்த சி.சுப்பிரமணியம், ம.பொ.சிக்கு அளித்த பதிலில் பின்வரும் கருத்தைக் கூறினார்.

"கிராமணியாரின் உணர்ச்சிமிக்க பேச்சும்,அவர் தம்முடைய கோரிக்கைக்கு ஆதரவாக எடுத்துக்காட்டிய ஆதாரங்களும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. ஆனால், நான் அவரைக் கேட்டுக் கொள்வதெல்லாம் கொஞ்சம் பொறுமைக் காட்டுங்கள் என்பதுதான்."

1953இல் ஆந்திரப் பிரதேசம் தனியரசு மாநிலமாகப் பெரிய மாநிலத்திலிருந்து பிரிந்தபோது, தமிழர் - ஆந்திரர் சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகள் எழுந்தன. குறிப்பாக, எல்லைப் பிரச்சினை சட்டமன்ற மேலவையில் விவாதிக்கப்பட்டது. ஆந்திரப் பிரிவினை மசோதாவிலே, தகராறுக்கு இடமில்லாத தெலுங்கு ஜில்லாக்களின் பட்டியலில் திருத்தணி உள்ளிட்ட சித்தூர் மாவட்டமும் சேர்க்கப்பட்டிருந்தது. இதை அனுமதித்திருந்தால், சித்தூர் மாவட்டம், தகராறுக்கு இடமில்லாத தெலுங்கு மாவட்டம் என்பதைத் தமிழ்நாட்டார் ஒப்புக் கொண்டதாகியிருக்கும்.

ம.பொ.சி. இதை முன்னுணர்ந்து, ஆந்திரப் பிரிவினை மசோதாவுக்கு ஒரு திருத்தம் கொடுத்தார் அதிலே, ஆந்திரத்துக்கும், தமிழகத்துக்குமிடையே உள்ள எல்லைத் தகராறைத் தீர்ப்பதற்கு எல்லைக் கமிஷன் நியமிக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்.

ம.பொ.சி.யின் திருத்தத்தைக் கொள்கையளவில் அப்போதிருந்த ராஜாஜி அமைச்சரவை ஏற்றுக் கொண்டதோடு, அரசின் சார்பிலேயே அப்படியொரு திருத்தத்தைக் கொண்டு வந்து மசோதாவில் இணைத்தது.

1967 இல் தியாகராயநகர் சட்டமன்றத் தொகுதியில் இருந்து தி.மு.க. ஆதரவுடன் தேர்தலில் வெற்றி பெற்றார், ம.பொ.சி சட்டப் பேரவையில் முதல் வேலையாக ராஜ்யத்தின் பெயரை மாற்றக்கோரும் தீர்மானத்தை சட்டப்பேரவையில் பிரேரபிக்க அனுமதிக்குமாறு பேரவைத் தலைவருக்கு முன் அறிவிப்பு கொடுத்தார், ம.பொ.சி.

முதலமைச்சர் அண்ணாவை அவரது இல்லத்தில் சந்தித்துத் தமது தீர்மானத்தை அரசின் சார்பில் ஏற்குமாறு நட்புமுறையில் கேட்டுக் கொண்டார், ம.பொ.சி. அண்ணா அவர்கள், "அரசின் சார்பில், நானே விரைவில் கொண்டு வருகிறேன். அது என் கடமை அல்லவா?" என்று பதிலளித்தாக ம.பொ.சி. தமது 'எனது போராட்டம்' நூலில் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறே ஒரு தீர்மானத்தைச் சட்டமன்றத்தில் பிரேரபித்து தமிழ் வழங்கும் மாநிலத்தின் பெயரை மாற்றினார், அண்ணா அவர்கள்.

18.7.1967இல் அண்ணா அவர்கள் சட்டமன்றப் பேரவையில் கொண்டு வந்தத் தீர்மானத்தில் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்பதற்குப் பதிலாக, 'டமில் நாட்' (TAMILNAD) என்று குறிப்பிடப்பட்டிருந்தது. 'Tamil Nad' என்று குறிப்பிடப்பட வேண்டும் எனும் ராஜாஜியின் பரிந்துரையை ஏற்பதாகச் சட்ட அமைச்சர் செ.மாதவன் மூலம் அண்ணா, ராஜாஜிக்கு உறுதியளித்திருந்தார். இந்தநிலையில் 'NAD' வேண்டாம்; 'NADU' என்பதுதான் வேண்டும் என்று ம.பொ.சி. வலியுறுத்தினார். 'தமிழ்நாடு' என்று உச்சரிப்பதற்கு ஏற்ப 'NADU' என்று குறிப்பிடப்பட வேண்டும் என்றார் ம.பொ.சி. ம.பொ சி.யின் வலியுறுத்தலில் உள்ள

நியாயத்தை முதலமைச்சர் அண்ணா ஏற்றுக் கொண்டார். இதன் காரணமாக ராஜாஜிக்குக் கொடுத்திருந்த உறுதிமொழியைப் பொருட்படுத்தாமல் 'நாடு' என்னும் சொல்லை அமைத்துப் பெயர் மாற்றத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அப்போது ம.பொ.சி.யைப் பற்றி அண்ணா தமது உரையில் கூறியதாவது:

"மதிப்புமிக்க ம.பொ.சி. அவர்கள் இதிலே மிகுந்த மனஎழுச்சி பெற்றது இயற்கையானதாகும் அவர்கள் பல ஆண்டுகளாகத் 'தமிழ்நாடு' என்ற பெயர் இந்த நாட்டுக்கு இடப்பட வேண்டும் என்று மிகுந்த அக்கறையுடன் பாடுபட்டவர்கள்." (செங்கோல், 24.7.1988).

23.1.1968இல் மத்திய ஆட்சி மொழிச் சிக்கல் பற்றிய அரசு தீர்மானத்திற்கு ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார், ம.பொ.சி. இது குறித்து அவர் எழுதியதின் ஒரு பகுதி வருமாறு:

"ஆங்கிலம் ஒன்றே மத்தியில் ஆட்சிமொழியாக நீடிக்க வேண்டும் என்று அரசின் தீர்மானம் கூறியது. ஆனால், தமிழகத்திலே ஆங்கில ஆதிக்கத்தை உடனடியாக அகற்றித் தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழுக்கு முதலிடம் தேடுவது பற்றி அரசின் மொழித் தீர்மானம் எதுவுமே கூறவில்லை. ஆகவே, அடுத்து வரும் ஐந்தாண்டுக் கால கட்டத்திற்குள் அரசு அலுவலகங்கள் அனைத்திலும் தமிழே ஆட்சிமொழியாகவும், அனைத்துக் கல்லூரிகளிலும் அனைத்துப் பாடங்களுக்கும் தமிழே பயிற்சி மொழியாகவும் வருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று சட்டமன்றப் பேரவை ஆணையிடுவதாக நான் திருத்தம் கொடுத்தேன். முதல்வர் அண்ணா அவர்கள் அப்போது பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த கலைஞர் மு. கருணாநிதியை என்னிடம் அனுப்பி, என்னுடையத் திருத்தத்தை அரசு ஏற்றுக் கொள்வதாகவும், அதனை வற்புறுத்தி நான் உணர்ச்சியோடு பேசலாமென்றும் தகவல் தரச் செய்தார்.

"எனது திருத்தத்துடன் அரசின் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. சட்டப்பேரவையில் நான் புரிந்தச் சிறப்புமிக்க சாதனைகளில் இதுவே முதன்மையானதாகும்" (எனது போராட்டம் - ப.990)

அரசு தீர்மானம் ம.பொ.சி.யின் திருத்தத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், "ஆட்சி மொழித் தீர்மானம் இந்தியை அகற்றுவதிலே அமல் நடத்தப்பட்டது. கட்டாய பாட மொழியாக ஆங்கிலத்தை நிலைநிறுத்துவதிலேயே அமல் நடத்தப்பட்டது. ஆனால், எங்கும் எதிலும் தமிழுக்கே முதலிடம் தரப்படும் என்ற பகுதி இதுவரை அமலாக்கப்படவில்லை" என்று 1986இல் ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார்.

## சுதந்திரா கட்சியின் தீர்மானத்திற்கு எதிர்ப்பு

சுதந்திரா கட்சியின் சார்பில் டாக்டர் எச்.வி.ஹண்டே. ஆங்கிலமும் அனைத்துக் கல்லூரிகளிலும் பயிற்சி மொழியாகக் காலவரம்பின்றி நீடிக்க வேண்டுமென்று சட்டப் பேரவையில் தீர்மானம் கொண்டு வந்தபொழுது, சொற்பத் திருத்தத்துடன் தி.மு.க. அரசும் அதனை ஏற்க முன்வந்த நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ம.பொ.சி. உடல் நலத்தைப் பொருட்படுத்தாமல் சட்டப் பேரவைக்கு விரைந்து வந்து ஹண்டேவின் தீர்மானத்தை முழு மூச்சுடன் எதிர்த்துப் பேசினார். அரசின் சார்பில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் ம.பொ.சி.யின் உணர்ச்சியையும், கொள்கைப்பற்றையும் மதித்து, ம.பொ.சி.யின் விருப்பப்படி ஹண்டேயின் தீர்மானத்தை எதிர்த்தார். முதலமைச்சர் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஹண்டே தமது தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்.

## மாநில சுயாட்சி பற்றிய முதல் தீர்மானம்

தமிழக சட்டமன்ற வரலாற்றிலேயே மாநில சுயாட்சி கோரும் தீர்மானத்தை முன்மொழிந்தப் பெருமை தமிழரசுக் கழகத்தின் பிரதிநிதியான ம.பொ.சிக்கே உரியது.

21.8.1970இல் தமிழக சட்டப்பேரவையில் மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்கக் கோரும் உத்தியோகப் பற்றற்ற பின்வரும் தீர்மானத்தை தமிழரசுக் கழகத்தின் சார்பில் ம.பொ.சி. முன் மொழிந்தார்.

“மாநிலங்கள் சுயாட்சி அந்தஸ்தை உடையவையாக பெறும் வகையில் அவற்றிற்குக் கூடுதலான அதிகாரங்களை வழங்கவும், மத்தியில் மேலும் மேலும் அதிகாரங்கள் குவித்துக் கொண்டிருப்பதைத் தவிர்க்கவும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு ஆவன செய்யுமாறு வற்புறுத்தும்படி தமிழ்நாடு அரசுக்கு இப்பேரவை பரிந்துரை செய்கிறது.”

தமது தீர்மானத்தின்மீது ம.பொ.சி. பேசியபொழுது, பின்வரும் விளக்கத்தை அளித்தார்.

“என்னுடைய சொந்த அபிப்பிராயம் ஒன்றைத் தான் சொல்கிறேன். ஏன், நான் சார்ந்திருக்கிற தமிழரசுக் கழகத்தின் சார்பாகவும் சொல்கிறேன். மத்தியில் போக்குவரத்து, அயல்நாட்டுறவு, பாதுகாப்பு ஆகிய மூன்று அதிகாரங்களை மட்டும் வைத்து, மற்றவைகளையெல்லாம் மாநிலங்களுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்பது என் கொள்கை. ஆனால், நான் கொடுத்துள்ள தீர்மானத்தில் அப்படி வரையறுத்துச் சொல்லவில்லை. அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. அதிகாரப் பங்கீட்டுப் பட்டியலை மாற்றி அமைக்க

வேண்டியது அவசியமாக இருக்கிறது என்ற அளவுக்கு பொதுப் படையாக இந்த மன்றம் ஒப்புக் கொண்டு, ஒரு தீர்மானத்தை நிறை-வேற்றி தமிழக ஆட்சியினுடைய கரத்தைப் பலப்படுத்தி, மத்தியத்திற்கு அனுப்பினால் போதும். விவரங்களைப் பிறகு நடைமுறைக்கு வரும்-போது பார்த்துக் கொள்ள விட்டுவிடலாம் என்ற எண்ணத்தால்தான் இந்தத் தீர்மானத்தில் விவரங்களைச் சொல்லாமல் விட்டுவிட்டேன்.''

ம.பொ.சி. முன்மொழிந்த தீர்மானத்தின் கருத்தை ஏற்பதாகக் கூறி முதலமைச்சர் மு. கருணாநிதி,டாக்டர் ராஜமன்னார் குழுவின் பரிந்துரை கிடைத்த பின்னர் சுயாட்சிகோரும் தீர்மானம் அரசின் சார்பிலேயே கொண்டு வரப்படும் என்று உறுதி கூறினார்.

24.4.1974இல் டாக்டர் இராசமன்னார் குழுவின் பரிந்துரையையும், தழிக அரசின் வெள்ளை அறிக்கையையும் சட்ட மேலவை முன் வைத்து, அங்கு மாநில சுயாட்சி கோரும் தீர்மானத்தையும் முதலமைச்சர் மு. கருணாநிதி முன்மொழிந்தார்.

அந்தத் தீர்மானம் பற்றி தமிழரசுக் கழகம் கொண்டுள்ள கருத்தை விளக்கும் வகையில் 27.4.74இல் கூட்ட மேலவையில் ம.பொ.சி. உரையாற்றினார்

தமிழ்நாட்டில் மாநில சுயாட்சித் தத்துவத்திற்கு முழு வடிவம் கொடுத்து அதை முதன்முதலில் வலியுறுத்தி இயக்கம் நடத்திய முன்னோடியான ம.பொ.சி. உரையின் சில பகுதிகள் இங்குச் சுருக்கம் கருதி வழங்கப்படுகின்றன.

"மாநில சுயாட்சியைப் பிரிவினைக்கு மாற்றாகப் பெறுகிறோம். அது பிரிவினை என்ற நோய்க்கு அரு மருந்து. உலகில் மாநில சுயாட்சியை ஒப்புக் கொண்ட எந்த ஒரு சமஷ்டியும் கலைந்து போகவில்லை. மாநில சுயாட்சியை ஒப்புக் கொள்ள மறுத்த எந்த ஒரு நாடும் தன்னுடைய ஏகத்தன்மையைக் காப்பாற்றிக் கொண்டதில்லை.

"அதிகாரப் பரவல் முறையில் மாநிலங்களுக்கு முழு சுயாட்சி கிடைக்காது என்பது என்னுடைய முடிவு.

"மொழிவாரி இனங்களின் பிறப்புரிமை என்ற வகையில்தான் சுயாட்சித் தன்மையை வலியுறுத்தி வருகிறேன்.

"தமிழ்நாடு உள்பட அனைத்து மாநிலங்களுக்கும் சுயாட்சி, மத்தியில் உண்மையான சமஷ்டி வேண்டும்'' என்று தமிழரசுக் கழகமும் நானும் கொண்டிருக்கும் கொள்கையை அரசு இந்தத் தீர்மானத்தின் மூலம் ஏற்றுக் கொண்டு அதுவே தன்னுடைய கொள்கை என்று அறிவித்துள்ளது. ஆகவே, இந்தத் தீர்மானத்தை அவை முன் வைத்திருப்பதை மிகவும் மகிழ்ச்சியோடு வரவேற்று ஆதரிக்கிறேன்.

"அரசின் நிலையை இரண்டாகப் பிரித்தும் பார்க்க வேண்டும். ஆம்; சுயாட்சியை, குறைந்தபட்ச சுயாட்சி என்றும் அதிகபட்ச சுயாட்சி என்றும் பிரித்துக் கொண்டால், தீர்மானம் அதிகபட்ச சுயாட்சியைக் கோருகிறது; வெள்ளை அறிக்கையின் முன்பகுதியும் அதிகபட்ச சுயாட்சி என்று சொல்லுகிறது. பின் பகுதிதான் குறைந்தபட்ச சுயாட்சியைக் கோருகிறது. கொள்கை அளவில் அதிகபட்ச சுயாட்சி; கோரிக்கையாக வைக்குமிடத்தில் குறைந்தபட்ச சுயாட்சியை முதல்வர் கேட்டிருக்கிறார்.

மொத்தத்தில் சொன்னால், "டீசென்ரலைசேஷன்" என்ற அளவிற்குத்தான் தமிழக அரசு கோருகிறது. குறைந்தபட்ச சுயாட்சியோடு ஆறுதல் அடைகிறது."

விவாதத்தை முடித்து வைத்து முதலமைச்சர் கருணாநிதி பின் வருமாறு ம.பொ.சியைப் பற்றிக் கூறினார்.

"அண்ணா எழுதிய உயிலிலேகூட அதிக அதிகாரம் தானே கேட்டார். மாநில சுயாட்சி கேட்டாரா? - இல்லை, இந்தக் கருணாநிதித்தான் வெட்கங்கெட்டுப் போய் மாநில சுயாட்சிக் கொள்கையை ம.பொ.சி.யிடம் கடன் வாங்கிக் கொண்டார் என்றார்கள். நான் அதற்கு வெட்கப்படவில்லை. நல்லவற்றை கடன் வாங்குவது தவறல்ல. மாநில சுயாட்சி சிலம்புச் செல்வரவர்களால் நீண்ட நெடுங்காலமாகச் சொல்லப்பட்டு வருகிற - வலியுறுத்தப்பட்டு வருகின்ற உன்னதமான கொள்கையாகும்." (மேற்கொள் : சட்டமன்றத்தில் சுயாட்சிக் குரல், 1974 - டாக்டர் ம.பொ.சிவஞானம், ப.43)

சட்டமன்றத்தில் அங்கம் வகித்த காலத்தில் உச்சவரம்புக் குறைப்புச் சட்டம், இந்து விவாக சட்டத்திருத்தம் போன்ற பல்வேறு முற்போக்கு சட்டங்களை முழு மனதுடன் ஆதரித்துள்ளார், ம.பொ.சி திருக்கோவில் அர்ச்சகத் தொழிலுக்குச் சாதி வேற்றுமையின்றி இந்துக்கள் அனைவருமே எடுத்துக் கொள்ளப்படுவதற்காக கொண்டு வந்த திட்டத்தையும் ம.பொ.சி. ஆதரித்துள்ளார்.

## அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில்

1972இல் தி.மு.க. ஆட்சி காலத்திலே, முதல்அமைச்சர் கருணாநிதியின் உதவியுடன் மேலவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆறாண்டுக் காலம் பதவி வகித்த ம.பொ.சி.யின் சட்டமன்றப் பணி அ.இ.அ.தி.மு.க. ஆட்சி காலத்திலும் 1978இல் தொடர்ந்தது.

1978 ஏப்ரலில் மேலவைத் தலைவர் பதவிக்குத் தேர்தல் வந்தபொழுது அன்றைய அ.இ.அ.தி.மு.க. ஆட்சி முதலமைச்சர்

எம்.ஜி.ராமசந்திரன் ஆதரவுடன் ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்களால் மேலவை உறுப்பினராக நியமிக்கப் பெற்று மேலவைத் தலைவராகவும் போட்டியின்றித் தேர்தெடுக்கப்பட்டார், ம.பொ.சி.

அப்பொழுது மேலவையில் ஆறுபேர்தான் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதைவிடவும் தி.மு.க. உறுப்பினர்கள் கூடுதலாக இருந்தனர். தி.மு.க. போட்டியிடுவதைத் தவிர்த்ததால் ம பொ.சி. ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

மேலவையின் அ.இ.அ தி.மு.க. - தி.மு.க. உறுப்பினர்களிடையே மோதல் ஏற்படுமானால் தன் மனச்சாட்சிபடி நடந்துக் கொள்ள தன்னை அனுமதிக்க வேண்டும் எனும் உறுதிமொழியையும் எம்.ஜி.ஆரிடம் பெற்றுக் கொண்டார், ம.பொ.சி.

“தமிழைக் காக்க மேலவையில் தமிழ்ப் பெரியாரை உட்கார வைக்கிறோம் இங்கே சிவஞானம் என்ற பெயரில் தமிழ் அமர்ந்திருக்கிறது” என்று முதலமைச்சர் எம்.ஜி.ஆர், ம.பொ.சிக்குப் பாராட்டுரை வழங்கியதற்கு ஒப்ப மேலவை நடவடிக்கைகள் தமிழில் பெருவாரியாக அமைய மேலவையைச் சிறப்பாக நடத்தினார். நெறிமுறை தவறாது தீர்ப்புகள் அளித்தத்திலும் நல்லபெயர் எடுத்தார்.

மேலவையில் அ.இ.அ.தி.மு.க.விற்குப் பெரும்பான்மை பலம் பெற்ற நிலையிலும் 1983இல் ம.பொ.சியை இரண்டாவது முறையாக மேலவைத்தலைவராக ஆக்கினார், எம் ஜி.ஆர்.

1986 அக்டோபர் 31இல் மேலவையை, சட்டமன்ற பேரவையின் தீர்மானம் வழியே எம்.ஜி.ஆர் கலைத்துவிட்டார்.

## ம.பொ.சியின் ஆய்வுரை

மேலவை கலைப்புப் பற்றிய அரசின் தீர்மானத்திற்கு மாறான கருத்தை மேலவைத் தலைவராக இருந்தபொழுதே மேலவை தோற்றம், வளர்ச்சி பற்றிய நீண்ட ஆய்வுரையை ம.பொ சி. நிகழ்த்தினார். அவ்வுரையின் ஒரு பகுதி, வருமாறு :

“இந்த அவையின் பின்னணி சரித்திரத்தைப் பார்க்க வேண்டும். பிரிட்டிஷ் ஆட்சி நமக்குச் சுயாட்சி கொடுத்ததே, இந்த லெஜிஸ்லேடிவ் கவுன்சில் என்ற அமைப்பின் மூலம்தான். மத்தியிலிருந்து - டில்லியிலிருந்து அதிகாரத்தை மாநிலத்திற்கு மாற்றித் தர வேண்டும் என்று கேட்டோம். அதன்படி பிரிட்டிஷ் அரசு அதிகாரத்தை மாற்றிக் கொடுத்தது, லெஜிஸ்லேடிவ் கவுன்சில் மூலம்தான் அப்பொழுது அசெம்பிளி என்ற ஒன்று இல்லாத காலம். 1937ஆம் ஆண்டில்தான் லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. அதன்பின்னும் லெஜிஸ்லேடிவ் கவுன்சில் என்ற அமைப்பும் தொடர்ந்து

இயங்கி வந்தது என்பதைக் கவனிக்க வேண்டும். அசெம்பிளி ஏற்பட்டதால் கவுன்சிலின் மதிப்பு குறையவோ, தேயவோ இல்லை........

"தமிழ்நாட்டுக்கு மட்டுமல்லாமல், தென்னாட்டிற்கே பாராளுமன்ற மரபு அல்லது வரலாறு என்ற ஒன்று இருக்குமானால். அது லெஜிஸ்லேடிவ் கவுன்சிலின் மூலமே தவிர வேறு ஒன்றின் மூலமாக அல்ல. ஆகவே, லெஜிஸ்லேடிவ் கவுன்சிலைக் கலைத்துக் விடுவதால் அந்தப் பழைய மரபும் வரலாறும் மறைந்து போய்விடுமே என்பதுதான் எனக்குள்ள வருத்தம்.......

"மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னைத் தலைவர் பதவியில் அமர்த்திய நாளிலே, "தமிழையே இந்த ஆசனத்தில் அமர்த்துகிறேன்" என்று சொன்னார்கள். இந்த அவையைக் கலைப்பதால் தமிழையே அகற்றிவிடுகிறார் என்று நான் சொல்லவில்லை. தமிழை எங்கே வைக்க வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

"மேலவைக் கலைப்பு பற்றிய எனது கருத்தை நான் எடுத்துச் சொல்லாது தவறியிருந்தால் எனது மனச்சாட்சிக்கே துரோகம் செய்தவனாவேன். ஆகவே. அரசுக்குத் திரும்பவும் சொல்கிறேன். இந்த அவையைக் கலைக்க அவசரப்படாதீர்கள்; தள்ளிப்போடுவதால் ஒன்றும் கெட்டுப் போகாது. இது, இந்த ஆட்சிக்கு நான் விடும் வேண்டுகோளாகும்" (செங்கோல், 18.6.1989)

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். மேலவைக் கலைப்பில் உறுதி காட்டியதால், ம.பொ.சியின் வேண்டுகோள், வரலாற்றுப் பதிவு என்றளவில் நின்றது. ம.பொ.சி.யின் 15 ஆண்டுக் கால மேலவைப் பணியும் முடிவுற்றது.

## கல்வித்துறையில் சாதனைகள்

இரண்டாண்டுக் கால பள்ளிப் படிப்போடு கல்விக்கூடத்தை விட்டு வெளியே வரவேண்டிய அவலத்திற்கு ஆட்பட்ட ம.பொ.சி. கல்வித்துறையில் பெரும் பணிகள் ஆற்றிப் பட்டங்களும், பரிசுகளும் பெற்ற சாதனையைப் புரிந்துள்ளார்.

தமிழக அரசு, மத்திய அரசு, தில்லி சாகித்ய அகாதமி, தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்கள், 'யுனெஸ்கோ' எனும் ஐக்கிய நாடுகள் முதலானவற்றின் பரிசுகளும், பட்டங்களும் ம.பொ.சி.யை நாடி வந்தன.

1970-ஆம் "உலகக் கல்வி ஆண்டு சிறப்பாற்று நிறை' தொடர்பாக யுனெஸ்கோ' (உலகநாடுகள் கல்வி பண்பாட்டு, விஞ்ஞான அமைப்பு) சார்பில் ம.பொ.சிக்குச் சான்றிதழ் வழங்கப் பெற்றது. விருதளிப்பிற்கான சான்றிதழ் வாசகங்கள் (தமிழாக்கம்) வருமாறு :

“ம.பொ.சிவஞானம், காந்தியத்திற்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர். பெருந்திரள் மக்களுக்கான கல்வியைத் தூண்டுபவர். தமிழ்மொழி, இலக்கியத்திற்காகப் போராடுபவர்.”

இளமையில் வடசென்னையில் இரண்டு ‘சேரி’களில் இரவுப் பள்ளி நிறுவி தாழ்த்தப்பட்டவர்களிலே வயதுக்கு வந்தவர்களுக்கு எழுதவும் படிக்கவும் கற்றுக் கொடுத்தார், ம.பொ.சி. இந்தக் கல்விப் பணிக்கு அப்போது சக்தி மிகுந்த அமைப்பாக இயங்கி வந்த அரிஜன சேவா சங்கம் ம.பொ.சி.யை முழு நேர ஊழியராக நியமித்தது. இந்தப் பணியில் இரண்டாண்டுக்காலம், அவர் ஈடுபட்டிருந்தார்.

சென்னை கள்ளிறக்கும்தொழிலாளர்களுக்கெனத் தனியாக ஒரு சங்கம் அமைத்து, அதன் சார்பில் தண்டையார் பேட்டையில் கள் தொழிலாளர்களுக்கு முதியோர் கல்வியளிக்க இரவு பள்ளி ஒன்றை நிறுவி, இரண்டாண்டுக் காலம் ம.பொ.சி. நடத்தியுள்ளார்.

1934-35-இல் இராயபுரம் வட்டத்தில் திருவள்ளுவர் பெயரால் வாசக சாலையும், நூல்நிலையமும் நிறுவி இரண்டாண்டுக் காலம் தேசபக்தத் தோழர்கள் உதவியால் நடத்தியுள்ளார், ம.பொ.சி

1941-42- தண்டையார்பேட்டையில் தமிழ்த் தாய் நூல் நிலையம் நிறுவினார். இதனால் ஏழை எளிய மக்களிடையே பத்திரிகைகள் நூல்கள் படிக்கும் பழக்கம் ஏற்படப் பாடுபட்டார், ம.பொ.சி.

இவ்விரு வாசக சாலைகள் சார்பில் வாரந்தோறும் இலக்கியக் கூட்டங்களையும், அவ்வப்பொழுது புலவர் பெருமக்களின் திருநாட்களைக் கொண்டாடியுள்ளார், ம.பொ.சி.

முறைசாராக் கல்வி வளர்ச்சிக்கு வடசென்னையில் பாமர மக்களுக்குச் சுயமாகக் கற்ற கல்வியறிவால், தமிழ் உணர்வு, இலக்கிய உணர்வு கொண்டு ம.பொ.சி. பாடுபட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இயற்கை அறிவு, நூலறிவு, அரசியல் - இலக்கிய அறிவு, பட்டறிவு முதலானவற்றுடன் முன்னேறிய ம.பொ.சியைப் பல்கலைக்கழகங்கள் தகுதியறிந்து பாராட்ட முன் வந்தன. அரசியல் இயக்கத்திற்கு உறுதுணையாக இலக்கிய இயக்கம் நடத்தும் கல்வியாற்றலைப் பெற்றார், ம.பொ.சி.

1952இல் சென்னைப் பல்கலைக்கழக ‘செனட்’சபைக்குத் தமிழக மேலவையில் இருந்து ராஜாஜியின் தூண்டுதல் காரணமாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

1967இல் தமிழக சட்டப்பேரவையிலிருந்து மதுரை பல்கலைக்கழக ‘செனட்’ சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்

1972 முதல் 1976 வரை சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழு (சிண்டிகேட்) உறுப்பினராக ஆளுநர் கே.கே.ஷாவால் தொடர்ந்து இருமுறை நியமிக்கப் பெற்றார், ம.பொ.சி.

தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக்கழகம் தோன்றிய பொழுது தொடக்கக் காலத்தில் அதன் 'செனட்' சபை உறுப்பினராக மூன்றாண்டுக்காலம் இருந்து வந்தார்.

1978இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் 'சென்ட்' சபை உறுப்பினராக ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரியால் நியமிக்கப் பெற்று மூன்றாண்டுக் காலம் பதவியில் இருந்தார்.

சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவில் (சிண்டிகேட்டில்) பொறுப்பேற்றிருந்த காலத்தில் அன்றைய துணைவேந்தர் நெ.து.சுந்தரவடிவேலு அவர்கள் உதவியுடன் பல்கலைக்கழக நடவடிக்கைகளில் தமிழ்மொழி பயன்படுத்தப்படப் பாடுபட்டார். பல்கலைக்கழக ஆண்டறிக்கையில் ஒரு பகுதி தமிழில் மொழி பெயர்க்கப்பட முயன்று வெற்றி பெற்றார்.

அதுவரை தமிழ் உள்ளிட்ட மொழிப் பாடங்கள் பயின்று தேர்வு பெறுவோர்க்கு ஆங்கிலமொழிக் கல்விக்கு அளிப்பது போல 'பி.ஏ.' பட்டம் அளிக்கப்படாமல் வெறும் பட்டயம் (சான்றிதழ்) அளிக்கும் வழக்கம் இருந்து வந்தது. அதைப் போக்கி சிண்டிகேட் 'செனட்' சபைகளில் ஆதரவைப் பெற்று, தமிழ் உள்ளிட்ட மொழிப் பாடங்களுக்கும் பட்டயம் அளிப்பதற்குப் 'பி.லிட்' என்னும் பட்டம் அளிக்கச் செய்வது, அதை 'பி.ஏ.'விக்கு நிகராகச் செய்ததில் ம.பொ.சியின் முயற்சி வெற்றி பெற்றது.

அதன்பின்னர், 'பி.லிட்' பட்டம் பெறுவோர் எம்.ஏ.வுக்குத் தமிழில் தேர்வு எழுதி, அந்தப்பட்டத்தைப் பெற்று வருகின்றனர். அதனையடுத்து எம்.ஏ. (தமிழ்) படிப்பிலும் ஆங்கில மொழிப் பாடம் கிடையாது என்பதாயிற்று.

தமிழ் இலக்கிய ஆராய்ச்சி எழுதி அல்லது 'பி.எச்.டி' எழுதி வழங்கும் கட்டுரைகள் அதுவரை ஆங்கிலத்தில்தான் எழுதித் தரப்படும் நிலை இருந்து வந்தது. அதற்கு மாறாகத் தமிழிலேயே எழுதித் தரவும் வழிவகை கண்டார், ம.பொ.சி.

மேற்குறித்தனவற்றையெல்லாம் எடுத்துரைத்து விட்டு, "இதற்காகத் தொடர்ந்து பல ஆண்டுகள் சிண்டிகேட்டில் போராட வேண்டியிருந்தது" என்றும் குறிப்பிட்டுள்ளார், ம.பொ.சி. (செங்கோல், 6.8.1989).

## சென்னை மாநகராட்சியில்

1948 நவம்பரில் சென்னை மாநகராட்சியின் ஆல்டர்மேனாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார் ம.பொ.சி. இரண்டாவது முறையாக, 1952 நவம்பரில் மீண்டும் ஆல்டர்மேனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1953இல் சென்னை மாநகராட்சிக் கல்விக்குழுவின் தலைவராகவும் அதன் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

சென்னை மாநகராட்சியைத் தமிழ் வழிப்படுத்தும் முயற்சியில் ம.பொ.சி. பாடுபட்டுப் பெரும்பாலானவற்றில் வெற்றி பெற்றார். சென்னை மாநகராட்சியின் கல்வித்துறைக் கெனத் தனியாக வரவு-செலவுத் திட்டம் அமைவது மாநகராட்சியின் சட்டப்படி நிகழ்ந்து வந்தது. 1953-54க்குரிய கல்வி பட்ஜெட்டை ஆங்கிலத்தில் சமர்ப்பிக்க கல்விக்குழுவின் தலைவரான ம.பொ.சி. மறுப்பு தெரிவித்தார். பட்ஜெட்டும் அதன்மீதான சொற்பொழிவும் தமிழிலேயே இருக்க வேண்டும் என்று மாநகராட்சி ஆணையரிடமும், செயலரிடமும் ம.பொ.சி. தெரிவித்தார். ஆனால், மாநகராட்சியின் நிர்வாக மொழி சட்டப்படி ஆங்கிலமாகவே இருந்து வருவதால் அந்தச் சட்டத்தை சென்னை மாநில சட்டமன்றம் திருத்தினாலொழிய, மொழி விஷயத்தில் மாறுதல் காண முடியாது என அதிகாரிகள் அறிவித்ததோடு கல்விப் பட்ஜெட்டை ஆங்கிலத்திலேயே தயாரித்து ம.பொ.சியிடம் கொடுத்தனர். மேயர் த.செங்கல்வராயன் ஆதரவுடன் பட்ஜெட்டையும், உரையையும் தமிழிலேயே ம.பொ.சி. சமர்ப்பித்தார். மொழிபெயர்ப்பு என்ற நிலையில் ஆங்கிலத்திலும் பட்ஜெட் மாநகராட்சி மன்றத்தில் வைக்கப்பட்டது. கல்விக்குழுவின் நடவடிக்கைகளின் ஆங்கில ஆதிக்கத்தைப் படிப்படியாக விலக்கி, தமிழ் செல்வாக்குப் பெறவைத்தார், ம.பொ.சி.

## நூலக இயக்கம்

சென்னை மாநகராட்சியில் நூலக இயக்கம் வளர்ச்சி பெறப் பாடுபட்டார், ம.பொ.சி. ஏககாலத்தில் மாநகராட்சிக் கல்விக்குழுவின் தலைவராகவும், சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் தலைவராகவும் இருந்து வந்ததினால், மாநகராட்சியின் நூலகங்கள், சென்னை மாவட்ட ஆணைக்குழுவிடம் ஒப்படைக்க தீர்மானங்கள் போட்டு ஏற்பாடு செய்தார், ம.பொ.சி. நூலக இயக்கத்திற்கெனத் தனித்துறையை நிறுவவும், தனி இயக்குனரை நியமிக்கவும், நூலக வரியை 3 காசுகளில் இருந்து 5 காசுகளாக உயர்த்தவும் அரசைத் தூண்டி அதில் வெற்றியும் பெற்றார், ம.பொ.சி.

## சென்னை நகரம் பற்றிய தீர்மானம்

ஆந்திர மாநிலக் கிளர்ச்சியால் ஒரு கட்டத்தில் ஆந்திர

மாநிலத்திற்குச் சென்னையை தலைநகராக்க மத்திய அமைச்சரவை முடிவு செய்துவிட்டதாகச் செய்தி வெளிவந்தது. அன்றைய முதலமைச்சர் ராஜாஜி, “சென்னையை ஆந்திர அரசுக்கும் உரிய தலைநகராக்கினால், சென்னை ராஜ்ய முதல் மந்திரி பதவிக்கு வேறொருவனைத் தேடிக் கொள்ளுங்கள்” என்று பாரதப் பிரதமர் நேருஜியிடம் கூறிவிட்டார்.

அதிர்ச்சியளித்த இந்தச் சூழலில் சென்னை மாநகராட்சியில் சென்னைத் தலைநகரம் தமிழ்நாட்டிற்கே எனும் தீர்மானத்தைநிறை வேற்ற ம.பொ சி. வரிந்து கட்டினார். அப்பொழுது அவர் ஆல்டர்மேனாக இருந்தார். மாநகராட்சிக் காங்கிரஸ் கட்சியில் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தார். காங்கிரஸ் கட்சிக்குச் சென்னை மாநகராட்சி மன்றத்தில் பெரும்பான்மை இருந்தது. மாநில முதல்வரான ராஜாஜியின் ஆதரவும் இருந்தது மேயர் செங்கல்வராயன் ஆதரவும் இருந்தது.

3.1.1953இல் சென்னை மாநகராட்சிக் கூட்டம் மேயர் த.செங்கல்வராயன் தலைமையில் கூடியது. ம.பொ.சி. பின்வரும் தீர்மானத்தை முன்மொழிந்து ஒரு மணி நேரம் பேசினார்.

“சென்னை நகரை ஆந்திரத்திற்கு வழங்குவதோ, ஆந்திரத்திற்கும் தமிழகத்திற்குமாகப் பங்கு போடுவதோ, மத்திய அரசின் நிர்வாகப் பிரதேசமாக்குவதோ, ஆந்திர அரசு தற்காலிகமாக நடைபெற அனுமதிப்பதோ கூடாது. சென்னை நகரம் தமிழ்நாட்டின் உட்பிரதேசமாக இருப்பதாலும், அதில் வாழும் மக்களில் தமிழ் பேசுவோரே 67 சதவிகிதத்தினராக இருப்பதாலும் தமிழகத்திற்கே உரிய தலைநகராக நீடிக்க அனுமதிக்க வேண்டும்.” (விடுதலைக்குப்பின் தமிழ் வளர்ந்த வரலாறு - 1978 - ம.பொ.சி. - ப.166).

உணர்ச்சிமிக்க தமது உரையின் முடிவில் “தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்” என்று முழங்கினார். ம.பொ.சி. ஆந்திர உறுப்பினர்கள் எதிர்ப்பிற்கிடையில் தீர்மானம் நிறைவேறியது. மாநகராட்சியின் தீர்மானத்தால் பிரதமர் நேரு மனமாற்றம் அடைந்தார். ராஜாஜியின் பக்க பலத்தால் ம.பொ.சி. நிகழ்த்திய சாதனை, இது.

## மாநகராட்சியின் கொடி

சென்னை மாநகராட்சிக்குத் தனியாக ஒரு சட்டம் இருப்பதுபோல, தனியாக ஒருகொடியும் அனுமதிக்கப்பட்டது பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அந்தக் கொடியானது கடலோடு கப்பலையும், மூன்று சிங்கங்களையும், இரண்டு மீன்களையும் கொண்டாக இருந்தது. மூன்று சிங்கங்கள் பிரிட்டிஷ் அரசாங்கச் சின்னமாகும். கடலொடு கப்பலும் மீன்களும் சென்னையானது கடற்கரைப் பட்டினம் என்பதைக் காட்டுவனவாகும்.

நாடு சுதந்திரம்பெற்றபின், மாநகராட்சியின் கொடிச் சின்னம் மாற்றப்பட வேண்டுமென்று தமிழக அரசு ஆணை அனுப்பியது. அது பற்றி ஆலோசித்துப் பரிந்துரை தர மாநகராட்சியின் நிரந்தரக் குழுக்களின் தலைவர்கள், பிரதம எஞ்சினியர், மாநகராட்சியிலுள்ள கட்சிகளின் தலைவர்கள் கொண்ட தனிக்குழு ஒன்று அமைக்கப் பெற்று, அதில் கல்வி நிரந்தரக் குழுவின் தலைவர் என்ற முறையில் ம.பொ.சி.யும் இடம் பெற்றார்.

ம.பொ.சி. மூவேந்தர் மரபின் சின்னங்களான வில், புலி, கயல் சின்னங்களைத் தமது தமிழரசுக் கழகக் கொடியில் பொறித்தவர். சென்னை மாநகராட்சிக் கொடியிலும் அந்தச் சின்னங்கள் பொறிக்கப்பட விரும்பினார். தனிக்குழுவின் முதல் கூட்டத்திலேயே, “பழைய கொடியில் இரண்டு மீன்கள் இருப்பதால், புலியையும், வில்லையும் சேர்த்து, மாநகராட்சிக் கொடியைத் தமிழர்க் கொடி ஆக்கிவிடலாம்” என்று பரிந்துரைத்தார். விவாதத்திற்குப் பிறகு ம.பொ.சி.யின் தீர்மானம் ஒரு மனதுடன் நிறைவேறியது. தனிக்குழுவின் பரிந்துரை அரசாங்கத்தின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டது. எதிர்பாராத வகையில் ஒருநாள்ம.பொ.சி ராஜாஜியை அவருடைய வீட்டில் சந்திக்கச் சென்றார். அந்தச் சமயத்தில் கொடி பற்றிய கோப்பைப் பார்த்துக் கொண்டிருந்தார் ராஜாஜி. அப்பொழுது ம.பொ.சி.யைப் பார்த்து “உங்கள் கழகக் கொடியைக் கார்ப்பரேஷன் கொடியாக்கி விடுகிறீர்களா?” என்று சிரித்துக் கொண்டே கூறி, கோப்பில் அங்கீகாரம் தந்து கையெழுத்திட்டார். ராஜாஜி. (விடுதலைக்குப்பின் தமிழ் வளர்ந்த வரலாறு - ப.171).

## பட்டங்களும் பட்டயங்களும்

‘சிலம்புச் செல்வர்’ என்று ம.பொ.சி.க்கு மாற்றுப் பெயராகப் புகழ் பூத்தப் பட்டம் 1950இல் நாகர்கோயிலில் நடைபெற்ற சென்னை தமிழ் எழுத்தாளர் சங்க மாநாட்டில் சொல்லின் செல்வர் பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்களால் வழங்கப் பெற்றது.

1966ஆம் ஆண்டுக்குரிய சாகித்ய அகாதமியின் விருது ம.பொ.சிக்கு வழங்கப் பெற்றது. விருதுவின் அறிமுகப் பத்திரத்தில் ஆங்கிலத்திலும் இந்தியிலும் எழுதப் பெற்றதின் தமிழாக்கம் வருமாறு :

“ஒரு குடிசைப் பிரதேசத்தில் வறுமைமிக்க குடியில் பிறந்தவர். அச்சுக்கோக்கும் தொழிலாளியாக வாழ்க்கையைத் தொடங்கிச் சொந்த முயற்சியால் இலக்கியம் பயின்றவர். தெள்ளிய நடையில் எழுத வல்லவர் இவருடைய நடையில் வேகமும் கவர்ச்சியும் உண்டு. இவருடைய வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு தமிழ் இலக்கிய களஞ்சியத்திற்கு ஒரு புதிய வரவு ஆகும்.” (செங்கோல் 29.5.1988)

1972இல், பொதுவாக, கல்வித்துறையிலும் இலக்கியத்துறையிலும் புரிந்துள்ள சேவைக்காக 'பத்மஸ்ரீ' விருது ம.பொ.சிக்கு அன்றைய குடியரசுத் தலைவர் டாக்டர் வி.வி.கிரி அவர்களைக் கொண்டு மத்திய அரசு வழங்கி கௌரவித்தது.

1976இல் தமிழ்நாடு இயல், இசை, நாடகமன்றம் ம.பொ.சி.க்கு கலைமாமணி பட்டம் அளித்தது.

28.9.1979இல் சென்னைப் பல்கலைக்கழகமும் 27.10.1979இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் 'டாக்டர் (பி.எச்.டி)' பட்டம் அளித்து ம.பொ.சி.யைப் பெருமைப்படுத்தின.

27.7.1985இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' எனும் பட்டத்தைத் தந்தது. செனட் சபையில் ம.பொ.சி.யை ஆயுள்கால உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டதோடு தங்கமெடல் ஒன்றையும் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் அளித்தது.

1985இல் ம.பொ.சி.யின் 'விடுதலைப் போரில் தமிழகம்' எனும் நூலைத் தமிழ்நாடு அரசு நாட்டுடைமையாக்கி ஒரு லட்சம் ரூபாய் பொற்கிழி வழங்கியது.

பல்கலைக்கழக வரலாற்றிலேயே முன்னுதாரணம் இல்லாது, 1981 டிசம்பர் 31இல் சென்னைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் உரையாற்ற ம.பொ.சி.க்கு வாய்ப்பளிக்கப் பெற்றது. 'வரலாற்றிலே புதுமை' எனும் தலைப்பில் பேசினார்.

11.12.1983இல் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அனைத்திந்தியப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் சங்க ஆண்டு மாநாட்டின் வரவேற்புக் கூட்டத்தில் 'புதிய பாரதத்தைப் படைத்துக் கொடுங்கள்' எனும் தலைப்பில் தலைமையுரையாற்றினார், ம.பொ.சி.

22.9.1983இல் சென்னைப் பல்கலைக்கழகத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடைபெற்ற அதன் நூலகத்தின் பவளவிழாவில் 'தமிழர் வாழ்வில் தமிழே தலைமை பெற வேண்டும்' எனும் தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தியுள்ளார், ம.பொ.சி. இதேநாளில் நடைபெற்ற 'கிராமியக் கலைகள்' எனும் கருத்தரங்கில் 'கிராமியக் கலைகளைப் பெருமைப்படுத்துவோம்' எனும் தலைப்பில் உரையாற்றினார்.

8.1.1981இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில், ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி நடைபெற்ற ஆராய்ச்சிக் கருத்தரங்கில் 'சமயங்கள் வளர்த்த தமிழ்' எனும் அரிய ஆய்வுப் பேருரையை நிகழ்த்தினார், ம.பொ.சி.

30.5.1982 இல் மதுரை மாவட்ட காந்தி கிராமத்திலுள்ள கிராமியப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் 'நவபாரதத்தை நோக்கி' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார், ம.பொ.சி.

5.5.1984இல் தஞ்சாவூரில் நடைபெற்ற தமிழ்ப் பல்கலைக்கழக முதலாவது பட்டமளிப்பு விழாவில் பட்டங்கள் பெற்றவர்களுக்கு நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் 'படைப்பிலக்கியம் என்றால் எது?' எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

மேற்குறிப்பிட்ட பேருரைகள் அனைத்தும் 'சிலம்புச் செல்வரின் பல்கலைப் பேருரை' எனும் தலைப்பில் தனி நூலாக 1984இல் வெளிவந்துள்ளது.

ம.பொ.சி. பெற்றப் பல்வேறு பட்டங்களும், பட்டயங்களும் அவருடைய அறிவாற்றலின் ஆளுமைக்குக் கிடைத்த அங்கீகாரமாகும்.

## பன்னூல் ஆசிரியர்

தமிழக அரசியல் தலைவர்களில் பல நோக்குகளில் ஆண்டுதோறும் பிறந்தநாளில் தமது நூல் வெளியீட்டைக் கொண்டு வருவதில் ம.பொ.சிக்குத் தனியிடம் உண்டு.

அரசியல், சமூகம், இலக்கியம், ஆன்மீகம் முதலான நோக்குகளின் இதழ்களில் முதலில் எழுதி, பிறகு நூல்களாக்குவதில் திரு.வி.க. போன்று ம.பொ.சி.யும் திகழ்ந்தார்.

பல்வேறு போராட்டங்களுக்கிடையே, இயக்கங்களுக்கிடையே அவற்றின் தேவைகளுக்கும் ஏற்ப நூல்களைப் படைத்தவர், ம.பொ.சி. - இவ்வாறு 140 நூல்களுக்கு மேல் ம.பொ.சி. நூல்களை எழுதிக் குவித்துள்ளது அவருடைய எழுத்துலக சாதனையைக் குறிக்கின்றது. முதுமையில் ஊன்றுகோல் அவருக்கு தேவைப்படவில்லை. ஆனால், எழுதுகோல் எப்பொழுதும் தேவைப்பட்டது. ஓரிரு சந்தர்ப்பங்களில் எழுதுகோல் துணையின்றி நேரடியாகவே எழுத்தெழுத்தாகவே சிந்தித்து அச்சுக்கோத்து நூலை உருவாக்கியப் புதுமைச் சாதனையை செய்துள்ளார், ம.பொ.சி.

அவருடைய முதல் நூலாக, 'கப்பலோட்டிய தமிழன்' (1944) எனும் நூலில் முற்கூறிய புதுமையை நிகழ்த்திக் காட்டியுள்ளார் ம.பொ.சி. இது பற்றி அவர் கூறியதாவது :

"எழுத்தாளன் என்று பெயர் பெறாத நிலையில் நான் எழுதிய முதல் நூலாதலால் அதனை வெளியிட பதிப்பகம் எதுவும் முன்வரவில்லை. பணம் கொடுத்து அச்சடிக்கும் வசதியும் எனக்கில்லை. பிற்காலத்தில் சென்னை மாநகராட்சியில் துணைமேயராகப் பதவி வகித்த எனது அரிய நண்பர் திரு.டி.எஸ். கோவிந்தசாமி அவர்களுக்குச் சொந்தமான

அச்சகத்திலே நானே அச்சுக்கோத்துக் கப்பலோட்டிய தமிழனை உருவாக்கினேன். ஆம், இன்னொருமுறையும் சொல்லுகிறேன். என் கையாலேயே எழுத்தெழுத்தாக அச்சுக் கோத்துக் கப்பலோட்டிய தமிழன் வரலாற்றை நூலாக்கினேன். இந்தப் பேறும் பெருமையும் இறைவன் எனக்குத் தந்த பரிசு போலும்.''

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் 'தலைவராக 1955இல் தேர்ந்தெடுக்கப்பட்டார் ம.பொ.சி. எனது வாழ்நாளில் நான் அடைத்த பல பதவிகளிலே தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவர் பதவியை அடைந்ததனை மிகவும் பெருமைக்குரியதாக நான் கருதுகிறேன்'' என்று ம.பொ.சி. கூறியுள்ளார்.

தமிழ் எழுத்தாளர் மாநாட்டிலே ஆட்சிமொழி, பயிற்சி மொழிப் பிரச்னை, ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு முதலானவற்றிற்கு முக்கியத்துவம் தரப் பாடுப்பட்டார், ம.பொ.சி.

## வெளிநாட்டுப் பயணம்

''தமிழரசுக் கழகத்தைத் தொடங்கிய பின்னர், தமிழர் குடியேறி வாழும் இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய அயல் நாடுகளுக்குச் சென்று அங்கு வாழும் தமிழர்களுடைய நிலைமையை அறிந்து வர வேண்டும் என்னும் ஆவல் என் மனத்துள் வளர்ந்து வந்தது. உலகில் எந்தக் கண்டத்தில் - எந்த நாட்டில் எந்தத் தீவில் தமிழர் வாழ்ந்தாலும் - அவர்களுக்காகவும் பணிபுரியும் அமைப்பாகத் தமிழரசுக் கழகம் இயங்க வேண்டுமென்பதே என் விருப்பம்.'' இவ்வாறு ம.பொ.சி. 'எனது போராட்டம்' நூலில் குறிப்பிட்டுள்ளார்.

1949இல் இலங்கைத் தீவில் முதன்முறையாக ம.பொ.சி. மேற்கொண்ட பயணம், அவருடைய முதல் வெளிநாட்டுப் பயணமாக அமைந்தது; ஒரு மாத காலம் சுற்றுப்பயணம் செய்தார். இலங்கைத் தமிழர்களிடையே குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்கள், இந்தியா வமிசாவளித் தமிழர்களிடையே ஒற்றுமையேற்பட வலியுறுத்தினார்.

''தென்னாப்பிரிக்க இந்தியர்களின் துயர் துடைக்க ஒரு காந்தியடிகள் தோன்றினார். அதுபோல இலங்கை இந்தியர்களின் துயர் துடைக்க ஒரு காந்தி தேவைப்படுகிறார்'' என்று ம.பொ.சி. கூறிய ஒரு கருத்து, இலங்கை அரசின் ஆட்சேபத்திற்குரியதாயிற்று. இதன் பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் 17 முறை இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்டார், ம.பொ.சி.

## இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு

ம.பொ.சி.யின் 'தமிழ் முரசு' இலங்கைத் தமிழர் பிரச்சனையில் ஆழ்ந்த பரிவுடன் எழுதி வந்தது. இலங்கைத் தமிழர்களுக்காக

போர்க்குரல் எழுப்பிய ம.பொ.சி. தமது தமிழ் முரசில் (1946 சூலை) 'போர் துவங்கிவிட்டது' எனும் கட்டுரையை எழுதினார். "இலங்கையில் தமிழ் மக்கள் - சிங்களவரிடம் சீரழிவது தமிழினத்தின் தன்மானத்திற்கே அறைகூவலாகும்" என்று எழுதினார் இலங்கைத் தமிழர் என்று ம.பொ.சி. குறிப்பிட்டது இந்திய வமிசா வழித் தமிழர் மட்டுமல்ல ஈழத் தமிழர்களையும் சேர்த்துத்தான்

இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகம் திருகோணமலையில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சி மாநாட்டில் பேசியதின் சுருக்கத்தை 'இலங்கையிலும் தமிழரசும் போல்' எனும் தலைப்பில், தாம் ஆசிரியராக விருந்த 'தமிழ்முரசு' இதழில் 1951இல் வெளியிட்டார் ம.பொ.சி.

"இலங்கை வாழ் இந்திய சமுதாயத்தினரைப் பற்றியும் அவர்களின் குடியுரிமையைப் பற்றியும் ஆழ்ந்த அக்கறை காட்டிய தமிழ்த் தலைவர்களில் அவர் முதலிடம் வகிக்கிறார் என்பதை இங்குக் குறிப்பிடவிரும்புகிறேன்" என்று 1986இல் இலங்கை இந்தியர் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செள.தொண்டமான் ம.பொ.சி.யைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் கா.பொ.இரத்தினம், இலங்கைத் தமிழர் பிரச்சனைகளை நன்கு அறிந்து அதற்கான ஆதரவை அளித்துத் தமிழ்நாட்டுத் தலைவர்களிடையே ம.பொ.சி.யின் வரலாற்றுப் பாத்திரத்தைப் பின்வருமாறு 1986இல் எடுத்துரைத்துள்ளார்.

"இலங்கைத் தமிழ் மக்களின் ஆட்சி உரிமைப் போராட்ட வரலாற்றினையும், சிங்களவருக்கு மூத்த குடிகளான அவர்களின் நெடுங்கால வரலாற்றுப் பின்னணியையும் நன்கறிந்த தமிழ்நாட்டறிஞர்கள் சிலரேயாவர். இவர்களுக்குள்ளே முன்னணியில் திகழ்பவர் ம.பொ.சி. எனும் மூன்றெழுத்துக்குரியவரேயாவர்."

சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராக கிளர்ந்தெழுந்த தமிழ்ப் போராளிகளை ஆதரித்தும், பேசியும் எழுதி வந்தார் ம.பொ.சி. என்பது இன்றையச் சூழலில் நினைவில் நிறுத்தப்பட வேண்டிய செய்தியாகும்.

### பர்மாவில்

பர்மாவுக்கு 1956இல் சென்று 18 நாள்கள் சுற்றுலா செய்தார். பர்மா வாழ் தமிழர்களுக்கு ம.பொ.சி. கூறிய அறிவுரைகளில் சில, பின்வருவன.

"நீங்கள் பேசும் மொழியால் தமிழர்களேயானாலுங்கூட, வாழும் நாட்டாரால், ஏற்றுக் கொண்ட அரசியல் சட்டத்தால், நீங்கள் பர்மியர்கள் என்பதை மறவாதீர்கள். பர்மாவுக்கு ஒரு கேடென்றால் அதை அகற்றுவதிலே பர்மாவின் பூர்வகுடிமக்களைவிட முந்திக் கொண்டு

நீங்கள் பாடுபட வேண்டும். அதுதான் பர்மிய மக்களின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்கான முக்கியவழி.

"உங்கள் வாழ்க்கையிலே அன்றாட நடைமுறையில் தமிழ்மொழியே இடம் பெற வேண்டும். அடுப்பங்கரை தொட்டு உங்களுடைய கலாசாரப் பணிகள் முழுவதிலு மாகத் தமிழ் இடம் பெற வேண்டும். அதை நீங்கள் இழந்துவிட்டால் உலகத்திலே உங்களுக்கு மதிப்பு இல்லை.

"உங்களிடையே நீங்கள் எந்த மதத்தவராயினும், எந்த சாதியினராயினும் இனத்தால் ஒன்றுபடுங்கள்" (ம.பொ.சி. பேசுகிறார் - ம.பொ.சி. 58வது பிறந்த நாள் அன்பளிப்பு பர்மா தமிழ்க் கலாசாரக் கழகம், இரங்கூன், 1956).

## மலேசியாவில்

1964இல் மலேசியாவில் முதன்முறையாக ஒருமாத காலம் ம.பொ.சி. சுற்றுலா மேற்கொண்டார். இரண்டாவது முறையாக 1966இல் சென்றிருக்கின்றார். சிங்கப்பூருக்கும் இருமுறை சென்றிருக்கின்றார்.

மலேசியா சுற்றுப்பயணம் குறித்து ம.பொ.சி. அவருடைய 'செங்கோல்' இதழில் (23.2.1964) எழுதியதாவது :

"கிருத்துவ மதத்திற்கென பாதிரியார்கள் பலர் இருக்கிறார்கள். அதுபோல நான் தமிழனத்தின் பாதிரி. தமிழர் வாழும் நாடுகளுக்கெல்லாம் சென்று அவர்களுக்காகப் பணிபுரியும் பாதிரி இந்த அருந்தொண்டிலே நான் எல்லையற்ற இன்பங் காணுகின்றேன் இந்த இன்பத் தொண்டின் வழிப்பட்டதுதான் எனது மலேசியச் சுற்றுலா."

இரண்டாவது சுற்றுலாவின் பொழுது, கோலாலம்பூரில் முதன்முறையாக உலகத் தமிழ் மாநாடு எட்டு நாள்கள் நடைபெற்றது. தமிழக அரசின் பிரதிநிதியாக ம.பொ.சி. கலந்து கொண்டார் மாநாட்டில் கருத்தரங்குகள், ஆய்வுக்கட்டுரைகளில் பெரும்பாலும் ஆங்கிலமொழியில் அமைந்தன. சர்வதேச அளவில் நடைபெற்றதால் ஆங்கிலம் பொது மொழியாகத் திகழ்ந்ததைத் தவிர்க்க முடியவில்லை என்றாலும், தமிழுக்குரிய இடம் அளிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்ட-தாக ம.பொ.சி. கருதினார். எதிர்ப்புக்குரல் எழுப்பினார் 'வள்ளலார் வளர்த்த தமிழ்' எனும் தலைப்பில் கட்டுரை படிக்கச் சென்றவர், தமிழ் புறக்கணிக்கப்பட்டுள்ள அநீதி கண்டு ஆத்திரமடைந்து, கட்டுரையை படிக்க மறுத்துவிட்டார், ம.பொ.சி. மாநாட்டில் தமிழகப் பிரதிநிதிகளில் ஔவை டி.கே.சண்முகம் தவிர பிறர் 'எந்தப் பக்கமும் சாராமல் மௌனத்தில் மறைந்து கொண்டுவிட்டனர்' என்றும் ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார்.

## மேடைத் தமிழ் வளர்த்த மேதை

'விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு' எனும் நூலில் ம.பொ.சி. 'மேடைத் தமிழ் வளர்த்த மேதைகள்' எனும் ஓர் அத்தியாயம் எழுதியுள்ளார். அந்த மேதைகளுள் ஒருவராக ம.பொ.சி. வரலாறு படைத்துள்ளார்.

"சுதந்திரப் போராட்ட காலத்திலே - குறிப்பாக, காந்தி சகாப்தத்திலே பேச்சு மேடையே சுதந்திரம் பெறுவதற்கான பிரதான கருவியாகப் பயன்படுத்தப்பட்டது" என்று ம பொ.சி. முற்கூறிய நூலில் குறிப்பிட்டுள்ளார். காந்தி சகாப்தம் உருவாக்கியத்தமிழ்ப் பேச்சாளர்களுள் ம.பொ.சி.யும் புகழ் பெற்றார்.

"பேச்சு மேடையிலே ஆங்கில மொழி பெற்றிருந்த ஆதிக்கத்தையொழித்து அன்னை மொழிக்கு முதலிடந்தேட தமிழ்ப் பெரியார் திரு.வி.க. அரும்பாடுபட்டார்" என்று ம பொ.சி.யால் போற்றப் பெற்றத் தமிழ்த் தென்றல் திரு.வி.க.விடம் "இடைவெளியின்றித் தொடர்பு கொண்டில்லையானால் நான் திறமைமிக்க பேச்சாளனாகவும் வளர்ந்திருக்க முடியாது" என்றும் ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார்.

பொதுவாழ்க்கைத் தொடக்கத்திலேயே போராட்ட வாழ்க்கையை மேற்கொண்ட ம.பொ.சி.க்குப் பேச்சுக் கலை இயல்பாகவே அமைந்துவிட்டது. 1937லேயே "மேடைப் பிரசங்கத்தில் இவருக்குள்ள வன்மையும், தமிழ்மொழியில் இவர் கொண்டுள்ள பற்றும் மிகவும் போற்றத்தக்கவை" என்று பாராட்டப் பெற்றார் ம.பொ.சி. ('கிராமணி குலம்' - மாதமிருமுறை இதழ்; 1.1.1937 ப.7).

மூதறிஞர் ராஜாஜி அவர்கள் ம.பொ.சி.யின் பேச்சாற்றலைப் பாராட்டி 1944 லேயே பின்வருமாறு பேசியுள்ளார் :

"கிராமணியாரின் பேச்சு பெரிய காவியம் போன்றது. மாதுளம் பழத்திலுள்ள ரத்தினக் கற்களைப் போல் கட்டுக்கோப்புடனும், ஒழுங்காகவும் முத்துக்கள் எப்படி அடுக்கப்பட்டிருக்கின்றனவோ அப்படி ம.பொ.சி.யின் பேச்சில் சொற்கள் கோவையாகவும் அழகாகவும் அமைகின்றன. அப்படிப் பேச அவரால்தான் முடியும்."

1950இல் வெளிவந்த அவருடைய 'பேச்சுக் கலை' எனும் நூலில் அவருடைய கருத்துக்கள் கூறப் பெற்றுள்ளன.

## இறுதிக்காலம்

1943இல் வடபுலத்து அமராவதிச் சிறையில் 119 பவுண்டு உடல் நிறையோடு புகுந்து 88 பவுண்டு உடல் இளைத்து முப்பதொன்பது வயதில், 'அகால மரணத்தை நெருங்கிய ம.பொ.சி இறையருளால் 'புதிய தமிழகம்' படைக்க உடல்நலம் தேறி மறுபிறவியெடுத்தார்.

'புதிய தமிழகம்' படைத்து தேசிய இலட்சியங்களை பெருமளவில் நிறைவேற்றிவிட்ட நிறைவான வாழ்க்கையில், 89வது வயதில், இறுதிக் காலத்தை நெருங்க வேண்டியதாயிற்று.இடுப்பெலும்பு முறிவு ஏற்பட்ட நிலையில் 1995 ஆகஸ்ட் மாத முதல் வாரத்தில் மயிலாப்பூர் தேவகி மருத்துவமனையில் அனுமதிக்கப் பெற்றார். ம.பொ.சி. சிகிச்சை தொடந்து 50 நாள்களுக்கு மேல் மருத்துவமனை மரணப்படுக்கையில் கிடந்தார், ம.பொ.சி.

மரணப்படுக்கையில் கிடந்தபோது தேசம், தேசியம், தமிழ், ஆன்மீகம் எனச் சிந்தனைகள் ஆழ்மனதில் அலையெறிந்தாடின. இறுதிப் பயணத்திற்குத் தம்மைப் பக்குவப்படுத்திக் கொண்டதற்கு அறிகுறிகளைச் சொல்லாடலில் வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டார். ஆகஸ்ட் மாத இறுதியிலேயே சிந்தனைகள் சிதறி ஒலித்தன. உடன் இருந்த செவிலி செல்வி நீலாவிடம் குறிப்புகள் எடுக்கப் பணித்தார்.

21.8.1995, 24.8.1995, 25.8.1995-களில் செல்வி நீலா தமது கையெழுத்தில் ம.பொ.சி.யின் ஆழ்மனவோட்டச் சிந்தனைச் சிதறல்களை தாள்களில் பதிவு செய்தார். சிற்சிலவிடங்களில் ம பொ.சி.யின் கிறுக்கல் கையெழுத்துகளும்பதிவாயின. இவை. பதிவுகளின் நம்பகத்தன்மைக்குச் சான்று பகர்கின்றன. ம.பொ.சி.யின் சிந்தனைச் சிதறல்களில் சில, பின்வருவன:

"ஆன்மா ஒவ்வொன்றும் உடலை விட்டு பிரியும்போது தனது ஆன்ம பலத்தை அறிந்தேயிருக்கின்றது. ஆன்ம பலம் என்பது ஜோதிப் பிரகாசம். அது தன்னை அறிந்தே ஆன்மாவுடன் விடைபெறுகிறது. அதோ! ஆன்மாவும் விடை பெற்றுக் கொண்டேயிருக்கிறது என்ற உணர்வையும் தெளிவாக பெறத்தான் செய்கிறது. இது ஆன்மீக பாஷை, இதை எழுத்தால் எழுதிக்காட்டி விட முடியாது....

"நமச்சிவாய வாழ்க! நாதான்தாள்வாழ்க! அந்த வரிகளை எழுதிக் கொள்ளவும். - இந்தத் திருவாசகத்தோடு எனது வாழ்க்கை முடிவடைகிறது." (இறுதி நேரத்தில் சிலம்புச் செல்வரின் எண்ணமும் எழுத்தும் - சிறுவெளியீடு - பேராசிரியர் டாக்டர் ப. அன்பு).

25.8.1995-இல் பதிவானப் பின்வரும் சிந்தனையோட்டம் ம.பொ.சி.யின் 'புதிய தமிழகம்' படைப்புச் சிந்தனையை வெளிப்படுத்தியது.

"தமிழுக்கேயுரிய சிலப்பதிகாரம், திருக்குறள் ஆகிய நீதிநூல்களை யான் கற்று இல்லையேல், புதிய தமிழகத்தைப் படைத்திருக்கும் ஆற்றலை யான் பெற்றிருக்க முடியாது."

இந்தக் குறிப்புகளின் இறுதியில், 'திங்களைப் போற்றதும்' எனத் தொடங்கும் சிலப்பதிகார வரிகள் ஐந்து காணப்படுகின்றன. இவ்வாறே 21.8.1995இல் பதிவானதில் 'தூமப்பணிகள் ஒன்றின் தோய்ந்தால் என'த் தொடங்கும் சிலம்பின் வரிகள் உள்ளன.

இவையாவும் ம.பொ.சி.யின் ஆன்மீக, இலக்கிய உணர்வுகளின் ஒட்டம் இறுதிக்காலத்திலும் இணைந்தேயிருந்தன என்பதை உணர்த்துகின்றன.

3.10.1995இல் தேவகி மருத்துவமனையிலேயே ம.பொ.சி. அமரரானார்.

# 2. விடுதலைப் போர்

## காந்தியடிகளே காரணகர்த்தா

இந்திய விடுதலைப் போரில் தாம் பங்கேற்க காந்தியடிகளே காரணகர்த்தா என்பதை ம.பொ.சி. பின்வருமாறு விளக்கியுள்ளார்.

"'காந்தி' என்னும் மூன்றெழுத்துப் பெயரில் ஏற்பட்ட கவர்ச்சி காரணமாகத்தான் நான் தேச விடுதலைப் போரில் ஈடுபட்டேன். இந்தப் பெயருக்குரியவரின் வரலாற்றைக்கூட அந்நாளில் நான் அறிந்து வைத்திருக்கவில்லை. அவருடைய சாதியையோ, மதத்தையோ, இனத்தையோகூட நான் புரிந்து வைத்துக் கொண்டிருக்கவில்லை. அவர் ஒரு மகான் என்பதை மட்டும் தெரிந்து கொள்ள என்னால் முடிந்தது. அதற்கு மேல் என்னைப் போன்ற சாதாரண மக்கள் நினைத்ததுபோல, அவர் கடவுளின் அவதாரம் என்ற நினைப்பும் எனக்கு ஏற்பட்டது.

"காந்தியடிகள் வெள்ளைக்காரர்களின் விரோதி என்பது மட்டும் அந்நாளிலே எனக்குத்தெரிந்திருந்தது. வெள்ளைக்காரர் என்போர் இந்நாட்டினர் அல்லர்; எங்கோ மிகவும் தொலை தூரத்திலிலுள்ள ஒரு நாட்டிலிருந்து வந்து இந்த நாட்டை அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்துபவர்கள் என்பதையும் நான் தெள்ளத்தெளிய தெரிந்த கொண்டிருந்தேன். அன்று இந்தச் சிவஞானத்திற்கிருந்த அரசியல் ஞானம், இவ்வளவுதான்.

"வெள்ளைக்கார சாம்ராஜ்யத்தின் வலிமையை நான் முழுசாக அன்று அறிந்திருக்கவில்லை. ஆனால் நானும் சேர்ந்து எதிர்ப்பதால் வெள்ளைக்காரர்கள் வெளியேறிச் சென்று விடுவார்கள் என்ற நம்பிக்கை மட்டும் எனக்குப் பூரணமாக இருந்தது. இந்த நம்பிக்கையை எனக்குத் தந்தது, காந்தியடிகளிடம் எனக்கு ஏற்பட்டிருந்த பரமபக்திதான்.

"காந்தியடிகளை ஒருமுறை நினைத்து விட்டுப் பின்னர் பிரிட்டிஷ் பேரரசை நினைத்துப் பார்த்தால், அந்த நாளில் அரசிடம் பயம் ஏற்படாது. காந்தியடிகளிடம் கொண்ட பக்தியானது பிரிட்டிஷ் பேரரசிடம் பயம் ஏற்படாமல் தடுத்தது.

"காந்தியடிகளைப் பின்பற்றி விடுதலைப் போரில் நான் ஈடுபட்டிருந்த காலத்திலே தேசபக்தி வேறு, தெய்வபக்தி வேறு என்ற நினைப்பு எனக்கு இருந்ததில்லை உண்மையான தெய்வ பக்தியைக்

காந்தி பக்தியின் மூலம்தான் நான் பெற்றேன்." ('காந்தியடிகளுக்குக் காணிக்கை' - ம.பொ.சி. கட்டுரை 'செங்கோல்' - வெள்ளி விழாமலர்).

மேற்காணும் நீண்டவிளக்கத்தில் ம.பொ.சி. இறுதிக்காலம் வரையில் மிகச்சிறந்த காந்திய வாதியாகத் திகழ்ந்ததற்குரிய வலுவான அடித்தளத்தை இளமையிலேயே அமைத்துக் கொண்டார் என்பதைப் புரிந்து கொள்கிறோம்.

## சத்தியாக்கிரகம் - ஒத்துழையாமை

ம.பொ.சி. பிறந்த ஆண்டில் 1906இல் தென்னாப்பிரிக்காவில் மோகன்தாஸ் கரம் சந்த் காந்தி (எம்.கே.காந்தி) சத்தியாக்கிரகம் என்ற புதிய அறப்போர் முறையைத் தொடங்கி வைத்தார். அத்துடன் சத்தியம், அகிம்சை, ஒத்துழையாமை முதலானவை சமுதாய வாழ்விலும் அரசியல் கிளர்ச்சிகளிலும் இந்திய தேசிய அரசியலில் காந்தியடிகளால் அறிமுகம் படுத்தப் பெற்றன.

ம.பொ.சி. அரசியல் வாழ்க்கையில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள முற்பட்டபொழுது காந்தியப் புது அறப்போர் நெறிகளை அறிந்தாரில்லை அவருக்கு அப்பொழுது வயது, பதினேழு. போகப் போகப் புரிந்துக் கொண்டு ஏற்றுக் கொண்டார்.

காந்தி பக்தியைக் கொண்டு காங்கிரஸ் பக்தியை வளர்த்துக் கொண்டார் ம.பொ.சி. காலப்போக்கில் காந்தியத்தின் குறிப்பிடத்தக்க தத்துவிகளில் ஒருவராக ம.பொ.சி ஏற்றம் பெற்றார் என்பது அவருடைய வரலாறு காட்டும் உண்மையாகும்.

## அரசியல் வாழ்க்கையின் தொடக்கம்

'எனது போராட்டம்' நூலில் 'காங்கிரசில் சேர்ந்தேன்' எனும் தலைப்பில் எழுதியதில் தமது அரசியல் வாழ்க்கையின் தொடக்கத்தைக் குறித்து ம.பொ.சி. பின்வருமாறு எழுதியுள்ளார்.

"நான் 1923ஆம் ஆண்டிலேயே அரசியலில் ஈடுபட்டு விட்டேன் என்று சொல்ல வேண்டும். அந்த ஆண்டில் நடைபெற்ற இந்திய சட்டசபை, பழைய சென்னை ராஜ்யச் சட்டமன்றத் தேர்தலிலே அழைப்பாரின்றியே நான் பங்கு கொண்டேன். வேட்பாளனாக அல்ல; வேட்பாளர்களுக்கு ஆதரவாகக் கோஷமிடுவோனாக! எனக்கு அப்பொழுது வயது பதினேழு. இங்கிருந்துதான் எனது அரசியல் வாழ்க்கை ஆரம்பமாகிறது.

"என்னுடைய அரசியல் வாழ்க்கையே தேர்தல் பிரசாத்தி-லிருந்துதான் ஆரம்பமானது. அதுவும் காங்கிரசுக்காகத்தான்."

## காங்கிரசில் சேர்ந்தார்

"1927இல்தான் நான் முறையாகக் காங்கிரசில் சேர்ந்தேன். ஆண்டுச் சந்தா செலுத்தி, அங்கத்தினர் சேர்க்கும் தாளில் கையொப்பமிட்டு நான் காங்கிரசில் சேர்ந்ததாக எனக்கு நினைவில்லை. அப்போதெல்லாம் அப்படி முறையாகக் காங்கிரஸ் பணி நடைபெறவுமில்லை" என்று தாம் காங்கிரசில் சேர்ந்ததைக் கூறியுள்ளார், ம.பொ.சி.

காங்கிரசில் சேர்ந்த பிறகு காங்கிரஸ் தொண்டர் படையில் ஒருவராகத் தொண்டாற்றும் வாய்ப்பும் ஏற்பட்டது. 1927 டிசம்பர் 26இல் சென்னை சேத்துப்பட்டுக்கருகில் அக்காலத்தில் இருந்த எழும்பூர் ஏரியில் காங்கிரஸ் மகாசபையின் 42-வது கூட்டம் 'திலகர் மண்டபம்' எனப் பெயரிடப் பெற்றக் காங்கிரஸ் பந்தலில் கூடியது.

அச்சுக்கோப்பவராக வேலை பார்த்த ம.பொ.சி. தொண்டர்படையில் சேர, அவர் வேலை பார்த்த 'விநோதினி' எனும் தேசிய வார இதழின் ஆசிரியர் தேசபக்தர் டி.என்.நடராச பிள்ளை, வாய்ப்பளித்தார். நடராச-பிள்ளை தமது அச்சகத்தில் பணியாற்றியத் தொழிலாளிகளை தொண்டர்படையில் சேர ஏற்பாடு செய்தார். அவர்களுள் ஒருவராக ம.பொ.சி., தொண்டர் படையில் சேர்ந்தார். ம.பொ.சி.யின் அரசியல் வாழ்க்கையில் தொண்டர்படையில் சேர்ந்தது ஒரு முன்னேற்றமாகும்.

காங்கிரஸ் தொண்டராக அகில இந்திய காங்கிரஸ் மாநாடு நடவடிக்கைகளையும், பிரபல காங்கிரஸ் தலைவர்களையும், ம.பொ.சி. முதன்முறையாகக் கண்டு கேட்டுத் தமது அரசியல் உணர்ச்சியை மேலும் வளர்த்துக் கொண்டார்.

"திருவிழாக் கூட்டத்தில் கலந்து கொள்ளுகிற உணர்ச்சியோடுதான் கலந்து கொண்டதாக ம.பொ.சி அன்றைய சூழலில் குறிப்பிட்டுள்ளார். அன்றையத் தமது அனுபவத்தைப் பின்வருமாறு பிற்காலத்தில் எழுதியுள்ளார், ம.பொ.சி.

"இரவு பகலாகக் கண்விழித்து காங்கிரஸ் மகாசபையின் வெற்றிக்காகப் பணிபுரிந்தேன். வாயாரச் சோறும் கிடைத்தது. கண்ணாரக் காட்சியும் கண்டேன்! ஆனால் செவியாரப் பெருந்தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டேன் என்று சொல்வதற்கில்லை.ஏனெனில் பேச்சுக்களெல்லாம் பரங்கி மொழியிலே! அதனால், காதிருந்தும் செவிடனானேன். அன்றே, ஆங்கில ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கான வித்து என் உள்ளத்தில் விழுந்தது."

தேசியவுணர்வில் மொழியுணர்வை இணைத்து 1927லேயே ம.பொ.சி. சிந்தித்ததைத்தான் அவருடைய "ஆங்கில ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கான வித்து என் உள்ளத்தில் விழுந்தது" எனும் எதிரொலி சுட்டிக் காட்டுகிறது.

ம.பொ.சி.யின் அடுத்த அரசியல் நடவடிக்கை 1928இல் சைமன் கமிஷன் பகிஷ்காரத்தில் தொடர்ந்தது. இதிலிருந்துதான் தமது அரசியல் போராட்டம் தொடங்கியது என்று ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார்.

## சைமன் கமிஷன் பகிஷ்காரம்

ஸர் ஜான் சைமன் என்பவர் தலைமையில் ஏழு பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவிற்கு அனுப்பப் போவதாக 1927இல் அறிவித்தது. அரசியல் சாசனத் தொடர்பான சட்டங்களை, விசாரணையின் முடிவில் பரிந்துரை செய்ய நியமிக்கப் பெற்ற இந்தக் குழுவில் ஒரு இந்தியர்கூட இல்லை. பிரிட்டனில் ஆளும் கட்சியாக அப்பொழுது இருந்த கன்சர்வேடிவ் கட்சி அனுப்பிய இந்த விசாரணைக்குழு, வெறும் கண்துடைப்பே எனத் தெரிந்துக் கொண்ட தேசிய அரசியல் கட்சிகள் ஒற்றுமையாக இந்தக் கமிஷனை எதிர்த்தன.

1927இல் சென்னையில் கூடிய காங்கிரஸ் மகாசபையில் எஸ். சீனிவாசய்யங்கார் சைமன் கமிஷன் பகிஷ்காரம் தீர்மானத்தை முன்மொழிந்து பேசினார். டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையார் வழிமொழிந்து பேசினார். இச்சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விவரம், வருமாறு :

"இந்தியாவின் சுயநிர்ணய சுதந்திரத்தை முற்றிலும் அசட்டை செய்து பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அரசியல் விசாரணைக் கமிஷனை நியமித்திருப்பதால் ஒவ்வொரு விதத்திலும் கமிஷனைப் பகிஷ்கரிப்பது ஒன்றுதான் சுயமரியாதைக்கேற்ற வழியாகுமென்று காங்கிரஸ் தீர்மானிக்கிறது." (காங்கிரஸ் மகாசபை சரித்திரம் - மூன்றாம் பாகம் - சுதேசமித்திரன் வெளியீடு - 1935 - ப 784).

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட காங்கிரஸ் மகாசபையின் தொண்டர்படையில் ம.பொ.சி. இருந்தார் என்பது நினைவு கூரத்தக்கது.

இந்தியாவின் பிப்ரவரி 3, 1928இல் ஒரேநாளில் அனைத்திந்திய அளவில் பகிஷ்காரத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது. முக்கியஸ்தர்கள் எவரும் இந்தக் கமிஷனைச் சந்திக்க மறுத்துவிட்டனர். 'சைமனே வெளியே போ' என்னும் முழக்கம் எதிரொலித்தது. கடை அடைப்புகளும், கண்டனம், பொதுக்கூட்டங்களும் எல்லா ஊர்களிலும் நடந்தன இதன் விளைவாக தடியடி, துப்பாக்கிச்சூடு, சிறைவாசம் எல்லாம் தொடர்ந்தன.

சென்னை புரசைவாக்கத்தில் நடைபெற்ற சைமன் கமிஷன் பகிஷ்கார ஆர்ப்பாட்டத்தில் ம.பொ.சி. தமது அச்சகத்தொழில் தோழர்களுடன் கலந்து கொண்டார். மேற்கொண்டு நிகழ்ந்ததை ம.பொ.சி.யே பின்வருமாறு வருணித்துள்ளார்.

“ராக்ஸி திரைப்படத் தியேட்டர் அருகில் ‘பல்டானா’ என்னும் பெயரில் ரொட்டிக்கடை ஒன்று இருந்தது. இப்போது அதன் பெயர் மாறிவிட்டது. ஆங்கிலேயர் ஒருவரால் அது நடத்தப்பட்டதால், ஹர்த்தால் ஒட்டி அந்தக் கடை மூடப்படவில்லை. ஆவேசங்கொண்ட இளைஞர் கூட்டமொன்று அந்தக் கடை மீது சரமாரியாகக் கற்களை வீசி, அதனை மூடும்படி வற்புறுத்தியது. அந்தக் கூட்டத்திலே நானும் கலந்திருந்தேனாதலால் கடைமீது கல்லெறியும் ‘கடமை’யைச் செய்தேன்.

“அப்போது ‘அகிம்சை’ பற்றி எனக்கு அதிகமாக எதுவும் தெரியாது. எனது செயலிலுள்ள வெறித்தனம் இளம்பருவம் காரணமாக எனக்கு அப்போது விளங்கவில்லை.

“இந்த நிகழ்ச்சி காரணமாக என்னையும் வேறு சிலரையும் கைது செய்து வேப்பேரி காவல் நிலையத்தில் அடைத்தனர் போலீசார். எனது அரசியல் போராட்டம் இதிலிருந்துதான் ஆரம்பமாகிறது. ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைக் கொடுமைக்கு நான் இரையான முதல்நாள் அது. அன்று நள்ளிரவே விடுவிக்கப்பட்டேன்.”

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு சென்னை நகரில் காங்கிரசின் பெயரால் நடைபெற்று வந்த ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்வதைக் ‘கடமையாகக் கொண்டிருந்தேன்’ என்று ம.பொ.சி. பெருமிதமாகக் கூறியுள்ளார். இந்தக் கால கட்டத்தில் காங்கிரஸ் பிரசாரத்தில் முன்னணியில் புகழ் பெற்றிருந்த நாவலர் எஸ்.சத்தியமூர்த்தி அவர்களின் உரைவன்மை ம.பொ.சியைக் கவர்ந்தது. அவரைப் போல சிறந்த பேச்சாளராக ஆகிவிட வேண்டும் எனும் விருப்பம் மேலோங்கியது.

## உப்பு சத்தியாக்கிரகம்

தாம் நடத்தும் போராட்டம் ஏழை மக்களுக்காகத்தான் என்னும் உண்மையை உலகறியச் செய்ய ‘உப்பு சத்தியாக்கிரக’த்தை நடத்தினார், காந்தியடிகள்.

“பிரிட்டிஷ் அரசாங்கம் போட்ட வரிகளிலெல்லாம் உப்பு வரியே மிகவும் அநீதியானது. ஏழைகளின் கண்ணோட்டத்துடன் இதை நான் கூறுகிறேன். இந்தியாவில் ஏழைகளிலும் ஏழைகளாக இருக்கிறார்களே அவர்களுக்காகத்தான் விடுதலை இயக்கம் நடைபெறுகிறது ஆகையால் இந்தத் தீமையை (உப்புவரியை) எதிர்ப்பதுடனேயே விடுதலை இயக்கம் தொடங்கும் இந்தக் கொடுமையான ஏகபோக உரிமைக்கு நாங்கள் பணிந்து கொண்டிருந்துவிட்டோமே, அதுதான் வியப்பளிக்ககூடியது” இவ்வாறு இந்திய வைஸ்ராயிக்கு எழுதிய கடிதத்தில் காந்தியடிகள் குறிப்பிட்டார்.

1930 மார்ச் மாதம் 12ஆம் தேதி காலையில் காந்தியடிகள் உப்பு சத்தியாக்கிரகத்திற்காக அகமதாபாத் சபர்மதி ஆசிரமத்தில் இருந்து 99 சத்யாக்கிரகிகளுடன் 241 மைல் தொலைவில் உள்ள கடற்கரை ஊரான தண்டிக்கு யாத்திரை மேற்கொண்டார்.

1930 ஏப்ரல் 13இல் ராஜாஜி திருச்சியில் இருந்து 98 தொண்டர்களுடன் வேதாரண்யத்தில் உப்பு சத்தியாக்கிரகம் செய்யப் புறப்பட்டார்.

ராஜாஜியின் வேதாரண்ய உப்பு சத்தியாக்கிரகப் பயணம் தொடங்கிய அதேநாளில் சென்னையில் ஐகோர்ட் கடற்கரையில் ஆந்திரகேசரி டி.பிரகாசம் தலைமையில் 'தொண்டரெல்லாம் தமிழர்' என்று சொல்லும்படி உப்பு சத்தியாக்கிரகம் நடைபெற்றது.

சத்தியாக்கிரகத் தலைவர் பிரகாசத்தைப் போலீசார் கைது செய்யாதபடி சூழ்ந்தத் தொண்டர்களில் ம.பொ.சி.யும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (விடுதலைப்போரில் தமிழகம் இரண்டாவது பாகம் - இரண்டாம் பதிப்பு 1983 - சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் - ப.45).

"சென்னை நகரில் உப்பு காய்ச்சிய தொண்டர்களைப் போலீசார் பிரம்பால் அடித்துக் கலைத்தனர். எனக்கும் சில அடிகள் கிடைத்தன. ஆனால், நான் பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய அளவில் இரத்தக்காயம் ஏற்படவில்லை. தழும்புகள்தான் ஏற்பட்டன" என்று ம.பொ.சி. 'எனது போராட்டம்' நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## சட்டமறுப்பு இயக்க மறியலில்

உப்பு சத்தியாக்கிரகம் ஆரம்பமான சில மாதங்களுக்குப் பின்னர் அது 'சாத்வீகச் சட்டமறுப்பு' என்னும் பெயரைப் பெற்றது. அன்னியத் துணிக்கடை மறியல், கள்ளுக்கடை மறியல், சட்டவிரோதமான ஊர்வலம் ஆகியவை போராட்ட நடவடிக்கைகளாக இருந்தன.

சட்டமறுப்பு இயக்க மறியல் ஒன்றில் ம.பொ.சி. கலந்து கொண்டார். இந்த மறியல் பிரபல பத்திரிகையாசிரியர் காசா சுப்பாராவ், ஓ.பி இராமசாமி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

சென்னை சூனஸ் சேட் என்பவர் கடை முன் நிகழ்ந்த மறியலில் இரு தமிழ்த் தொண்டர்களுடன் ம.பொ.சி. கலந்துக் கொண்டார். இந்த மறியலில் உப்பு சத்தியாக்கிரகத்தில் கிடைக்காத 'பலமான இரத்தகாயம்' ம.பொ சிக்கு கிடைத்தது. இந்த மறியலில் அவருக்குக் காசாசுப்பாராவின் தோழமை' கிடைத்ததை ம.பொ.சி. பெருமையாகக் குறிப்பிட்டுள்ளார்.

## கள்ளுக்கடை மறியல்

காந்திய அறநெறிப் போராட்டங்களில் கள்ளுக்கடை மறியலும்

ஒன்றாகும். 1931ஆம் ஆண்டில் சென்னை மாநகரம் முழுவதும் கள்ளுகடைகள் முன்னே மறியல் தொடங்கியது. வடசென்னை மதுவிலக்குக் கமிட்டியின் இரு செயலாளர்களில் ம.பொ.சி. ஒருவர். தலைவர் அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த சர்தார் பு. ம. ஆதிகேசவலுநாயக்கர்.

சுயசாதியின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமாகும் கள்ளுகடை மறியலில் ம.பொ.சி. ஈடுபட்டதில் தேசாபிமானம், சுயசாதி அபிமானத்தை வென்றுவிட்டது விளக்கமுற்றது தந்தையும் தம்பியும் மதுத்தொழிலில் ஈடுபட்டிருக்க, ம.பொ.சி. மறியலில் ஈடுபட்டது அவருடைய காந்தியப் பற்றைப் பறைசாற்றியது.

கள்ளுக்கடை மறியல் காரணமாக வடசென்னையில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் ‘கிராமணி சாதியிலே பிறந்து, அந்தச் சாதியின் தொழிலையே வெறுத்த’ ம.பொ.சி.யின் தேசபக்தியைப் பெருந்தலைவர்கள் பாராட்டினார்கள். இதனால் பொதுமக்களிடையே ம.பொ.சிக்கு நல்ல செல்வாக்கு ஏற்பட்டது.

## தடையுத்தரவு மீறலும் கைது செய்யப்படுதலும்

1932இல் காந்தியடிகள் சட்டமறுப்புப் போரைத் தொடங்கியக் காலத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அடக்குமுறையை ஏவியது. காங்கிரஸ் மகாசபை சட்டவிரோதமான அமைப்பென்று அறிவிக்கப்பட்டுவிட்டது. சென்னையிலிருந்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் அலுவலகம் உட்பட, நாட்டில் இருந்த காங்கிரஸ் அலுவலகங்கள் அனைத்தும் போலீசாரால் கைப்பற்றப்பட்டுவிட்டன.

தடையுத்தரவுகள் தாண்டவமாடின. ஒருநாள் ம.பொ.சி.க்கும் தடையுத்தரவு நோட்டீஸ் ஒன்று வந்தது. அதன் சுருக்கத்தை ம.பொ.சி. பின்வருமாறு தந்துள்ளார்.

“எம்.பி. சிவஞான கிராமணியாகிய நீர், வண்ணை தேசிய சேவா சங்கத்தின் செயலாளராக இருப்பதோடு, சட்ட விரோதமான அமைப்பாக அரசினரால் அறிவிக்கப்பட்டுள்ள காங்கிரஸ் மகாசபையிலும் அங்கத்தினராக இருக்கிறீர். அதனால், பிரிட்டிஷ் ஆட்சியைக் கவிழ்க்கக்கூடிய சட்டவிரோதமான செயல்களில் மறைமுகமாகவோ, வெளிப்படையாகவோ நீர் ஈடுபடக்கூடுமென்று அரசாங்கம் ஐயறுகிறது. ஆகவே, இன்று முதல் ஆறுமாதக்காலத்துக்கு நீர் ஐந்து பேருக்கு அதிகமானவர் கூடியுள்ள இடத்தில் இருப்பதோ, ‘காந்திக்கு ஜே’, ‘வந்தேமாதரம்’ என்ற கோஷங்களை எழுப்புவதோ தண்டனைக்குரிய குற்றங்களாகுமென்று அரசு உமக்கு அறிவிப்பதோடு, அடுத்துள்ள ஆறுமாத காலத்திற்கு எக்காரணத்தை முன்னிட்டும் நீர் சென்னைக்கு வெளியே செல்லக்கூடாதென்றும் அரசு தடைவிதிக்கிறது. இந்தத்

தடையை மீறினால் தண்டனைக்குள்ளாவீர் என்றும் அரசு உம்மை எச்சரிக்கின்றது.''

ம.பொ.சி தடையுத்தரவை மீறி, கோஷங்களை எழுப்பினார் கைது செய்யப் பெற்றார். ஒருநாள் சிறை வைக்கப் பெற்று விடுதலை செய்யப் பெற்றார்

மீண்டும். தடையுத்தரவை மீறி ஊர்வலம் நடத்தியதால் கைது செய்யப் பெற்று நள்ளிரவில் விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வாறு பலமுறை சட்டத்தை மீறிக் கைதாகி ஒருமாத காலம் சிறையில் அடைக்கப் பெற்றார், ம.பொ.சி.

## 'தமிழா துள்ளி எழு!'

'தமிழா துள்ளி எழு' எனும் சிறு பிரசுரத்தைக் கையெழுத்துபடிகளாகவே தயாரித்துத் திருவல்லிக்கேணி கடற்கரையில் மக்களிடையே வழங்கியதால் 30.9.1932இல் ம.பொ.சி. கைது செய்யப் பெற்றார் இந்தப் பிரசுரம் சட்டவிரோதமான, ராஜத்துவேஷமானது என்று அரசு கருதியது.

இந்திய தேசியவுணர்வுடன் விடுதலைப் போரில் பங்கேற்று வந்த தொடக்க காலத்திலேயே ம.பொ.சி.க்கு இந்தியன் என்ற உணர்வோடு தமிழன் எனும் இனவுணர்வும் இழைந்திருந்தது என்பதை 'தமிழா! துள்ளியெழு!' எனும் வெளியீடு உணர்த்தியது. இந்த வெளியீட்டைக் குறித்து ம.பொ.சி. எழுதியவதாவது :

"பிரசுரத்தில் உள்ள வாசகம் முழுவதும் என்னாலேயே எழுதப்பட்டதாகும். அந்தக் காலத்திலேயே என் உள்ளத்தில் தமிழன் என்னும் இனவுணர்ச்சி மலர்ந்திருந்தது அதனால் பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் கண்ட மாண்பினைக் காட்டி. நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப்போரில் ஈடுபட வருமாறு தமிழருக்கு அழைப்பு விடுததிருந்தேன். சுமார் இருநூறு பிரதிகள் வரை எழுதித் தயாரித்து அவற்றைத் தன்னந்தனியாக நான் மட்டுமே கடற்க்கரையில் மக்களுக்கு வழங்கினேன்

"கைதியாவேன் என்று எதிர்பார்த்தே - அதனை மனமார விரும்பிய அந்தச் சட்டவிரோதமான செயலில் நான் ஈடுபட்டேன் எதிர்பார்த்தபடி இரகசியப் போலீசார் என்னைக் கைது செய்தனர்.''

## ஆறுமாதக் கடுங்காவல்

தமிழன் என இனவுணர்வைக் கொண்டு இந்திய தேசியத்தை

வளர்த்தெடுக்க முடியும் என்று ம.பொ.சி. முனைந்ததை 'தமிழா! துள்ளியெழு!' எடுத்துக்காட்டியதுடன் முதன்முறையாக அவருக்கு ஆறுமாதக் கடுங்காவல் தண்டனையைப் பெற்றுத் தந்தது

எழும்பூர் பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் தொடுக்கப் பெற்ற வழக்கில் மூன்று மாதக் கடுங்காவல் தண்டனையும், முந்நூறு ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதம் கட்டத்தவறினால் மேலும் மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை அனுபவிக்க வேண்டும் என விதிக்கப்பட்டது. அபராதம் கட்ட இயலாத நிலையில் கடுங்காவல் தண்டனை ஆறுமாதங்களாயிற்று.

## தனிநபர் சத்யாக்கிரகத்தில்

காந்தியடிகள் 1940இல் காங்கிரஸ் ஒப்புதலோடு தனிநபர் சத்யாக்கிரகம் எனும் அகிம்சைப் போராட்ட முறையை அறிமுகப்படுத்தினார் ம.பொ.சி. 15.5.1941இல் தனிநபர் சத்யாக்கிரகம் செய்தார். கைது செய்யப் பெற்று ஆறுவாரக் கடுங்காவல் தண்டனைப் பெற்றார். தண்டணைக் காலத்தையும் சென்னை மத்திய சிறையில் கழித்தார்.

## 1942 ஆகஸ்ட் போராட்டத்தில்

1942 ஆகஸ்ட் 8இல் பம்பாயில்கூடிய அகில இந்திய காங்கிரஸ், 'குவிட் இந்தியா' - இந்தியாவை விட்டு வெளியேறு - எனும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான காந்தியடிகளின் புதிய போர்க்குரலை ஒரு தீர்மானமாக ஒருமனதாக நிறைவேற்றியது. "செய்க அல்லது செத்துமடி" எனும் முழக்கத்தைக் கொடுத்தார், காந்தியடிகள். காந்தியடிகள் முதலாவதாக நாடெங்கும் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். போராட்டத்தை நடத்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பெயரால் இரகசியச் சுற்றறிக்கைககள் பரப்பப்பட்டன. இரகசியச் சுற்றறிக்கையை வழங்கி பரப்பியவர்கள் கைது செய்யப்பட்டு வந்தனர். பொதுவாக 'ஆகஸ்டு போராட்டம்' என்று குறிப்பிடப்படும் இந்தப் போராட்டத்தைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மிகக் கடுமையாக ஒடுக்கியது. நவம்பர் மாதம் வரையில் 1028 பேர்கள் கொல்லப்பட்டனர். 3125 பேர்கள் படுகாயமுற்றனர் என்று அரசு அறிக்கையே கூறியது. இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ம.பொ.சி.யும் ஒருவர் ஆகஸ்டு 13ந் தேதி கைது செய்யப் பெற்று வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்-பட்டார், ம.பொ.சி. பிறகு வடபுலத்து மத்திய மாகாணத்தில் உள்ள அமராவதிச் சிறைக்கு மாற்றப்பட்டவர்களில் ம.பொ.சியும் ஒருவர்.

அமராவதிச் சிறையில் பத்து மாதங்கள் கழிந்தபிறகு உயிருக்கு போராடிக் கொண்டிருந்த மனைவியைப் பார்ப்பதற்குச் சென்னை செல்ல 15 நாட்கள் 'பரோலில்' வெளியே வந்தார். பரோல் முடிந்த பிறகு வேலூர்,

தஞ்சாவூரில் சிறைகளில் சில மாதங்கள் இருந்தார். ஆக, 17 மாதங்கள் ஆகஸ்ட் கிளர்ச்சியில் பங்கேற்று விசாரணையின்றிக் காவல் கைதியாக ம.பொ.சி. இருந்தார்.

இவ்வளவில் விடுதலைப் போராட்டத்தில் சிறை வாழ்க்கையை அனுபவித்த ம.பொ.சி.யின் தேசிய அரசியல் வாழ்க்கையில் அவர் காங்கிரஸ் இயக்கத்தில் இருந்தபடியே தமிழரசுக் கழகத்தை 1946இல் நிறுவியது புதிய திருப்பத்தைத் தந்தது.

# 3. தமிழரசுக் கழகத் தலைவர்

விடுதலைப் போரில் தொண்டாற்றிய காலத்திலேயே ம.பொ.சி.யிடம் மொழிவழி இனவுணர்வும், இந்திய தேசிய ஒருமைப்பாட்டுணர்வும் குடி கொண்டிருந்தன.

காங்கிரசில் செல்வாக்குப் பெற்றிருந்த நிலையில் தனியாகத் தமிழரசுக் கழகம் எனும் அமைப்பை நிறுவ வேண்டியதற்கான அரசியல் காரணங்கள் இருந்தன.

பிரிட்டிஷ் காலனியாதிக்கம் மறையத் தொடங்கி சுதந்திர பாரதம் உதயமாவதற்கான அரசியல் சூழல் 1946இல் தீவிரமடைந்தது. சுதந்திர இந்தியாவின் அரசியல் அமைப்பு, அதில் தமிழ்நாட்டின் உரிமைகள், கோரிக்கைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கான அரசியல் சிந்தனைகள், திட்டங்களை 1946 மே மாதம் தோன்றிய ம.பொ.சி.யின் 'தமிழ் முரசு' இதழ் வெளியிட்டு வந்தது. 'தமிழ்முரசு', தமிழரசுக் கழகம் தோன்றுவதற்கு முன்னோடியாக இருந்தது.

தமிழ்நாட்டில் காங்கிரஸ், பிறமாநிலங்களைப் போல் மொழிப் பற்றையும் நாட்டுப் பற்றையும் இணைத்து சிந்தித்து செயலாற்றாமல் பின் தங்கியிருந்து, பாரதியாரும், திரு.வி.க.வும் இந்திய தேசியப் பற்றுடன் தமிழ்மொழிப் பற்றையும் இணைத்து வளர்த்தெடுத்த வரலாறு தமிழ்நாடு காங்கிரசில் தேக்கமுற்றுவிட்டது. ஆந்திராவில் 1912லேயே காங்கிரஸ் வாதிகளால் ஆந்திர மகாசபை மொழிவாரி மாநில அமைப்பிற்காகக் குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டது.

பிற மாகாணங்களில் இல்லாத பிரிவினை வாதம், திராவிட தேசிய வாதம் முதலானவற்றைச் சந்தித்து தேசிய ஒருமைப்பாட்டிற்காகப் போராட வேண்டிய அவசியம் தேசிய கட்சிகளுக்கு ஏற்பட்டது.

## தமிழரசுக் கழகத்தின் தோற்றம்

முற்கூறிய சில காரணங்களை முன்னிட்டு ம.பொ.சி. 1946 நவம்பரில் சென்னையில் 'தமிழரசுக் கழகம்' எனும் பெயரில் கட்சி அரசியல் சார்பில்லாத பொது அரசியல் அமைப்பை ஏற்படுத்தினார். 1945 நவம்பர் 11இல் சென்னை மண்ணடி வட்டத்தில் கஸ்தூரிபா சங்கத்தில் 'புதிய தமிழகம்' எனும் தலைப்பில் யான் தொடர் சொற்பொழிவைத்

தொடங்கினேன். முதற் சொற்பொழிவுக்குக் கவிஞர் (நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை) தலைமை வகித்தார். அதிலிருந்து பிறந்துதான் தமிழரசு இயக்கம்' என்று ம.பொ.சி. 'செங்கோல்' இதழில் (13.11.1988) நாமக்கல் கவிஞர் பற்றிய கட்டுரைத் தொடரில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழரசுக் கழகத்தின் தோற்றம் குறித்த செய்தி 'தமிழ் முரசு' இதழில் 1.1.1947இல் பின்வருமாறு வெளிவந்துள்ளது.

"கடந்த நவம்பர் மாதம் 21-ந்தேதி மாலை 'தமிழ் முரசு' காரியாலயத்தில் தமிழரசுக் கோரிக்கையை ஆதரிப்போரின் கூட்டம் ஒன்று கூடியது. நகரின் பல பாகங்களிலிருந்தும் சுமார் எழுபது பேருக்கு மேல் வந்திருந்தனர். திரு.ம.பொ.சிவஞானம் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்... நெடுநேர ஆலோசனைக்குப் பிறகு, 'தமிழரசுக் கழகம்' என்ற பெயருடன் ஒரு கழகம் நிறுவப்பட்டது. பின் கண்டவர் அதன் செயற்குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர் : ம.பொ.சிவஞானம், செயலாளர் : கொ.மோ. ஜனார்த்தனம், துணைச் செயலாளர் : ஊ. சண்முகம், பொருட்காப்பாளர் : கு. குப்புசாமி.

உறுப்பினர்கள் : திருவாளர்கள், ஆறுமுகம், தியாகராஜன், அன்பு. கணபதி, சி. வேங்கடசாமி, லூயிஸ், மு.கோவிந்தசாமி, க.பொன்னுசாமி, தாமோதரம், ஜி.சுப்பிரமணியம், நந்தகோபால், சுப்பிரமணியம்"

தமிழரசுக் கழகம் தோன்றியதைத் தொடர்ந்து ம.பொ.சி. காங்கிரஸ் உறவோ, காங்கிரஸ் - தமிழரசுக் கழகம் உறவோ பாதிக்கப்படவில்லை.

## கொள்கைகள்

தமிழரசுக் கழகக் கொள்கைகளையும், வேலைத் திட்டங்களையும் வகுக்க தமிழரசுக் கழகச் செயற்குழு ம.பொ.சி. வீட்டில் (இருசப்பகிராமணி தெரு, திருவல்லிக்கேணி) கூடியது. முதற்கூட்டத்திற்குச் சிறப்பு அழைப்பாளர்களாக, திரு.வி.க., தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் (இவர் தமிழரசுக் கழகத்திற்கு தலைவராக பல ஆண்டுகள் இருந்தார்) ஆகியோர் கலந்து கொண்டனர். இதிலே கழகக் கொள்கைகள் பின்வருமாறு வகுக்கப்பட்டன.

1. தமிழ் மொழியைத் தாய்மொழியாகவும், தமிழ்நாட்டைத் தாய்நாடாகவும் கொள்ளும் தமிழ்நாட்டின் நிரந்தரக் குடிகள் எல்லோரும் தமிழராகக் கருதப்படுவர்.
2. தெற்கே குமரிமுனைக்கும், வடக்கே திருப்பதிமலைக்கும் இடையேயுள்ள நிலப்பரப்பு, தமிழகமாக - தமிழர் தாயகமாகக் கொள்ளப்படும்.

(சென்னைநகரம், செங்கற்பட்டு, வடஆர்க்காடு, சித்தூர், தென்னார்க்காடு, தஞ்சை, இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை, கோயமுத்தூர், சேலம், திருச்சி, நீலகிரி ஆகிய 13 ஜில்லாக்களும், திருவிதாங்கூர் சமஸ்தானத் தமிழ்ப் பிரதேசங்களும், புதுக்கோட்டை சமஸ்தானமும், காரைக்கால் - புதுவை ஆகிய பிரெஞ்சிந்தியப் பிரதேசங்களும் இதில் அடங்கும்)

3 மேற்சொன்ன புதிய தமிழகத்தைச் சுதந்திர நாடாகச் செய்வதுடன், உழைப்பாளிக்கே உரிமைஎன்ற கொள்கையுடையதும் உழைப்புக்கும் தேவைக்கும் ஏற்ற ஊதியம் தருவதுமான சோஷலிசக் குடியரசை நிறுவுவது.

4. தமிழ் சோஷலிசக் குடியரசில் தமிழ்மொழியை அரசியல் மொழியாகச் செய்வதுடன் இதர எல்லாத் துறைகளிலும்கூடத் தமிழுக்கே முதன்மை தேடித் தருதல், சாதி, சமய வேற்றுமையற்ற தமிழ்இனத்தின் பொதுக்கலைகள், இலக்கியங்கள், பண்பாடுகள் ஆகியவற்றைப் போற்றி, அவற்றின் வளர்ச்சிக்காகப் பாடுபடுதல்.

5. தமிழ் இனத்தின் நலத்திற்குத் தீங்கற்ற வகையில் பிற இனத்தவருடன் உறவு கொள்ளவும், இந்தியாவின் பூகோள ரீதியான ஒற்றுமையைப் பாதுகாக்கவும் தமிழ் சோஷலிசக் குடியரசு இந்தியக் கூட்டரசில் இணைய வேண்டும்.''

– (புதிய தமிழகம் படைத்த வரலாறு – பக். 80-81).

## தமிழரசுக் கொடி

கொடித்துணியின் - மேலுங்கீழுமாக - மூன்றிலிரண்டு பங்கு (மேற்புறம்) வெள்ளைநிறமும், ஒரு பங்கு (கீழ்ப்புறம்) செந்நிறமும் அமைக்கப்பட்டது. வெண்ணிறத்தின் நடுவிடத்தே நீலநிறத்தில் வில்-புலி-மீன் ஆகிய தமிழ் மூவேந்தர் சின்னங்கள் பொறிக்கப்பட்டன. "உறவுக்குச் சின்னம் தேசியக் கொடி (காங்கிரசின் மூவர்ணக் கொடி), உரிமைக்குச் சின்னம் தமிழ்க் கொடி! இதை மறத்தல் கூடாது!'' என்று ம.பொ.சி. 1.11.1947இல் 'தமிழ் முரசு' இதழில் எழுதியுள்ளார்.

## தமிழரசுக் கழகத்திற்கு முந்திய 'புதிய தமிழகம்' பற்றியப் பிரசாரம்

'புதிய தமிழகம்' எனும் தமது கொள்கை விளக்கப் பிரசாரத்தை ம.பொ.சி. தமிழரசுக் கழகம் தொடங்கியதற்கு முன்பாகவே நிகழ்த்தியுள்ளார்.

1945 ஜூன் 26இல் திருச்சி மலைக்கோட்டையில் நடந்த இலக்கியக் கூட்டத்தில் முதன்முதலில் 'மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் சமஷ்டி' எனும் இலட்சியப் பிரகடனத்தை வெளியிட்டார், ம.பொ.சி.

அதையடுத்து 1946 ஏப்ரல் மாதத்தில் சென்னை மண்ணடியில் கஸ்தூரிபாய் சங்கத்தின் சார்பில் 'புதிய தமிழகம்' என்னும் தலைப்பில் ஞாயிற்றுக்கிழமைதோறும் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தினார் ம.பொ.சி.

மண்ணடியிலும், தியாகராயநகரிலும் புதிய தமிழகத்தில் அமையும் தமிழரசின் அரசியல், பொருளாதார, மொழி, சமுதாயக் கொள்கைகள் எப்படி அமைய வேண்டும் என்பதை விளக்கினார்.

சென்னை நகரிலும், வெளிமாவட்டங்களிலும் உள்ள கல்லூரிகளின் மாணவ மன்றங்களிலும் 'புதிய தமிழகம்' குறித்து உரையாற்றினார்.

1946இல் தமிழ் முரசில் ம.பொ.சி. எழுதிய 'தமிழகத்தில் தமிழரசு', 'தமிழரும் பிரிட்டிஷ் திட்டமும்,' 'புதிய தமிழகம்' எனும் கட்டுரைகள் தனித்தனியே சிறுநூல்களாக வெளிவந்தன.

## புதிய தமிழகம் என்றதேன்?

ஆந்திரர்கள் 'விசலாந்திரம்', கேரளர்கள் 'ஐக்கிய கேரளம்' என்று கூறிவந்த காலத்தில், ம.பொ.சி. 'புதிய தமிழகம்' என்று பெயரிட்டார். இதற்கான விளக்கத்தை ம.பொ.சி. பின்வருமாறு எழுதினார் :

"பூரண சுதந்திரம் உடைய தமிழகமே என் குறிக்கோளாக இருந்ததால் - அந்தத் தமிழகம் தானே விரும்பி மத்திய சமஷ்டியில் இணைய வேண்டும் என்பது எனது கொள்கையாக இருந்ததால் - மூன்று அதிகாரங்களை மட்டும் தானே விரும்பி மத்திய அரசிடம் விட்டு விட்டு 'எஞ்சிய அதிகாரங்கள்' உள்ளிட்ட இதர எல்லா அதிகாரங்களையும் கொண்ட சுயாட்சிப் பிரதேசமாகத் தமிழகம் விளங்க வேண்டும் என்று நான் விரும்பியதால் - அந்தத் தமிழகத்திலே சுரண்டலுக்கு வாய்ப்பில்லாத சோஷலிசத் தமிழரசு அமைய வேண்டுமென்றும் நான் எண்ணியதால் - எல்லாவகையிலும் புத்தம் புதிய ஒரு தமிழகமே என் உள்ளத்திலே உருவாகியிருந்தது. அதனைத்தான், 'புதிய தமிழகம்' எனப் பெயர்கொடுத்தேன்."

## சுயநிர்ணய சுதந்திர சோஷலிசத் தமிழ்க் குடியரசு

தமிழ்முரசின் முதல் இதழில் (1946 மே) வெளிவந்த 'தமிழகத்தில் தமிழரசு' எனும் ம.பொ.சி.யின் கட்டுரையும், 1946 ஜூன் மாத தமிழ் முரசில் வெளிவந்த ம.பொ.சி.யின் 'தமிழருக்கும் சுயநிர்ணயம்' எனும் கட்டுரையும் தமிழரசுக் கழகத்தின் முற்கூறியக் கொள்கைகளை மேலும் புரிந்து கொள்ள விளக்கவல்லன.

சுதந்திர இந்தியாவில் சுதந்திரத் தமிழரசு, சுதந்திர அரசியலை நிர்ணயிக்கும் உரிமை பெற்றிருக்க வேண்டும். "மேற்சொன்ன சுயநிர்ணய உரிமை இந்தியாவிலுள்ள சகல தேசிய இனங்களுக்கும்

உண்டு என்பதே நமது கொள்கை" என்பதையும் ம.பொ.சி. தெளிவுபடுத்தியுள்ளார். இந்த அடிப்படையில் 'சுயநிர்ணய சுதந்திர சோஷலிசத் தமிழ்க் குடியரசு' எனும் கொள்கையைத் தமிழரசுக் கழகம் வகுத்துக் கொண்டது.

## பெரியார் அறிக்கைக்கு மறுப்பு

1947 ஆகஸ்ட் 15ஆம் நாளை துக்க நாளாகக் கொண்டாட வேண்டுமென்று திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ.வே ரா. அறிக்கை விடுத்தார். அதிலுள்ள தவறுகளை எடுத்துக் காட்டி ம பொ.சி. தமிழரசுக் கழகத்தின் பிரச்சார ஏடான 'தமிழ் முரசி'ல் (1.8.1947) பெரியாரின் துக்கநாள் அறிக்கைக்கு ஆகஸ்ட் 15 எனும் தலையங்கத்தில் மறுப்பு தெரிவித்தார். இந்த மறுப்பில் 'ஆகஸ்ட் 15' பற்றியத் தமிழரசுக் கழகத்தின் கொள்கையை பின்வருமாறு விளக்கினார்.

"பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை வெற்றி கண்டநாள் என்ற வகையில் ஆகஸ்ட் 15யைக் கொண்டாடுகிறோம். போர்க்களத்தில் நின்றுதான் கொண்டாடுகிறோம். ஒருமுனையில் முடிந்த போர் மறுமுனையில் துவங்குகிறது. ஆகவே, ஆகஸ்டு 15 ஆம் தேதி நமக்கு போர் நிறுத்த நாள் அல்ல! போர்முனையும் போர் முறையும் மாறும் நாள். அந்நாளில் நமக்குள்ள களிப்பு - ஆகாயப்படை, தரைப்படை, கப்பற்படை முதலியவற்றில் பலம்பொருந்திய ஒரு பெரிய ஏகாதிபத்தியத்தை - முதற் பகையை - வீழ்த்திவிட்டோம், வெளியேற்றினோம், வெற்றி கண்டோம் என்பதேயாகும்.

"எனவே, தமிழினத்தவரை, தமிழரசு வாதிகளை வேண்டுகிறோம். ஆகஸ்ட் 15 ஆம் தேதி விழாவில் பங்குகொண்டு கட்டபொம்மன், வ.உ.சி., திருப்பூர் குமரன் போன்ற வீரத்தியாகிகளுக்கு வணக்கம் செலுத்துங்கள். இன்று நம்மிடையே வாழும் வீரர்களுக்கு வாழ்த்துக் கூறுங்கள். அதே நேரத்தில், சுதந்திரத்தில், 'சுதந்திரத் தமிழகத்தை, சோஷலியசக் குடியரசை அடைந்தே தீருவோம். அதை எதிர்ப்பவர்கள் எவரானாலும் அவர்களின் எதிர்ப்பை முறியடித்து, தமிழ்நாட்டில் தனியரசை - தமிழரசைக் கண்டே தீருவோம்' என்று உறுதி மேற்கொள்ளுங்கள். சுதந்திர இந்தியா வாழ்க!"

## 'மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது'

தமிழரசுக் கழகத் தலைவர் ம.பொ.சி. 26.6.1983ஆம் 'செங்கோல் ' இதழில் 'என்னைப் பற்றி' எனும் தலையங்கத்தில் பின்வரும் கருத்தைக் குறிப்பிட்டுள்ளார் :

"தமிழரசுக் கழகமானது அளவால் சிறிய அமைப்புதான்; அங்கத்தினர் எண்ணிக்கையும் சொற்பம்தான். ஆனால், அது, தான் புரிந்த சாதனைகளால் இமயம் போல் உயர்ந்து நிற்கிறது.

"கழகத்தின் அளவைக் கண்டோ, அதைப் பின்பற்றுவோரின் எண்ணிக்கையைக் கொண்டோ, அதனை சிலர் எள்ளி நகையாடலாம். ஆனால், இன்று நாம் காணும் புதிய தமிழகத்தைப் படைத்த பெருமை அளவில் குறைந்த அங்கத்தினர்களைக் குறைவாகக் கொண்டுள்ள தமிழரசுக் கழகத்தினுடையதுதான். இந்த உண்மையை நன்றியுள்ள தமிழர்கள் ஏற்றுக் கொள்வார்கள்."

## சாதனைகளில் சில

அரசியலில் புரிந்த சாதனைகள், தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பில் சாதனைகள் எனத் தமிழரசுக் கழகத்தின் சாதனைகளை இருவகைகளாக வகுத்துக் கொள்ளலாம்.

இந்தியா சுதந்திரம் பெறப்போகும் காலகட்டத்தில் அரசியல் கோரிக்கைகளுக்குத் திட்டவட்டமான வடிவம் கொடுத்து உரிய முடிவுகளை எடுத்து தமிழரசுக் கழகம் குறிப்பாக, சுயநிர்ணய சுதந்திர சோஷலிசத் தமிழ்க் குடியரசுத் தத்துவத்தைப் படைத்தது, தமிழரசுக் கழகத்தின் முதல் சாதனையாகும்.

தமிழரசுக் கழகத்தை ஓர் அரசியல் கட்சியாக அல்லாமல் ஒரு தேசிய இனத்தின் இயக்கமாக நடத்தியது.

மொழிவாரி மாநிலம் அமைந்தபொழுது எல்லைப் பிரச்சினை எழுந்தபொழுது, தமிழகத்தின் எல்லைகளைக் காக்க வேண்டும் என்பதில் அன்றைய சூழ்நிலையில் கட்சியின் கொள்கையாகவே எல்லை மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டது.

அரசியல் இயக்கத்திற்கு உறுதுணையாக இலக்கிய இயக்கத்தை வழிநடத்தியது.

மாநில சுயாட்சி இயக்கத்தை முதன்முதலில் உருவாக்கி அதற்காகப் போராட்ட நடவடிக்கைகளை விரிவுப்படுத்தி பொதுக்கருத்தை உருவாக்கியது.

தமிழ்நாட்டின் தலைநகரமாகச் சென்னை அமையாமல் பறி போய்விடுமோ எனும் சூழலில் கிளர்ந்தெழுந்து போராடி தலைநகரைக் காத்தது.

தேசிய விரோதச் செயல்கள் அதிகரித்து வந்த விபத்தில் இருந்து நாட்டைக் காக்கும் பொருட்டுத் திராவிட இயக்க எதிர்ப்பில் ஈடுபட்டது.

ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் போரையும், தமிழே பயிற்று-மொழியாக அனைத்து கட்டங்களிலும் அமைய வேண்டும் எனும் போராட்டத்தையும் சமரசமின்றி வீறுடன் நடத்தியது.

தமிழ்ப் பயிற்று மொழிப் போராட்டத்தையும், ஆங்கில ஆதிக்க

எதிர்ப்பும் போராட்டத்தையும் பற்றிச் சற்றுச் சுருக்கமாக அறிதல் இன்றியமையாதது. இரண்டும் ஒன்றோடு ஒன்று இணைந்தது.

## தமிழ் பயிற்று மொழிப் போராட்டமும் ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் போராட்டமும்

ராஜாஜி 1937 முதல் 1939 வரை பழைய சென்னை ராஜ்யத்தின் முதல்வராக இருந்தபோது தமிழ்நாட்டின் உயர்நிலைப் பள்ளிகளில் தமிழைப் பயிற்று மொழியாக்குமாறு ஆணை பிறப்பித்தார். அதற்கு அப்போதைய கல்வித்துறை இயக்குநர் ஸ்டாதம் என்ற ஆங்கிலேயர் ஆட்சேபக்குறிப்பு எழுதினார். அதனை மறுத்து ராஜாஜி எழுதிய மறுகுறிப்பில் "அடுத்த கட்டத்தில் கல்லூரி படிப்புக்கும் தமிழே பயிற்று மொழியாக்கப்படும்" என்றார். ஆனால் 1961 இல் அவர் தமது கருத்தை மாற்றிக் கொண்டு, ஆங்கிலமே பயிற்று மொழியாக நீடிப்பதற்கு ஓர் இயக்கத்தையே நடத்தினார்.

1946இல் டி.எஸ். அவினாசிலிங்கம் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்தபோது திருச்சியில் ஒரு கல்லூரியில் சில பாடங்களுக்கு மட்டும் தமிழ் பயிற்று மொழியாக்கப்பட்டது.

1956இல் தமிழகம் தனியரசு மாநிலமாகிவிட்ட பொழுது தமிழைப் பயிற்றுமொழியாக்குவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. இந்தவாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளத் தமிழக அரசு முன் வந்தது.

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் கழகத்தின் முதல் கூட்டம் 1.3.1959இல் தமிழக அரசின் தலைமை அலுவலகத்தில் அப்போதைய கல்வி அமைச்சர் சி.சுப்ரமணியம் அவர்கள் தலைமையில் கூடி, தமிழைப் பயிற்று மொழியாக்குவதற்குத் திட்டம் வகுத்து அதன்படி முன்னோடிக் கல்லூரியாகக் கோவை அரசினர் கல்லூரியைத் தேர்ந்தெடுத்து, அதில் 1960-61ஆம் ஆண்டில் பி.ஏ. வகுப்புக்கு மட்டும் தமிழைப் பயிற்று மொழியாக்குவதென்று தீர்மானித்து இத்திட்டத்தை 1963-64இல் அனைத்துக் கல்லூரிகளுக்கும் விரிவுப்படுத்துவதென்றும் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் முடிவெடுத்தது.

தமிழைப் பயிற்றுமொழியாக்குவதில் ஆங்கில ஆதிக்க வாதிகள் எதிர்ப்பிற்கிடையே அரசு சார்பில் தளபதியாகத் தொண்டாற்றினார். கல்வி அமைச்சரான சி.சுப்ரமணியம் 1962இல் அவர் மத்திய ஆட்சியில் அமைச்சராகிவிட்டார். அடுத்து, தமிழக அரசின் கல்வி அமைச்சர் எம்.பக்தவத்சலமும், முதலமைச்சர் கே. காமராஜரும் தமிழ் பயிற்றுமொழித் திட்டத்திற்கு ஆதரவு திரட்டப் பாடுபடவில்லை.

இந்த நிலையில் தமிழை பயிற்றுமொழியாக்குவதற்கு ஆதரவாக ம.பொ,சி. தமிழரசுக் கழகம் வாயிலாகக் கிளர்ச்சி செய்தார்.

'ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு' என்ற பெயரிலேயே மாநாடுகளும் பொதுக்கூட்டங்களும் எங்கும் நடந்தன. 'ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு மாநாடுகள்' தமிழரசுக் கழகத்தின் பெயராலேயே நடத்தப் பெற்றன. இக்காலத்தில்தான் கல்லூரிகளில் ஆங்கிலம் பயிற்று மொழியாக நீடிப்பதால் விளையும் கேடுகளை விளக்க அடுத்தடுத்து ஏழு பிரசார நூல்கள் வெளி வந்தன.

தமிழ்நாட்டில் கல்வி அமைச்சர் செல்லுமிடந்தோறும் அரசின் பழைய தமிழ் பயிற்று மொழித் திட்டத்தை முழு அளவில் அமல் நடத்தக்கோரி அவருக்கெதிரே தமிழரசுக் கழகக் கிளைகள் ஆர்ப்பாட்டம் நடத்தின. இதனால், நூற்றுக்கணக்கான தோழர்கள் கைது செய்யப்படுவதும், பின்னர் விடுதலை செய்யப்படுவதுமான அடக்குமுறைகள் ஆங்காங்கே நடைபெற்றன.

இந்தச் சூழலில் 1962 அக்டோபரில் சீன ஆக்ரமிப்புப் படையெடுப்பு ஏற்பட்டதால், பயிற்றுமொழிக் கிளர்ச்சியைத் தற்காலிகமாக நிறுத்திவைத்து, தேசப் பாதுகாப்புப் பிரசாரத்தில் தமிழரசுக் கழகம் ஈடுபட்டது. ஆனால், ஆங்கில ஆதரவாளர்கள் திரும்பவும் பயிற்சி மொழி பிரச்சினை பற்றிய கருத்துப் போரைத் தொடங்கினர்.

16.7.1964இல் கூடிய தமிழரசுக் கழகச் செயற்குழு 'ஆகஸ்ட் 6 முதல் 12 வரை ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு வாரம்கொண்டாடுவதென்று' முடிவெடுத்தது.

"இந்தக் கட்டத்தில் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் தமிழரசுக் கழகத்தின் ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் பிரசாரத்திற்கு நேரடியாகவே எதிர்ப்புக் காட்ட வந்தார் " என்று ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார். (விடுதலைக்குப்பின் தமிழ் வளர்த்த வரலாறு, ப.131).

1964 ஆகஸ்டு தொடங்கி நான்கு மாத காலம் மாநிலந் தழுவிய முறையில் தமிழ் பயிற்று மொழி அதரவுக்கான ஆர்ப்பாட்டம் நடந்தது. தமிழரசுக் கழகம் நடத்தியப் போராட்டத்திற்குக் கொள்கை அளவில் தி.மு.க., கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட் ஆகிய கட்சிகள் தார்மீக ரீதியில் ஆதரவளித்தன.

அனைத்துக் கட்சிகளும் இந்தப் போராட்டத்தில் நேரடியாகவே கலந்து கொள்ளும் சூழ்நிலையை உருவாக்க ம.பொ.சி. முயற்சியெடுத்தார். இந்நிலையில் 1965 ஜனவரி 26இல் இந்திய அரசியல் அமைப்புச் சட்ட விதிகளின்படி இந்தி மட்டுமே மத்திய அரசின் பிரதான ஆட்சிமொழியாக அமலுக்கு வருகிறது என்று மைய அரசு அறிவித்தது.

இதனால் பயங்கரமான அளவில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் வெடித்துப் பரவியது. “எதிர்பாராத வகையில் மூண்டெழுந்த இந்தி எதிர்ப்புக் காரணமாகத் தமிழ் பயிற்றுமொழிப் போராட்டத்தை நிறுத்தியாக வேண்டிய கட்டாயம் தமிழரசுக் கழகத்திற்கு ஏற்பட்டது” என்று ம.பொ.சி. கூறியுள்ளார்.

இன்றளவும் திராவிட இயக்க ஆட்சிகள் காலத்திலும். தமிழே அனைத்து மட்டங்களிலும் பயிற்று மொழியாக, ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு, தீவிரமாக நிகழவில்லை என்பதை வரலாறு காட்டி வருகின்றது.

## தமிழ்நாடு பெயர் மாற்றத்திற்கான போராட்டம்

‘தமிழ்நாடு’ எனும் பெயர் மாற்றம் கோரி தீர்மானத்தை முதன்முதலில் நிறைவேற்றியது தமிழரசுக் கழகமே. 1955 நவம்பர் 29இல் தமிழரசுக் கழகத்தின் செயற்குழு கூடி “தமிழ் மக்கள் வாழும் பிரதேசத்தை ‘மெட்ராஸ் ஸ்டேட்’ என்றழைக்கப்படுவதை எதிர்க்கின்றது; மத்திய-மாநில அரசுகள் ராஜ்யத்தின் பெயரை ‘தமிழ்நாடு’ என்று பெயரிடப்-பட வேண்டும்” எனும் தீர்மானத்தை நிறைவேற்றியது. (சாட்டை - தமிழரசுக் கழக வார ஏடு - 11.12.1953).

இதற்குப் பிறகே சங்கரலிங்க நாடார் 1956இல் தமது பல்வேறு கோரிக்கைகளில் ஒன்றாக ‘தமிழ்நாடு’ பெயர் வைப்பு கோரிக்கையை வெளியிட்டு 70 நாட்கள் உண்ணாவிரதமிருந்து அக்டோபர் 18, 1956இல் உயர்நீத்துத் தியாகியானார்.

தமிழரசுக் கழக செயற்குழுவின் தீர்மானத்திற்கு அன்றைய காங்கிரஸ் அலட்சியம் செய்தது. இதைத் தொடர்ந்து தமிழரசுக் கழகம்பொதுக்கூட்டங்கள், மாநாடுகள் வழியாக மக்கள் ஆதரவைத் திரட்டி தீர்மானங்களை நிறைவேற்றியது. போராட்டங்களையும் நடத்தியது. இதற்கு ஓரளவு பயந்து 1961இல் காமராசரின் காங்கிரஸ் கட்சி ‘தமிழ்நாடு’ எனும் பெயர் மாற்றத்தை ராஜ்யத்திற்கு மட்டும் அரசாங்க நிர்வாகக் கடிதப் போக்குவரத்தில் பயன்படுத்தும் என அறிவித்தது. ஆனால், இதற்காக அரசியல் சாசனத் திருத்தம் காண மறுத்தது. வெளி மாநிலங்களுடனான கடிதப் போக்குவரத்தில் வழக்கம்போல் ‘மெட்ராஸ் ஸ்டேட்’ என்னும் பெயரே தொடரும் என்றும் காங்கிரஸ் கட்சி அறிவித்தது.

ம.பொ.சி., தமிழ்நாடு பெயர்மாற்றப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தினார். 1967இல் தி.மு.க. ஆட்சி வந்த பொழுது முதலமைச்சர் அண்ணா ‘தமிழ்நாடு’ பெயர் மாற்றம் அரசியல் சாசனம் உட்பட அனைத்திலும் பிற மாநிலத் தொடர்புகளிலும் ஏற்கப்படும் எனும் தீர்மானத்தை ம.பொ.சி.யின் ஒத்துழைப்புடன் சட்டப் பேரவையில் நிறைவேற்றினார். இதன் விவரம் முன்பக்கங்களில் கூறப் பெற்றுள்ளது.

மொழிவாரி மாநில அமைப்பிற்கு எதிரான தட்சிணப் பிரதேச திட்டம் பற்றிய அறிவிப்பு 1955இல் வெளியிட்டப் பொழுது, ம.பொ.சி. அந்தத் திட்டம் தமிழரசுத் தத்துவத்திற்கு எதிரானது எனக் கிளர்ந்தெழுந்து தி.மு.க., கம்யூனிஸ்ட் முதலான எதிர்க்கட்சிகளுடன் கூட்டணி அமைத்து 20.2.1956இல் தமிழ்நாடெங்களிலும் முழு அளவில் பொது வேலை நிறுத்தமும், கடையடைப்பும் அமைதியான முறையில் போராட்டம் நடத்த வழி வகுத்தார், ம.பொ.சி

## ராஜாஜி கடிதம்

தட்சிணம் பிரதேசத் திட்டத்தை ம.பொ.சி. எதிர்த்ததைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் ராஜாஜி அவரைச் சுடுசொற்களால் தாக்கிப் பேசி வந்தார். இது குறித்து இந்நூலாசிரியர் வருத்தம் தெரிவித்து ராஜாஜிக்கு கடிதம் எழுதினார். இதற்கு ராஜாஜி 6.2.1956இல் பின்வருமாறு பதில் கடிதம் எழுதினார்.

“உங்களைப் போலவே நானும் வருத்தப்படுகிறேன். பாரத நாட்டின் நன்மையும் முன்னேற்றமும் கருதி என் அறிவும் மனச்சாட்சியும் தெய்வபக்தியும் இயன்ற அளவில் செலுத்தியே என் அபிப்பிராயத்தில் தென் பேரி ராஜ்ஜியம் அவசியம் என்று எண்ணுகிறேன். குறுகிய நோக்கங்களும் வெறுப்பும் நிறைந்த தம்முடைய நண்பர்களுடன் தமிழரசும் சேர்ந்துவிட்டு எதிர்க்கிறதே என்று மிகவும் வருத்தப்படுகிறேன். ஆண்டவன் தெளிவு கொடுப்பானாக.”

மேலே, ம.பொ.சி.யின் பெயரை நேரடியாகக் குறிப்பிடாமல் “தமிழரசும்” என்று குறிப்பிட்டுள்ள “சொல் - நயம்” கவனிக்கத்தக்கது. 1967இல் ராஜாஜி தி.மு.க. கூட்டணியில் சேர்ந்ததோடல்லாமல் ம.பொ.சி.யை மிகவும் வற்புறுத்திச் சேர்த்து வைத்தார் என்பது நினைவுகூரத்தக்கது. கால சக்கரத்தின் சுழற்சியில் ஏற்படும் மாறுதல்களில். இதுவும் ஒன்று.

‘தமிழினமே! ஒன்றுபடு!’, ‘எங்கும் தமிழ் எதிலும் தமிழ்’ எனும் கொள்கை முழக்கங்களை முதன்முதலில் எழுப்பி தொடர்ந்து தொய்வில்லாமல் பாடுபட்டதும் தமிழரசுக் கழகச் சாதனைகளின் ஒன்றாகும். 1956 நவம்பர் 1இல் தமிழகம் தனி மாநிலமாகத் தோன்றி-விட்டது. இதன் வரலாறு, ம.பொ.சி.யின் வரலாற்றுடன் பிணைந்தது.

## தமிழரசுக் கழகம் தொடங்கிய புதிய விழாக்கள்

சாதி, சமய, கட்சி வேறுபாடின்றி ‘தமிழினமே ஒன்றுபடு’ எனும் முழக்கத்திற்குச் செயல் வடிவம் தர, பொங்கல் திருநாளைத் தமிழினத்தின் தேசியத் திருநாளாகக் கொண்டாட முதன்முதலில் ஏற்பாடு செய்தது தமிழரசுக் கழகம்.

1946 ஜனவரி 14இல் சென்னை கோகலே மண்டபத்தில் முதல் 'தமிழர் திருநாள்' கொண்டாடப்பட்டது. அதில் ராஜாஜி, காமராசர், ப.ஜீவனாந்தம், திரு.வி.க.,டாக்டர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், ரசிகமணி டி.கே.சி. ஆகியோர் கலந்து கொண்டனர்.

1947ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதிலும் தமிழர் திருநாளைக் கொண்டாடுமாறு திரு.வி.க., டி.கே.சி., காமராசர், பாரதிதாசன், தெ.பொ.மீ., 'கல்கி' ரா.கிருஷ்ணமூர்த்தி உட்பட பன்னிரு தமிழ் தலைவர்களின் கையொப்பத்துடன் கூடிய அறிக்கையை வெளியிட்டு - தமிழ் மக்களைக் கேட்டுக் கொண்டார். அதன்படியே அந்த ஆண்டில் ஜனவரி 14 முதல் ஒருவார காலம் தமிழ் நாடெங்கிலும் கொண்டாடப்பட்டது.

ஆண்டுதோறும் தமிழர் திருநாள், தமிழ்நாடெங்கிலும், தமிழர் வாழும் பிறமாநிலங்களிலும், பிற நாடுகளிலும்கூட தமிழர் திருநாள் கொண்டாடப்படும் சூழல் ஏற்பட்டது.

தமிழரசுக் கழகம் நடத்திய தமிழர் திருநாள் கூட்டங்களில் தமிழரசுக் கழகச் செயற்குழுவால் தயாரிக்கப்பட்ட சுயாட்சித் தமிழகம் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு வந்தது.

## கட்டபொம்மன் விழா

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முதன்முதலில் விடுதலைப் போரைத் துவக்கி வைத்தவர் பாஞ்சாலங்குறிச்சி மன்னன் வீரபாண்டியக் கட்டபொம்மன் எனப் பிரகடனப்படுத்தி, தமிழரசுக் கழகம் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட 16.10.1799ஆம் நாளை நினைவு நாளாகக் கொண்டாடும் வழக்கத்தையும் தனிமுறையாக 16.10.1949இல் சென்னை ராஜாஜி மண்டபத்தின் பின்புறத்திலுள்ள பூங்காவில் தமிழரசுக் கழகம் தொடங்கி வைத்தது. ஆண்டுதோறும் கட்டபொம்மன் நினைவு நாளைத் தமிழரசுக் கழகம் கொண்டாடி வந்தது.

## இளங்கோவடிகள் விழா

சிலப்பதிகார இயக்கம் எனப் பெயர் பெற்ற தமிழரசுக் கழகம், சிலப்பதிகாரத்தைப் படைத்த இளங்கோவடிகள் நினைவு நாளை ஆண்டுதோறும் சித்திரைத் திங்களில் சித்திரா பௌர்ணமி நாளில் கொண்டாட முதன் முதலில் வழிவகுத்ததும் தமிழரசுக் கழகமே. முதல்விழா 14.4.1950இல் சென்னை செயிண்ட்மேரிஸ் மண்டபத்தில் கொண்டாடப் பெற்றது. ம.பொ.சி., டாக்டர் மு.வரதராசனார், கலைஞர் டி.கே.சண்முகம், பம்மல் சம்பந்த முதலியார், பி.டி.ராஜன் முதலானோர் கலந்து கொண்டனர்.

## சிலப்பதிகார மாநாடு

தமிழரின் தேசியக் காப்பியம் என ம.பொ.சி.யால் குறிப்பிடப்பெற்ற சிலப்பதிகார காப்பியம் தோன்றிய இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் 'சிலப்பதிகார மாநாடு' என்ற பெயரால் முதன் முதலாக 24.3.1951இல் சென்னை இராயப்பேட்டை காங்கிரஸ் திடலில் ஒரு இலக்கிய மாநாட்டை நடத்தியது தமிழரசுக் கழகம். டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை, டாக்டர் மு.வரதராசனார், டாக்டர் தெ.பொ.மீ, ம.பொ.சிவஞானம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

காங்கிரசில், தமிழரசுக் கழகத்தை நிறுவியதற்கு முன்பாக, ம.பொ.சி. ஏற்பாடு செய்து கொண்டாடிய பாரதியார் நினைவு விழா, வ.உ.சி. நினைவு விழா ஆகியன இங்கு நினைவு கூர்வதற்குரியன.

1937இல் மகாகவி பாரதியாரின் நினைவு நாளை செப்டம்பர் 11 இல் தொடங்கி ஒரு வார காலம் தாம்செயலாளராக இருந்த சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் கொண்டாடி வந்தார். அவர் அக்கமிட்டியின் நிர்வாகியாக இருந்தவரை ஆண்டுதோறும் தொடர்ந்து அவரால் கொண்டாடப்பட்டது.

இவ்வாறே, கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரின் நினைவு வாரத்தைத் (அவர் மறைந்தது 18.11.1936இல்) தாம் செயலாளராக இருந்த சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் 1938இல் தொடங்கி வைத்து ஆண்டுதோறும் கொண்டாடினார்.

விழாக்களையெல்லாம் தேசிய ஒருமைப்பாட்டுணர்வு, மொழிவழி இனவுணர்வு ஆகியனவற்றின் வளர்ச்சிக்கு உதவுமாறு தமிழரசுக் கழகம் கொண்டாடி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

"தமிழரசு இயக்கத்தை காந்தியடிகள் தந்த போதனைப்படித்தான் நான் நடத்தி வருகிறேன். பெயரளவில் எனது கழகம் ஒரு மாநில அமைப்புதான். ஆனாலும் அதன் கொள்கைகளும் வேலைத் திட்டங்களும் அகில இந்தியாவையும் தழுவியவை ஆகும்" என்று ம.பொ.சி. 1976இல் கூறியுள்ளார். ('செங்கோல்' வெள்ளி விழா மலர் 1976).

## தமிழரசுக் கழக வரலாற்றில் ஒரு புதுத் திருப்பம்

1954இல் தமிழரசுக் கழகத்திற்கு ஒரு சோதனை ஏற்பட்டது. அதுவரையில் இந்திய தேசிய காங்கிரசுடன் இணைந்து இயங்கி வந்த தமிழரசுக் கழகம், காங்கிரசில் இருந்து வெளியேற வேண்டிய சோதனையைச் சந்தித்தது.

தமிழரசுக் கழகம் ஓர் அரசியல் கட்சியென்றும், அதன்சில கொள்கைகள் 'பிரிவினை'க்கு ஆதரவானவையென்றும், காங்கிரஸ் உறுப்பினர் எவரும் வேறொரு அரசியல் கட்சியில் உறுப்பினராக இருக்க

காங்கிரசின் அமைப்பு விதி அனுமதிப்பதில்லையென்றும் குறிப்பிட்டு தமிழரசுக் கழக உறுப்பினர்கள் காங்கிரசில் நீடிக்கக்கூடாது என்று தமிழ்நாடு காங்கிரஸ் குறிப்பிட்டு, காங்கிரசில் இருந்து தமிழரசுக் கழகத்தை வெளியேற்றத் திட்டமிட்டது.

தமிழ்நாடு காங்கிரஸில் கேள்விக்கு உட்படுத்தப் பெற்ற பின்வரும் தமிழரசுக் கழக அரசியல் கொள்கைகளுக்குரிய விளக்கங்களைத் தமிழரசுக் கழகத் தலைவர் அளித்தார்.

தமிழரசுக் கழகம் 1946இல் வெளியிட்ட கொள்கை பற்றிய பகுதியில் 3,5வது விதிகள் அரசியல் கொள்கையைக் குறிப்பனவாகும். அவை வருமாறு :

"தமிழகத்தைச் சுதந்திர நாடாகச் செய்வதுடன் உழைப்பாளி வர்கத்தின் சோசலிசக் குடியரசை நிறுவுவது;

"தமிழகத்தின் நலத்திற்குத் தீங்கற்ற வகையில் பிற இனத்தவருடன் உறவு கொள்ளவும், இந்தியாவின் பூகோளரீதியான ஒற்றுமையைப் பாதுகாக்கவும், தமிழ் சோஷலிசக் குடியரசு இந்தியக் கூட்டாட்சியில் இணைய வேண்டுமென்பதும் கழகத்தின் நோக்கம்."

இந்த அரசியல் கொள்கைக்கு ம.பொ.சி. அளித்த விளக்கம் வருமாறு :

"கழகத்தின் கொள்கைகள் வழக்குப்பட்ட காலத்தில் இந்திய நாடு சுதந்திரம் பெற்றிருக்கவில்லை. இப்போது நடைமுறையிலுள்ள அரசியல் அமைப்புச் சட்டம் உருவாகவில்லை. ஆகவே, பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக்குழுவினர் வழங்கியிருந்த திட்டத்தை அடிப்படையாக வைத்துத்தான் தமிழரசுக் கழகம் தன் கொள்கைகளை வகுத்தது. பிரிட்டிஷ் அமைச்சரவைத் திட்டத்தைக் காங்கிரஸ் மகாசபை ஏற்றுக் கொண்டிருந்ததென்பதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

"பிரிட்டிஷ் திட்டத்திலேயே மாநிலங்கள் சுதந்திர உறுப்புகளாக அங்கீகரிக்கப்பட்டு, அவை தாமே விரும்பிக் கலந்த மத்திய சமஷ்டியே என்று பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அதனால், கழகத்தின் கொள்கைகளிலே 'தமிழகத்தைச் சுதந்திர நாடாகச் செய்வது' என்னும் வாசகம் இடம் பெற்றது. 'இந்தியாவிலிருந்து பிரித்துவிட்ட தமிழகம்' என்னும் பொருளில் அல்ல.

"பிரிட்டிஷ் திட்டமானது அப்போதிருந்த நான்கு மொழிப்-பிரதேசங்கள் கலந்த சென்னை மாநிலத்திற்குச் சுதந்திரம் வழங்கியது. இதற்கு மாறாக, மொழி வழி மாநிலங்களுக்குச்சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமென்று கழகம் கோரியது. அதையே கொள்கையாகவும்

கொண்டது. 'சுயாட்சி' என்ற பொருளிலேயே சுதந்திரம் என்ற சொல்லைக் கழகம் பயன்படுத்தியது" (எனது போராட்டம் - ப.684).

தமிழ்நாடு காங்கிரசின் புகாரும், ம.பொ.சி. அனுப்பிய விளக்கமும் காங்கிரஸ் தலைவர் நேருஜிக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதையடுத்து நேருஜியின் பின்வரும் அறிக்கை செய்தி இதழ்களில் வெளிவந்தது.

"தமிழரசுக் கழகத்தார் காங்கிரசில் நீடிப்பதையே நான் விரும்புகிறேன். ஆனால் அந்த கழகத்தின் அமைப்பு விதிகள் காங்கிரஸ் அமைப்பு விதிகளுக்கு முரணில்லாத வகையில் திருத்தியமைக்கப்பட வேண்டும். அவர்கள் காங்கிரசில் நீடிப்பதற்குக் கழகத்தின் விதிமுறையிலுள்ள முரண்பாடு தடையாக இருக்கக்கூடாது."

இந்த அறிக்கையின் வாசகத்தை கடித வடிவில் 27.11.1952 தேதியிட்டு நேருஜி, ம.பொ.சி.க்கு அனுப்பினார்.

## தமிழரசுக் கழகத்தின் திருத்தப் பெற்றக் கொள்கைகள்

நேருஜியின் கருத்திற்கிணங்க, ம.பொ.சி., தமிழரசுக் கழக அமைப்பு விதிகளை ஒழுங்கு செய்வதற்கு, தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் தலைமையில் தனிக்குழுவை அமைத்தார்.

திருத்தப்பட்ட கழகக் கொள்கைகளும் வேலைத் திட்டங்களும் வருமாறு :

1. தமிழ் மக்கள் எல்லோருடைய தேசிய நலன்களைக் காந்திய நெறி வழியில் பாதுகாத்தல்.
2. இந்தியக் குடியரசின் அமைப்பில் - தேசிய ஒற்றுமைக்கு குறைவுவராமல் - சுயாட்சியுடைய தமிழ் மாகாணம் ஏற்படுத்த உழைத்தல்.
3. தமிழ், கலை, பண்பாடு முதலியவற்றை வளர்த்தல்.
4. பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை ஒழித்து, சோஷலிசம் என்று வழங்கி வரும் கொள்கைக்கு ஏற்ப சமத்துவ சமுதாயத்தை நிலைநாட்டல்.
5. சாதிப் போராட்டங்களையும், மதப் போராட்டங்களையும் நீக்கி மக்களிடையே ஒற்றுமையை நிலைநாட்டல்.
6. இந்தக் கழகம் அரசியல் கட்சியாக அன்றி மேற்கண்ட நோக்கங்களுக்காக, பிரசாரம், ஆராய்ச்சி மாநாடுகள், நாடகங்கள், பத்திரிகைகள் ஆகியவற்றின் மூலமாகவும், சட்டத்திற்குட்பட்ட வேறு முறைகளாலும் உழைத்து அக்கொள்கைகளை மக்களிடையே பரப்பப் பாடுபடும்.

மாற்றப்பட்ட கழக விதிகள் தமிழ்நாடு காங்கிரசிற்கு ஏற்புடையதாக அமையவில்லை. இறுதியாக 1954 ஆகஸ்டு 8இல் கூடிய தமிழரசுக் கழகத்தின் செயற்குழு, காங்கிரசில் இருந்து வெளியேற முடிவெடுத்தது. எட்டாண்டுகால தமிழரசுக் கழக - காங்கிரஸ் உறவு முறிந்தது.

## தேர்தல் களத்தில் தமிழரசுக் கழகம்

1965இல் தமிழரசுக் கழகத்தை அரசியல் கட்சியாக மாற்றுவதென்று கும்பகோணம் பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ம.பொ.சி. இதை விரும்பவில்லையென்றாலும் 'அனுபவத்தின் மூலம் அவர்கள் என் வழிக்குத் திரும்புவார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது'' எனக் கூறியுள்ளார்.

அவர் கூறியதிற்கிணங்க 1967ல் ஜூலையில் சேலத்தில் கூடிய பொதுக்குழு, கும்பகோணத் தீர்மானத்தை மாற்றி, அதற்கு முன்பிருந்த நிலைக்கே தமிழரசுக் கழகத்தைக் கொண்டு சென்றது.

1967இல் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் தமிழரசுக் கழகம் தி.மு.க வுடன் கூட்டு சேர்ந்து போட்டியிட்டது. ம.பொ.சி.தான் தமிழரசுக் கழக வேட்பாளர் தியாகராயநகர் தொகுதி வேட்பாளராக ம.பொ.சி.யும், திருத்தணி தொகுதி வேட்பாளராக வேலூர் குப்புசாமியும் போட்டியிட்டனர். ம.பொ.சி. வெற்றி பெற்றார். குப்புசாமி தோல்வியடைந்தார். 1971இல் ம.பொ.சி. மட்டும் மயிலாப்பூர் தொகுதியில் தி.மு.க. கூட்டணியில் நின்று தோல்வி கண்டார். இதன்பிறகு தமிழரசுக் கழகம் நேரடியாகத் தேர்தல் களத்தில் இருந்து விலகியது.

இதற்குப் பிறகு தமிழரசுக் கழகத்தின் வளர்ச்சியில் தேக்கம் ஏற்பட்டது.

## காங்கிரசில் கலந்தது தமிழரசுக் கழகம்

12.11.1989இல் 'செங்கோல்' இதழில் 'காங்கிரசில் சேர்ந்தேன்' எனும் தலைப்பில் ம.பொ.சி. தாம் காங்கிரசுடன் இணைந்ததைப் பற்றி அறிவித்தார். இது குறித்து அவர் எழுதியதாவது :

''திருவல்லிக்கேணி கடற்கரையில் எட்டு லட்சம் பேர் திரண்டிருந்த வரலாறு காணாத சிறப்புமிக்க பொதுக் கூட்டத்தில் பிரதமர் ராஜீவ்காந்தி முன்னிலையில் நான் காங்கிரசில் இணைந்தேன். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி கூ. இராமமூர்த்தி நான் காங்கிரசில் இணைந்ததை அறிவித்தார். பிரதமர் ராஜீவ் காந்தி பொன்னாடை அணிவித்துத் தாங்கள் காங்கிரசில் சேர்ந்ததை வரவேற்கின்றேன் என்றார்.''

தமிழரசுக் கழகம் காங்கிரசில் இணைவதைப் பற்றி கழகத்தின் செயற்குழுவோ, பொதுக்குழுவோ கூட முடிவெடுக்கவில்லை.

தனிப்பட்டவர் விருப்பப்படி காங்கிரசில் சேர்வது பற்றிய நடவடிக்கைகள் நிகழ்ந்தன.

தமிழரசுக் கழகம் கலைக்கப்பட்டதா அல்லது காங்கிரசில் கலந்ததா? எனும் கேள்விக்குரிய பதிலை ம.பொ.சி., 'செங்கோல்' இதழில் (13.8.1995) பின்வருமாறு பதிலளித்தார்.

"தாங்கள் திடீரென கழகத்தைக் கலைத்துவிட்டுக் காங்கிரசில் சேர்ந்துவிட்டீர்களே, காரணம் என்ன? எனும் கேள்வி செங்கோலில் வெளிவந்தது. பெரியகுளம் விசாமிநாதன் என்பவர் பெயரில் கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு ம.பொ.சி. பின்வருமாறு பதிலளித்தார்.

"கழகம் எந்தெந்த கொள்கைக்காகத் தோன்றியதோ அவை ஆட்சிக்குப் போகாமலே காங்கிரஸ் கட்சியைப் பயன்படுத்தி நிறைவேற்றிவிட்டதால், காந்தியடிகள் போதனைப்படி அது இனியும் தேவைப்படவில்லை. ஆகவே கலைக்கப்படவில்லை, காங்கிரசோடு கலந்துவிட்டது."

காங்கிரசிற்கு உள்ளே எட்டு ஆண்டுகள், காங்கிரசிற்கு வெளியே நாற்பது ஆண்டுகள் தமிழரசுக் கழகம் இயங்கியது. "காங்கிரசை விட்ட பின்னரும் தேசியத்தை நான் கைவிடாததற்குக் காரணம் அதுதான் நான் அடைந்து கிடந்த தாய் வயிறு; அதுதான் நான் அமர்ந்திருந்த அன்னை மடி; அதுதான் நான் தவழ்ந்து வளர்ந்த தொட்டில்;" என்றெல்லாம் உணர்ச்சிப் பொங்க வருணித்த ம.பொ.சி. இறுதியில் தேசியத்தோடு காங்கிரசையும் விடாமல் சிக்கெனப்பற்றினார்.

தமிழக அரசியல் வரலாற்றில் தமிழரசுக் கழகம் முரண்பாடுகள் பலவற்றைச் சமன் செய்த வரலாற்றுச் சக்தியாக விளங்கியது. தமிழக அரசியல் வரலாற்றை ஆய்வு செய்யவிழையும் எவரும் தமிழரசுக் கழகத்தைப் புறந்தள்ள இயலாது.

# 4. தமிழ் இதழியல் வரலாற்றில் ம.பொ.சி.

'கிராமணி குலம்', 'தமிழ்முரசு', 'தமிழன் குரல்', 'செங்கோல்' எனும் இதழ்களின் ஆசிரியராக இருந்து தமிழ் இதழியல் வரலாற்றில் தமக்கென்று ஒரு சிறப்பிடத்தைப் பெற்றவர், இதழாளர் ம.பொ.சி.

அச்சுக்கோக்கும் தொழிலில் தொடங்கி ஆசிரியர் பொறுப்பு வரை பல்வேறு நிலைகளில் பணி புரிந்தவர் ம.பொ.சி. பத்திரிகைத் தொழிலில் ஐம்பது ஆண்டுக் கால அனுபவச் செழுமைப் பெற்றவர் ம.பொ.சி. அவர் இதழாசிரியராக உயர்வெய்தியதற்கு அடித்தளமாக அமைந்தது, அவருடையத் தொடக்கக்கால தொழில் அச்சுக் கோக்கும் தொழிலாகும். 1926இல் சென்னையில் 'விநோதினி' எனும் தேசிய வார இதழிலும் பிறகு, 1927இல் தேச பக்தர் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடுவின் 'தமிழ்நாடு' இதழிலும் அச்சுக் கோக்கும் தொழில் செய்ததன் காரணமாக அரசியல் அறிவை வளர்த்துக் கொள்ள ம.பொ.சி.க்கு வாய்ப்பு ஏற்பட்டது. "பிற்காலத்தில் பத்திரிகாசிரியனாக வளர்வதற்கும் அதுவே துணை புரிந்தது" என்று ம.பொ.சி.யே குறிப்பிட்டுள்ளார். ('பத்திரிகைத் தொழிலில் யான் பெற்ற அனுபவம்' - ம.பொ.சி. கட்டுரை - செங்கோல் வெள்ளி விழா மலர், 1976).

## கிராமணி குலம்

1936 ஜூலையில் மாதமிருமுறை இதழாக வெளிவந்து, பத்து மாதங்கள் நடைபெற்று வந்த 'கிராமணி குலம்', ம.பொ.சி.யை நிருவாக ஆசிரியராகவும், எழுத்தாளராகவும் அறிமுகப்படுத்தியது. இந்த இதழ் குறித்து முன் பக்கங்களில் எழுதப் பெற்றுள்ளது.

## தமிழ் முரசு

'கிராமணிகுலம்' நின்று போனதற்குப் பத்தாண்டுகளுக்குப்பிறகு 1946 மே மாதத்தில் 'தமிழ் முரசு' எனும் பொருத்தமானப் பெயரில் மாதப் புத்தகமாகப் பத்திரிகையைத் தொடங்கினார், ம.பொ.சி.

'பொருத்தமான பெயர்' என்று மேலே குறிப்பிட்டதற்குக் காரணம், "நீங்களே தமிழ் முரசு, வேறு என்ன முரசு வேண்டும்" என்று ராஜாஜி அனுப்பிய வாழ்த்துச் செய்தியேயாகும். (எனது போராட்டம் - ப.390).

'தமிழ் முரசு' தோன்றிய இடம், சென்னை லிங்கிசெட்டித் தெருவில் இருந்த அன்னை கஸ்தூரிபா வாலிபர் சங்கம். இந்தச் சங்கம் இயங்கிய இல்லத்திற்குரியவர்கள் ஊ.சண்முகம், ஊ.கோவிந்தன் எனும் சகோதரர்களாவர். மார்க்சியப் பற்றுடைய தேசியவாதிகளான இந்தச் சகோதரர்கள் 'தமிழ்முரசு' தோற்றத்திற்கு உதவியாக இருந்தனர். இவர்களுள் ஊ.கோவிந்தன் பத்திரிகை வெளியீட்டாளராகப் பணிபுரிந்தார். (எழுத்தாளர் அமரர் குயிலன் இந்நூலாசிரியருக்கு 11.12.1991இல் எழுதியக் கடிதத்தில் குறிப்பிட்டது).

முதல் புத்தகத்தில் பதிப்பாளராக 'ம.பொ.சிவஞான கிராமணியார்' என்று குறிப்பிடப்பெற்றிருந்தது. மேலட்டைப் படத்தில் 'வாழ்க தமிழ்மொழி, வாழ்க தமிழ்க்கலை, ஓங்குக சமத்துவம், வாழ்க தமிழினம், தழைக்க தமிழரசு' எனும் முழக்கங்களை ஒருவர் முரசொலியாக எழுப்புவதாக வரையப்பட்டிருந்தது.

## ம.பொ.சி.யின் முதல் இரு கட்டுரைகள்

"பிற எழுத்தாளர்களுடைய கட்டுரைகளை நம்பித்தான் 'தமிழ் முரசு' புத்தக வெளியீட்டைத் தொடங்கினேன் ஆனால், முதல் புத்தகத்திற்கு அரசியல் கட்டுரை ஒன்றும், இலக்கியக் கடடுரை ஒன்றும் எழுதியாக வேண்டியக் கட்டாயம் எனக்கு ஏற்பட்டது" என்று ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார் சந்தர்ப்ப நிர்ப்பந்தம் காரணமாக வெளிவந்த அரசியல் கட்டுரை 'தமிழகத்தில் தமிழரசு' என்பதும், 'வீரக்கண்ணகி' எனும் இலக்கியக் கட்டுரையும் 'கல்கி', 'குடியரசு', 'திராவிட நாடு' முதலான இதழ்களின் பாராட்டுதல்களைப் பெற்றன.

'தமிழகத்தில் தமிழரசு' எனும் கட்டுரையில் பண்டைத் தமிழகத்தின் அரசியல், சமூக, சமய, கலைகள், வாணிபம் முதலானவற்றின் சிறப்புகள் விவரிக்கப் பெற்று, பின்பு அதன் வீழ்ச்சியையும் விளக்கிவிட்டு புதிய தமிழகத்தின் தோற்றத்திற்கான அவசியம் விரித்துரைக்கப் பெற்றுள்ளது.

'வீரக்கண்ணகி' இலக்கியத்தை அரசியல் நோக்கில் பார்க்கும் ம.பொ சி.யின் புதிய பார்வையை விளக்கிய முதல் கட்டுரையாகும். சிலப்பதிகாரம் "அநீதிவயப்பட்ட அரசை அழிக்கும் புரட்சி உணர்ச்சியை மக்களுக்கு, சிறப்பாகப் பெண்களுக்குப் போதிப்பதற்காகவே எழுதப்பட்ட அரசியல் புரட்சி நூல் என்பதை எளிதில் உணரலாம். எனவே, அதில் நமக்குக் காட்சியளிப்பவர் மறக்கற்புடைய வீரக் கண்ணகியே" என்று கட்டுரைகள் இறுதியில் குறிப்பிட்டுள்ளார், ம பொ.சி.

முற்கூறிய இரு கட்டுரைகளும் தமிழ்முரசின் அரசியல் - இலக்கிய நோக்கு போக்குகளின் செல்நெறியை உருவாக்கின.

முதல் பக்கத்தில் குயிலனின் 'முரசு கொட்டடா' (கவிதை), திரு.வி.க.வின் 'தமிழ்நாடு', டாக்டர் மு வ.வின் 'போராட்டம்', குருசாமி (சிறுகதை), க.தங்கவேலனின் 'தீ' (கவிதை), சி.வேங்கடசாமியின் 'தமிழ்க் கருவூலம்' ஆகியன வெளிவந்தன.

புத்தகமாக வெளிவந்த ஏழு மாத கால கட்டத்தில் தமிழ் முரசில் வெளிவந்த அரசியல் கட்டுரைகள் 19; இலக்கியக் கட்டுரைகள் 23 இவற்றுள் ம.பொ.சி.யின் அரசியல் கட்டுரைகள் 13; இலக்கியக் கட்டுரைகள் 4. ம.பொ.சி., 'ஞானம்', 'பாமரன்' எனும் புனைப்பெயர்-களிலும் எழுதிவந்தார்.

முற்கூறியவர்களைத் தவிர, தெ.பொ.மீ., ரா.பி.சேதுப்பிள்ளை, நாமக்கல் கவிஞர், இளவழகனார், மு.அருணாசலம், மு.கோவிந்தசாமி, அன்புகணபதி, ப.ஜீவானந்தம், பாரதிதாசன், தமிழ்ஒளி, கி.ஆ.பெ.விசுவநாதம், கவிஞர் கு.சா.கிருஷ்ணமூர்த்தி முதலானோரின் படைப்புகளும் தமிழ்முரசின் முதல் கால கட்டத்தில் (1946 மே முதல் 1946 நவம்பர்) வெளிவந்துள்ளன.

## மாதமிருமுறை

'புத்தகம்' என்னும் நிலைமாறி, 'பத்திரிகை' எனும் நிலையில் 'தமிழ் முரசு' 1947 ஜனவரி 1 முதல் வெளிவரத் தொடங்கியது. 1948 மார்ச் மாதம் 1-ந்தேதி இதழோடு மாதமிருமுறை தமிழ் முரசு நின்றது.

"புத்தக உலகம் என்னும் திரையை விலக்கிக் கொண்டு பத்திரிகை உலகத்தில் பவனி வருகின்றது" எனும் குறிப்பு இடம் பெற்றுள்ளது. தமிழரசுக் கழகக் கொள்கைகளைப் பரப்புவதற்காகத் தமிழ்முரசை மாதமிருமுறையாக மாற்றியதாக ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார்.

மாதமிருமுறை வெளியீட்டுவிழா திரு.வி.க. தலைமையில் நடைபெற்றது. காங்கிரஸ் சார்பில் காமரசர் வாழ்த்திப் பேசினார். துணையாசிரியர் ம.ரா.போ.குருசாமி வரவேற்புரை நிகழ்த்தினார். டி.கே.சி., ஏ.ஜி.வேங்கடாச்சாரி, த.செங்கல்வராயர், தெ.பொ.மீ. ஆகியோர் பேசினர்.

மாதப் புத்தகத்தைக் காட்டிலும் மாதமிருமுறை பத்திரிகையில் சில மேம்பாடுகள் செய்யப் பெற்றன. தலையங்கம், துணைத்தலையங்கம், செய்திகள், மதிப்புரை, அட்டைப்பட விளக்கம், ஆசிரியருக்குக் கடிதம் முதலானவை இடம் பெற்றன. தமிழறிஞர்கள், கவிஞர்கள், பிரபல எழுத்தாளர்கள் மேலும் பலர் எழுதினார்கள். ம.ரா.போ.குருசாமி, மு.வரத-ராசன், அ ச.ஞானசம்பந்தன் ஆகியோர் அநேகமாக ஒவ்வொரு இதழிலும் எழுதி வந்தனர்.

## சிறுகதைகள்

அரசியல், இலக்கியக் கட்டுரைகளுக்கே பெரும்பாலும் ஒதுக்கிய 'தமிழ் முரசு' அவ்வப்பொழுது சிறுகதைகளையும் வெளியிட்டு வந்தது. ம.பொ.சி., 'பாமரன்' எனும் புனைபெயரில் இரு சிறுகதைகள் எழுதியுள்ளார்.

'வைகுந்தம் திறந்தது' (15.1.1947), 'செல்வத்தைத் தேய்க்கும் படை' (15.4.1947) எனும் ம.பொ.சியின் இரு சிறுகதைகள் வெளிவந்துள்ளன.

'தொடர்கதை இல்லை என்ற குறை' வாசகர்களுக்கு இருக்கக்கூடாது எனக் குறிப்பிட்டு டாக்டர் மு.வரதராசாரின் 'அந்தநாள்' எனும் தொடர்கதையையும் 15.1.1948 முதல் தமிழ்முரசில் வெளியிட்டு வந்தார். டாக்டர் மு.வ.வின் 'அன்னைக்கு'என்னும் கடிதத்தொடரும் தமிழ்முரசில் பிப்ரவரி 15, 1948 முதல் வெளி வந்தது.

தமிழ்முரசு மாதமிருமுறையில் திராவிட இயக்கத்தினருடான கருத்து மோதல்கள் புதிய போக்குகளாகப் பகிரங்கமாக விவாதிக்கப்பட்டன.

## வார இதழ்

மாதமிருமுறை இதழ் நின்று போன மூன்று மாதங்களுக்குப் பிறகு தமிழ் முரசு வார இதழாக 1.8.1945 முதல் 14.1.1948 வரையில் வெளிவந்தது

இந்தக் காலக் கட்டத்தில் நான்கு நாடகங்கள், பத்தொன்பது சிறுகதைகள், இருபத்திரண்டு கவிதைகள், வழக்கமான அரசியல், இலக்கியக் கட்டுரைகளுடன் வெளிவந்தன.

'பத்திரிகைத் தொழில் பொதுச்சேவையா? சொந்தத் தொழிலா?' எனும் தலைப்பில் திருச்சி வானொலியில் ம.பொ.சி., சி.என்.அண்ணாதுரையிடையே நடைபெற்ற விவாதம் முழுமையாக இரு இதழ்களில் (12.9.1948, 19.9.1948) வெளியிடப்பட்டது.

வீரபாண்டியக் கட்டபொம்மன் புகழ் பரப்பும் இயக்கத்தை இக்காலத்தில் வீறுபெற நடத்தத்தொடங்கிய ம.பொ.சி., அம்மாவீரனைப் பற்றிப் பத்து கட்டுரைகள் எழுதினார். பிற கட்டுரைகள் இருபதாகும். 'வண்டு' எனும் புனைபெயரில் எழுத் தொடங்கியதும், வார இதழில்தான்

ஐந்து மாதங்கள், இருவாரங்களுக்குப் பிறகு போதிய பணபலம் இல்லாமல் வார இதழ் நிறுத்தப்பட்டது.

## மாத இதழ்

தமிழ் முரசு மீண்டும் மாத இதழாக 1950 மே முதல் 1951 செப்டம்பர்

வரையில் வெளிவந்தது. இக்காலக் கட்டம் பதினேழு மாதங்களாயினும் வெளிவந்த இதழ்களின் எண்ணிக்கை பன்னிரண்டாகும்.

இந்தக் காலகட்டத்தில் ம.பொ.சி.யின் அரசியல், இலக்கியக் கட்டுரைகளின் எண்ணிக்கை முப்பதாகும். இவற்றுள் இலக்கியக் கட்டுரைகளின் எண்ணிக்கை பன்னிரண்டாகும். 'தேசியவாதி' எனும் புதிய புனை பெயரையும் ம பொ.சி. வைத்துக் கொண்டார்.

1950 செப்டம்பர், 1951 செப்டம்பர் மாதங்களில் தமிழ்முரசைப் பாரதி மலர்களாக வெளியிட்டுள்ளார், ம.பொ சி.

1951 ஏப்ரல் மாத தமிழ்முரசில் வெளிவந்த 'கண்ணகியைப் பழிக்கும் கருஞ்சட்டைத் தலைவர்' எனும் தலையங்கம் பெரியாரின் சிலப்பதிகார எதிர்ப்பைத் தருக்கரீதியாக மறுத்து எழுதப்பட்டதாகும். ம.பொ.சி.யின் தலையங்க இலக்கியங்களை முதன்முதலில் ஆழமாக ஆய்வு செய்த திறனாய்வாளர் மா.ரா.இளங்கோவன். ம.பொ.சியின் இந்தத் தலையங்கத்தின் சிறப்பைப் பின்வருமாறு பாராட்டியுள்ளார்.

"மிகச் சிறந்த இலக்கிய நயம் கொண்ட தலையங்கம், இது. இது போன்ற தலையங்கங்களை இதழுலகம் காண்பது அரிது" (சிலம்புச் செல்வரின் தலையங்க இலக்கியம் - 1980 - மா.ரா.இளங்கோவன் எம்.ஏ. - பக்.61-62).

1951 ஜனவரி இதழில், 'முரசு வாசகர்களுக்கு' எனும் தலைப்பில் தொகுத்துக் கூறப் பெற்றுள்ள செய்திகளில் பின்வரும் இரு செய்திகள் தமிழ்முரசின் சாதனைகள் எனக் கொள்ளத்தகுவனவாகும்.

"தமிழர் என்போர் வெறும் ஜனக்கும்பல் அல்ல; மொழியாலும் பண்பாலும், பழக்கவழக்கங்களாலும் மூன்று கோடி இதயங்களும் ஒன்றுபட்ட ஒரு தேசிய இனமாகும் என்பதை அறிவுக்குப் பொருந்தும் வகையில் நிரூபித்திருக்கிறது. 'முரசு'. அது மட்டுமல்ல, அரசுரிமை பெற்றுவிட்ட தேசியவாதிகள் ஒன்றுபட்ட இந்தியா என்ற கோஷத்திலே, தமிழ் இனத்தின் உரிமைகளைப் பற்றிப் பேசுகின்றார்களில்லை. ஆங்கிலேயன் ஆதிக்கத்தை அடிவருடிய கூட்டத்தார் வடவரின் தொடர்பிலிருந்து தென்னாட்டைத் துண்டாட கனவு காண்கின்றனர். இந்நிலையில் சர்வதேச ரீதியில் - இந்திய தேசிய ஒற்றுமைக்குக் கேடற்றவகையில் 'தமிழருக்கும் சுய நிர்ணயம்' என்று கோஷமிட்டது. 'தமிழ்முரசு' ஒன்றேயாம்.

"இலக்கியத்துறையிலும் ஒரு புரட்சிகரமான கண்ணோட்டத்துடன் பணிபுரிந்திருக்கிறது 'முரசு'. வள்ளுவர் குறளையும்,இளங்கோவின் சிலம்பையும் அரசியல் கண்ணோட்டத்தோடு மக்களுக்கு அறிமுகப்படுத்தும் பணியைத் துவக்கி வைத்தது 'முரசே'யாகும்."

## செங்கோல்

தமிழ் முரசின் கடைசி இதழிற்கு ஏழு மாதங்களுக்கு முன்பே 1950 டிசம்பர் முதல் தேதியன்று, 'செங்கோல்' வார இதழை ம.பொ.சி. தொடங்கினார். திருவல்லிக்கேணி இருசப்ப கிராமணித் தெருவில் உள்ள அவருடைய வீடே 'செங்கோல்' அலுவலகமாகவும் இருந்த்து. 'செங்கோல்' இதழ் ம.பொ.சி.யின் ஐம்பது ஆண்டுகால பத்திரிகைப் பணியில் நாற்பத்தைந்து ஆண்டு காலத்தை எடுத்துக் கொண்டது. தமிழ் முரசின் பத்திரிகைக் கொள்கையை மேலும் வளர்த்தெடுத்தது, செங்கோல்.

'செங்கோல்' என்று பெயரிட்டதற்கான ஒரு காரணத்தை கலைஞர் தி.க.பகவதி 'செங்கோல் செல்வர்' எனும் கட்டுரையில் பின்வருமாறு கூறியுள்ளார்

"'செங்கோலை' ஐயா அவர்களின் செல்வன், புதல்வன் என்றே குறிப்பிடலாம். தன் குழந்தைகளை விடவும் மேலாக அவர் 'செங்கோலை' வளர்த்த கஷ்டம் வெறும் வார்த்தைகளால் கூறிவிட முடியாது. தன் செல்வனுக்குப் பெயர் வைப்பதிலும் இலக்கியத்தை நினைவு கூர்கிறார் ஐயா. கண்ணகிக்கு அநீதி இழைத்த பாண்டியன் நெடுஞ்செழியன், தான் இழைத்தது அநீதி என்றறிந்ததும், தனது செங்கோலுக்குக் களங்கம் நேராவண்ணம் தன் உயிர் போக்கிச் செங்கோல் புகழ் காத்தான். ம.பொ.சி. அவர்கள் தனது ஏட்டிற்கு 'செங்கோல்' என்று பெயரிட்டு இருப்பது அவன் நினைவாகத்தானோ என்ற எண்ணம் சில சமயங்களில் என் உள்ளத்தில் எழும்."

ம.பொ.சி. 1955இல் நேரடியாக 'செங்கோல்' ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்.

'செங்கோலுக்கு' இணை 'செங்கோல்' தான் என்று ம.பொ.சி. அதன் வெள்ளிவிழாவின்போது - 1976இல் - பின்வருமாறு சாற்றியுள்ளார்.

"'செங்கோல்' தமிழரசுக் கழகத்தின் கெஜட்டாகப் பிறந்தது: வடக்கெல்லை, தெற்கெல்லைகளை மீட்கும் போர்ப் பறையாகவும் விளங்கியது; தலைநகராம் சென்னையைக் காக்கும் வீரர்களின் கையிலுள்ள வேற்படையாகவும் விளங்கியது; ஆங்கில ஆதிக்க எதிர்ப்பாளரின் கேடயமாகவும் பயன்பட்டது: மாநில சுயாட்சிப் போரின் பேரிகையாகவும் ஒலித்தது. இத்தனைப் போராட்டங்களுக்கும் இடையில் தமிழ் இலக்கியத்திற்கும் பணிபுரிந்து வந்திருக்கிறது. இந்த வகையில் 'செங்கோலுக்கு இணை, செங்கோல்தான்' என்று சொன்னால், அது தற்பெருமையாகாது."

'செங்கோல்' தொடங்கப் பெற்ற முதலாண்டு முழுவதிலும் தி.க. தி.மு.க. அமைப்புகளின் கொள்கைகளையும் நடைமுறைகளையும்

எதிர்ப்பதிலேயே 'செங்கோல்' அதிகம் ஈடுபடுத்தப்பட்டு வந்தது. அன்றைய அரசியல் சூழ்நிலையில் அது தவிர்க்க முடியாததாக இருந்தது....... 'செங்கோல்' ஆசிரியர் பொறுப்பை நான் ஏற்ற பின்னர், திராவிட இயக்க எதிர்ப்புப் பிரசார வேகத்திலிருந்து தமிழரசு இயக்கப் பிரசாரப் பாதைக்கு அதனைத் திருப்பிவிட வேண்டியவனானேன். அவசியம் ஏற்பட்டபோது மட்டும் தி.க., தி.மு.க. கொள்கைகளை விமர்சித்து வந்தேன். இதனால் பத்திரிகையின் தரம் உயர்ந்தது. அரசியல் தலைவர்களும். பெரும்புலவர்களும், 'செங்கோல்' படிக்கலாயினர். மூதறிஞர் ராஜாஜி 'செங்கோல்' படிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்'' இவ்வாறு ம.பொ.சி. 'செங்கோல்' வரலாற்றைப் பற்றிய ஒரு பார்வையை விளக்கியுள்ளார்.

'செங்கோல்' ஆசிரியரான பின்னர், ம.பொ.சி., 'தமிழன்', 'தேசியவாதி' ஆகிய புனைபெயர்களில் எழுதி வந்தார். தமிழ்நாட்டு அரசியல் பற்றிய விமர்சனக் கட்டுரைகளைத் 'தமிழன்' என்ற புனைபெயரில் எழுதி 'செங்கோல்' முதல் பக்கத்தில் வெளியிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார், ம.பொ.சி. அகில இந்திய அரசியல் பற்றிய விமர்சனக் கட்டுரைகளை 'தேசியவாதி' என்ற புனைபெயரில் எழுதி வந்தார். இலக்கியக் கட்டுரைகளுக்குப் பெரும்பாலும் 'ஞானம்' என்ற புனைபெயரைப் பயன்படுத்திக் கொண்டார்.

தனியாக உட்கார்ந்து ஒரு நூலை எழுதி முடிக்குமளவுக்கு நேரமும் காலமும் கிடைக்காதநிலையில் 'செங்கோ'லில் பல்நோக்குகளில் கட்டுரைகள் எழுதி அவற்றை நூல்களாக ஆக்கியுள்ளார், ம.பொ.சி.

செங்கோல், செய்தி இதழாக அல்லாமல் கருத்து இதழாகவே வெளிவந்தது. ஆயினும், தமிழரசுக் கழகத்தின் பத்திரிகை என்பதினால், கழகச் செய்திகளையும், கழகத் தலைவர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் சம்பந்தமான செய்திகளையும் வாரந்தோறும் 'செங்கோல்' தாங்கி வந்தது.

கர்மயோகி போல் 'செங்கோல்' நிருவாகியாகப் பணியாற்றிய எனதருமை நண்பர் வே. கணபதி செங்கோலை ம.பொ.சி.யின் கேடயமாக வருணித்து எழுதியதாவது :

"தமிழரசுக் கழகம் தான் தொட்டதெல்லாம் வெற்றி பெற்று வந்திருக்கிறது. அதற்குக் காரணம் 'செங்கோல்' ஏடுதான். ஐயா அவர்கள் கையில் உள்ள கேடயம் போன்றது 'செங்கோல்'. அரசியலிலும் இலக்கியத் துறையிலும், சரித்திரத்துறையிலும் பல போராட்டங்களை நடத்தி வெற்றி கண்டிருக்கிறார், சிலம்புச் செல்வர்." (செங்கோல் - வெள்ளி விழா மலர்).

## இலக்கியப் பணி

செங்கோலின் இலக்கியப் பணி, அதன் அரசியல் பணிக்கு இணையாகச் சாதனை புரிந்துள்ளது. அதனுடைய இலக்கியப் பணியின் தனித்தன்மை எத்தகையது என்பதை ம.பொ.சி.யின் வாய்மொழியாலேயே பின்வருமாறு அறிவோம்.

"தமிழ் இனக் கண் கொண்டு பழைய தமிழ் இலக்கியங்களை ஆராயும் பணியைச் 'செங்கோல்' தான் தொடங்கி வைத்தது. அரசியல் நோக்குடனும், சமூக சீர்திருத்தக் கண் கொண்டும், சோஷலிசப் பார்வையிலும் இலக்கியங்களை ஆராய்ந்து, இலக்கியத்துறையிலே மறுமலர்ச்சி ஏற்படுத்தும் தொண்டையும் 'செங்கோல்'தான் தொடங்கியது. அதுவும் ஆக்கவழியிலே; அழிவு முறையில் அல்ல."

முதல் இருபத்தைந்து ஆண்டுகளில் செங்கோலில் வெளிவந்த இலக்கியப் பேச்சுகளின் கட்டுரைகளின் மொத்த எண்ணிக்கை 431. இலக்கியங்கள் பெயராலும் கவிஞர்கள் பெயராலும் அவற்றைப் பின்வருமாறு பிரித்துள்ளார், ம.பொ.சி.

சங்க இலக்கியம் 14, சிலப்பதிகாரம் 143, திருக்குறள் 49, மணிமேகலை 6, முத்தொள்ளாயிரம் 7, கம்பராமாயணம் 46, திருத்தொண்டர்புராணம் 2, நந்திக்கலம்பகம் 5, கலிங்கத்துப்பரணி 20, வள்ளலார் - திருவருட்பா 33, பாரதியார் 71, பாவேந்தர் பாரதிதாசன் 4, நாமக்கல் கவிஞர் 4, மாணிக்கவாசகர், மனோன்மணீயம் சுந்தரனார், பட்டினத்தார், மற்றும் பல புலவர் பற்றியவை 27.

இந்தப் பட்டியல் 1976 வரையிலானது; இதையடுத்து 1995 வரையிலானப் பட்டியல் தொகுக்கப்பட்டால் அதன் எண்ணிக்கை ஓராயிரத்தையும் விஞ்சும். செங்கோலில் பிறக் கட்டுரைகள் அவ்வப்பொழுது வெளியிடப் பெற்று வந்தாலும், ம.பொ.சி.யின் கட்டுரைகளே மிக நிறைந்து இனிது விளங்கின.

18.8.1995இல் 'செங்கோல்' இதழ் தனது புகழ் பூத்த பத்திரிகை வரலாற்றை முடித்துக் கொண்டது.

## தமிழன் குரல்

செங்கோல் வெளிவரத் தொடங்கிய பின் மூன்றாண்டுகளுக்குப் பிறகு 1954 ஆகஸ்ட்டில் 'தமிழன் குரல்' எனும் மாத இதழிற்கு ஆசிரியரானார், ம.பொ.சி. தமிழ்முரசு, செங்கோல் பத்திரிகைகளைச் சொந்தமாக நடத்திய ம.பொ.சி. அவருடைய நூல்களை வெளியிட்டு வந்த 'இன்ப நிலையம்' சோம.சுவாமிநாதன் தொடங்கிய தமிழன் குரலில் மாதந்தோறும் நூறு ரூபாய் சன்மானம் பெற்று ஆசிரியரானார்.

'தமிழன் குரல்' பன்னிரண்டு மாதங்கள் வெளிவந்தது. முதல் இதழ் 1954 ஆகஸ்ட்டிலும், இறுதி இதழ் 1955 ஜுலை மாதத்திலும் வெளிவந்தது.

முதல் இதழின் தலையங்கமான 'நாம்' எனும் கட்டுரையில் இதழ் பற்றியச் செய்திகள் கூறப் பெற்றுள்ளன. இவற்றுள் சில, பின்வருவன:

1. இந்தியாவின் விடுதலைக்காகப் பாடுபட்டுப் பெற்ற விடுதலையைப் பாதுகாக்கவும் பணிபுரியவும் தேசிய வட்டாரத்தின் சார்பில்தான் 'தமிழன் குரல்' வெளிவருகின்றது.

2. இந்தியாவின் விடுதலையில் தமிழகத்தின் விடுதலையும் அடங்கியிருக்க வேண்டும் என்பதே தமிழ் இனத்தின் ஆவல் அந்த ஆவலை நிறைவேற்றப் பணிபுரியும் தமிழரசு இயக்கத்தின் ஏடாகவே 'தமிழன் குரல்' வெளிவருகின்றது

3. தமிழகம் தனி ஆட்சி பெற வேண்டும். துண்டுப்பட்ட தமிழ்ப் பகுதிகளெல்லாம் தாய்த் தமிழகத்தோடு ஒன்றுபட வேண்டும். தமிழகத்தில் தமிழ் ஒன்றே ஆட்சிமொழியாதல் வேண்டும்; இந்தியக் குடியரசில், தமிழர் ஒரு தனித் தேசிய இனமாக, தமிழாட்சி ஒரு சுயாட்சி அங்கமாக விளங்க வேண்டும். இவையே தமிழ் இனத்தவரின் தேசீயக் கோரிக்கைகள். இந்தக் கோரிக்கைகளுக்காகக் குரல் கொடுப்பதே நமதுகொள்கை.

4. சுருங்கச் சொன்னால், மொழி, கலை, இலக்கியம், அரசியல், சமூகம், பொருளாதாரம் ஆகிய எல்லாத்துறைகளிலும் தமிழ் இனத்தின் நலன்களைக் காக்கவும், அவற்றை வளர்க்கவுமே, 'தமிழன் குரல்' விடுதலைத் திருநாளன்று வெளிவருகின்றது. (பக்.3–4)

முதல் இதழில் 'பலமும் பலவீனமும்', 'வித்வானுக்கு ஆபத்து', 'தெற்கெல்லைப் போராட்டம்' எனும் துணைத் தலையங்கங்கள் வெளிவந்துள்ளன. கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை 'தமிழன் குரலை' வாழ்த்தியக் கவிதை, 'கவிமணியின் வாழ்த்து' எனும் தலைப்பில் வெளியிடப் பெற்றது 'தேசியவாதி' எனும் புனை பெயரால் ம.பொ.சி. 'வாழ்க சுதந்திரதினம்' எனும் கட்டுரையை எழுதியுள்ளார். டாக்டர் மு.வ., குயிலன், சோம.லெ., கவி.கா.மு.ஷெரிப், டி.கே.சண்முகம், நாமக்கல் கவிஞர், ர.சண்முகம் ஆகியோர் எழுதியுள்ளனர். ம.பொ.சி. 'ஞானம்' எனும் புனைபெயரில் 'இளங்கோவின் இன உணர்ச்சி' எனும் இலக்கியக் கட்டுரையில், இளங்கோவடிகளை, 'ஐக்கிய தமிழகத்தின் தந்தை' எனும் கருத்தை விளக்கியுள்ளார். காந்தியடிகள் மறைவு நாள் கூட்டத்தில் சென்னையில் ம.பொ.சி. பேசியது 'காந்திய இந்தியா' எனும் தலைப்பில் வெளிவந்துள்ளது. 'நமது பாதை' எனும் பகுதியில் கழகச் செய்திகள் கூறப்பட்டுள்ளன. 'திரைப்பட விமர்சனம்', 'மதிப்புரை' பகுதிகளும் இடம் பெற்றுள்ளன.

'எது திராவிடம்' (செப்டம்பர் 1954), 'இலக்கியத்தின் எதிரி ஈ.வே.ரா' (அக்டோபர் 1954), 'பூங்காவை போர்க்களமாக்குவதா?' (செப்டம்பர் 1954) எனும் திராவிட இயக்க எதிர்ப்புக் கட்டுரைகளையும் ம.பொ.சி. எழுதியுள்ளார்.

அக்காலத்தில் பிரபல தமிழறிஞர்களும், கவிஞர்களும், எழுத்தாளர்களும் 'தமிழன் குரலில்' எழுதி வந்தனர். இவர்களுள் ந.சஞ்சீவி, பெ.தூரன், திரு.வி.க., போ.குருசாமி, பி.கோதண்டராமன், எழுத்தாளர் லட்சுமி, குன்றக்குடி அடிகள், ரா.பி.சேதுப்பிள்ளை, மு.வரதராசன், அ.ச.ஞானசம்பந்தன், கா.பொ.இரத்தினம், வெ.சாமிநாதசர்மா, கி.சந்திரசேகரன், 'எஸ்.டி.சுந்தரம், பி.ஸ்ரீ.ஆ.லெ இந்திரா, கி.வா.ஜ., சோமு, தெ.பொ.மீ. சுப.அண்ணாமலை, அகிலன், கு.ராஜவேலு, கி.ரா.கோபாலன், முதலானோர் பலராவர். எழுத்தாளர்கள் பலர் படைப்புகளைப் பெற்றுத்தருவதில் கவிஞர் குயிலன் பணி குறிப்பிடத்தக்கதாக இருந்தது.

## நல்ல முயற்சிதான்; ஆனால்...?

1955 சூன் மாத இதழில் வெளிவந்த 'நல்ல முயற்சிதான்; ஆனால்...?' எனும் தலையங்கத்தில் திராவிட இயக்கங்களுக்கும், தமிழரசுக் கழகத்திற்கும் இடையே நிலவிய கொள்கை வேற்றுமைகளைப் பற்றி எழுதியுள்ளது, குறிப்பிடத்தக்கதாகும். இதன் ஒரு பகுதி வருமாறு :

"திராவிடர் கழகங்கள் வகுப்பு வாத அடிப்படையில் அமைந்தவை. 'ஆரியர் – திராவிடர்' என்ற நிறவழிப் பிரிவினையை அடிப்படையாகக் கொண்டது அந்தக் கழகங்களின் அரசியல் கொள்கை. 'பார்ப்பனர் – பார்ப்பனரல்லாதார்' என்ற சாதி வேற்றுமையை அஸ்திவாரமாகக் கொண்டது திராவிடர்க் கழகங்களின் சமுதாயக் கொள்கை.

"தமிழரசுக் கழகத்தின் கொள்கைகளோ இவற்றிற்கு நேர் விரோதமானவை. நிறவழியோ சாதி வழியோ அல்லாமல் மொழிவழி இன உரிமை பேசுகின்றது தமிழரசுக் கழகம். அந்த இனங்கள் தத்தம் அரசியல் – கலாச்சார உரிமைகளுக்குப் பங்கமின்றி அரசியல் ரீதியாக ஒன்றுபட்டு வாழ முடியுமென்றும் நம்புகின்றது.

"இப்படி, அரசியல், சமுதாயக் கொள்கைகளில் வேற்றுமையுடைய திராவிடர் கழகங்களும் தமிழரசுக் கழகமும் ஒன்றாக இணைவது எப்படி சாத்தியம்?

"தமிழரசுக் கழகத்திற்கும், திராவிடர் கழகங்களுக்கும் உள்ள வேற்றுமை கொள்கை வழிப்பட்டது. ஆகவே, இருதரப்பாரில் எந்தவொரு தரப்பாரேனும் கொள்கையை மாற்றிக் கொண்டாலொழிய

ஒன்றுபடுவது சாத்தியமில்லை. தமிழரசுக் கழகத்தைப் பொறுத்தவரை அதனுடைய கொள்கைகள் மக்களுடைய ஏகோபித்த ஆதரவைப் பெற்றவை. தி.க., தி.மு.க. அமைப்புகளும்கூட ஆதரிக்கின்றன. ஆகவே, கொள்கையை விட்டுக் கொடுக்கும்படி அல்லது அதில் திருத்தங் காணும்படி தமிழரசுக் கழகத்தைப் பார்த்து யாரும் கேட்பதற்கில்லை.

"தமிழரசுக் கழகம், சட்டசபை - மந்திரிசபைகளில் இடம் பிடிக்க விரும்பும் அரசியல் கட்சியல்ல; தமிழர் எல்லோருக்கும் உரிய தேசிய - கலாச்சார அமைப்பு. ஆகவே, எந்தவொரு அரசியல் கட்சியோடும் அது தன்னை இணைத்துக் கொள்வது சாத்தியமில்லை. ஆனால், தேசிய கலாச்சார அமைப்பு என்ற அந்தஸ்துக்குப் பங்கமின்றித் தமிழரசுக் கழகம் தனித்து நின்று தனது தார்மீக ஆதரவை எந்தவொரு அரசியல் கட்சிக்கும் வழங்க முடியும். வழங்க வேண்டியது அவசியம். ராமன் ஆண்டாலென்ன; ராவணன் ஆண்டாலென்ன? என்று அலட்சியமாக இருந்துவிடுவது அரசியல் மூடத்தனம். அந்தப் போக்கைத் தமிழரசுக் கழகம் கடைபிடிக்க முடியாது." (தமிழன் குரல், ஜூன், 1955 பக்.3-4).

1995 ஜூலையில் பதிப்பாசிரியர் சோம.சுவாமிநாதன் பொறுப்பில் இருந்து விலகிக் கொண்டதால், தமிழன் குரல் நின்றுவிட்டது. 1955 ஜூலை 31 முதல் தமிழன் குரல் வார இதழாக வெளிவரும் என்று ம.பொ.சி. ஓர் அறிவிப்பை வெளியிட்டிருந்தாலும், ம.பொ.சி.யின் விருப்பம் நிறைவேறவில்லை. பத்திரிகையின் மூலதனத் தேவையையும், நிருவாகச் சுமையையும்,ம.பொ.சி.யால் ஏற்க முடியாததால் வார இதழ் பதிப்பிற்கு வழியில்லாமற் போய்விட்டது. 'செங்கோல்' இதழிற்கே முழு நேரத்தையும், உழைப்பனைத்தையும் ம.பொ.சி. ஒதுக்கிவிட்டதும் 'தமிழன் குரல்' வாரப் பதிப்பு முயற்சி தடைபட்டதற்கு ஒரு காரணமாகும்.

# 5. இலக்கியப் பணி

## இலக்கியமும் அரசியலும்

"நாட்டைப் படித்துவிட்டு பின் ஏட்டையும் படித்தவன்" என்றும், 'வாழ்க்கை இலக்கியமாகப் போய்விட்ட எனக்கு' என்றும் ம.பொ.சி. சாற்றியுள்ளார். ஆகவே வாழ்க்கையில் அரசியல், சமூக மாற்றங்களுக்கு இலக்கியத்தைக் கருவியாகக் கொண்டார், ம.பொ.சி.

"39 வயதுக்குப் பின்னால் சமுதாயத்திலுள்ள மேடு பள்ளங்களை அறிந்து அனுபவம் பெற்ற நிலையில், விடுதலை வெறி பிடித்தவனாக ஏகாதிபத்திய எதிர்ப்பாளனாக இரும்புக் கம்பிகளினூடே சிறையில் அடைக்கப்பட்ட நிலையிலே இலக்கியம் பயின்ற எனது நிலை வேறு. சிறையிலே இலக்கியம் பயின்ற யான் பெற்ற அறிவு வேறு எவரும் எளிதில் பெற்றுவிடக்கூடியதன்று." இவ்வாறு ம.பொ.சி. தமது இலக்கியப் பயிற்சியின் புதுமையை, முறை சாராக் கல்விப் பயிற்சியை, விளக்கியுள்ளார். (விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு - 1970 - பக்.325).

அரசியலையும், இலக்கியத்தையும் இணைத்த நோக்கு அவருடைய இலக்கிய நோக்கு. 'இலக்கியத்திற்காகத்தான் அரசியல்' எனும் கொள்கையின் ஏந்தல் ம.பொ.சி. மிகப் பழங்காலத்திலேயே இலக்கியத்திற்கும், அரசியலுக்கும் உள்ள உறவைப் பற்றிச் சிந்தனையாளர்கள் கூறியுள்ளனர். பண்டைய கிரேக்க நாட்டு ஞானி பிளேட்டோ "நிகழ்ச்சிகளை எண்ணங்களாக்குவது இலக்கியம்; எண்ணங்களை நிகழ்ச்சிகளாக்குவது அரசியல்" எனக் கூறினார்.

## அறிஞர் அண்ணா சுட்டிக் காட்டியது

அரசியலையும், இலக்கியத்தையும் இணைத்த வாழ்வைக் கொண்டவர் ம.பொ.சி. எனும் கருத்தை அறிஞர் அண்ணா, 26.6.1966இல் சென்னையில் நடைபெற்ற ம.பொ.சி. மணிவிழாவில் பேசியபொழுது பின்வருமாறு குறிப்பிட்டார்.

"அரசியல், இலக்கிய வாடை அற்றதாகவும், இலக்கியம் அரசியலைப் பற்றிக் கவனிக்காத முறையிலேயும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு தமிழகத்திலே இருந்து கொண்டு வந்த நாள்களிலே ம.பொ.சி. அவர்கள் அரசியலையும் மறந்தாரில்லை. இலக்கியத்தையும்

இழந்துவிடவில்லை. அரசியலையும் இலக்கியத்தையும் ஒன்றாக அவர் தம்முடைய வாழ்க்கையிலே இணைத்துக் காட்டியிருக்கிறார்.

"இலக்கியத்திலே பல பேராசிரியர்கள் அவரிடத்தில் நெருங்கியத் தொடர்பு கொண்டவர்கள். இலக்கியத்திலே உள்ள அருமைகளை ம.பொ.சி. அவர்கள் எந்த அளவுக்கு எடுத்து கையாளுகிறார் என்பதைப் பார்த்து அவர்களே வியப்படைகிறார்கள் 'நம்மாலே முடியவில்லையே' என்று சிலபேர் கொஞ்சம் வருத்தப்படக்கூடச் செய்கிறார்கள். நல்லவர்கள் அப்படி வருத்தப்படமாட்டார்கள். நல்லவர்களல்லாதவர்கள்தான் வருத்தப்படுகிறார்கள்." (சிலம்புச்செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்களின் தொன்னூறாம் ஆண்டு பிறந்தநாள் விழா மலர் - 1995)

மேலே அறிஞர் அண்ணா சுட்டிக்காட்டியக் கருத்தை வேறோரிடத்தில் பின்வருமாறு மீண்டும் சுட்டிக் காட்டியுள்ளார்.

"அவர் ஒரு விந்தையான மனிதர். இந்த இளைத்த உருவத்தை வைத்துக் கொண்டு, உடலிலே ஓராயிரம் நோய்களைத் தாங்கிக் கொண்டு, வாழ்க்கையிலே இலக்கியத்தையும் அரசியலையும் ஒரு சேர வளர்ச்சி அடையச் செய்வதும் அதிலேயே அவர்கள் ஈடுபடுவதும் விந்தைப் பெரியகாரியம் என்று நான் பல நேரத்திலே வியப்படைந்திருக்கிறேன்." (மேற்கோள் : மனோன்மணீயம் சுந்தரனாரும் சிலம்புச் செல்வர் ம.பொ.சியும் - பெ.சு.மணி - செங்கோல் வெள்ளி விழா மலர் - 1976).

'தமிழும் அரசியலும் ஒன்றுபட்டே தீர வேண்டும்' எனும் நோக்குடையவர் ம.பொ.சி.

1947இல் வெளிவந்த ம.பொ.சி.யின் 'தமிழன் குரல்' எனும் நூலில் 'தமிழும் அரசியலும் ஒன்றுபட்டே தீர வேண்டும்' எனும் தமது இலக்கிய நோக்கை பின்வருமாறு விளக்கியுள்ளார் ம.பொ.சி.

"இலக்கண, இலக்கியங்களில் வல்லுநராய்த் திகழும் தமிழ்ப் பண்டிதர்கள், தமிழுக்காகச் சேவை செய்கிறார்கள் என்பது நமக்கு ஓரளவு மகிழ்ச்சியைத் தருகிறது. என்றாலும், இவர்களது போக்கு காலத்தோடு ஒட்டியதாய் இல்லாமலிருப்பது வருந்தத்தக்கது.

"திருவள்ளுவரின் அறத்துப்பாலுக்கு விளக்கம் கூறி வெளிவந்த நூல்கள் எண்ணிலடங்காதவை. ஆனால், அரசியல் நெறியையும், ஆண்மைக்குணத்தையும் பொருளாதாரப் புதுவழியையும் புகட்டக்கூடிய பொருட்பாலை ஆராய்ந்து தற்காலத்திற்குப் பொருந்தக்கூடிய வகையில் வெளியிடப்பட்ட புத்துரைகள் ஏதேனும் உண்டா? இல்லையென்றே சொல்லலாம்."

மேற்கண்டவாறு ம.பொ.சி. 1947இல் கூறினார். கால வளர்ச்சியில் திருக்குறள் இயக்கம் வீறுபெற்றது. ம.பொ.சி. உட்பட பலர் அன்று

எதிர்பார்த்தவாறு புதிய வழியில் திருக்குறள் விளக்கத்திற்குப் பங்காற்றி வருகின்றனர்.

ம.பொ.சி. மேலும் கூறியதாவது : "திருக்குறள் மட்டுமின்றி, பழைய தமிழ் இலக்கியங்கள் அத்தனையும் நம்முடைய அரசியல், பொருளாதார மறுமலர்ச்சிக்கு மிகவும் பயன்படக்கூடியவை என்பதில் ஐயமில்லை. ஆனால், அப்படிப் பயன்படாமலிருப்பதற்குக் காரணம் இன்றைய அரசியல் தலைவர்களுக்கு இலக்கிய ஞானம் இல்லாததும், தமிழ்ப் பண்டிதர்களுக்கு அரசியல் அறிவு இல்லாததும் ஆகும். இனியேனும் இந்நிலை மாறவேண்டுமானால் தமிழும் அரசியலும் ஒன்றுபட்டே தீர வேண்டும்."

அரசியலையும் இலக்கியத்தையும் இணைத்துத் தொண்டாற்ற ம.பொ.சி. தொடங்கிய தமிழரசுக் கழகம் சிறந்த முன்னுதாரணமாய்த் திகழ்கிறது. இது குறித்து அவர் எழுதியதாவது :

"தமிழரசுக் கழகத்தை நான் தோற்றுவித்தப் பின்னர், இலக்கியத்திற்கும் பொது அரசியலுக்கும் நல்லபடியான உறவு ஏற்பட்டதெனலாம். இந்த அருந்தொண்டைத் தொடங்கி வைக்கும்பேறு கிடைத்ததற்காக நான் பெருமை பட்டுக் கொள்ளலாந்தானே." (எனது போராட்டம் -ப.881).

1951 ஏப்ரல் மாத 'தமிழ் முரசு' இதழில் ம.பொ.சி.யின் 'அரசியலும் இலக்கியமும்' எனும் கட்டுரை வெளி வந்துள்ளது. இலக்கிய மேடைகளில் கட்சிக் காழ்ப்புப் பிரசாரத்திற்கு இடமளிக்கக்கூடாது எனும் கருத்தை இந்தக் கட்டுரையில் பின்வருமாறு உணர்த்தியுள்ளார்.

"காங்கிரசுக்கும் மாறுபட்ட கட்சியினரும் இலக்கிய மாநாடுகள் கூட்டுகின்றனர். ஆனால், நானறிந்தவரை கட்சி மாநாட்டிற்கும் இலக்கிய மாநாட்டிற்கும் அங்கே வேற்றுமை காண முடியவில்லை. கட்சிக் கருத்துக்களை வற்புறுத்துவது பிழையன்று. ஆயினும் பிடிக்காத சாதியினரை - கட்சியினரை பழித்துப் பேசுவதற்கென்றே இலக்கியங்களைப் பயன்படுத்துவது கேவலமான செயல் என்பதை கூறித்தான் ஆக வேண்டும்."

## இலக்கியக் கொள்கை

தமிழ் இலக்கியங்களை இந்திய தேசியத்திற்கும் தமிழ்த் தேசியத்திற்கும் பயன்படுத்துவதை இலக்கியக் கொள்கையாகக் கொண்டவர் ம.பொ.சி.

"தமிழ் இலக்கியங்களைச் சுதந்திரப் போராட்டத்திற்குப் பயன்படுமாறு செய்ய வேண்டியது நம் கடமை. அந்த உரிமை நமக்கு உண்டு. இதைத் தவிர பேரின்ப வீட்டிற்கு வழிகாட்டும் எந்தப்

பேரிலக்கியமும் இப்போது நமக்கு தேவையில்லை. நம்மவர் நாடு நசியுங்காலை வானவர் நாடு வலியவரினும் அதை நான் வேண்டேன்" இவ்வாறு ம.பொ.சி. 1946 இல் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 'சிலப்பதிகாரம் தமிழரும்' எனும் தலைப்பில் பேசியபொழுது குறிப்பிட்டுள்ளார்.

பிரிவினைவாத, இனவாத, வகுப்புவாத பிரசாரங்கள் தமிழ் இலக்கிய மரபின் அசல்தன்மையை அழிக்கவிடாமல் பாதுகாப்பதையும் அவர் இலக்கியக் கொள்கையாகக் கொண்டிருந்தார்.

தமது இலக்கியக் கொள்கையை அவர் பின்வருமாறு பிரகடனப்படுத்தியுள்ளார்.

"இலக்கியம் பொழுதுபோக்குவதற்காகவே என்று கதைக்கும் ரசிகர்களும் உண்டு. அந்த ரசிகர்களிலே நான் ஒருவன் அல்லன். கவிதையாயினும் சரி, காப்பியமாயினும் சரி, மக்களுடைய வாழ்க்கையைப் பண்படுத்துவதாக இருக்க வேண்டும். இதற்குப் பயன்படாத கவிதையும் காப்பியமும் குப்பையில் எறியப்பட வேண்டும். இதுவே எனது இலக்கியக் கொள்கை" (சிலப்பதிகார யாத்திரை - 1977 - ம.பொ.சிவஞானம் - ப.9)

இது தமது கொள்கை மட்டுமன்று, தமிழரசு இயக்கத்தின் கொள்கையுமாகும் என்று ம.பொ.சி. பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"தமிழரசு இயக்கத்தாருக்கு இலக்கியம் என்பது பொழுதுபோக்குக்குப் பயன்படும் பொருளல்ல. கடந்த காலத் தமிழகம் எப்படி இருந்தது என்பதைக் காட்டும் கண்ணாடி இன்றையத் தமிழகத்தின் பண்பாட்டுத் தரத்தை உறைத்துப் பார்க்க பயன்படும் உரைகல். எதிர்காலத் தமிழகத்திற்குத் தேவைப்படும் செல்வங்கள் எல்லாம் நிரம்பியுள்ளக் களஞ்சியம்." (இலக்கியத்தின் எதிரிகள், முதற்பதிப்பு, 1995 - ம.பொ.சி. - ப.17).

தமிழரசுக் கழகத்தின் அரசியல் கொள்கைகளோடு இலக்கியக் கொள்கைகளையும் இடம் பெற செய்தார், ம.பொ.சி.

"1946இல் தமிழரசுக் கழகத்தைத் தொடங்கியபோது அதனுடைய ஆறு கொள்கைகளில் நான்காவதாக இலக்கியக் கொள்கையை இடம் பெறச் செய்தேன். அது, 'சாதி, சமய வேற்றுமையற்ற தமிழினத்தின் பொதுக் கலைகள், இலக்கியங்கள் ஆகியவற்றைப் போற்றி, அவற்றின் வளர்ச்சிக்காகப் பாடுபடுதல்" என்பதாகும்.

## புதிய பார்வையில்

மொழி, சமயம், கலை ஆகியவற்றில் ம.பொ.சி.க்கு தனியான ஒரு புதிய பார்வை உண்டு. அரசியல், சமூக, பொருளாதாரக்

கொள்கைகளுக்கு ஏற்ப இலக்கியங்களைப் புதிய பார்வையில் ஆய்வு செய்ய வேண்டும் என்பதும் ம பொ.சி.யின் இலக்கிய நோக்குகளில் ஒன்றாகும்.

பழைய இலக்கியங்களில் முற்போக்குக் கொள்கைகளுக்கு ஆதரவாக உள்ள கருத்துக்களை எடுத்துக்காட்டும் வகையில் கட்டுரைகளை எழுதியுள்ளார். ம.பொ.சி. முற்போக்குக் கொள்கைகளுக்கு எதிராகவுள்ள கருத்துக்களையும் எடுத்துக்காட்டி, அவற்றைப் புறக்கணிக்குமாறு தமிழ் மக்களைத் தூண்டுமாறும் ம.பொ.சி எழுதி வந்தார்.

புதிய பார்வையில் தமிழ் இலக்கியங்களை ஆய்வு செய்ய வேண்டும் என்று ம.பொ.சி 16.4.1943இல் சென்னை வானொலி நிலையத்தில் 'புதிய கற்பனை' என்னும் தலைப்பில் உரையாற்றினார். இதில் ஒரு பகுதி, வருமாறு :

"இது இலக்கிய மறுமலர்ச்சி காலம். உலகமெங்கும் புதுப்புது இலக்கியங்கள் தோன்றுகின்றன தமிழ் இலக்கியங்கள் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருப்பதுகூடாது. பழைய இலக்கியங்களைப் புதிய பார்வையில் ஆராய்ந்து அவற்றிலுள்ள பயனற்றக் கருத்துக்களுக்குச் சீட்டு கொடுத்து மக்களது வாழ்க்கையில் தோன்றும் புதுப்புதுப் பிரச்னைகளுக்குப் பொருந்துமாறு வழி நூல்கள் செய்ய வேண்டும். பழமையில் புதுமையை புகுத்தும் வழியைப் பாரதியாரும் கையாண்டிருக்கிறார்." ('ம.பொ.சி.யின் இலக்கிய நோக்கு' - ஓர் அறிமுகம் - பாரதி புகழ் பரப்பும் ம.பொ.சி. - 1982, பெ.சு.மணி - ப.14).

சிலப்பதிகாரம், கம்ப இராமாயணம், பெரியபுராணம் முதலான இலக்கியங்களை பெரியார் கடுமையாக எதிர்த்ததை ம.பொ.சி. கண்டித்துப் பெரியாரை 'இலக்கியத்தின் எதிரி' என்று குறிப்பிட்டு எழுதவும் தயங்கவில்லை. தமிழ் இலக்கிய மரபைக் காக்கும் திரிபு வாதங்களுக்கும் ம பொ.சி. அவ்வப்பொழுது பதிலளிப்பதை இலக்கியக் கடமையாகக் கொண்டிருந்தார், ம.பொ.சி.

## சிலப்பதிகார இயக்கம்

சிலப்பதிகார மாநாடுகள், சிலப்பதிகார வகுப்புகள், சிலப்பதிகாரப் பேருரைகள், ஆய்வுகள் மூலமாகச் சிலப்பதிகார இயக்கத்தை உருவாக்கியவர் ம.பொ.சி.

தமிழ் இலக்கியங்கள் பற்றிய மாநாடுகள் ம.பொ.சி.யின் சிலப்பதிகார இயக்கத்திற்கு முன்பு நடைபெற்றுள்ளன. ஆனால் சிலப்பதிகாரத்திற்காக முதன்முதலில் ஒரு மாநாட்டை ம.பொ.சி தான் நடத்தினார். 24.3.1951இல் சென்னை இராயப்பேட்டையில் கண்ணகி

பந்தலில் டாக்டர் மு.வரதராசன் தலைமையில், பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், பேரறிஞர் ரா.பி.சேதுப்பிள்ளை, டாக்டர் ந. சஞ்சீவி முதலான தமிழறிஞர்கள் பங்கேற்ற முதல் சிலப்பதிகார மாநாடு நடைபெற ம.பொ.சி. ஏற்பாடு செய்தார்.

"தமிழின் வரலாற்றில் முதன்முதலாக நடந்த சிலப்பதிகார மாநாடு" என்று ம.பொ.சி. குறிப்பிட்டார். (சிலம்பில் ஈடுபட்டதெப்படி? 1994 - ம.பொ.சி. ப.50).

டாக்டர் மு.வ., தமது தலைமையுரையில் "பல நூற்றாண்டுகளாகத் தமிழ்ப் பொதுமக்கள் மறந்திருந்த கண்ணகி புகழ் மீண்டும் விளங்கத் தொடங்கியது. அத்துறையில் இது முதல் முயற்சி" என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் இலக்கியங்களில் சிலப்பதிகாரத்தைத் தேர்வு செய்து அதைப் பரப்புவதற்கு ஓர் இயக்கத்தை உருவாக்கியதற்கான காரணத்தை ம.பொ.சி. பின்வருமாறு விளக்கியுள்ளார்.

"தமிழரசுக் கழகத்தின் சார்பில் காங்கிரஸ் பாரம்பர்யத்தின் பிரதிநிதியாகவும் நின்று சிலப்பதிகாரம் காப்பியத்தை மக்கள் மத்தியிலே கொண்டுவர நான் விரும்பியதற்குக் காரணமுண்டு. திருக்குறளையோ, கம்பராமாயணத்தையோ நான் விரும்பாதவனல்லன். மனமார விரும்பக்கூடியவன். ஆயினும் இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கேடில்லாத வகையில் தமிழினத்தை ஒன்றுபடுத்த நான் எடுத்துக் கொண்ட முயற்சிக்குப் பயன்படக்கூடிய இலக்கியம் தமிழில் உண்டென்றால், அது சிலப்பதிகாரம்தான். வேறில்லை. இளங்கோ தந்த சிலம்பு தமிழினத்தின் பொதுச்சொத்து. இந்தியாவின் தேசிய இலக்கியம். அதனால்தான் சிலப்பதிகாரத்தை ஒரு கருவியாகக் கொண்டு பொதுமக்கள் நடுவில் இலக்கிய இயக்கத்தைத் தொடங்கி வைத்தேன்." (எனது போராட்டம், பக்.547-548).

சிலப்பதிகாரத்தைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்திற்கும் பயன்படுத்தினார், ம.பொ.சி.

"'சிலப்பதிகாரத்தில் அல்வழிப்பட்ட அரசைன ஒழிப்பேன்' என்று உறுத்தெழுந்து புரட்சி செய்த கண்ணகி போன்று இன்று நம் தமிழ்ப் பெண்கள் ஆகிவிடுவார்களானால் இந்தப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மட்டுமல்ல, வேறு எந்த ஏகாதிபத்தியத்தையும்கூட அரைநொடியில் அழித்து முடிக்கலாம். தமிழகத்தில் தமிழரசு நிறுவலாம்.

"இளங்கோவடிகள், அநீதியை எதிர்த்து நிற்கும் ஆண்மையை, அரசியல் நெறியை, புரட்சி வழியைப் போதிக்கத்தான் சிலப்பதிகாரத்தைச் செய்திருப்பார். மற்றபடி ஊழின் வலிமையை

உணர்த்துவதற்கோ. செத்தவரை எழுப்பும் கற்பின் பெருமையைச் செப்புவதற்கோ செய்திருக்கமாட்டார். ஏனெனில் இத்தகையக் கதைகள், நீதிநூல்கள் இளங்கோ காலத்திலும் இருந்தன. திருக்குறளை விட இன்னொரு நீதிநூல் இயற்ற இளங்கோ எண்ணியிருப்பாரோ?"

புதிய பார்வையில் இலக்கிய நோக்கை ம பொ சி. அமைத்துக் கொண்டதற்குச் சிலப்பதிகார இயக்கம் தலையாயச் சான்றாகும்.

## அறிஞர் அண்ணாவின் பாராட்டு

சிலம்புச்செல்வரின் சிலப்பதிகார இயக்கச் சாதனையை அறிஞர் அண்ணா, 16.6.1967இல் ம.பொ.சி.யின் 62ஆவது பிறந்தநாள் விழாவில் பேசியபொழுது, பின்வருமாறு மனந்திறந்து பாராட்டியுள்ளார்.

"தமிழர் இதற்கு முன்னாலே கேட்டுக் கேட்டு எப்படி இருக்குமோ, எப்படி இருக்குமோ? என்று வியந்து கொண்டிருந்த - ஆனால் அறிந்து கொள்ளத் தவறிய சிலப்பதிகாரம் போன்ற தமிழ்ப் பெருங்காப்பியங்களைத் தமிழ்ப் பெரும்புலவர்கள் தாங்கள் படித்த பத்து நூல்களோடு, இது பதினொன்றாவது நூல் என்ற அளவில் அடுக்கி வைத்திருந்த சிலப்பதிகாரத்தை ம பொ சி. அவர்கள் மக்கள் மன்றத்தில் முன்னாலே கொண்டுவந்தார்கள் அதனுடைய உட்பொருளை, விரிவுரையை அதிலே சூழ்ந்த பொருளோடு தரப்பட்டிருக்கிற அறநெறிகளை, அரசியல் முத்துக்களை மக்கள் மன்றத்திலே ம.பொ.சி. அவர்கள் எடுத்து வைத்தார்கள்.

"அதேநேரத்தில் பெரியாரும் நானும் கம்பராமாயணத்தை எரிக்கின்ற கிளர்ச்சியிலே ஈடுபட்டிருந்தோம். அப்போது நான் அவரிடத்தில் வாதாடினேன்.

"தமிழருக்கு இலக்கியத்திலே உள்ள சுவையைப்போல் வேறெந்த நாட்டினருக்கும் இருக்க முடியாது. கம்பராமாயணம் தமிழனுக்குத் தேவைப்படாத கருத்துக்களை அளிக்கிறது என்பதற்காக அதனை நீக்குவதனால், போக்குவதனால், அழிப்பதனால், அவனுக்குப் பற்றுக் கேடாக இருப்பதற்கு தனிப் பெரும் காப்பியமாக சிலப்பதிகாரத்தை அவன் கரத்திலே தர வேண்டுமென்று நான் சொல்லிக் கொண்டிருந்தேன்.

"நான் அப்படி ஒரு கூட்டத்திலே சொன்னவுடன் பெரியாருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்து, ஒரு அரைமணி நேரம் கண்ணகியைப் படாதபாடு படுத்திவிட்டார்.

"நான் திராவிடக் கழகத்தின் மூலமாக எந்தச் சிலப்பதிகாரத்தை மக்கள் மன்றத்திற்கு அளிக்க வேண்டும் என்று எண்ணி அளிக்க முடியாமல் ஏமாற்றத்தைக் கண்டேனோ, அந்தச் சிலப்பதிகாரத்தைத் தமிழரசுக் கழகத் தலைவர், என் மதிப்புமிக்க நண்பர், ம.பொ.சிவஞானம்

அவர்கள் தமிழர்களுக்குத் தந்ததற்காக நான் உள்ளூரப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்." (செங்கோல் - 2.7.1967).

## இலக்கியங்களில் இனவுணர்ச்சி

ம.பொ.சி.யின் இலக்கிய நோக்கில் இனவியல் ஆய்வு புதுமையானது. அத்துறையின் முதன்மையானது. 'இலக்கியங்களின் இனவுணர்ச்சி' எனும் அவருடைய நூல் (1976) இனவியல் ஆய்வில் அமைந்துள்ளது.

"தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் தமிழ் இனஉணர்ச்சிக் கண் கொண்டு ஆய்வது இந்நூல் மூலம் தொடங்கும் முதல் முயற்சி" என்று நூலின் முன்னுரையில் நூலாசிரியர் ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார்.

"சங்க காலத்திலும், இடைக்காலத்திலும் தற்காலத்திலுமாகத் தோன்றிய தமிழ் இலக்கியங்களில் காணப்படும் மொழிப் பற்றையும் இனப்பற்றையும் தொகுத்துத் தரும் ஒரு நூல் இதுவரை வெளிவந்ததாகத் தெரியவில்லை. இந்தச் சூன்யத்தை இட்டு நிரப்புவதற்காகவே இந்நூலை யான் எழுதியுள்ளேன்" என்றும் ம.பொ.சி. கூறியுள்ளார்.

மேலே குறிப்பிடப் பெற்றுள்ள 'தொகுப்புப் பணி' மட்டுமன்று, இலக்கியங்களைப் படைத்த ஆசிரியர்கள் தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழ் இனம் என்ற உணர்ச்சியோடு இயற்றியுள்ளார்களா? என்ற வினாவை எழுப்பி, அதற்கு ஆதரவாக இல்லாமலும் உள்ள காரணங்களைப் பல கோணங்களிலிருந்தும் திறனாய்வு செய்துள்ளார், ம.பொ.சி.

சங்க இலக்கியங்கள். சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம், நந்திக்கலம்பகம், கலிங்கத்துப்பரணி, கம்பராமாயணம், திருத்தொண்டர்புராணம், வில்லிபாரதம், தேசிய இலக்கியங்கள் ஆகியனவற்றை இனவியல் ஆய்விற்கு ம.பொ.சி எடுத்துக் கொண்டார்.

தமது இனவியல் ஆய்வில் தமிழ்த் தேசியத்தையும், இந்தியத் தேசியத்தையும் இணைத்துச் செல்வதில் ம.பொ.சி. அசைக்க முடியாத உறுதியுடன் இருந்தார் என்பதற்குப் பின்வரும் அவருடைய கருத்து ஒரு சான்றாகும்.

"இனவுணர்ச்சியும், இந்திய தேசிய உணர்ச்சியும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போன்றவை என்று சொல்லலாம். சாதி, மத, வருண, குல, கோத்திரங்களையெல்லாம் இணைப்பதற்கு மொழி வழி இனவுணர்ச்சியைப் போன்ற வலிமைமிக்க சாதனம் இன்னொன்று இருப்பதாக நம்புவதற்கில்லை. தமிழ் இனவுணர்ச்சிக்கும் இந்திய தேசிய உணர்ச்சிக்குமிடையே பகையை வளர்க்க முயல்வது தேசத்துரோகம் மட்டுமல்ல, தமிழ் இனத் துரோகமும் ஆகும்." (இலக்கியங்களில் இனவுணர்ச்சி - ப.12).

## இலக்கியங்களில் இன - சமயக் கலப்புகள்

13.1.1985இல் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த அனைத்திந்திய இலக்கிய ஒப்புநோக்கு ஆய்வாளர் கருத்தரங்கில் ம.பொ சி. 'இலக்கியங்களில் இனசமயக் கலப்புகள்' எனும் தலைப்பில் சிறப்புரையாற்றியுள்ளார். இவ்வுரையில் பின்வரும் கருத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

"காலத்தின் கட்டளையால் பண்டைத் தமிழகத்திலே பிற இன மதக் கலப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. கலப்புக்கு இரையாகாத இனம் இந்த வுலகத்திலே இருப்பதற்குச் சந்தர்ப்பமில்லை.இனக்கலப்போ, மதக்கலப்போ தமிழர் வாழ்வில் ஏற்படும்போதெல்லாம் தமிழ் மொழியின் இலக்கியங்களும் தாக்குண்டிருக்கின்றன. இதுவும் தமிழுக்கு மட்டும் ஏற்பட்ட தாக்குதல் அல்ல. இனக்கலப்பாலும், மதக்கலப்பாலும் தாக்கப்படாத மொழி இலக்கியம் எதுவுமே உலகில் இல்லையென்பதை உலக இலக்கிய வரலாறு காட்டுகிறது."

ம.பொ.சி.யின் இலக்கிய நோக்கை மேலும் விவரமாக அறிய அவருடைய பல இலக்கிய நூல்கள் உதவவல்லன.

# 6. ம.பொ.சி.யின் மொழிச் சிந்தனைகள்

மொழிவழி இனக் கோட்பாடு ம.பொ.சி. ஆளுமையின் மையப்புள்ளியாகும். எனவே அவருடைய மொழிச் சிந்தனைகள் முதன்மைபெறுகின்றன.

பொதுவாகக் கருத்து பரிமாற்றத்தின் கருவியாக மொழி விளங்குகிறது. அதற்கு மேலும் அது ஓர் இனத்தின் பண்பாட்டுக் களஞ்சியமாகவும் திகழ்கின்றது. ம.பொ.சி., தமிழ்மொழியை ஒரு போர்க்கருவியாகவும் பயன்படுத்தினார். தாய்மொழியாம் தமிழ்மொழியின் மீதான அனைத்து ஆதிக்கங்களையும் சாடிச் சாய்த்திடத் தமிழ்மொழியைப் போர்க்கருவியாகக் கொண்டு போராடியவர் ம.பொ.சி. இவ்வுண்மையை அவருடைய இந்திய தேசியப் போராட்ட வரலாற்றிலும் தமிழ்த் தேசியப் போராட்ட வரலாற்றிலும் அறிகின்றோம்.

தமிழின் வாழ்வியல் உரிமைக்குத் தாய்மொழியாம் தமிழ்மொழியே ஆதாரமானது எனும் தமது கருத்தை விளக்குமிடத்தில் ம.பொ.சி. கூறியதாவது :

“உலகில், மொழியைக் கொண்டுதான் ஒருநாடு இன்னொரு நாட்டை அடிமைப்படுத்தியது. மொழியைக் கொண்டுதான் ஒரு மதத்தை அழித்து இன்னொரு மதம் வளர்ந்தது. மொழியைக் கொண்டுதான் ஓர்இனத்துப் பண்பாட்டைப் பாழாக்கி வேறோரினம் வளர்ந்தது எனவே, தமிழன் மீண்டும் உரிமை வாழ்வு வாழ வேண்டுமானால்,தாய்மொழியாம் தமிழுக்கு நேர்ந்துள்ள எல்லா இடுக்கண்களையும் தகர்த்தெறியப்பட வேண்டும். மொழிப் பிரச்னையைப் புறக்கணித்தால், அதனால் வரும் கேடுகள் அளவற்றவை” (ம.பொ.சி. கூறுகிறார் – 1960 சோம.சுவாமிநாதன் – ப.8).

ஆங்கிலம், சம்சுகிருதம், இந்தி முதலான மொழிகளின் ஆதிக்கங்களுக்கு எதிரான அவருடைய மொழிச் சிந்தனைகளை ஆய்வதற்கு முன்பாக, அவருடைய பார்வையில் தமிழ்மொழி உரிமையிழந்த வரலாற்றை அறிதல் வேண்டும்.

## தமிழ்மொழி உரிமை இழந்த வரலாறு

'விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த வரலாறு' எனும் தமது அரிய ஆய்வு நூலில் (1970), 'தமிழ் மொழி உரிமை இழந்த வரலாறு' எனும் தலைப்பில் விரிவாக எழுதியுள்ளார். அதில் ஒரு பகுதி, வருமாறு :

"மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே தனக்கென ஒரு இலக்கணத்தைப் பெற்று, அதற்கு முன்னும் பின்னுமாக நீண்டதொரு இலக்கியப் பாரம்பர்யத்தையும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்து வந்திருக்கின்றது தமிழ்மொழி. தன்னேரில்லாத தனிமொழியே என்றாலும், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய சேய்மொழிகளின் தாய்மொழியாக இருப்பினும், ஒரு கால கட்டத்திலே பிராகிருதம், சமஸ்கிருதம், ஆகிய வடமொழிகளின் தொடர்பையும் பெற்றது நமது தாய்மொழியான தமிழ். ஆம்! தன் உரிமையையும் தனித்தன்மையையும் இழக்காத நிலையிலே.

"தமிழகத்தின் மீது ஆங்கிலேயர் அரசியல் ஆதிக்கம் பெறுவதற்கு முன்பு வேற்றுமொழி இனத்தினர் பலர் இங்கு மாறி மாறி ஆதிக்கம் பெற்றனர். அவர்கள் பல்லவரும், ஆந்திரரும், மராத்தியரும், மொகலாயரும் ஆவர். அவர்கள் காலத்திலேதான், சமஸ்கிருத மொழிக்கும் தமிழ்மொழிக்கும் இருந்த உறவுநிலையில் விரும்பத்தகாத மாறுதல் ஏற்பட்டதாக அறிய முடிகிறது

"தமிழ்மூவேந்தர் அல்லாத வேற்றுமொழி மன்னர்கள் ஆட்சிக்காலத்திலேயும் தமிழ்மொழி வளர்ச்சி அடைந்தது உண்டு. சமூகத்துறையில் அல்ல; சமயத்துறையிலே!

"வேற்றினத்தவரான ஆந்திரரும், மராத்தியரும் தமிழகத்தின்மீது அரசியல் ஆதிக்கம் பெற்றிருந்த காலங்களிலே, தத்தம் மொழியைத் தமிழர் மீது அவர்கள் திணிக்கவில்லை என்றாலும் சமஸ்கிருதத்தின் செல்வாக்கை விரும்பியோ, விரும்பாமலோ வளர்த்தனர். ஆம்; மொகலாயரின் ஆதிக்கத்திற்கு அடிமைப்படாமல் தமிழகத்தைக் காக்க வந்த அவர்கள் வடமொழி ஆதிக்கத்தை நிலைநாட்டி விட்டனர்.

"அன்னியமொழியினர் - இனத்தினர் தமிழகத்தின்மீது ஆதிக்கம் பெற்றிருந்த காலங்களிலேயும் புதுப்புது இலக்கியங்கள் தமிழில் தோன்றின வென்றாலும் அவையனைத்தும் தெய்வங்கள்மீது துதிபாடும் பிரபந்தங்கள், ஸ்தல புராணங்கள் எனப்படும் சமய இலக்கியங்களே-யன்றி, சமூக இலக்கியங்களல்ல சமூக இலக்கியங்களையெல்லாம் படைப்பது பாவம் என்ற கருத்துக்கூட நிலவியது. சங்க இலக்கியங்-களைப் படிப்போர் நாத்திகராகி விடுவர் என்று கூடப் பயமுறுத்தப்பட்டது.

"தமிழ்மொழிக்கிருந்த இந்த அடிமைச் சூழ்நிலை, பிரிட்டிஷ் பேரரசுக்கு எதிராக விடுதலைப் போர் ஆரம்பமானபோதுதான் மாறத் தொடங்கியது. இந்திய விடுதலைப் போர் நடந்தில்லையானால், அந்தப் போரில் ஈடுபட்ட தேசியவாதிகள் தமிழின் மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டில்லையானால், தமிழ்மொழி சமய வேலியைக் கடந்து சமுதாயப் பெருவெளிக்கு வந்திருக்காது."

இந்திய தேசிய விடுதலைப் போர், தமிழ்மொழியை, "சமயவேலியைக் கடந்து சமுதாயப் பெருவெளிக்குக் கொண்டு வந்தது" என்று ம.பொ.சி. சுட்டிக்காட்டியது குறிப்பிடத்தக்கது.

## மொழியும் வழியும்

ம.பொ.சி.யின் மொழிச் சிந்தனையின் தொடக்கக் காலச்சுவடுகளை அவருடைய, 'மொழியும் வழியும்' எனும் கட்டுரையில் அறிகின்றோம். 'ஞானம்' எனும் புனைபெயரில் 'தமிழ்முரசு' இதழில் – 15.10.1947இல் இக்கட்டுரை வெளிவந்தது. தமிழ்மொழியால் வடமொழிச் சொற்கள் கலப்பது குறித்துத் தமது மொழிச் சிந்தனையை வெளிப்படுத்தியுள்ளார் ம.பொ.சி.,இந்தக் கட்டுரையில். சுருக்கம் கருதி கட்டுரையின் சில பகுதிகள் பின்வருமாறு இங்கு வழங்கப்பட்டுள்ளன.

"'தமிழ் மறுமலர்ச்சி' பெற்று வருகிறது என்று எல்லோரும் சொல்கின்றனர். மறுமலர்ச்சி என்பதன் பொருள் என்ன? காலத்திற்கேற்றவாறு மக்கள் வாழ்க்கைக்கு வழி காட்டும் வகையில் எளிய தமிழில், இனிய நடையில் புதுப்புது நூல்கள் தோன்றுவதேயாகும். அவை தமிழ்மொழியில் மட்டுமல்லாமல் தமிழ்வழியானும் அமைந்திருத்தல் வேண்டும்.

"முதலில் மொழியை எடுத்துக் கொள்வோம். தமிழ்மொழியில் நூல் எழுதும்போது அம்மொழிக்குரிய மரபை மறந்துவிடக்கூடாது. பிற மொழிச் சொற்களைத் தேவையில்லாத இடத்தில் கலப்பது தமிழ்மொழிக்குத் தீங்கு செய்வதாகும். பிறமொழிச் சொற்களைக் கலத்தல் கூடாது என்போரை 'தனித்தமிழ்ப் பித்தர்' என்று தமிழ்மொழிப் பகைவர் எள்ளி நகையாடுகின்றனர். ஒருசில தமிழறிஞரும்கூட பிறமொழிச் சொற்கள் கலவாத தமிழுக்குத் 'தனித்தமிழ்' என்று கூறத் தயங்குவதில்லை. இவை இரண்டும் தவறாகும். முன்னது இறுமாப்பால் எழுவது. பின்னது மயங்கிப் பேசுவது. உண்மை என்னவெனில், 'தனித்தமிழ்' என ஒருமொழியே இல்லை. தமிழில் பிறமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந்தவிடத்து, வேண்டுமானால் அதைக் 'கலப்புத் தமிழ்' என்று நாம் நகையாடலாம். அஃதின்றி – தனித்தமிழ் என்று உண்மைத் தமிழ்ப் பற்றுடையயோரே கூறிக் கொள்வது ஏளனம் செய்வோருக்கும் இடந்தருவதாகும்.

"பிறமொழிச் சொற்கள் தேவைப்படுமானால் அவற்றை எடுத்துக் கொள்ள இடர்ப்பாடு ஒன்றுமில்லை. அதற்குத் தமிழ் இலக்கணமும் இடம் தருகின்றது. ஆனால் பிறமொழிச் சொற்கள் தேவைப்படுவது எங்கு? இதை அறிந்து கொள்ளும் திறம் தமிழ் எழுத்தாளருக்கு இருத்தல் வேண்டும். சங்க நூல்களைக் கற்றார்க்கெல்லாம் அந்தத் திறமை வாய்த்தலரிது சங்க நூல் கல்லாதார் எழுதும் நூல்கள் தமிழ் வழியில் அமையாததோடு தமிழ்மொழியிலும் இருப்பதில்லை."

வரலாற்றுப் போக்கில் தமிழில் பிறமொழிச் சொற்கள் புகுந்ததைப் பற்றி ம.பொ.சி. இக்கட்டுரையில் மேலும் கூறியதாவது :

"பண்டை நூற்புலவர்களெல்லாம் பிறமொழிச் சொற்களைக் கையாளவில்லையா? என்று கேட்கலாம். கையாண்டது உண்மைதான். செய்யுளுக்குத் தேவைப்பட்ட இடத்தில்தான் அப்படி கையாண்டார்களென்பதை மறந்துவிடக்கூடாது. சங்க கால நூல்களில் சிற்சிலவிடங்களில்தான் வடமொழிச் சொற்கள் இலைமறைகாயென இடம் பெற்றிருக்கின்றன. ஆனால், இடைக்காலத்தில் பிறமொழியாளர்கள் தமிழகத்தில் குடியேறியபோது இனவுணர்ச்சி மறைந்து சமயப் போர் மூண்டெழுந்தது.

"அப்போது பல்வேறு சமயங்களின் சார்பாகத் தமிழில் எழுதப்பட்ட சமயநூல்களில்தான் வடமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந்தன. பின்னர், அராபியர் தமிழகத்தில் குடிபுகுந்தபோது அராபியச் சொற்களும், அதன்பின்னர் ஆங்கிலேயர் ஆட்சி புரிந்தபோது ஆங்கிலச் சொற்களும் தமிழ் உரைநடை நூல்களிலும் பேச்சு வழக்கிலும் பெரிதும் கலக்கலாயின. எனவே, தமிழ் வளர்ச்சிக்கும் பாடுபடுவோர் இடைக்காலத்தில் தமிழை அடிமை கொண்ட வடமொழி. ஆங்கிலம் போன்ற பிறமொழிச் சொற்களை விலக்கி மீண்டும் தமிழைப் பழைய நிலைக்குக் கொண்டு வரப் பாடுபட வேண்டும்.

"பிறமொழிச் சொற்கள் உரைநடை, நூல்களுக்குத் தேவையே இல்லை ஏனெனில் தமிழ் தனித்தியங்கும் மொழி. இன்றுங்கூடத்தான். ஆனால். செய்யுள் இயற்றுவோர் பாவின் நயங்கருதி பிறமொழிச் சொற்களைக் கைக்கொள்வதாயினும், தமிழ் மரபை மறத்தல் கூடாது. சான்றாகத் தர்மம் என்ற வடமொழிச் சொல்லைத் தருமம் என்று எழுத வேண்டும் தேவையற்ற இடத்திலெல்லாம் வடமொழி எழுத்துக்களைத் தமிழில் கலத்தல் கூடாது. லக்ஷ்மணன் என்பதை லட்சுமணன் என்று எழுதுவதே முறை."

தமிழில் வடமொழிக் கலப்புப் பற்றி 1947 இல் வெளிப்பட்ட ம.பொ.சி. சிந்தனைப் போக்கின் வளர்ச்சி எத்தகையது என்பது 'தமிழும் கலப்படமும்' (1965), 'தமிழும் சமஸ்கிருதமும்' (1984) எனும் நூல்கள் வழியே அறியத்தக்கது.

## தமிழும் இந்தியும்

தமிழகத்தில் நிகழ்ந்த 'மொழிப் போரில்' இந்தி எதிர்ப்புப் போர் தலையாயது என்பதை வரலாறு பதிவு செய்துள்ளது. ம.பொ.சி.யின் மொழிச் சிந்தனையும், 'தமிழும் இந்தியும்' பற்றிய தனது தடங்களைப் பதிவுச் செய்துள்ளது. இவ்வழியில் 'தமிழ் முரசு' இதழில் 15.7.1947இல் வெளிவந்த அவருடைய 'தமிழும் இந்தியும்' (பக்.8-15) எனும் கட்டுரை (பக்.9-13) ஒரு தொடக்கமாகும் இதன் சில பகுதிகள், வருமாறு:

"தமிழகத்திற்கு இந்தி வேண்டுமா? வேண்டியதில்லை என்பதே எனது பதில். அரசியல் வாணிபம், விஞ்ஞானம் ஆகிய எல்லாத் துறைகளுக்கும் பயன்படக்கூடிய வளம் தமிழ்மொழிக்கு உண்டு. இன்னொரு மொழியின் துணையின்றித் தமிழர் தமிழகத்தை ஆளமுடியும். எனவே, இந்திமொழிக்கு மட்டுமல்ல; வேறு எந்த மொழிக்கும் நம் சொந்த நாடாம் செந்தமிழ் நாட்டில் இடமளிக்கத் தேவையேயில்லை.........

"இந்தியைப் பொதுமொழியாக்க இன்னொரு காரணம் கூறப்படுகிறது இந்தியாவிலுள்ள பெரும்பாலான மொழிகள் சமஸ்கிருதத்தின் கிளைமொழிகள், ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பவையே அந்தக் காரணங்கள். அப்படிப் பார்த்தாலும்கூட தமிழகத்தில் இந்தி தலைகாட்டவே முடியாது. ஏனெனில் தமிழ்மொழி வடமொழியின் கிளைமொழியல்ல. ஒவ்வொரு துறையிலும் வடமொழியின் தாக்குதல்களைத் தாங்கி தன்னிலை மாறாது தலைநிமிர்ந்து நிற்கும் தனி மொழி.

"வடமொழிச் சொற்கள் தமிழில் நிறையக் கலந்திருக்கிறதே என்று எடுத்துக்காட்டப்படுகிறது. இது ஓரளவு உண்மையே என்றாலும், இதனாலேயே தமிழர் இந்தியை எளிதில் கற்றுக் கொள்ள முடியும் என்றோ, தமிழகத்தில் இந்தி வர உரிமை உண்டென்றோ வாதிடுவது துரும்பைப் பிடித்துக் கரையேற நினைத்தவன் கதையையொக்கும். தமிழில் வடமொழிச் சொற்களைத் தேவைக்கதிகமாகக் கலந்தது பிறமொழியாரே; அதுவும் தமிழர் ஏமாந்திருந்த காலத்தில். ஆனால், அன்று முதல் இன்று வரை தமிழகத்தில் வடமொழிக்கு, வடமொழிச் சொல்லுக்கு, வடமொழி எழுத்துக்கும்கூட எதிர்ப்பு இருந்து வருவதை இந்தியை நுழைப்போர் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இடையே சிறிது குன்றியிருந்த இந்த எதிர்ப்பு இன்று மீண்டும் குமுறத் துவங்கிவிட்டதென்பதைக் கலைச்சொல்லாக்கக் கமிட்டி உறுப்பினரைக் கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம்.

"மேலும், வடமொழிச் சொற்கள் தமிழில் கலந்துவிட்டது என்ற காரணம் இந்தியை எதிர்க்கத் தூண்டுகிறதேயொழிய, ஏற்கத் தூண்டவில்லை. ஏனெனில்,வடமொழிக் கலப்பால்தான் சேரநாடு

கேரளநாடாக மாறியது. வடமொழிக் கலப்பால்தான் தமிழர் பண்பாடு மண்மூடிப் போயிற்று. வடமொழிக் கலப்பால்தான் தமிழகத்தில் வந்தவர் வாழ, இருந்தவர் ஏங்க இடமேற்பட்டது. இவை நாம் கூறும் பரிந்துரையல்ல. வரலாறு எடுத்தோதும் வாய்மையுரை

"'இந்திமொழி தமிழகத்தின் வேலைக்காரியாகவே வருகிறது' என்கின்றனர். வேலைக்காரிகளாக வந்த வடமொழியும், மேற்கு மொழியும், இன்று தமிழகத்தின் ஆலயங்களிலும், அரியாசனத்திலும் அமர்ந்து ஆட்சி புரிவதை அறியாதார் யார்? அந்த வேதனை வாழ்வைத் தமிழர் மீண்டும் மீண்டும் ஏற்கத் தயாராயில்லை .....

"கடந்த காலத்தில் நாம் இந்தியை எதிர்த்துப் போரிடவில்லை என்றால், அதற்குக் காரணம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போருக்கு இடையூறு செய்யக்கூடாதென்பதுதான்; இந்தியை ஏற்று கொண்டோம் என்று பொருளல்ல.

"தேசபக்தர்களே! மொழிவகையில் மாகாணம் பிரியும்வரையேனும் இந்தியைப் புகுத்த வேண்டாம் என்று அமைச்சர்களுக்கு ஆணையிடுங்கள். தமிழகத்து வயது வந்த வாக்காளரின் கருத்தை அறியாது தமிழ் நிலத்தில் பிறமொழியைப் புகுத்துவது கூடாது என்று கிளர்ச்சி செய்யுங்கள். நாம் இந்திமொழியையும் வேறு எந்த மொழியையும் விரும்பிக் கற்போம். அதனால் வரும் பயனைப் பெறுவோம். ஆனால், அரசியல் செல்வாக்கைக் கொண்டு பிறமொழியைத் தமிழகத்தில் பிடிவாதமாகப் பிற இனத்தார் புகுத்த இடந்தரமாட்டோம்."

வடமொழி எதிர்ப்பு,இந்தி மொழி எதிர்ப்பு இரண்டிலும் 1947இல் கொண்டிருந்த தீவிரமான கருத்துக்களை மேலே அறிகின்றோம். அவருடைய இந்தக் கருத்துக்களில் பல சொல்லும் முறையாலும், நடையாலும்,கருத்துக்களாலும் எவ்வாறெல்லாம் மாற்றமடைந்தன என்பதை மேல் வரும் பக்கங்களில் காண்போம்.

## 'தமிழ் எழுத்துக்கும் ஆபத்து'

'தமிழும் இந்தியும்' எனும் கட்டுரையில் இந்தியா முழுவதற்கும் மொழிகளுக்கு ஒரே எழுத்து வடிவத்தைப் பயன்படுத்தலாம் எனும் ஒரு கருத்து பேசப்பட்டபொழுது, ம.பொ.சி அந்தக் கருத்தைக் கடுமையாகக் கண்டித்து எழுதியுள்ளார். இதில் ஒரு பகுதி, பின்வருவது.

"இந்தி மொழியை ஏற்றால் தமிழருக்கு இன்னொரு கேடும் வரக் காத்திருக்கிறது. மாகாண மொழிகளின் எழுத்துக்களையெல்லாம் தொலைத்துத் தலைமுழுகி இந்தியா முழுவதற்கும் ஒரே எழுத்தை மேற்கொள்வதென்று இந்தியை ஒட்டி ஒரு வாதம் இருந்து வருகிறது.

அதென்ன எழுத்து? அதுதான் 'தேவர்கள்' மொழிக்குரிய தேவநாகரி எழுத்து. 'செட்டி செத்தும் கெடுத்தான்' என்பது ஒரு பழமொழி. அது பேச்சு வழக்கில் இறந்துவிட்ட சமஸ்கிருதத்தின் எழுத்தும் தமிழைக் கெடுக்க சக்தி பெற்றுவிட்டது. இந்த எழுத்து விஷயத்தில் நாம் அலட்சியமாக இருப்பதற்கில்லை. ஏனெனில் அதை ஆதரிப்பவர் இந்திய அரசியலில் இணையற்ற தலைவராக விளங்கும் காந்தியடிகளாவார். இதோ, அவர் கூறுவதைக் கேளுங்கள்.

''இந்திய மொழிகள் அனைத்திற்கும் ஒரே லிபி இருக்க வேண்டும் என்பதும், அந்த லிபி தேவநாகரி லிபியாகத்தான் இருக்க முடியும் என்பதும் எனது உறுதியான நம்பிக்கை .. மகத்தான தேசிய விழிப்பு நம்மிடையே ஏற்பட்டு இருப்பதை நழுவவிடாமல் பயன்படுத்திக் கொண்டு இந்தியா முழுமைக்கும் ஒரே லிபி இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை நாம் பரப்ப வேண்டும்.... தென்னிந்திய மொழிகளையும் ஒரே லிபியினால் எழுதுவதற்கு அவர்கள் சம்மதிக்க வேண்டும்.

''காந்தியடிகளின் மேற்சொன்ன கருத்து அமலுக்கு வந்தால் நம் தமிழின் கதி யாதாகும் என்பதை பண்டித நேருவின் உரையைக் கொண்டே உணர்த்துவோம் :

''நீண்டகாலமாகவே செல்வாக்குடன் இருந்துவரும் ஒருமொழிக்கு அதனுடைய எழுத்துமுறை மிகவும் முக்கியமான அம்சமாகும். அது அந்த மொழியினுடைய இலக்கியத்தின் சிறப்பான பகுதியாகும். எனவே எழுத்து மாற்றம் ஒரு முக்கியமான மாறுதல் ஆகும். எழுத்தை மாற்றினால், புதிதான வார்த்தைச் சித்திரங்கள் தோன்றுகின்றன. புதிதான சட்டங்கள், புதிதான கருத்துக்கள் தோன்றி விடுகின்றன பழைய இலக்கியத்திற்கும் புதியதுக்கும் இடையே தாண்டமுடியாத தடை ஏற்பட்டுவிடுகிறது. செத்துப்போன அந்நிய மொழியாகப் பழைய இலக்கியமும் அதன் எழுத்தும் மாறிப் போய்விடுகின்றன. இந்தியாவில் இத்தகைய மாறுதல் மனத்தினால்கூட நினைக்க முடியாது. இத்தகைய மாறுதலைக் கட்டாயப்படுத்திச் செய்தால் அது குரூரமான சித்திரவதையாகும். பாமரமக்களின் கல்வி அபிவிருத்தியை அது தடைப்படுத்தும்.

- எனப் பண்டித நேரு தமது சுயசரிதையில் கூறுகிறார். இந்தியை லத்தீன் எழுத்தில் எழுதலாம் என்ற வாதத்தை எதிர்த்தே அவர் இவ்வாறு கூறுகிறார். மற்றபடி மாகாண மொழிகளைத் தேவநாகரி எழுத்தில் கொண்டு வருவதை பொதுப்படையாக அவரும் ஆதரிக்கிறார். ஆனால் இந்திக்கு லத்தீன் எழுத்து கூடாதென்பதற்கு அவர் கூறும் வாதம் தமிழுக்கும் பொருந்துவதேயாகும்.''

## ஒரு 'கருத்து மயக்கம்'

தேவநாகரி லிபி சம்பந்தமாக காந்தியடிகள் கூறியதைப் பற்றிய ம.பொ.சி யின் விளக்கம் 'கருத்து மயக்கம்' ஏற்பட வாய்ப்பளிக்கின்றது. அதாவது காந்தியடிகள் மாநில மொழிகளை தேவநாகரி எழுத்து வடிவத்தில் எழுத வேண்டும் என்று சொல்வதுபோல 'கருத்து மயக்கம்' ஏற்படுகின்றது காந்தியடிகள் மாநிலமொழியின் எழுத்து வடிவத்திற்குப் பதிலாக தேவநாகரி லிபியை பரித்துரைக்கவில்லை. மாநில மொழியின் எழுத்துவடிவத்திற்குக் கூடுதலாக தேவநாகரி எழுத்து வடிவம் பயன்படுத்துதல் விரும்பத்தக்கது என்பதே கருத்துத் தெளிவாகும். இதனால் பிறமொழியாளர்கள் பயன் பெறுவார்கள் என்பதும் காந்தியடிகள் கருத்தாகும்.

காந்தியடிகள் 1925 ஆகஸ்ட் 27ஆம் ஆண்டில் 'யங் இந்தியா'வில் எழுதிய "A Common Script" எனும் கட்டுரையிலும், 5.8.1939இல் 'ஹரிஜன்' இதழில் எழுதிய 'One Script in the daughters of Sanskrit' எனும் கட்டுரையிலும் தேவநாகரி லிபியை 'In addition to Provincial Scripts' என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

## "தமிழரசில் தமிழின் நிலை"

1947இல் ம.பொ.சி.யின் மொழிச் சிந்தனைப் போக்கை மேலும் அறிய உதவுவது. 'தமிழரசில் தமிழின் நிலை' எனும் கட்டுரையாகும் 1947 டிசம்பரில் வெளிவந்த ம.பொ.சி.யின் 'தமிழன் குரல்' எனும் நூலில் உள்ள ஒரு அத்யாயத்தின் தலைப்பு 'தமிழரசில் தமிழின் நிலை' என்பதாகும். இந்த அத்யாயத்தில் கூறப்பெற்றுள்ள பல கருத்துக்கள் முற்கூறிய இரு கட்டுரைகளில் கூறப் பெற்றுள்ளன. இந்த அத்யாயத்தில் எழுதப் பெற்றுள்ள கருத்துகள் சிலவற்றின் விவரம் வருமாறு:

"தமிழகத்தில் தமிழரசு அமைந்தால், தமிழே அரசு மொழியாக இருக்குமென்பதில் யாருக்கும் ஐயமிருக்க முடியாது. விஞ்ஞானம், தொழில், கணிதம் போன்ற துறைகளில் தமிழ் வளர்ச்சிப் பெற வேண்டுமானால், அம்மொழி ஆட்சிமொழியாக வந்தே தீர வேண்டும். தமிழ் ஆட்சி மொழியாக வருவதானால் ஏழை பணக்காரர் ஆகிய இருதரப்பினரும் எல்லாத்துறைகளிலும் சமமாக முன்னேறமுடியும். இன்று விஞ்ஞானத்திலோ, தொழிலிலோ ஒரு சாதாரண உழைப்பாளி திறமை பெற வேண்டுமானால், ஆங்கில மொழிப் புலமை அவசியமாகிறது. அன்னியமொழியான ஆங்கிலத்தைக் கற்பதற்கு ஆகும் காலத்தையும் ஏற்படும் செலவையும் பார்க்கும்போது அம்மொழியில் புலமை பெறுவதென்பது ஏழைத் தொழிலாளியால் இயலாத காரியம். ஆகவே, இன்றைய தமிழகத்தில் விஞ்ஞானரீதியாகத் தொழிலறிவு, பணம் படைத்தவர்களுக்கே ஏகபோக

உரிமையாகிவிட்டது. தமிழகம் தனியரசு கண்டால், தமிழ்மொழி அரியாசனம் ஏறினால், இந்த நீதியற்ற நிலைமை மாறி, தொழில் துறையில் ஒரு மகத்தான புரட்சி ஏற்படுவதைக் காணலாம்.

"தமிழரசில் விஞ்ஞானம் - எஞ்சினீயரிங் போன்ற தொழில் துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கே திறமையைக் குறிக்கும் பட்டங்கள் வழங்கப்படும். மற்றபடி, வெறும் மொழி அறிவுக்காக மட்டுமே பட்டங்கள் தரும் வழக்கம் கைவிடப்படும் இது போன்ற மாறுதல்களைத் தோற்றுவிப்பதற்காகவே தமிழரசுக் கழகத்தார் தனியரசு விரும்புகின்றனர். தமிழரசில் தமிழ்மொழி வாழ்வு பெறும் - வளர்ச்சியுறும் என்று நாம் கூறும்போது, தமிழர் பிறமொழிகளைப் படிக்கக்கூடாதென்று பொருள் கொள்ளக்கூடாது. நிச்சயமாக,ஆங்கில - இந்தி மொழிகளைக் கற்பதை நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், தமிழருடைய வாழ்வு அனைத்தும் அவர்களுடைய தாய்மொழி மூலமாகத்தான் இருக்க வேண்டும். இதுவே தமிழரசு வாதிகளின் கொள்கை. உண்மை ஜனநாயகவாதி எவரும் இதை ஏற்பது திண்ணம்.

"தமிழரசுக் கழகத்தார், இந்தியை ஏற்க தயங்குவதற்குக் காரணம், அம்மொழி தமிழகத்தின் அரசியல், பொருளாதார உரிமைகளை பறிப்பதற்கான கருவியாக முதலாளித்துவக் கூட்டத்தால் பயன்படுத்தப்படலாம் என்ற ஐயமேயாகும். தமிழரசு வாதிகள் கோருகிறபடி மொழி வாரி சோஷலிசக் குடியரசுகள் ஏற்பட்டு, அவற்றின் விருப்பத்தின் பேரில் ஒரு மத்தியக் கூட்டரசு அமையுமானால், அந்த சமஷ்டி அரசுக்கு இந்தி பொது மொழியாக இருப்பதை நாம் ஆட்சேபிக்கமாட்டோம். ஏனெனில், அப்போது இந்தி முதலாளித்துவத்தின் சுரண்டல் கருவியாக இருக்கமுடியாது.

"இந்த அத்தியாயத்தில் மற்றொரு விஷயத்தை விளக்கிவிட விரும்புகிறோம். இந்தி பற்றிய பிரச்சினை முழுக்க முழுக்க அரசியல் - பொருளாதார பிரச்னையேயாகும். இதில் பிராமணர் - பிராமணரல்லாதார் என்ற சாதிப்பூசலுக்கோ, ஆரியர் - திராவிடர் என்ற நிறவேற்றுமைப் போருக்கோ கொஞ்சங்கூட இடங் கிடையாது. மக்களிடையே வளர்ந்துவிடும் மொழிப் பற்றைப் போர்வையாகக் கொண்டு, இந்தியை எதிர்ப்பதாகப் போர்முரசு கொட்டி, தேசீயத்தை எதிர்ப்போரின் - வகுப்பு வெறியைக் கிளப்புவோரின் - ஆரியர் திராவிடர் என்ற நிறவேற்றுமை அடிப்படையில் தனியரசு கோருவோரின் கூச்சலுக்கும் தமிழரசுக் கழகத்தாரின் கொள்கைக்கும் எந்தவிதத்திலும் தொடர்பு கிடையாது."

மேலே இறுதியாகக் கூறப் பெற்றுள்ளக் கருத்து ம.பொ.சி.யின் மொழிச் சிந்தனை, திராவிட இயக்கச் சிந்தனைக்கு எதிரானது என்பதைத் தெளிவுப்படுத்துகிறது.

## ம.பொ.சி. பார்வையில் 'தனித்தமிழ்'க் கொள்கை

"தேசிய விடுதலை இயக்க வழி வந்த தனித்தமிழ் இயக்கத்தை ஆய்வு செய்பவர்களுக்கு 'விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த வரலாறு' முக்கியமானதாகும்" என்று பேராசிரியர் கா.சிவத்தம்பி அவருடையத் 'தனித்தமிழ் இயக்கத்தின் அரசியற் பின்னணி' (1970) எனும் நூலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இங்குப் பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ள நூல், ம.பொ.சி யின் நூலாகும். இந்நூலில் ம.பொ.சி., விடுதலைப் போராட்ட வீரர் சுப்பிரமணியசிவாவின் 'ஞானபானு' இதழில், ஜுலை-1915இல் வெளிவந்த "உங்களால் தனித்தமிழ் எழுத முடியுமா?" எனும் கேள்வியை எழுப்பி வெளியிடப் பெற்ற விளம்பரத்தை ம.பொ.சி. குறிப்பிட்டு ஆய்வு செய்துள்ளார். "சமஸ்கிருதம் முதலிய அன்னியபாஷைச் சொற்களில் ஒன்றும் கலவாது தனித்தமிழில்... தமிழ்ப்பாஷையின் சிறப்பைப் பற்றியாவது,திருவள்ளுவ நாயனாரின் சரித்திரத்தையாவது எழுதுவோருக்கு ரூபா ஐந்து இனாமளிப்பதாக தமிழபிமானியொருவர் முன்வந்திருக்கிறார்" என்று 'ஞானபானு'வில் வெளிவந்த விளம்பரத்தை ம.பொ.சி. முதன்முதலில் ஆய்வு செய்துள்ளார். இந்த ஆய்வில் சிவாவின் தனித்தமிழ்க் கொள்கையைச் சுட்டிக் காட்டியுள்ளார், ம.பொ.சி.

சிவாவின் தனித்தமிழ்க் கொள்கையில் 'சமஸ்கிருதம் முதலிய அந்நிய பாஷை' எனும் குறிப்பு, தனித்தமிழ் இயக்கத்தினர் சிலரின் கவனத்தைக் கவர்ந்தது.

சமஸ்கிருதச் சொற்களை மட்டும் விலக்குவது ஒரு கால கட்டம் வரையில் தனித்தமிழ்க் கொள்கையாக நடைமுறையில் நிலவியது "ஆரியம் ஆங்கிலம் முதலான பிறமொழிச் சொற்களைக் கலவாமற் தனித் தமிழிற்பேசவும் எழுதவும் கடைப் பிடியாய்ப் பழகி வரல் வேண்டும்" என்று தனித்தமிழ் இயக்க முன்னோடி மறைமலைஅடிகள் கூறியதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

விடுதலைப் போராட்டக் காலத்தில் தேசியவாதிகளான தமிழர் சிலரிடையே ஆங்கிலச் சொற்களை மட்டும் விலக்குவது தனித்தமிழ்க் கொள்கையாக இருந்தது.

## 'தனித்தமிழ்க் கிளர்ச்சி' தோன்றியதேன்! ம.பொ.சி. விளக்கம்!

தனித்தமிழ்க் கிளர்ச்சி தோன்றியதற்கானக் காரணத்தை 'தமிழும் கலப்படமும்' (1960) எனும் தமது நூலில் ம.பொ.சி. பின்வருமாறு விளக்கியுள்ளார்.

“தமிழ்மொழியில் போதிய அன்பில்லாமையாலோ அல்லது வடமொழியில் அதிக அளவு பற்று வைத்திருந்ததாலோ, தமிழை வட மொழிமயமாக்கிவிட முயன்றவர் வைதீகர்கள். அன்னார் மிகுதியும் சமஸ்கிருதச் சொற்களைப் பெய்தும், கிரந்த எழுத்துக்களைக் கலந்தும் எழுதிய கலப்படத்துக்கு ‘மணிப்பிரவாளம்’ என்னும் பெயர் வைத்தனர். இந்தப் ‘புண்ணியவான்கள் ‘தான்’ தனித்தமிழ்’க் கிளர்ச்சி தோன்றக் காரணமாயினர்......

“மணிப்பிரவாள மொழியைத் தோற்றுவித்தோர், தமிழின்மீதுகொண்ட பகைமையால் அப்படிச் செய்தார்கள் என்று சொல்லுவதற்கில்லை. அன்னாரின் வைதிக மதப் பற்றே அதற்குக் காரணமாக இருக்க வேண்டும். காரணம் எதுவாயினும், தமிழருடைய நெஞ்சங்களிலே வடமொழி மீது வஞ்சம் வளர்வதற்கும் ‘தனித்தமிழ்’க் கிளர்ச்சித் தோன்றுவதற்கும் ‘மணிப்பிரவாள மொழியே காரணமானதை மறைப்பதற்கில்லை’. (தமிழும் கலப்படமும் - பக்.20-21).

மணிப்பிரவாளமொழியின் தோற்றம் பற்றி ‘பரிதிமாற் கலைஞர்’ வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரியாரின் பின்வரும் கருத்தையும் ம.பொ.சி. தமது முற்கூறிய விளக்கத்தில் எடுத்தாண்டுள்ளார்.

“சைனர், ஆரியரது ஆசாரங்களுட்பலவற்றை மேற்கொண்டனர்.... வடமொழியின் பாதகங்களையும் அவற்றினிலக்கணங்களையும் நன்குணர்ந்து கொண்டனர். இத்தகைய சைனப் புலவர்கள் தமிழ்மொழியையும் அப்பியசிக்கப் புகுந்து, தமிழின் கண்ணே அளவிறந்த வடசொற்களையேற்றினர். அத்துணையோடமையாது, ‘மணிப்பிரவாளம்’ என்றதோர் புதிய பாஷையை வகுத்துவிட்டனர். அஃதாவது தென்மொழியும் வடமொழியும் சரிக்குச் சரி கலந்த பாஷையாம். மணியும் பவளமும் கலந்து கோத்ததோர் மாலை காட்சிக்கின்பம் பயத்தல்போல, தமிழுஞ் சமஸ்கிருதமுஞ் கலந்த பாஷை கேள்விக்கின்பம் பயக்கும் போலி எண்ணமே இத்தகைய ஆபாச பாஷையொன்று வகுக்குமாறு தூண்டிற்று. ‘ஸ்ரீபுராணம்’ என்னும் சைனநூல் முழுவதும் மணிப்பிரவாளமென்னும் இவ்வாபாச நடையின் இயன்றதாமாறு காண்க... மற்றொருபுறத்தில் ஆரியப் புலவர் சிலர் தமிழ்மொழியை அப்பியசித்துக் கொண்டு, நீதி மார்க்கத்தையும் சமய சாஸ்திரங்களையும், தமிழுக்குப் போதிப்போமெனப் புகுந்து, தமது கருத்துக்களையெல்லாம் மேற்கூறிய மணிப்பிரவாள பாஷையில் வெளிப்படுத்துரைப்பாராயினர்.”

‘மணிப்பிரவாளமொழியை’, ‘ஆபாச பாஷை’யென்றும், ‘ஆபாசநடையென்றும்’ வருணித்த சாஸ்திரியாரைப் பற்றி ம.பொ.சி. முற்கூறிய மேற்கோளைத் தொடர்ந்து கூறியதாவது:

“இவர் வடமொழியிடம் காழ்ப்பற்றவர். தேவைப்படுமிடத்து, வடமொழிச் சொற்கள் இலக்கண வரம்புகளுக்கு உட்பட்டு தம் தாய்மொழியில் கலப்பதை வரவேற்பவர் என்றாலும், தமிழின் தனித்தன்மையை அழிக்க முயன்ற கலப்படங்களின் நாசவேலையை அவர் வெறுத்தார்.”

## ‘தனித்தமிழ்ச் சிக்கல்’

தனித்தமிழ்க் கொள்கையில் ஆங்கிலமொழி ஆதிக்கத்திற்குக் காட்டப் பெற்ற எதிர்ப்புப் போன்று சமஸ்கிருதமொழி ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு காட்டப்படாதப் போக்கைக் குறித்து ம.பொ.சி. ‘விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு’ எனும் நூலில், ‘தனித்தமிழ்ச் சிக்கல்’ எனும் பத்தியில் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

“வ.வே.சு.ஐயர், ‘தனித்தமிழ்’க் கொள்கையைக் கொண்டிருந்தா ரென்றாலும், அவர் எழுதிய உரைநடையிலே வடமொழிச் சொற்கள் மிகுதியும் கலந்திருக்கக் காண்கிறோம்....

“பரிதிமாற் கலைஞர், மறைமலையடிகள் போன்ற பெரும் புலவர்கள், பண்டிதர்களானோர் படிப்பதற்காக அவர்கள் ஈடுபட்டிருந்த மொழித்துறை பற்றியே அந்நாளில் நூற்கள் இயற்றினர். சாதாரணப் பொதுமக்களோடு அவர்கள் எந்த வகையில் தொடர்புக் கொண்டவர்களாக இருக்கவில்லை. ஆகவே, வடமொழிச் சொல் கலவாத தனித்தமிழில் எழுதுவதைக் கொள்கையாகக் கொண்டிருந்தனர். அதனால் நாட்டுக்கு நஷ்டம் எதுவும் ஏற்படவில்லை. ஆனால், வ.வே.சு ஐயர், பாரதியார், சுப்பிரமணிய சிவம் ஆகிய தேசியத் தலைவர்கள் நிலை இதற்கு முற்றிலும் வேறுபட்டதாகும். அவர்கள் சாதாரணப் பொதுமக்களோடு தொடர்பு கொண்டு, அவர்களிடையே தேசபக்தி – ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சியைப் பரப்புவதற்காகப் பத்திரிகை நடத்தினார்கள், நூல் எழுதினார்கள். ஆகவே வழக்கில் வந்துவிட்ட வடமொழிச் சொற்கள் கலவாத, ‘தனித்தமிழ்’ல் எழுதுவதையோ, பேசுவதையோ அவர்கள் விரும்புவதற்கில்லை. அதனால், அவர்களுடைய ‘தனித்தமிழ்’க் கொள்கை ஆங்கில ஆதிக்கத்திற்கு மட்டுமே எதிராக இருந்தது இயற்கை – எதிர்பார்க்க வேண்டியதுமாகும்....

“பொதுமக்களோடு தொடர்பு கொள்ள விரும்பும் எவரும் தூயதமிழ் வைதிகத்தைக் கடைப்பிடிப்பது சாத்தியமில்லை. தமிழ் வளர்ச்சிக்குக்கூட அது தேவைப்படவில்லை. தனித்தமிழ் உணர்ச்சியையும் ஒருவகையில் வரவேற்கலாம். ஆனால், அது பழகு தமிழுக்குப் பகையாகிவிடக்கூடாது.”

## தமிழும் கலப்படமும்

தமிழில் பிறமொழிக் கலப்புப் பற்றிக் குறிப்பாகச் சமஸ்கிருத மொழிக் கலப்புப் பற்றித் தனிக்கவனம் செலுத்தி ம.பொ.சி.யின் இரு நூல்கள் வெளிவந்துள்ளன. முதலாவது, 'தமிழும் கலப்படமும்' (1960), இரண்டாவது 'தமிழும் சமஸ்கிருதமும்' (1984) என்பனவாகும்.

'தமிழும் கலப்படமும்' எழுதப்பட்டதற்கான காரணத்தைத் தமிழும் சமஸ்கிருதமும் என்ற நூலின் முன்னுரையில் ம.பொ.சி., பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"இந்தியாவில் புராதன மொழிகளான தமிழ் - சமஸ்கிருத மொழிகளிடையில் பூசல்கள் நீடிப்பதானது, இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கேடிழைத்து வருகிறது. ஆகவே, தமிழ் சமஸ்கிருத மொழிகளைப் பற்றித் தமிழரிடையே நிலவிவரும் தவறான எண்ணங்களைப் போக்குவதற்கான நூல் ஒன்றை எழுதித் தமிழர் கைகளிலே தரவேண்டுமென்ற எண்ணம் எனக்கு நீண்டகாலமாக இருந்துவந்தது. அதன் விளைவாக, 1960இல் 'தமிழும் கலப்படமும்' என்னும் நூலை எழுதி வெளியிட்டேன்.

இந்த நூலின் 'கலப்பு' என்பது வேறு; 'கலப்படம்' என்பது வேறு என்பதை பின்வருமாறு தெளிவுறுத்தியுள்ளார்.

"கலப்பு வேறு; கலப்படம் வேறு. கலக்கப்படும் பொருளின் அசல்தன்மையை அழிப்பது கலப்படம் அதுபோலவே, தமிழின் தனித்தன்மையை அழிக்கும் வகையிலோ அல்லது அந்த மொழிக்கே உரிய அழகைக் குறிக்கும் வகையிலோ பிறமொழிச் சொற்களைத் திணிப்பது கலப்படம்தான். அந்தக் கலப்படத்திற்கு நான் எதிரி. ஆனால், தமிழின் வளர்ச்சியைக் கருதி, தமிழ் மக்களின் வாழ்க்கை நலனை ஒட்டி, தமிழின் தனித்தன்மையையும் அழகையும் கெடுக்காமல்,பிறமொழிச் சொற்களை வரவேற்பதில் தவறில்லை; வரவேற்கவும் வேண்டும்."

## தமிழும் சமஸ்கிருதமும்

தமிழ் - சமஸ்கிருத உறவைப் பற்றியத் தமது கருத்தை விளக்க 'தமிழும் கலப்படமும்' எனும் நூல் 'போதுமானதல்ல' எனக்கருதி, 'தமிழும் சமஸ்கிருதமும்' எனும் நூலையும் எழுதியதாக முன்னுரையில் ம.பொ.சி. கூறியுள்ளார். தமிழ் - சமஸ்கிருத உறவு எவ்வாறு பேணப்பட வேண்டும் என்பதைப் பற்றி இந்நூலில் ம.பொ.சி. பின்வருமாறு விளக்கியுள்ளார். "சமஸ்கிருதமொழியில் புலமையுடையவர்களிலே சிலர் புலமை இல்லாமலேயே கூட, அம்மொழியிடத்துப் பற்றுக் கொண்டவர்களாக வெளிக்குக் காட்டிக் கொள்பவர்கள் சமஸ்கிருதம் ஒன்றுதான் தெய்வமொழி என்றும், தமிழ் உள்ளிட்ட மற்ற மொழிகள்

எல்லாம் மானுடமொழிகள் என்றும் கூறி, தமிழ்ப் புலவர்களுக்குப் புலமையில்லாவிட்டாலும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு - வருத்தத்தை ஏற்படுத்துகின்றனர். மனதைப் புண்படுத்துகின்றனர் என்றும் சொல்லலாம். இது, தேவையற்ற வாதம்.

"சமஸ்கிருதத்தை தேவமொழியாக ஏற்கும்போது நம் தாய்மொழியான தமிழை வெறும் மானுட மொழிதான் என்று வாதிடுபவரை மறப்பதோ, மன்னிப்பதோ சாத்தியமில்லை.... சமஸ்கிருதத்தில் பற்றுடையவர்களுக்கும் தமிழ் தாய்மொழியாக இருக்குமானால், அத்தகையவர்கள் தமிழைத் தாழ்த்தி சமஸ்கிருதத்தை உயர்த்த முயல்வது முறையோ நெறியோ ஆகாது. அதுபோல, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் மதத்தால் இந்துக்களாக இருப்பார்களானால், அவர்களுக்கு இந்துமதத்தில் பற்றும் இருந்து விடுமானால், அத்தகையவர்கள் தங்கள் வேத மொழியான சமஸ்கிருதத்தை வெறுப்பது முறையோ, நெறியோ ஆகாது."

## மதமும் மொழியும்

தமிழ்மொழியில் 'கலப்பு - கலப்படம்' பற்றிய ஆய்வில் 'மதமும் மொழியும்' எனும் நோக்கிலும் ம.பொ.சி. தமது கருத்துக்களைக் கூறியுள்ளார். இதில் ஒரு பகுதி வருமாறு :

"பேசும் மொழி வழிபட்ட இனம் வேறு; தெய்வ நெறி வழிப்பட்ட மதம் வேறு. ஒவ்வொரு மதமும் பல்வேறு மொழிகளைப் பேசும் வெவ்வேறு இனங்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கின்றன. அதனால், மத வழிப்பட பொதுமொழி ஒன்றையும், ஒவ்வொரு மதமும் பெற்றிருக்கின்றது. இஸ்லாமியருக்கு அரபும், கிறிஸ்துவருக்கு லத்தீனும் மதமொழிகளாக உள்ளது போல, இந்துக்களுக்குச் சமஸ்கிருதம் மதமொழியாக இருக்கிறது. இந்த உண்மையைத் தனித்தமிழ்க் கட்சியார் மறந்துவிடுகின்றனர்."

"இஸ்லாமியத் தமிழர்களால் இயற்றப்படும் சமய நூல்களில் அரபுச் சொற்கள் கலப்பது போலவும், கிறிஸ்துவத் தமிழர்களிடையே லத்தீன் அல்லது ஆங்கிலச் சொற்கள் வழங்கப்படுவதுபோலவும், இந்துத் தமிழரிடையே தோன்றும் சமயநூல்களில் வடமொழிச் சொற்கள் கலந்து விடுகின்றன. மதத்தில் ஆழ்ந்தப் பற்றுடையவர்கள் இதைக் குற்ற மாகவோ அல்லது குறையாகவோ கருதாதது இயற்கை. தனித்தமிழ்க் கட்சியின் தலைவர் எனப்படும் மறைமலையடிகளார்கூட சமய சம்பந்த மான கலைச் சொற்களை வடமொழியிலுள்ளபடியோ அல்லது தமிழ் இலக்கண வழியில் திருத்தியோ கையாண்டுள்ளது கவனிக்கத்தக்கதாகும்

"பொதுவாக, தமிழகத்தைத் தாயகமாகக் கொண்டு வாழும் தமிழர்களாயுள்ள இந்துப் புரோகிதர்களோ, இஸ்லாமிய மௌல்விகளோ,

கிறிஸ்துவப் பாதிரிகளோ, தமிழை வெறுப்பவர்களல்லர். அவர்களுள் தமிழின் வளர்ச்சிக்குப் பணியாற்றியுள்ள அறிஞர் பெரு மக்கள் பலருளர். அவர்கள் சமஸ்கிருதம், அரபு, லத்தீன் ஆகிய மொழிகளில் உள்ள வேத, ஆகம நூல்களிடம் பற்றும் பக்தியும் வைத்திருப்பதற்குக் காரணம், அவை சமயநூல்கள் என்பதேயாகும். மற்றபடி தமிழின்பால் உள்ள வெறுப்போ, தாங்கள் தமிழரல்லர் என்ற உணர்வோ காரணமன்று.''

## வள்ளலார் வழியில்

வள்ளலார் வழியில் மதமும் மொழியும் எனும் கண்ணோட்டத்தில் சமஸ்கிருதம் - தமிழ் உறவு குறித்து ம.பொ.சி. ஆய்வு செய்துள்ளார்.

“ஆன்ம ஞானக் கல்வி முழுவதையும் தமிழின் வாயிலாகவே பயில முடியுமென அடிகள் நம்பினாலும், தத்துவ உலகில் பல்வேறு மொழியினரையும் பிணைக்கும் கலாச்சாரப் பொதுமொழியாக சமஸ்கிருத மொழியை அவர் ஏற்றுக் கொண்டார்'' என்பது ம.பொ.சி. கருத்து.

வடமொழியுடன் ஒப்பிட்டுத் தமிழ்மொழியின் சிறப்புகளைக் கூறும் வள்ளலாரின் பின்வரும் கருத்துக்களையும் ம.பொ.சி. எடுத்தாண்டுள்ளார்.

“ஆரியர், மகாராட்டிரம், ஆந்திரம் என்ற பற்பல பாஷைகளைப் போலாகாமல், பெரும்பாலும் கற்பதற்கும் எண்ணளவு சுருக்கமாயும் ஒலியிலே சாயும் கூட்டெனும் சந்தி அதி சுலபமாயும் எழுதவும் கவி செய்யவும் மிக நேர்மையாயும், அக்ஷர ஆரவாரம் சொல்லாடம்பரம் முதலிய பெண்மை அலங்காரமின்றி எப்பாஷையின் சந்தசுகளையும்தன் பாஷையுள்ளடக்கி ஆளுகையால் ஆண்தன்மையைப் பொருத்தியதுமான தற்பாஷைக்கே அமைவுற்ற ழ், ற், ன் என்னும் முடி நடு அடி சிறப்பிய லக்கரங்களில் முடி நிலை இன்பாநுபவ சுத்தமோனாதீதத்தைச் சுட்டறச் சுட்டும் இயற்கையுண்மை தனித்தலைமை பெருமைச் சிறப்பியலொலியாம்.''

“அடிகளார் வடமொழியைப் பயின்றிருந்தார் எனினும் அவருடைய இதயக்கோயிலில் இடம் பெற்றிருந்தது தமிழ்மொழி ஒன்றுதான்'' என்றுசுட்டிக் காட்டியுள்ளார் ம.பொ.சி. “தமிழ்ப் பாஷையே அதிசுலபமாகச் சுத்த சிவானுபூதியைக் கொடுக்குமென்பதாம்'' எனும் வள்ளலார் வாய்மையுரையையும் ம.பொ.சி. எடுத்துரைத்துள்ளார்.

“சமஸ்கிருத மொழியிடத்துள்ள குறைபாடுகளை அடிகள் எடுத்துக்காட்டியது, சமத்துவத்திலும், சமய-சமுதாய சீர்திருத்தங்களிலும் அவருக்கிருந்த ஆர்வத்தினாலாகும்'' என்று பலவாறுகூறிய ம.பொ.சி. “மொழி வழிப்பட்ட பூசலையோ, போராட்டத்தையோ அவர் அங்கீகரிக்கவில்லை. அவ்வகையில் சமஸ்கிருத மொழித் துவேஷம்

அடிகளுக்கு உடன்பாடன்று. அது ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்குத் தடையென்றே அவர் கருதினார்.'' என்றும் ம.பொ.சி. சுட்டிக்காட்டியதும் கவனிக்கத்தக்கதாகும்.

வடமொழி தாய்மொழியானால், (மாத்ருபாஷையானால்), தமிழ் தந்தை மொழி (பித்ரு பாஷை) என்று கூறி வள்ளலார், "உயர் ஆரியத்திற்கு நிகரான மொழியாகத் தமிழை நிலைநிறுத்தியுள்ளது போற்றத்தக்கதாகும்'' என்பதும் ம.பொ.சி.யின் ஆய்வுரையாகும்.

## அருச்சனை மொழி

மதமும்மொழியும் எனும் பார்வையில் ஆலயங்களில் அருச்சனை மொழி எதுவாக இருக்க வேண்டும் எனும் கருத்தும் முக்கிய இடம் பெறுகின்றது ம.பொ.சி., இது குறித்து பேசியும் எழுதியும் வந்துள்ளார்.

'சமயப் புரட்சி' எனும் கட்டுரையில் (1949) அருச்சனை மொழியாக வடமொழி 'ஆதிக்கம்' செலுத்தியதைச் சீற்றமுடன் சாடியுள்ளார், ம.பொ.சி. இதில் ஒரு பகுதி, வருமாறு :

"காட்டிலே மறைக்கதவம் திறந்தது எங்கள் கன்னித்தமிழ்; எலும்பைப் பெண்ணுருவாக்கியது எங்கள் இன்பத் தமிழ்; முதலையுண்ட பாலனையழைத்தது எங்கள் முத்தமிழ்'' என்றெல்லாம் கன்னித்தமிழுக்குக் கடவுள் தன்மை கூறாத புலவர் இல்லை. ஆனால், இவ்வளவு பெருமையுள்ள தமிழுக்கு ஆலயத்தில் வாழ உரிமை இருக்கின்றதா?அதுதான் இல்லை. தமிழகத்திற்குவந்தமொழியான வடமொழிக்குள்ள உரிமை நம் சொந்தமொழியான செந்தமிழுக்கு இல்லையென்றால் இதைவிட அவமானம் நமக்கு வேறென்ன வேண்டும்..... பெருவாரியான தமிழர்களிடையே வடமொழி மோகம் விட்டபாடில்லை.... உலகத்திலேயே மிகப்புராதன கால நாகரீகத்தைப் படைத்த நமக்கு, இடையே வந்த மொழிதான் கடவுள் வழிபாட்டு மொழியாக இருக்க முடியும். இருக்க வேண்டும் என்று நம்புவது எவ்வளவு அறியாமை!"

அருச்சனை மொழி பற்றிய ம.பொ.சி.யின் தீவிரமான வடமொழி எதிர்ப்புணர்வு, 'தமிழும்கலப்படமும்' (1960); 'தமிழும் சமஸ்கிருதமும் (1984)' எனும் நூல்களில் 'சமாதான சக வாழ்வு' நோக்குணர்வாகச் சற்று தணிந்துள்ளதை அறிகிறோம்.

'தமிழும் கலப்படமும்' எனும் நூலில் 'தமிழில் அருச்சனை' எனும் பகுதியில் ம.பொ.சி. கூறியதாவது :

"ஆலயங்களில் அருச்சனை தமிழில் நடைபெற வேண்டுமென்ற கோரிக்கை நமக்கு உடன்பாடே. ஆனால், இங்கு ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இது முற்றிலும் சமயத்தொடர்புடைய

பிரச்னை.ஆட்சிமொழி, போதனா மொழிப் பிரச்சினை போன்று தமிழ் இனத்தவர் எல்லோருக்குமுரிய சமூகப் பிரச்சினையன்று. ஆகவே, சமய நம்பிக்கையற்றோரும், ஆலய வழிபாட்டைக் கடமையாகக் கொள்ளாதோரும் இந்தப் பிரச்சினையில் கலந்து கொள்வது 'சிவ பூசையிற் கரடி புகுந்தது' என்பார்களே, அது போலத்தான். சமயத்தில் நம்பிக்கை உடையவர்கள் மட்டுமே. இந்தப் பிரச்சினையில் கலந்து கொள்ளும்போதும் வடமொழிக் காழ்ப்புக்கு இரையாகக்கூடாது."

'தமிழும் சமஸ்கிருதமும்' எனும் நூலில் 'அருச்சனை மொழி' பற்றிய தமது கருத்தை ம.பொ.சி. மேலும் பின்வருமாறு விளக்கியுள்ளார்

"தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் வழிபாடு தமிழில் நடைபெறவேண்டும் என்பது சமஸ்கிருத துவேஷத்திலிருந்து பிறந்த கோரிக்கையல்ல. இது, தமிழ் - சமஸ்கிருத மொழிகளிடையிலான பிரச்சினை போலத் தோன்றினாலும், உண்மையில் பக்திநெறி சம்பந்தப்பட்ட சமயப் பிரச்சினையேயாகும்.

"சமஸ்கிருதம் இந்துக்களின் பொதுமொழியாக இருப்பதன் காரணமாக,இம்மொழியில் 'பீஜ மந்திரம்' என்று சொல்லப்படுகிறதே அதை மட்டும் திருக்கோயில்களில் அர்ச்சகர் பயன்படுத்தலாம். அதில் தவறில்லை. சமஸ்கிருத அர்ச்சனையை விரும்புவோர்க்கும் தடை சொல்லத் தேவையில்லை. இது இந்து மதத்தவரின் ஒருமைப்பாட்டுக்கும் உதவி புரியும்." (தமிழும் சமஸ்கிருதமும் - ப 43).

## ஆங்கிலமொழி ஆதிக்க எதிர்ப்பில்....

பிறமொழிப் பகைமையை எருவாகப் பயன்படுத்திக் கொள்ளாத தமிழ்ப் பற்றுடைய ம.பொ.சி. 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' எனும் முழக்கத்திற்கிணங்க ஆங்கில மொழி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தை தமிழரசு இயக்கப் போராட்டங்களில் தலைமைப் பண்புப் பெற நடத்தியவர் ம.பொ.சி.

"மண்ணாசை, பொன்னாசை,பெண்ணாசையைவிடவும் மிகவும் மோசமானதாக வளர்ந்திருக்கிறது ஆங்கில ஆசை" என்பார் ம.பொ.சி. ('செங்கோல்', 13.5.1965).

மொழியுணர்வு, இனவுணர்வு இரண்டையும் இந்திய ஒருமைப்பாட்டிற்கு எதிராகப் பயன்படுத்துவதை வன்மையாக எதிர்த்துப் போராடிய ம.பொ.சி. அவ்விருவுணர்வுகளும் ஆங்கிலமொழி ஆதிக்க எதிர்ப்பிற்குத் தமிழகத்தில் பயன்படுத்தப்படாமல் இருந்தச் சூழலில் 'தமிழா, ஆங்கிலமா!' எனும் கேள்வியை எழுப்பினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எப்பொழுதும் தாம் தொடங்கும் எந்த ஓர் இயக்கத்திற்கும் உறுதுணையாகப் பிரச்சார நூல்களைப் படைப்பதை வழக்கமாகக் கொண்ட ம.பொ.சி. ஆங்கில ஆதிக்க எதிர்ப்பியக்கத்திற்குப் பின்வரும் எட்டு நூல்களைப் போர் கலன்களாகப் படைத்தளித்துள்ளார்.

1. தமிழா ஆங்கிலமா - 1961
2. காந்தியடிகளும் ஆங்கிலமும் - 1961
3. பாரதியும் ஆங்கிலமும் - 1961
4. இன்பத் தமிழா, இந்தி - ஆங்கிலமா? - 1963
5. ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு வரலாறு - 1964
6. மொழிச் சிக்கலும் மாநில சுயாட்சியும் - 1968
7. கல்வி மொழி தமிழா - ஆங்கிலமா? - 1981
8. ஆங்கிலம் வளர்த்த மூடநம்பிக்கை - 1982

தமது ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் பிரச்சாரங்களைக் குறித்து ம.பொ.சி. 'எனது போராட்டம்' நூலில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் போராட்ட காலத்திலே ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து - சிறப்பாக தமிழ் பயிற்சி மொழித் திட்டத்தை விளக்கி - குறிப்பாக, 'இந்தி எதிர்ப்பின் பெயரால், 'என்றென்றும் ஆங்கிலம்', 'எங்கெங்கும் ஆங்கிலம்' என்று எழுப்பப் பெற்ற கோஷங்களால் நாட்டுக்கும் தமிழ்மொழிக்கும் விளையக்கூடிய கேடுகளை விமர்சித்து ஒன்றன்பின் ஒன்றாக ஆறுநூல்களை வெளியிட்டேன்.... இவையன்றி, படித்தவர்களின் பறங்கி மொழி மோகத்தைக் கண்டித்து பாரதியார் எழுதியுள்ளவற்றைச் சிறுசிறு சுவரொட்டிகளாகத் தயாரித்து நாடு முழுவதிலும் பரப்பியது, தமிழரசுக் கழகம். ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக் கோஷங்களைச் சிறுசிறு சுவரொட்டிகளாகத் தயாரித்து, அவற்றையும் நாடு முழுவதிலும் பரப்பியது."

இந்தி மொழி ஆதிக்கம் எனும் வெள்ளப் பெருக்கைத் தடுத்து நிறுத்தும் அணையாக விளங்கத்தக்கது ஆங்கிலம் என்று ஆங்கிலமொழி ஆதிக்கவாதிகள் வெளியிட்ட மாயாவாதக் கருத்துக்களை ம.பொ.சி. எதிர்த்துப் போராடியது, வீண் போகவில்லை. ஆங்கில மொழி ஆதிக்கம், இந்தி மொழி ஆதிக்கத்திற்குச் சற்றும் குறைந்ததன்று எனும் விழிப்பு, திராவிட இயக்கச் சிந்தனையில் பரவிட ம.பொ.சி. போராடியது தக்க பயனைத் தந்தது.

# 7. ம.பொ.சி. நோக்கில் தமிழ்ப் பண்பாடு

## சங்ககாலப் பண்பாடு

தமிழ்ப் பண்பாடு குறித்த ம.பொ.சி.யின் கருத்தை 1947இல் வெளிவந்த அவருடைய 'தமிழன்குரல்' எனும் நூலில் பின்வருமாறு அறிகின்றோம்.

"தனித்தேசிய இனத்துக்குத் தனித்த பண்பாடும் இருக்க வேண்டும். தமிழருக்கு அத்தகையப் பண்பாடு உண்டு. ஆனால், பொய்யும் வழுவும் புகுந்த காலத்தில் பிறநாட்டார் எழுதி வைத்த அல்லது எழுதச் செய்த ஏடுகளைப் புரட்டிப் பார்க்காமல், சங்க காலத்தில் தோன்றிய திருக்குறள், புறநானூறு, அகநானூறு போன்ற தமிழ் நூல்களை ஆராய்ந்து பார்த்தால், அவற்றில் காணப்படும் பண்பாடு தமிழினத்திற்கே உரிய தனிப் பண்பாடு என்பதை எவரும் ஏற்பர்."

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் கூறப்பெற்றுள்ள,

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை"

நெறியை ம.பொ.சி. தமிழருக்கே உரிய இன ஒழுக்கமாகவும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஐந்திணை ஒழுக்கம் தமிழுக்கே -தமிழருக்கேவுரிய இன ஒழுக்கமாகும். வடநூலார், வாழ்க்கை நெறிகளைக் கூறுமிடத்து, அறம்-பொருள்-இன்பம்-வீடு என்றனர். இவற்றிலே முதல் மூன்றை மட்டுமே தமிழர் வாழ்க்கை நெறியாகக் காட்டுகின்றது தொல்காப்பியம். சிலப்பதிகாரக் காலம் வரை தோன்றிய இலக்கியங்களும் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று நெறிகளை மட்டுமே கூறிவந்தன." ('சமயங்கள் வளர்த்த தமிழ்' - சிலம்புச் செல்வரின் பல்கலைப் பேருரை - 1984 - ப.109).

சங்க இலக்கியப் பண்பாடு,காலகதியில் கலை-சமயக் கலப்புகளால் மேலும் விரிவடைந்ததையும் ம.பொ.சி. சுட்டிக் காட்டியுள்ளார்.

"தமிழருடைய கலாச்சாரத்தைச் சங்க இலக்கியங்களில் காண முடியும். சமய இலக்கியங்களில் காணமுடியாது என்று சிலர்

பேசுகின்றனர். இது தவறு. சங்ககாலத் தமிழர் பிறப்புவழி சாதிகளாகப் பிளவுபடவில்லை பிணங்கி நிற்கும் சமயங்களாகப் பிரிந்து நிற்கவில்லை. அவர்கள், உருவங்களால் ஒரு கோடியாயினும் உள்ளத்தால் ஒருவராகவே வாழ்ந்தனர். எனவே, சங்ககாலத் தமிழருடைய கலாச்சாரத்தை ஒரே எண்ணத்தில் காண முடிகிறது. பிற்காலத் தமிழர்கள் பிறப்புவழி சாதிகளாக, பேதப்பட்ட சமயங்களாகப் பிளவுபட்டனர். ஆகவே, தமிழருடைய கலாச்சாரமும் பல வண்ணங்களிலும் வடிவங்களிலும் காட்சி அளிக்கின்றது.'' ('தமிழர் கலாச்சாரம்' 'செங்கோல்' - 31.10 1954).

## இன-மத கலப்புகளும் தமிழர் பண்பாடும்

'இலக்கியங்களிலே இன சமயக் கலப்புகள்' எனும் நூலில் (1985), இன-சமயக் கலப்புகளால் தமிழர் பண்பாடு அழியவில்லை எனும் தமது ஆய்வைப் பின்வருமாறு ம.பொ.சி. வெளிப்படுத்தியுள்ளார்.

''இனக்கலப்பும் மதக்கலப்பும் ஏற்பட்ட சமய சகாப்தத்திலே தமிழருடைய பண்பாடு அழிந்தொழிந்தவிட்டதென்று இலக்கிய ஆய்வாளர்களிலேயும் சிலர் கருதுகின்றனர். இது முற்றிலும் தவறு. சைவ சாத்திரங்களிலே தலைசிறந்ததான திருமந்திரத்திலே, 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்கிறார் திருமூலர். இதனை, சமயவாதிகளேயன்றிப் பகுத்தறிவாளரும் தங்களுடையதாக்கிக் கொண்டு விட்டார்களே!

''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்றார் சங்ககாலப் புலவரான கணியன்பூங்குன்றனார். அதைத்தான் திருமூலரும் சொல்லியிருக்கிறார்.

''சாத்திரமும் தோத்திரமும் பேசித் தமிழர் சமுதாயத்தைப் பிளவுபடுத்துவோரைப் பார்த்து,

'சாத்திரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்''

என்று கேட்கிறார், சைவ சமய குரவர்களிலொருவரான அப்பரடிகள்.

''முற்போக்குக்கும் பிற்போக்குக்குமான போராட்டம் சங்ககாலத்திலும் நடந்திருக்கிறது; சமய சகாப்தத்திலும் நடந்திருக்கிறது.

''வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பாலொருவன் கற்பின்
மேற்பா லொருவனும்
அவன்கண் படுமே'' –

இது சங்க காலத்திலும் நால்வருணத்தினரிடையே ஏற்றத்தாழ்வு நிலவியதை எதிர்த்துப் பாடியதல்லவா!

"சமய சகாப்தத்தின் தொடக்க காலத்தில் தோன்றிய சிலப்பதிகாரம் சமய வேறுபாடுகளை எதிர்ப்பின்றி ஏற்கின்றதென்றாலும், அவற்றிடையே ஒருமைப்பாட்டிற்கு அடித்தளமிட்ட முதல் தமிழ் இலக்கியம் சிலம்பு தானே. இந்தக் காப்பியம் இனக்கலப்புக்கும் மதக்கலப்புக்கும் பின்னர் தோன்றியதுதானே!

"சங்க காலத்தவராகக் கருதப்படும் திருவள்ளுவர் படைத்தருளிய திருக்குறளிலும்,

**'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்வொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்"**

என்று சொல்லப்பட்டுள்ளது. இது, திருவள்ளுவர் காலத்திலும் ஏற்றத்தாழ்வோடு கூடிய சாதிப் பாகுபாடு நிலவியதனை நினைப்பூட்டுகின்றதல்லவா!"

சமய சகாப்தம், தொல்காப்பியம்,சங்க இலக்கியங்கள் மரபின் வளர்ச்சியில் தோன்றியவை என்பதை விளக்கி ம.பொ.சி. மேலும் கூறியதாவது :

"தமிழருக்கேயுரிய சங்ககாலத்து இலக்கிய மரபுகளும், வாழ்க்கை நெறிகளும், ஆரியமொழியும் மரபும் தமிழில் கலந்த சமய சகாப்தத்திலே திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டனவென்பது தவறாகும்.

"தமிழ்ப்பற்றும், தமிழினப் பற்றும் சமய சகாப்தத்திலே புறக்கணிக்கப்பட்டு மூடநம்பிக்கைகள் நிரம்பிய சமயவாதமே தமிழர்மீது ஆதிக்கம்செலுத்தியது என்பது இலக்கிய ஆய்வாளர்கள் சிலருடைய வாதம். இதுவும் தவறு.

"இனக்கலப்பும் மதக்கலப்பும் ஏற்பட்ட சமய சகாப்தத்திலே தமிழருடைய பண்பாடு அழிந்தொழிந்து விட்டது என்று இலக்கிய ஆய்வாளர்களிலேயும் சிலர் கருதுகின்றனர். இது முற்றிலும் தவறு."

## தமிழர் கலாச்சாரம்

'தமிழர் கலாச்சாரம்' என்ற தலைப்பிலேயே ம.பொ.சி. 31.10.1954இல் 'செங்கோல்' இதழில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இதில் கூறப் பெற்றுள்ள சில கருத்துக்கள், பின்வருவன :

"ஆரிய மதம், வேங்கடத்திற்குத்தெற்கே தனது தனித் தன்மையை இழந்து, தமிழ்ப் பண்பு வழியும், தமிழருடைய பழக்க வழக்கப்படியும் திரிந்துவிட்டதை எவரும் தெரிந்து கொள்ள முடியும். அப்படித் தமிழ்ப் பண்பு வழி திருந்த மறுத்ததால்தான் சமணமும் பௌத்தமும் ஆரியமதத்துக்கு எதிராகத் தமிழகத்தில் வாழ முடியவில்லை.

"வேங்கடத்துக்குத் தெற்கே புகுந்த புறச்சமயக் கருத்துக்கள்,

கதைகள் எதையும் தமிழர்கள் ஏற்க மறுத்து எதிர்த்துப் போராடியதில்லை. அவற்றைத் தமிழ் வழிப்படுத்தி தங்களுக்கே உரியதாக்கிக் கொண்டனர். குறிப்பாக, ஆரிய மதப் பண்புகளைக் கூறும் ராமாயணம், பாரதம் போன்ற மாபெரும் காப்பியங்களைத் தமிழர்கள் விரும்பி ஏற்றனர். வெறுத்து ஒதுக்கவில்லை. ஆனால், அவற்றை மூலமொழியில் ஏற்க மறுத்து, மொழி பெயர்ப்பின் வடிவில் வரவேற்று வாழ்வளித்தனர் தமிழில் பெயர்த்ததோடு நிற்காமல், அக்காப்பியங்கள் கூறும் பண்பாட்டினைத் தமிழ் வடிவிலும் திருத்திக் கொண்டனர்.

"சமய வேற்றுமைகளையெல்லாம் விரோதங்களாக வளர்த்துக் கொள்ளாமல், சர்வசமயங்களையும் சமரசமாகப் பாவிக்கும் பெருமை தமிழருக்கே உரியது. ஆம்; பண்பட்டதமிழ் அதற்குப் பயன்பட்டது.

"'கலாச்சாரம்' என்பதற்குச் சரியான தமிழ்ச் சொல் 'பண்பாடு' என்பதாம். பண்பாடு வேறு; பழக்க வழக்கங்கள் வேறு. ஆகவே, தமிழர் பின்பற்றும் மதங்களிடையே பழக்க வழக்கங்களில் வேறுபாடு இருக்கலாம். ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரை, எல்லா மதங்களையும் சார்ந்த தமிழரிடையே பண்பாடு ஒன்றுபோலத்தான் இருக்கிறது. அதனாற்றான், சமய வேற்றுமைகள் எல்லாம் கொலைக்கும், கொள்ளைக்கும் தூண்டுகின்ற விரோதங்களாக இருக்கவில்லை."

கலாச்சாரம் வேறு; அரசியல் வேறு என்று பிரித்துப் பேசுவது ஏமாற்றுவித்தை. ஒரு இனத்தவர் தங்கள் கலாச்சாரத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால், அரசியல் அதிகாரம் அவர்களிடையே இருக்க வேண்டும்" என்று ம.பொ.சி. கூறியுள்ளார்.

## தமிழ்ப் பண்பாட்டில் கடவுள் நம்பிக்கை

ம.பொ.சி.யின் நோக்கில் தமிழ்ப் பண்பாடு, கடவுள் நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டது. முற்கூறிய 'தமிழர் கலாச்சாரம்' எனும் கட்டுரையில், "கடவுளை நம்பாத, மதத்தை விரும்பாத மக்களுக்கும், கலாச்சாரத்தில் நம்பிக்கை இருக்க முடியாது. இருப்பதாகச் சொன்னால் அது வெறும் பாசாங்கே! அவர்கள் விரும்பும் கலாச்சாரம் பழமையிலிருந்து பிறந்ததாகவோ அல்லது பழமையிலிருந்து திருந்தியதாகவோ இருக்க முடியாது. தங்களுடைய நவீன கோணங்கித்தனங்களுக்குக் 'கலாச்சாரம்' என்று பெயர் வைத்துக் கொண்டிருப்பார்கள். அவ்வளவுதான்."

பண்டைத் தமிழ்ப் பண்பாட்டில் கடவுள் நம்பிக்கையையோ, கடவுட் கொள்கையையோ இல்லையென்று கூறுவது, மாயாவாதம் என்று விமர்சித்து ம.பொ.சி. எழுதியதாவது :

"'தமிழர்' - 'தமிழ்' - 'தமிழ்நாடு' என்று பெயர்களைச் சொல்லி

இயக்கம் நடத்துவோரில் ஒரு சாரார் 'பண்டைத் தமிழருக்குத் தெய்வம்கிடையாது; மதம் கிடையாது; பண்டிகை கிடையாது' என்றெல்லாம் ஒருதலையாகப் பேசியும் எழுதியும் வருகிறார்கள். சுருங்கச் சொன்னால், 'தமிழர்' என்பதற்கு 'நாத்திகர்' என்னும் பொருளை, சொல்லாமல் சொல்லி வருகிறார்கள். இதற்குத் தமிழ் இலக்கியங்களிலிருந்தும் அரைகுறையாக சான்றுகள் காட்டவும் துணிகின்றனர்."

"தமிழ் இலக்கண இலக்கியங்களிலே - குறிப்பாக, தொல்காப்பியத்திலும் தொகை நூற்களிலும் 'கடவுள்' என்னும் சொல்லே கிடையாது என்றும் சொல்லுகின்றனர். இதற்குத் திருக்குறளையும் சான்றுகாட்டுகின்றனர்.

"கட்சி உணர்ச்சிகளையும், வகுப்புத்துவேஷத்தையும் கலந்த நாத்திக உணர்வை வளர்க்க முயல்வதால் இவர்களுடைய பொய்க் கூற்றையும் தமிழரிலே சிலர் நம்பி வருகின்றனர். இளைஞர்களான இலக்கிய ஆய்வாளர்களில் சிலரும் இந்த மாயாவாதத்தில் மயங்கி விடுகின்றனர்.

"'தெய்வம்', 'கடவுள்', 'இறை' என்னும் சொற்களில் எல்லாம் வல்ல பரம் பொருள் சுட்டப்படுவதைத் தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் பரவலாகக் காணமுடிகிறது.

"முதன்முதலில் இறையுணர்வு பிறந்ததே தமிழரிடமிருந்துதான்" என்கிறார் மறைமலையடிகள். சமஸ்கிருதம், தமிழ், ஆங்கில மொழிகளிலே புலமைபெற்று, வேதகாலந்தொட்டுத் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் தோன்றியுள்ள இலக்கியங்களை ஆராய்ந்துணர்ந்தவர் மறைமலைஅடிகள்." (இலக்கியங்களிலே இன சமயக் கலப்புகள் - பக்.69-70).

சமயத்தில் முற்போக்கானக் கொள்கைகளை வலியுறுத்துவோரை வைதிகர்களில் சிலர் 'நாத்திகர்கள்' என முத்திரைக்குத்தி ஒதுக்குவது ம.பொ.சி.க்கு இசைவானதன்று. ஆத்திகத்தின் பெயரால் நடத்தப்படும் சுரண்டல்களையும் ம.பொ.சி. எதிர்த்தார். ஒழுக்க சமயத்தை நிலைநாட்ட வேண்டியதின் அவசியத்தையும் ம.பொ.சி. பின்வருமாறு எடுத்துரைத்துள்ளார்.

"ஆலய வழிபாடு, தமிழிலேயே நடைபெற வேண்டும் எனக் கூறுவதோ, வழிபாட்டுத் தொழிலில் சாதி வேற்றுமை கூடாதென்று வற்புறுத்துவதோ நாத்திகவாதமல்ல; நாட்டில் பரவி வரும் நாத்திகத்தைத் தடுக்கவும்.ஆத்திகத்தின் பெயரால் மக்களைச் சுரண்டிவாழும் கொடுமையை ஒழிக்கவும் அதுவே சரியான வழி.

“சமயத்தில் புகுந்த சதிகளைக் காரணமாகக் கொண்டு ஒழுக்க சமயத்தையும் ஒழித்துவிட வேண்டும் என்ற கிளர்ச்சி வலுத்து வருவதை நான் அறிவேன். அது ஒரு தீமையைத் துணைகொண்டு, இன்னொரு தீமையை வளர்ப்பதாகும்.

“இந்த இரு தீமைகளையும் ஏககாலத்தில் எதிர்த்து ஒழுக்க சமயத்தை நிலைநாட்ட வேண்டியது அவசியம்.” (‘சமயப்புரட்சி’ கட்டுரை - ம.பொ.சி. - திருக்கோயிலும் திருத்தமும், கட்டுரைத் தொகுப்பு - 1949 - ப.26,34).

## சர்வமத சமரசம்

சிலப்பதிகாரம் முதல் பாரதி இலக்கியம் வரையில் பேணப் பெற்று வந்த சர்வமத சமரசக் கோட்பாட்டைப் பற்றி ம.பொ.சி. எடுத்துரைத்துள்ளார்.

“எனக்குள்ள ‘தமிழன்’ என்னும் இனவுணர்ச்சியும், ‘இந்தியன்’ என்னும் சமுதாய உணர்ச்சியும் மதப்பூசல்களிலிருந்து என்னைக் காப்பாற்றி வருகின்றன” என்று ம.பொ.சி. கூறியது சர்வமத சமரசம் பற்றிப்பேச அவருடைய தகுதியை உணர்த்துகின்றது.

இந்து, இஸ்லாம்,கிறித்துவ, சமண மதங்களைச் சார்ந்த பேச்சாளர்கள் கலந்துக் கொண்ட சர்வமதமாநாட்டில் ம.பொ.சி. ‘சர்வமத சமரசம்’ பற்றி பேருரை ஆற்றினார். இந்தச் சர்வமத மாநாடு சர்வோதய சங்கத்தின் சார்பில் 19.12.1976 அன்று ஈரோட்டில் நடைபெற்றது ம.பொ.சி.யின் பேருரையில் ஒரு பகுதி, பின்வருமாறு :

“‘சர்வ மத சமரசம்’ என்று சொல்வதன் பொருள் என்ன? இதனை, நாம் சரியாகப் புரிந்துக் கொள்ள வேண்டும். சிவன், திருமால், அல்லா, கர்த்தர், அருகர், புத்தர் ஆகிய அனைத்துத் தெய்வங்களையும் ஒவ்வொருவரும் வழிபடுவதுதான் சர்வமதசமரசம் என்று நான் கருதவில்லை அது குழப்பத்தைத்தான் ஏற்படுத்தும். அத்தகைய குழப்பத்தால் பக்தி வளராது. இஸ்லாமியர் தங்கள் தெய்வத்தையே துதிக்கலாம் ஆனால், மற்ற மதங்களைச் சார்ந்தவர்கள் துதிக்கும் தெய்வங்களை அவர்கள் மதிக்க வேண்டும். இந்துக்களும் தங்கள் தெய்வத்தைத் துதிக்கலாம். ஆனால், இஸ்லாமிய - கிறித்துவ சகோதரர்கள் வழிபடும் தெய்வங்களை மதிப்பதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். இப்படித் துதிப்பதும் மதிப்பதுமாக இருந்தால் போதும். ஒரு மதத்தாரின் தெய்வத்தை இன்னொரு மதத்தார் பழிக்க வேண்டாம். இதுதான் சர்வமத சமரசத்திற்கு வழி.” (ஆன்மீகமும் அரசியலும் - 1980 - ம.பொ.சி. பக்.129-130).

## வள்ளலார் வழியில்

இதே மாநாட்டில் சர்வமத சமரசத்தில் வள்ளலார் வழியைப் பற்றிப் பின்வருமாறு விளக்கினார்.

"வள்ளலார்கூட மதங்களற்ற மனித சமுதாயத்தைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். ஆனால், அது எளிதில் சாத்தியமாகக் கூடியதில்லை என்பது அவருக்கே தெரிந்திருந்தது. அதனாற்றான், 'மதங்களெல்லாம் பொய் பொய்யே' என்று கூறிய அவரும் சற்று இறங்கிவந்து, 'எம்மதமும் சம்மதம்' என்று கோஷித்தார். மதங்களற்ற மனித சமுதாயத்தைக் காண்பது சாத்தியமில்லையாதலால், அந்த மதங்களிடையே சமரசத்தை ஏற்படுத்தவேனும் முயல வேண்டும் என்று வள்ளலார் கருதினார். அது அவரது குறைந்தபட்ச விருப்பமாக இருந்தது."

## ம.பொ.சி.யின் இந்து மதப்பற்று

சர்வமத சமரசத்தை வலியுறுத்திய ம.பொ.சி. தமது இந்துமதப் பற்றையும் வெளிப்படுத்தியுள்ளார். சர்வமத சமரசத்தை உயிர்மூச்சாகக் கொண்ட காந்தியடிகளும் தம்மை இந்துவாகக் கருதி பெருமை கொண்டவர். அதே காந்தி வழியில் ம.பொ.சி.யும் நின்றார்.

சென்னையில் காஞ்சி ஸ்ரீசங்கர மடத்தின் பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சுவாமிகள் தலைமையில் சென்னையில் 3.3.1976இல் நடைபெற்ற உலக இந்து மாநாட்டில் ம.பொ.சி. உரையாற்றினார். இவ்வுரையில் இனவுணர்வு - மதவுணர்வு இரண்டிற்குமிடையே உள்ள உறவை விளக்கி ம.பொ.சி. பின்வருமாறு பேசினார்.

"நான் 'தமிழன்' என்னும் இனவுணர்வுடையவன். தமிழ் பேசும் எல்லா மக்களுக்கும் இந்த உணர்வு வேண்டுமென்றும் எண்ணுபவன். ஆயினும், தமிழன் என்ற வகையிலே எனக்கு இந்த உலகிலுள்ள உறவினர்கள் சுமார் நாலரைக் கோடி பேர்தான். ஆம்; எனக்குள்ள மொழிப் பற்றும் இனப்பற்றும் நாலரைக்கோடி மக்களோடுதான் என்னை இணைக்கின்றன. அதற்கு மேல் செல்வதற்கு அந்தப் பற்றுகள் எனக்கும் பயன்படவில்லை. நாலரைக்கோடிக்கும் அப்பாலுள்ள மக்களோடு நான் உறவு கொள்ளவேண்டுமா, வேண்டாமா? 'உறவு கொள்ள வேண்டும்' என்றால் அதற்கு ஒரு சாதனம் வேண்டாவா? அந்தச் சாதனம்தான் மதம். அதாவது இந்து மதம். நாம் இந்துவாக இருப்பதால் ஐம்பது கோடிக்கு மேற்பட்ட மக்களோடு உறவு கொள்ள முடிகிறது. என்னைப் பொறுத்தவரையில் இந்த உறவுக்காகத்தான் நான் இந்துவாக இருக்கிறேன். இனியும் அப்படியே இருக்க விரும்புகிறேன்." (ஆன்மீகமும் அரசியலும் ப.73).

## இன-மதமிடையே முரண்பாடுகள்

மகாகவி பாரதியார் 'தமிழன்' எனும் இனவுணர்வுடன் 'இந்தியன்' எனும் தேசிய உணர்வையும் அத்துடன், 'இந்து' எனும் சமயவுணர்வையும் தேவைப்பட்ட இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார். இதிலும் பாரதியைப் பின்பற்றினார் ம.பொ.சி.

"மொழி வழிப்பட்ட இனமும், ஆன்மிக வழிப்பட்ட மதமும் பரஸ்பரம் பகைகொண்டவையல்ல. இனவுணர்ச்சிக்கும் மதவுணர்ச்சிக்கும் நானறிந்தவரை இதுவரை பூசல் ஏற்பட்டதே இல்லை இந்தியாவில் மட்டுமல்ல; உலகம் எங்கணுந்தான். இருவேறு மதங்களிடையே பூசல் ஏற்பட்டிருக்கலாம்; அப்படியே இருவேறு இனங்களிடையே பூசல் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் இனவுணர்வுக்கும் மதவுணர்வுக்குமிடையே பூசல் ஏற்பட்டதாக வரலாறு சொல்லவில்லை. அதற்குக் காரணம், மதமில்லாமல் இனம் இல்லை; இனம் இல்லாமல் மதம் இல்லை என்பதுதான்.

"மொழி வேறுபாடுடைய பல்வேறு தீவுகளாக வாழ்வோரை-யெல்லாம் ஒன்றுபடுத்த ஒரு சாதனம் தேவைப்பட்டது. அந்தச் சாதனம்தான் மதம். இந்த மேடையிலுள்ள இஸ்லாமியரும், கிறித்துவரும், ஜைனரும் ஆகிய நாங்கள் மதத்தால் வேறுபட்டவர்கள் என்றாலும், தமிழ் எங்கள் தாய்மொழியாக இருப்பதால், மொழியால் ஒரே இனத்தவராக நாங்கள் ஒன்றுபட முடிகிறது.

"இதனால் நாம் தெரிந்து கொள்வதென்ன? மதத்தால் வேறுபட்டவர்கள் எல்லாம் மொழியால் ஒருமைப்பாடு எய்த முடிகின்றது என்பதல்லவா? இப்படி மதங்களிடையே ஒருமைப்பாடு காணும் சாதனமாக மொழி பயன்படுவதால்தான் நான் மொழிப் பற்றையும் இனப்பற்றையும் வற்புறுத்தி வருகிறேன்." (ஆன்மீகமும் அரசியலும் - பக்.133-134).

மேற்காணும் விளக்கவுரையை ம.பொ.சி., 'சில எழுத்துக்களில் பலவகைப் பொருள் செறிந்து இனிது' விளக்கும் சூத்திரமாக, பின்வருமாறு, அமைத்துள்ளார்.

"மதம் பிரிக்கின்ற இடத்திலே இனம் பிணைக்கிறது. இனம் பிரிக்கின்ற இடத்திலே மதம் பிணைக்கிறது."

இந்தச் சூத்திரத்தைத் தொடர்ந்து, "உண்மைத் தமிழன் மத உணர்வுக்கு எதிராக இருக்கத் தேவையில்லை. அப்படியே தன் மதத்திலே உண்மையான பற்றுடையவன் தமிழனாக இருக்க மறுக்கமாட்டான். இனத்திற்கும் மதத்திற்குமிடையே முரண்பாடு இருப்பதாக நான் நினைக்கவில்லை" என்று சாற்றியுள்ளார், ம.பொ.சி.

## இந்துக்களின் ஒற்றுமைக்கான குரல்

இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்கும், தமிழினத்தின் ஒற்றுமைக்காகவும் பாடுபட்ட ம.பொ.சி. இந்து மக்களை ஒற்றுமைப்படுத்துவதற்கும் குரல் கொடுத்துள்ளார். இந்தக் குரல் பின்வருமாறு ஒலித்துள்ளது.

"அண்மைக்காலமாக, இந்து மக்களை ஒற்றுமைப்படுத்துவதற்கு என்னாலானதை செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. 'எம்மதமும் சம்மதம்' என்ற வள்ளலார் பெருமானின் உபதேசத்திற்கு ஊறு நேராத வகையிலே இந்து மக்களை ஒற்றுமைப்படுத்த முடியும் என்றே நம்புகிறேன். குறிப்பாக, இளைஞர்களுக்குச் சமய உணர்வு தேவைப்படுவதை என்னால் உணர முடிகிறது.

"இந்துக்களின் ஒற்றுமைக்கு முதலில் தேவைப்படுவது உயர்வு தாழ்வோடுகூடிய சாதி பாகுபாட்டைக் கைவிடுவதேயாகும். அதுபோல, சைவ-வைணவ சமயங்களிடையில் நிலவி வரும் பிணக்கையும் கைவிட்டாக வேண்டும்.

"இஸ்லாமிய - கிறித்துவ சமயங்களை சேர்ந்த தமிழர்களோடு இந்து சமயத்தைப் பின்பற்றும் தமிழர்கள் ஒன்றுபட்டு இந்திய தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்த வேண்டுமானால் அதற்கு முதலில் தேவைப்படுவது இந்து மக்கள் ஒருமைப்படுவதுதான். ஒரு பலவான்தான் மற்றொரு பலவானுடன் சமநிலையில் உறவுகொள்ள முடியும். பலவானுக்கும் பலவீனனுக்குமிடையே சகோதரத்துவம் ஏற்படுவது சாத்தியமில்லை. இதனாற்றான், இந்திய தேசிய ஒருமைப்பாட்டின் அடித்தளமாக இந்து மதத்தினரின் ஒருமைப்பாட்டினைத் தமிழ் இலக்கியங்கள் மூலமாகவே செய்ய முடியும் என்றும் நான் கருதுகிறேன்." (முன்னுரை - கம்பரின் சமயக் கொள்கை - 1983 - ம்.பொ.சி.).

இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்கு - உறுதுணையாக இருப்பது இந்துமதம் எனக் குறிப்பிட்டதோடு அதைக் காப்பதிலும் தமக்குள்ள உறுதிப்பாட்டை ம.பொ.சி. பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்.

"என் இந்திய நாட்டு மதம் - இந்துமதம் அழியக்கூடாது. அழிப்பாருண்டானால், உயிர் கொடுத்தும் காக்க வேண்டும் என்ற ஆர்வம் உங்களைப்போலவே எனக்கும் உண்டு. இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டிற்கு இந்து மதம் பெருமளவுக்குப் பயன்பட்டு வந்திருக்கின்றது. ஆகவே,இந்து மதம் அழியுமானால், இந்தியாவின் ஒருமைப்பாடு நலிந்து போகும் என்று நம்புபவர்களில் நான் ஒருவன்.

"இந்து சமயமானது வேங்கடத்தை வேலியாகக் கொண்டதல்ல; இமயத்தை எல்லையாகக் கொண்டதல்ல: உயர்குலம் அனைத்தையும் தழுவி நிற்கும் உயர்ந்த தத்துவத்தைப் படைத்த உலக மதம் ஆகும்

"சமஸ்கிருத மொழியானது ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வளர்ந்தும் வாழ்ந்தும் வருகிறது. தன்னலமற்ற ஞானியர்களான அனுபூதி மகான்களால் ஐம்புலன்களையும்அடக்கித் தவம்புரிந்த முனிவர்களால் இந்து சமய இலக்கியங்கள் சமஸ்கிருத மொழியில் படைக்கப்பட்டுள்ளன அப்படிப்பட்ட இலக்கியங்களைப் பெற்ற இந்து சமயத்தைச் சார்ந்தவனாக இருப்பதற்கு நான் பெருமைப்படுகிறேன்."

இந்துமதப் பற்றைப் பலவாறாக வெளிப்படுத்திய ம.பொ.சி., சுதந்திர இந்தியாவில் தோன்றிய சமயச் சார்பற்ற அரசையும் தீவிரமாக ஆதரித்து வந்தார். இந்தச் சமயச் சார்பற்ற அரசுத் தத்துவம் காந்தியடிகளின் தலைமையில் நடந்த விடுதலைப் போராட்டத்தின் விளைவுகளில் ஒன்றாகும் என்றும், இதனால் 'அனைத்துச் சமயத்தினரும் ஒன்றுபட்டு வாழ்வதற்கான நல்ல சூழ்நிலை நாட்டில் உருவாகி விட்டது' என்றும் குறிப்பிட்டுள்ளார், ம .பொ.சி.

## சைவ சமயப் பற்று

"என் பெயரைக் கொண்டே நான் சைவன் என்பதை அறிவீர்கள் ஆனால் தோற்றத்தால், தொண்டால் என்னைச் சைவனாக ஏற்கமாட்டீர்கள். 'சைவம்' என்றால் என்ன? புறச்சின்னங்கள் மட்டுமே சைவம் என்று நான் கருதவில்லை. தெய்வம் ஒன்று உண்டு என்று நம்பி, அதனை வழிபடுவதும், உயிர்கள்பால் கருணை காட்டுவதும், 'எல்லா உயிர்களும் இறைவன் படைப்பு' என்று எண்ணுவதும், துன்பம் படுவோர்க்குத் துணையாக இருப்பதும் சைவ நெறிகளென்றால் நான் அசல் சைவனாவேன். இந்த நெறிகளை நம்பி, முடிந்தவரை அவற்றை நடைமுறையிலே கடைப்பிடிக்கும் சைவனாகவும் நான் வாழ்கிறேன்!

இவ்வாறு ம.பொ.சி. தம்மை சைவராக அடையாளம் காட்டியுள்ளார். ('சர்வ சமய உறவு' - சிந்தனை அலைகள். ம.பொ.சிவஞானம் - 1964 - மேகலைப் பதிப்பகம், சென்னை - 35. ப.113).

திருவாசகத்தின் 'சிவபுராணம்' பகுதியை நாள்தோறும் ஓதி வந்தவர் ம.பொ.சி. சைவசமயத்தின் சாத்திர - தோத்திர நூல்களைக் குறித்து அவர் பேருரையாற்றி வந்தார்.

"தமிழ்நாட்டிற்கே உரிய சைவ உணர்வு அழியக்கூடாதென்று விரும்புகின்றவர்களிலே நானும் ஒருவன்" என்று 'செங்கோல்' இதழில் 22.6.1969இல் வெளிவந்த 'பக்தி இலக்கியங்கள்' எனும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார், ம.பொ.சி

'சிவம்', 'சைவம்' பற்றிய தமது விளக்கத்தை ம.பொ.சி. பின்வருமாறு கூறியுள்ளார்.

"'சிவம்' என்பது அனாதியான ஒருபொருள் அதனை நாம் அணுகுவதற்கு ஒரு சாதனமாகத்தான் சைவம் தோன்றியது. ஆம்; சிவம் கர்த்தா; சைவம் கருவி. கருவியைக் கர்த்தாவாக கருதும் மயக்கம் கூடாது. சிவ வழிபாடு அனாதியானது என்பதற்கு நம் தமிழில் உள்ள சங்க இலக்கியங்களே சான்று. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவை என்று கருதப்படுகின்ற எட்டுத்தொகை நூற்கள்; அவற்றிலே ஐந்து நூற்களுக்குக் கடவுள் வாழ்த்து பாடியிருக்கிறார் பாரதம் பாடிய பெருந்தேவனார். அந்த ஐந்திலேயும் அவர் வாழ்த்தும் கடவுள் முழுமுதற்பொருளான சிவம்தான்.

"மகாபாரதம் விஷ்ணுவைத் தலைமையாகக் கொண்ட காப்பியம். அதனைப் பாடிய காரணத்தால் 'பாரதம் பாடியவர்' என்ற சிறப்புப் பெயர் பெற்ற பெருந்தேவனார் எட்டுத்தொகை நூற்களுக்குரிய கடவுள் வாழ்த்திலே சிவபெருமானையே முழுமுதற் கடவுளாகக் கொண்டா ரென்றால், சைவம் தமிழர்களின் மதம் என்பது புலனாகின்றதல்லவா?...

"தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற பரம்பொருளின் பெயர் சிவம், ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லாத முழு முதற் பொருளுக்கு நாம் வைத்த திருநாமம் சிவம். இந்தச் சிவத்தை அடைய நமக்கு வழிகாட்டும் சாதனம் சைவம். வாழையடி வாழையெனத்தோன்றி நமக்கு வழிகாட்டி வந்த சான்றோர்கள் சமயகுரவர்களும் சந்தான குரவர்களும் ஆவர்." ('செங்கோல்' 22.6.1969).

மேலே, 'சைவம் தமிழர்களின் மதம்' என்று ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளதைப் பின்வரும் அவருடைய மற்றொரு கருத்துடன் இணைத்து சிந்திக்க வேண்டும்.

"சைவம் தமிழரிடையே தோன்றிய சமயம் என்றும், தமிழர் எல்லோரும் முன்னொரு காலத்தில் சைவர்களாகவே இருந்தனரென்றும் சொல்லப்படுகின்றன. ஆனால், இன்றைய நிலைமை வேறு பிற்காலத்தில் தமிழரிலே பலர் வேறு சமயங்களைத் தழுவிச் சைவசமயத்திற்கு அயலாராகி விட்டனர். ஆம்; தமிழகத்திலே உள்ள சமண, பௌத்த, இசுலாமிய, கிறித்துவ மக்களிலே மிகப் பெரும்பாலோர் மதம் மாறியவர்களே. மதம் மாறிய பின்னரும், அவர்களெல்லாம் தமிழினத்தவரேயாவர். 'சைவர்' என்ற சொல்லுக்குத் 'தமிழர்' என்று பொருள் சொல்வதற்கில்லை. தமிழ்மொழியும் தமிழ் நிலமும் சைவர் அல்லாதாருக்கும் சொந்தமாகும். இனம் வேறு; மதம் வேறு. இந்த உண்மையைச் சைவ சமயப் பிரசாரகர்கள் மறந்துவிடக்கூடாது."

## சித்தாந்த சாத்திரங்கள் குறித்து ம.பொ.சி.

"எல்லாவற்றையும் அழித்த பின்னரும் தான் அழியாமல் இருப்பது எதுவோ, அது சிவம் என்பார். இது சைவ சித்தாந்தம் என்றும் சொல்லுகின்றனர்.

"திருவுந்தியார்,திருக்களிற்றுப்படியார், சிவஞான போதம், சிவஞானசித்தியார் உள்பட பதினான்கு சாத்திரங்கள் படைத்துள்ளது சைவ சித்தாந்தம். அவற்றுள், வரிசையில் மூன்றாவதாக உள்ள சிவஞானபோதம் சைவர் வாழ்விலே முதலாவதாக மதிக்கப்படுகின்றது. அதன் வழிநூலாக மட்டுமல்லாமல், கவிதை நடையிலான உரைநூலாகவும் எண்ணப்படுகின்றது சிவஞானசித்தியார். பன்னிரண்டு சூத்திரங்களில் - நாற்பது வரிகளில் - ஆனது சிவஞானபோதம்."

"இப்படியெல்லாம் நாம் உய்யும் பொருட்டாகச் சித்தாந்த சாத்திரங்களைத் தந்த சைவ சமயமானது, 'சமய குரவர்கள்' என நால்வரையும், 'சந்தானகுரவர்கள்' என இன்னொரு சாராரையும் படைத்தளித்தது. இந்த சமய குரவர்களாலும் சந்தானகுரவர்களாலும் அமைக்கப்பட்ட பாதைக்குத்தான் 'சைவம்' என்று பெயர். அந்தப் பாதையில் நடைபோட்டால்தான் 'சிவம் சித்திக்கும்' என்கின்றனர் சைவர்கள்." இவ்வாறு ம.பொ.சி. சித்தாந்த சாத்திரர்கள் அடிப்படையில் சைவம்விளங்குவதை எடுத்துரைத்துள்ளார்.

## வ.உ.சி.யின் சிவஞானபோத உரை

சிவஞானபோதத்திற்கு உரை எழுதிய வ.உ.சி, "இவ்வுரையில் யான் பல மதக் கோட்பாடுகளையும், அவற்றின் பொய்யான உயர்வு தாழ்வுகளையும் பற்றி ஒன்றும் பேசவில்லை" என்று உரைபாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார். இதன்மீதான ம.பொ.சி.யின் கருத்து வருமாறு :

"விடுதலைப்போராட்ட காலத்திலே, தேசவிடுதலைக்கும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் கேடு பயக்கத்தக்க எதையும் தேசத் தலைவர்கள் ஏற்றதில்லை; எதிர்க்கவும் செய்தனர். அந்த உயர் பண்பினை இலக்கியத் துறையிலும் கடைபிடித்தார் வ.உ.சி. அதனாற்றான், தாம் எழுதிய சிவஞான போத உரையிலே பிறமதக் கண்டனங்கூற மறுத்தார்." (விடுதலைப்போரில் தமிழ் வளர்த்த வரலாறு - ம.பொ.சி. - ப.109).

## வ.உ.சி விளக்கம்

1935இல் வெளிவந்த "சிவஞானபோதம் - வ.உ.சிதம்பரம் பிள்ளை உரை" எனும் சிறு வெளியீட்டின் 'உரைப்பாயிர'த்தில் வ.உ.சி. எழுதியுள்ள பின்வரும் விளக்கம், ம.பொ.சி.யின் கருத்துடன் இணைத்து சிந்திக்கத்தக்கது.

“இவ்வுரையில் ஏனைய உரைகளில் காணப்படும் பல மதக் கோட்பாடுகளும், அவற்றின் கண்டனங்களும் காணப்படா. அவை காணப்படாமைக்குக் காரணம் மக்கள் பல்வேறு பெயர்களோடும் வடிவங்களோடும் காணப்படினும் அவர்களெல்லாம் மக்கட் சாதியினரேயாவது போல, மதங்கள் பல்வேறு பெயர்களோடும் கொள்கைகளோடும் காணப்படினும் அவைகளெல்லாம் ஒப்புயர்வற்ற ஒரே இறைவனைப் பற்றியே பேசுகின்றன என்று யான் கருதுகின்றமையே. அன்றியும் மதவேற்றுமையைக் காண்பவர்களும், பேசுபவர்களும் “யான்” , “எனது” என்னும் மதவெறி பிடித்த மாக்களே என்றும், நமது நாடு தற்காலம் இருக்கிற ஒற்றுமையற்ற நிலைமையில் மதவேற்றுமைகளையோ, சாதி வேற்றுமைகளையோ, வேறு வேற்றுமைகளையோ காண்பவர்களும், பேசுபவர்களும் தேசத்திற்குத் தீங்கிழைப்பவர்களே யென்றும் யான் கருதுகின்றேன். அதனாலும், இவ்வுரையில் யான் பல மதக் கோட்பாடுகளையும், அவற்றின் பொய்யான உயர்வு தாழ்வுகளையும் பற்றி ஒன்றும் பேசவில்லை.”

## ‘திருவாசகம்’ - ம.பொ.சி.யின் ஒரு பார்வை

“பக்தி நெறியை வளர்க்கும் நூல்களுக்குத் திருவாசகம் தலை பெற்று விளங்குகின்றது” என்று போற்றிப் பரவியவர் ம.பொ.சி., திருவாசகத்தில் ‘தள்ளத்தக்கதும்’ உண்டு என்று பின் வருமாறு கூற அவருடைய சைவப் பற்று தடைசெய்யவில்லை.

“திருவாசத்திலும் காலத்தால் தள்ளத்தக்கவை உண்டு. ‘ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடுவோம்’ என்கிறார் மாணிக்கவாசகர். அவரே அதேபாட்டில், ‘திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத்திருவடி’ என்று தாம் பக்தி செலுத்திய சிவபிரானின் மலரடிக்கு மாண்பு கூறுகிறார். இது சைவ-வைணவப் போராட்ட காலத்தை நமக்கு நினைப்பூட்டுகிறது. மதப் போராட்டங்களை மாய்த்து மக்கள் வழி அறப்போராட்டங்களைக் கண்டு வரும் இக்காலத்தவர்களாகிய நாம், ‘ஒருநாமம் ஒரு குலம் இல்லாத இறைவனுக்கு ஆயிரம் திருநாமம் பாடுவோம்’ என்றுரைத்த மாணிக்கவாசகரையே மனத்தில் கொள்வோமாக.”

“திருவாசகத்தில், பக்தி வழிப்பட்ட பலப்பல கதைகளைப் படித்திருக்கிறோம். அவை அற்புதங்களை நம்பிய காலத்துக் கற்பனைகளாகும். அவற்றையெல்லாம் விஞ்ஞான காலத்தில் வாழும் நாமும் நம்பித்தான் ஆகவேண்டுமென்பது தெய்வநெறியும் வளர்ப்பதற்கு பயன்படாது.”

## ம.பொ.சி.பார்வையில் சைவசமய பக்தி இயக்கம்

தமிழகத்தில் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஒன்பதாம்

நூற்றாண்டு வரையில் இந்து சமயத்தில் சைவ-வைணவ பக்தி இயக்கங்கள் தோன்றின. இதற்கு முன்பு பக்தி. இயக்கமாக உருவாக்கம் பெறவில்லை 'பக்தி' தனிமனித ஆற்றலாக விளங்கும் நிலையில் இருந்து சமூக ஆற்றலாக இயங்கத் தொடங்கும்பொழுது. இயக்கமாகத் தொழிற்படுகின்றது குரு, சீடர்கள், பரிஜனங்கள் ஆகியோர் உணர்ச்சி, உணர்வுகளை அடிப்படையாகக் கொண்ட பக்தியைப் பரப்புவதற்காக இடம் பெயர்ந்து ஆன்மீகச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும்பொழுது 'பக்தி' இயங்கு சக்தி வடிவத்தைப் பெறுகின்றது.

ஊர் ஊராகச் சென்று திருக்கோயில் வழிபாடுகள் நிகழ்த்தி அடியார்களைத் திரட்டி 'இயங்க' வைத்தநிலை தமிழகத்தில் திருஞானசம்பந்தர் காலத்தில் ஏற்பட்டது.

பக்தி, கர்மம், ஞானம், யோகம் எனும் ஆன்மிக வழிமுறைகளுடன் 'பாடல் நெறி' - அதாவது கடவுளுணர்வு பெற்றவர்கள் அவ்வின்பத்தைப் பாட்டாகப் பாடும் நெறி - பக்தி இயக்கத்தின் ஆதார சுருதியாகும். பாடல் நெறிக்கு, பதிகப் பெரு நெறிக்கு, வழிகாட்டியவர் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த காரைக்கால் அம்மையார் என்றாலும், அந்த நெறியை ஓர் இயக்கமாக உருவாக்கி முன்னெடுத்துச் சென்றவர் திருஞானசம்பந்தர்.

சைவ சமய பக்தி இயக்கத்தைத் தமிழ்மொழி, 'தமிழ் இன'க் கண் கொண்டு பின்வருமாறு விமர்சனம் செய்துள்ளார், ம.பொ.சி.

"7-ஆம் நூற்றாண்டிலே நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் தோன்றிச் சைவசமயத்தை ஒரு கருவியாகக் கொண்டு தெய்வ நெறியை வளர்த்தில்லையானால், அந்த நெறியின் துணை கொண்டு தமிழ்மொழியிலே பக்தி இலக்கியத்தைப் படைத்தில்லையானால், அந்தப் பக்தி இலக்கியத்தைப் போர்க் கருவியாகக் கொண்டு அரசாங்க மதமாகிய சமணத்தை அவர்கள் வென்றில்லையானால் இற்றைநாளில் தமிழ் ஏது? தமிழ் இனம் ஏது? தமிழ்நாடுதான் ஏது?"

மேலே ம.பொ.சி.யின் சைவ சமயப் பற்று, உணர்ச்சி அலைகளை எறிந்தாடச் செய்துள்ளது. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், 'பாட்டுப் புரட்சி'யின் வாயிலாக 'அந்நிய' ஆட்சிக்கு எதிரான 'சமயப்புரட்சி'யையும் நிகழ்த்தியுள்ளனர் என்று 'அரசியல் குர'லில் பின்வருமாறு முழங்கியுள்ளார், ம பொ.சி.

"தமிழ்நாட்டில் ஆளுவோர்க்கு எதிராக முதன்முதலில் தோன்றிய உள்நாட்டுப் புரட்சி ஒன்று உண்டென்றால், அது கி.பி.7ஆம் நூற்றாண்டில் ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் தோற்றுவித்த சமயப்புரட்சியேயாகும்.

"சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாதாரண மக்களை அன்னிய சாம்ராஜ்யங்களுக்கு எதிராகத் திரட்டுவதற்குச் *சைவ சமயமே சிறந்த* கருவி என்பதனை அவர்கள் கண்டனர் அதனாலேயே தமிழருக்கு விடுதலை தேட நேராக அரசியல் ரீதியில் புரட்சியை உருவாக்காமல் சமணத்தை எதிர்க்கும் சைவப் புரட்சிக்கு வழிகோலினர். சம்பந்தரும் நாவுக்கரசரும் நடத்திய சமயப்புரட்சியிலுள்ள தேசியத் தன்மையைப் புறக்கணிப்பதற்கில்லை. தமிழருக்குத் தேசியம் தமிழ்மொழியின் - தமிழ் இனத்தின் அடிப்படையில்தான் பிறக்க முடியும். இந்த உணர்வு காரணமாகத்தான் கி.பி.7ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் நடந்த சாத்விகமான உள்நாட்டு புரட்சியிடம் தமிழர்களாகிய நாம் நல்லெண்ணம் காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம்."

ம.பொ.சி.யின் சைவ சமயப் பற்றின் 'போர்க்குரல்' பின்வருமாறு தொடர்ந்து ஒலித்துள்ளது.

"*சமண சமயத்தை வீழ்த்திய சைவ சமயகுரவர்களான* நாவுக்கரசரையும், சம்பந்தரையும் நான்போற்றி புகழ்வது, *சமயங்களிடையே சமரசங்காணும் சமுதாயக்* கொள்கைக்கு முரண்பட்டதாகாது. சம்பந்தரும், நாவுரக்கரசரும் சமணத்தை எதிர்க்க வேண்டி ஏற்பட்டது. அது அரசாங்க மதமாக இருந்த அதிகாரப் பலத்தால் சைவ சமயத்தை வீழ்த்த முற்பட்டதால்தான். அன்றைய நிலையில் சமணமானது மொழியாலும், இனத்தாலும் தமிழரல்லாதவராக இருந்தவர் களால் தமிழர்மீது திணிக்கப்படும் சமயமாகவே இருந்த-தென்பதையும் மறந்துவிடக்கூடாது." (ஆன்மீகமும் அரசியலும் - ப.30).

மேற்காணும் ம.பொ.சி. கருத்தின் இறுதி வரிகள் விவாதத்திற்குரியன. *சமணமும்* பௌத்தமும் தமிழர்களில் ஒரு சாராரின் விருப்பத்திற்கும், வரவேற்பிற்கும் உரியனவாகவே தமிழகத்தில் நிலைபெற்றன. 'தமிழரல்லாதாரின் திணிப்பு' எனும் பார்வை. சைவ சமயப் பற்றின் பிரச்சார வேகத்திற்கு உரியதாகிவிட்டது.

*வரலாற்றுச் செய்திகள் மறுபரிசீலனைக்கு* உரியனவாக விளக்கப்படும் பொழுது முரண்பாடுகள் தோன்றாவண்ணம் பார்த்துக் *கொள்ள வேண்டியுள்ளது.*

சர்வசமயங்களிடையே சமரச நோக்கு வளர வேண்டும் என்பதில் ம.பொ.சி.க்குரிய சீரிய கொள்கையும் மறப்பதற்குரியதன்று. இதை நினைவுப்படுத்துவதுபோல் அவருடைய பின்வரும் கருத்து அமைந்துள்ளது.

"சம்பந்தரும் நாவுக்கரசரும் காட்டிய சமண எதிர்ப்புணர்ச்சியானது தமிழினத்தாரின் இயற்கை குணம் அன்று. தற்காப்புக்காக மேற்கொண்ட ராஜதந்திர முயற்சியேயாகும்... இன்று நமக்குத் தேவைப்படுவது சமண

பௌத்த எதிர்ப்புணர்ச்சியன்று. பாரதப் பெருநாடு இன்று சமயச் சார்பற்ற அரசைக் கண்டுவிட்டது. அனைத்துச் சமயத்தினரும் ஒன்றுபட்டு வாழ்வதற்கான நல்ல சூழ்நிலை நாட்டில் உருவாகிவிட்டது."

சைவசமய எழுச்சியை 'தேசிய எழுச்சியாக' ம.பொ.சி. இனங்கண்டது, பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கை யாழ்ப்பாணத்தில் ஆறுமுகநாவலர் (1822-1879) தூண்டி நடத்திய சைவசமய எழுச்சியை, 'தேசிய எழுச்சி'யாக வரலாற்றாசிரியர்களில் சிலர் விளக்கியுள்ளதை நினைவுப்படுத்துகிறது.

யாழ்ப்பாண ஆய்வாளர் க.அருமைநாயகம், 'தேசிய வரலாற்றுப் பின்னணியில் நாவலர்' எனும் கட்டுரையில் (நாவலர் நூற்றாண்டு விழா மலர், 1979) ஆறுமுக நாவலரின் சைவ சமய எழுச்சிப் பிரசாரத்தைப் பின்வருமாறு விமர்சனம் செய்துள்ளார்.

"ஆறுமுக நாவலரது சைவப்பிரயாசையின் தோற்றமும் வளர்ச்சியும் அது எதிர் நோக்கிய எதிர்ப்புக்களும், அதுபற்றி நாவலரும் அவரைச் சார்ந்தோரும் கிறிஸ்தவர்களுடன் நடத்திய விவாதங்களும், அரசாங்கத்துடன் கொண்டிருந்த தொடர்புகளும் தேசியத்தின் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்"

சிற்சில சந்தர்ப்பங்களில் ம.பொ.சி.யின் சைவசமயப் பற்று 'வெடிப்புறப் பேசுதல்' பாணியை வெளிப்படுத்தியபோதிலும், வள்ளலார், பாரதியார், திரு.வி.க. வழியில் தமிழராகவும், இந்தியராகவும், ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வாளராகவும் அவரை அடையாளங் காட்டத் தவறவில்லை.

# 8. சமூக சீர்திருத்த நோக்கு

ம.பொ.சி.க்கு மொழிப்பற்று, நாட்டுப்பற்று இயற்கையாகவே அமைந்தது போல, சமூகசீர்திருத்தப் பற்றும் இயற்கையாகவே அமைந்துவிட்டது. அரசியல், சமூகம், சமயம் முதலானவற்றில் ஏககாலத்தில் செயலாற்றி வந்தபோதும் சமூக சீர்திருத்த நோக்கில் ஆக்கவழியில் சிந்தனைகளை வெளிப்படுத்தி, வாழ்க்கையிலும் வாழ்ந்து காட்டி வந்தார், ம.பொ.சி.

ம.பொ.சி.யின் சமூக சீர்திருத்தநோக்கில் சமய சீர்திருத்த நோக்கும் இணைந்தே தொழிற்பட்டது.

"மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனது முதற்கடமை சமூகத்துக்கான தொழிலில் ஈடுபடுவதேயாகும். இரண்டாவதாகவே சமயத்தொழிலுக்கு இடமிருக்க வேண்டும். அதுவும் சமூகத் தொழிலுக்கும் பாதகமற்ற வகையில்தான்" என்று ம.பொ.சி. தமது கொள்கையைக் குறிப்பிட்டுள்ளார்.

## வள்ளலார் வழியில்

சமய சீர்திருத்தத்தையும், சமூக சீர்திருத்தத்தையும் இணைத்து எடுத்துச் செயலாற்ற ம.பொ.சி. அருட்பிரகாச வள்ளலார் ஜோதி இராமலிங்க சுவாமிகளைப் பின்பற்றினார்.

'தேசபக்த - மெய்ஞானி' என ஏற்றிப் போற்றப் பெற்ற சுவாமி விவேகானந்தர் 1897 பிப்ரவரி 6இல் சென்னை 'விக்டோரியா பப்ளிக் ஹாலி'ல் 'எனது போர்முறை' எனும் தலைப்பில் பேருரையாற்றினார். இப்பேருரையில் சமூக சீர்திருத்தம் பற்றியத் தமது விளக்கத்திற்கு பெரும் பகுதியை ஒதுக்கினார்.

"அரசியல் ஞானத்தையும், சமூக சீர்திருத்தங்களையும் இந்தியாவில் பரப்ப வேண்டுமென்று நீங்கள் நினைத்தால், முதலில் நாட்டைத் தெய்வீகமான ஆத்மார்த்திக விஷயங்களால் நிரப்புங்கள். இதுவே முதல் முதல் நடைபெற வேண்டிய காரியமாகும்." இவ்வாறு சுவாமி விவேகானந்தர் முழங்கினார்.

முற்கூறிய சுவாமி விவேகானந்தர் கருத்து வள்ளலார்க்கு இசைவானதே எனும் நோக்கில் ம.பொ.சி. வள்ளலாரின் சமூக சீர்திருத்த வழியை பின்வருமாறு விளக்கியுள்ளார்.

"இராமலிங்க அடிகளார், தாம் நடத்திய சீர்திருத்த இயக்கத்தினை, 'தெய்வம் உண்டு' என்ற அடிப்படையில் எழுப்பினார். அந்தத் தெய்வத்தை வழிபட்டு உய்ய வேண்டும் என்பதையும் நடைமுறைத் திட்டமாக வைத்தார்.. சமய-சமுதாய சீர்திருத்தவாதிகள். முதலில் தெய்வத்திடம் அழுத்தமான பற்றும், தங்கள் அன்றாட வாழ்க்கையில் பக்தி நெறியைக் கடைப்பிடித்து வாழும் பண்பும் கொண்டவர்களாக இருக்க வேண்டும். இது சீர்திருத்தவாதியாகிய வள்ளலார் கற்பிக்கும் பாடம்." (வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு - ஐந்தாம் பதிப்பு - 2001 பக்.347,353).

நாத்திகவாதத்தை வள்ளலார் எவ்வாறெல்லாம் மிகக் கடுமையாகச் சாடினார் என்பதை விளக்கிய ம.பொ.சி., வள்ளலாரின் சாதி எதிர்ப்பு, வருணாச்சிரம எதிர்ப்பு, போலித்தனமான ஆசாரங்கள் எதிர்ப்பு, மூடநம்பிக்கை எதிர்ப்பு முதலானவற்றையும் விரிவாக விளக்கியுள்ளார். இவ்வகையில் ம.பொ.சி. 'செங்கோல்' இதழில் (12.9.1965இல்) 'வள்ளலாரும் சாதிகளும்' எனும் தலைப்பில் எழுதியக் கட்டுரையின் பின்வரும் பகுதிகள் இங்குக் குறிப்பிடத்தக்கன.

"இராமலிங்க வள்ளலார், சாதி வேறுபாடுகளை வெறுத்தார். சாதிகளிடையே உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டு ஆறறிவு படைத்த மானிடர்களை இழிவாக நடத்தும் கொடுமை கண்டு கண்ணீர் வடித்தார். சாதிபேதங்களை விடுமாறு மனிதகுலத்துக்கு வேண்டுகோள் விடுத்தார். 'நால் வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா நவின்ற கலைச் சரிதமெலாம் பிள்ளை விளையாட்டு' என்று கூறி, எள்ளி நகையாடினார். பாரத மக்கள் தங்களிடையே சாதி-சமய-வருண வேறுபாடுகளைப் பாராட்டியதால்-தான் நம் அன்னை நாடு அடிமைப்பட்டது என்ற உண்மையை உணர்ந்தார் வள்ளலார். அதனால், சாதி-சமய-வருண வேறுபாடுகளை ஒழிப்பதன் வாயிலாக, பாரத மக்களை சுதந்திரத்திற்குத் தகுதியுடை-யவர்களாக்க முயன்றார்.....

"புத்தரின் அன்புணர்ச்சியை, சாதி-சமய-வருண வேறுபாடுகளற்ற ஒருமைப்பாட்டுணர்ச்சியை ஏற்க மறுத்து, அவரது போதனைகளைப் புறக்கணித்ததால், புனிதமான இந்துமதம் புரோகித மதமாக மாறியது வேதங்களின் உண்மைகளை மறைத்துப் போலிச் சாத்திரங்களைப் புனைந்து, பாரத சமுதாயத்தின்மீது ஆதிக்கம் கொண்டது, புரோகிதம். அந்த நாள்தொட்டே, இந்து சமுதாயம் பல கூறாகப் பிளவுப்பட்டு, உட்பகை வளர்ந்தது. இந்த உண்மையை உணர்ந்தே,

வேதா கமங்களென்று வீண்வாத மாடுகின்றீர்
வேதா கமத்தின் விளைவறியீர் – சூதாகச்
சொன்ன தலால் உண்மைவெளி தோன்ற உரைத்தலிலை
என்ன பயனோ இவை?

என்று பாடினார் வள்ளலார்''

இந்து மதம் புரோகித மதமாக மாறியது அதன் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று எனும் முக்கியக் கருத்தை ம.பொ சி. மேலே வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## புரோகித மதம் சுவாமி விவேகானந்தர் பார்வையில்

சுவாமி விவேகானந்தர், புரோகித வருக்கம் முன்னேற்ற முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டு வந்த வரலாற்றுண்மையைப் பல்வேறிடங்களில் சுட்டிக் காட்டியுள்ளார்

1893 ஜூலை 10இல் தமது சென்னை சீடர்களுக்கு எழுதியக் கடிதத்தில் சுவாமி விவேகானந்தரின் அறச்சீற்றத்தைப் பின்வருமாறு அறிகிறோம்.

"வாருங்கள், மனிதர்களாக இருங்கள். எப்பொழுதும் முன்னேற்றத்திற்குத் தடையாகவுள்ள புரோகிதர்களை உதைத்துத் தள்ளுங்கள். ஏனென்றால் அவர்கள் ஒருபொழுதும் திருந்த மாட்டார்கள். அவர்கள் இதயங்கள் ஒரு பொழுதும் விரிவடையாது. நூற்றாண்டுக் காலக் கொடுங்கோன்மை, மூடநம்பிக்கைகளின் பிள்ளைகள், அவர்கள். முதலில் புரோகித வருக்கத்தை ஒழித்துக் கட்டுங்கள்."

'வேதாந்தமும் உரிமைகளும்' எனும் பேருரையில், 'புரோகிதத் தொழில் இயற்கையாகவே கொடுமையும் இரக்கமற்றதன்மையும் உள்ளதாகும். புரோகிதர் பலர் தோன்றும் இடத்தில் ஆன்மிகம் குன்றி விடுவதற்கு இதுதான் காரணம்" என்று புரோகிதத்தைச் சாடியுள்ளார், வேதாந்தச் சிங்கமெனப் புகழ்பெற்ற சுவாமி விவேகானந்தர்.

### தாகூர்

"ஸமயம் (மதம்) வேறு; குருக்கள் கட்டுப்பாடு வேறு என்பதை மறத்தலாகாது. அவை ஒன்றுக்கொன்று தீயும் சாம்பரும் போலாம். ஸமயம் விடுதலை போதிக்கிறது; குருக்கள் கட்டுப்பாடு, அடிமை நிலையப் புகழ்ந்து கீர்த்தனம் பாடுகிறது" (பாரதியார் மொழிபெயர்ப்பு) என்று கவிஞர் தாகூர் 'அடங்கி நட' THOU SHALT OBEY எனும் 'மாடர்ன் ரிவியூ' கட்டுரையில் (17.9.1917) கூறியதும் இங்குக் கருதத்தக்கது.

"துவேஷத்தால் சமய-சமுதாய சீர்திருத்த இயக்கம் வெற்றி பெறாது" என்னும் வள்ளலார் வாக்கையும் ம.பொ சி. குறிப்பிட்டுள்ளார்.

## பகுத்தறிவாளர்களும் - வள்ளலாரும்

பகுத்தறிவாளர்கள் - வள்ளலாரிடையே உள்ள வேறுபாடுகளையும் ம.பொ.சி. பின்வருமாறு விளக்கியுள்ளார்.

"'இராமலிங்கர், கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக' என்று பாடினார். இது, 'பகுத்தறிவாளர்'களுக்கு உடன்பாடு போலத் தோன்றலாம். ஆனால், அது வெறும் மயக்கமே. அடிகள் 'கலைகளெல்லாம் மண்மூடிப் போக' என்று கூறவில்லை. 'கலைவேறு, அதனை அழகுபடுத்தும் கற்பனை வேறு' என்பது அடிகளின் கருத்து. 'தத்துவம்' என்பது, கலை, அதை விளக்க எழுந்த கதையே கற்பனை. கலைக்காவே கதை. கதைக்காகக் கலையல்ல. கலை நிலையான பொருள். கற்பனை நிலையானதன்று. அது காலமாறுதலால் பொய்யாகி விடும். அதனால், நிலையான கலையை ஏற்று நிலையற்ற கற்பனைகளை நிலையெனக் கொண்டாடும் கண்மூடித்தனத்தை வெறுத்தார்.

"அடிகளார்,சித்தாந்த - வேதாந்தத் தத்துவங்களையொட்டிக் கற்பிக்கப்பட புராணக்கதைகளையெல்லாம் பயன் கருதி ஆதரித்தார். ஆனால், அவற்றை வெறுத்தார். செய்திகளாக நம்பும் மூடதனத்தை வெறுத்தார். 'பகுத்தறிவாளர்'களோ புராண - இதிகாசங்களைக் கொளுத்த விரும்புகின்றனர்.

"'வள்ளலார், உலகறி வேதாகமங்கள் எல்லாம் பொய் பொய்யே' என்றார். இது 'பகுத்தறிவுக் கூட்டத்தாருக்கு உடன்பாடு போன்று தோன்றலாம். இதுவும் அறியாமையே. அடிகளார், 'ஊன்றிய வேதாகமங்கள் உண்மை; உலகறிவேதாகமங்கள் பொய்' என்று விளக்கந்தருமிடத்தில், அவருக்கும் பகுத்தறிவாளர்களுக்குமுள்ள வேற்றுமை நன்கு வெளிப்படுகின்றது. அது வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கு முள்ள வேறுமை போன்றதாகும்.

"வள்ளலார், 'நடுநிலையில் நின்று சமய சமுதாயத்துறைகளில் சீர்திருத்தங்காணப் பாடுபட்டார்' என்று முடிவாகக் குறிப்பிட்டுள்ளார், ம.பொ.சி.

## சமயாசாரம் - விஷந்தடவிய வாள்

சாதியாசாரத்தை, விஷந்தடவிய வாள் எனும் சினமொழி செப்பி ம.பொ.சி. அந்த நாசகார வாள் விளைவித்தக் கொடுமைகளை பின்வருமாறு சாடியுள்ளார்.

"பிறப்பை யொட்டியும் மரணத்தையொட்டியும் திருமணத்தை-யொட்டியும் நடைபெறும் சடங்குகளிலே சாதிக்கு வேறுபாடுகள் கற்பித்தவர்கள் யாராயினும் சரி, அவர்கள் சடங்குகளால் மக்களைப் பிரித்தார்கள் என்பதைவிட, 'சடங்கு' என்னும் கோடாரி கொண்டு மக்கள் சமுதாயத்தை வெட்டிப் பல கூறாகப் பிளந்துவிட்டார்கள் என்று சொல்லலாம். சாதாரணக் கத்தியால் வெட்டப்பட்டாலும் பிழைக்கலாம்; ஆனால் விஷம் தடவிய கத்தியால் வெட்டுப்பட்டவன் பிழைப்பது

அரிது; அதுபோல, 'சாதியாசாரம்' என்னும் விஷந்தடவிய வாளால் பாரத சமுதாயம் பல கூறாக வெட்டப்பட்டுவிட்டது. அந்த விஷத்தை முறிக்க சமய சன்மார்க்கத்திற்கு வேறான சுத்த சன்மார்க்கம் என்னும்தெய்வ மருந்தைத் தந்து, இது நல்ல மருந்து' என்று கீர்த்தனை பாடினார் வள்ளலார். சாதிகள் ஒழிய வேண்டுமானால் முதலில் சாதிவழிச் சடங்குகள் ஒழிந்தாக வேண்டும்.'' இங்கு இறுதியில் சுட்டிக்காட்டப் பெற்ற கருத்து ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

சமய நல்லுணர்வைக் கொண்டு சாதி வேறுபாட்டு உணர்ச்சியை எதிர்க்கவும் ம.பொ.சி. சைவத்தில் இருந்து பல சான்றுகள் கூறியுள்ளார், ம.பொ.சி. சாதி ஒழிப்பு நடைமுறைக்கு கொண்டுவரப் பாடுபடுவதற்கு முன் சாதிகளில் உயர்ச்சி தாழ்ச்சி சொல்வதை ஒழிக்க வேண்டும் என்றும் ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார்.

## தீண்டாமை எதிர்ப்பில்

இளம் வயதிலேயே இரண்டாண்டுக் காலம் தாழ்த்தப்பட்டவர்களுடன் குடியிருந்து 'சேரி வாழ்க்கை'யை அனுபவித்ததை ம.பொ.சி., அவருடைய 'எனது போராட்டம்' எனும் சுயசரிதையில் விளக்கியுள்ளதை முன்பு கண்டோம்.

1947இல் வெளிவந்த அவருடைய 'தமிழன் குரல்' எனும் தமிழரசுக் கழகக் கொள்கை விளக்க நூலில், 'தமிழரும் தாழ்த்தப்பட்டோரும்' எனும் தனி அத்யாயத்தை எழுதியுள்ளார், ம.பொ.சி. இதில் தீண்டாமை எதிர்ப்பில் குமுறும் எரிமலையாக ம.பொ.சி. காட்சியளிக்கிறார். நெருப்பாறாக அலையெறிந்தாடிய கருத்து வீச்சுகளில் சில, பின் வருவன.

"ஏகாதிபத்தியத்தின் கொடுங்கோலையும், முதலாளித்துவத்தின் கொள்கையையும்விடக் கொடுமை வாய்ந்தது தீண்டாமை. கொடுமையில் மட்டுமன்று, வயதிலும்கூட ஏகாதிபத்தியம் முதலாளித்துவம் இரண்டையும்விட மூத்தது தீண்டாமை. தீண்டாமையின் கொடுமையைத் தாழ்த்தப்பட்ட மக்களின் குரலிலே, நிறத்திலே, வாழ்க்கைத் தரத்திலே எல்லாவற்றிலும் காணலாம்.

"தீண்டாமையை அடியோடு தொலைக்க வேண்டுமாயின், முதல் குற்றவாளியாகிய நிலப்பிரபுத்துவத்தை அடியோடு ஒழித்து, சேரி என்னும் சிறைக்கூடத்தைச் சுட்டுப்பொசுக்கி, தலைமுறை தலைமுறையாக அல்லல்பட்டு வந்த கோடிக்கணக்கான தீண்டாதவர்களை விடுதலை செய்து, மக்களோடு மக்களாக கலந்து வாழ வகை காண வேண்டும்.

"அது மட்டும் போதாது; நிலப்பிரபுத்துவத்தின் கொள்ளையில் பங்கு பெற்று, அது செய்யும் கொடுமைகளுக்கெல்லாம் வாழ்த்து கூறி வந்த இரண்டாவது குற்றவாளியான வைதீகத்தின் கடைசி மூச்சுக்கும்

முடிவு கட்ட வேண்டும். அப்போதுதான் தீண்டாமை இனி எந்தக் காலத்திலும் எந்த உருவத்திலும் தலைகாட்டாது ஒழியும்.''

தாழ்த்தப்பட்டவர்களை 'ஆதித்தமிழர்' என்றும் ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார். (தமிழன் குரல் – ப.75). பஞ்சமர், பறையர் முதலானோர் பூர்வத்தமிழர் அல்லது ஆதித் தமிழராவர் என்று 1881லேயே சாற்றியவர் அந்தச் சமூகத் தலைவர் பண்டிதர் க. அயோத்திதாஸ் (1845–1914).

## பெண்ணியச் சிந்தனைகள்

சிலப்பதிகாரத்தையும், பாரதியையும் கேடயமும், வாளுமாகக் கொண்டு ம.பொ.சி. பெண்விடுதலைக்குக் காந்திய வழியில் போராடியுள்ளார். கலப்பு மண ஆதரவு, விதவை மறுமண ஆதரவு, வரதட்சணை எதிர்ப்பு, பட்டம் – பதவிகளில் பெண்கள் பங்கேற்பு, குடும்பக்கட்டுப்பாடு, ஆணாதிக்க எதிர்ப்பு, பொருளாதாரச் சுதந்திரம் முதலான பல்வேறு நோக்குகளில் ம.பொ.சி. பெண்ணியச் சிந்தனைகளை வெளியிட்டுள்ளார்.

## சமயச் சீர்திருத்தம்

"தமிழகத்திலும், அதிக அளவில் இல்லாவிடினும் சிறிதளவேனும் சமூகத்துறையில் முற்போக்கான மாறுதல்கள் நிகழ்ந்தே வருகின்றன. ஆனால், சமயத்துறையில் மட்டும் நிலைமை வேறு விதமாயிருக்கிறது.'' இவ்வாறு 15.7.1947ன் 'தமிழ் முரசு' இதழில் எழுதியுள்ளார், ம.பொ.சி.

அப்பொழுது சென்னை மாநிலத் தலைமை அமைச்சராக இருந்த ஓ.பி.இராமசாமி ரெட்டியார் சமயச் சீர்திருத்த நோக்கில், சமயச் சொத்துக்கள் மக்களின் கல்விக்கும் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் பயன்பட வழி செய்தே ஆகவேண்டும் என விரும்பினார். தமது கருத்துக்கு ஆதரவு தேட மடாதிபதிகளையும், கோவில்களின் தரும கர்த்தாக்களையும் கொண்ட ஒரு மாநாட்டைச் சென்னை அரசாங்க விருந்து மாளிகையில் கூட்டி அதில் தமது கருத்தை வெளியிட்டார், ஓமந்தூரார்.

இந்த முயற்சியின் மீதான தமது கருத்துக்களை ம.பொ.சி., 'ஓமந்தூரார் உபதேசம்' எனும் தமிழ்முரசு கட்டுரையில் (1.8.1947) எழுதினார். சமயசீர்திருத்தம் தொடர்பாக அவர் வெளியிட்ட கருத்துக்களில் சில, பின்வருவன.

"கோவில்களாகட்டும், மடங்களாகட்டும் எந்த அடிப்படையில் அவற்றைச் சீர்திருத்துவதென்பதை முதலில் முடிவு செய்ய வேண்டும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழர் பண்பாட்டை அடிப்படை-யாகக் கொண்டே சமயச் சீர்திருத்தங்கள் செய்ய முற்பட வேண்டும். இதை மறுப்போர் தமிழராயிருக்க முடியாது.

“முதலாவதாக மடங்களைக் கவனிப்போம். இந்த மடங்கள் சமூகத்துக்குத் தேவையா? துறவுநிலை என்பதென்ன? பெண்மையை வெறுப்பதேயன்றோ? சமூகத்தில் சரிபாதியினரான பெண்ணினத்தை வெறுப்போரைச் சமூகத்தை நேசிப்பவராகக் கருத முடியுமா?

“தனிப்பட்ட ஒரு மனிதன் பிரம்மச்சர்யத்தை மேற்கொள்வதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால், அதை ஒரு இயக்கமாக்கி, பெண்ணினத்தைப் பழித்தும் வெறுத்தும் ஸ்தாபனரீதியாகப் பிரசாரம் செய்யச் சமூகத்தில் இடம் தருவதுகூடாது.

“கோவில்கள் மக்களின் வாழ்க்கையைப் பண்படுத்தவே கட்டப்பட்டன. இதை அறிவுடைய எவரும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால், இன்றைய நிலைமை என்ன? கோபுர வாயிற்படியிலிருந்து இறைவன் அமர்ந்துள்ள இருட்டறை வரையில் ஒவ்வோர் அடிநிலத்துக்கும் ஒவ்வொரு தத்துவம். இன்ன இடத்தில் இன்ன சாதிதான் நிற்கலாம் என்ற இறுமாப்பு வாதம். ‘அன்பெனும் பிடியுள் அகப்படுவான் ஆண்டவன்’ என்றார் அருட்சோதி வள்ளலார். ஆனால், இன்று ஆலயத்துக் கடவுளரெல்லாம் அடங்கியிருப்பது அன்பெனும் பிடியிலல்ல; அர்ச்சகரின் பிடியுள்.

“மண்ணாபரணம் பூணும் மக்கள் வாழும் தரித்திர நாட்டில் கடவுளுக்கு பொன்னாபரணம் பூட்டும் புன்மையை ஒழிக்கட்டும். கூரைவேய்ந்து குடிசைக்குக் கதியற்ற மக்கள் வாழும் நாட்டில் கோபுரகலசத்திற்குப் பொன் தகடு போடுவதைத் தடுக்கட்டும். சமயச் சொத்துகளெல்லாம் சமூகத்தின் பொதுச் சொத்துக்களாகச் செய்யட்டும்.”

மேற்கண்டவாறு சீற்றக்கனல் கொழுந்துவிட்டு எரியச் சாடிய ம.பொ.சி. இறுதியில், “இவைதான் பண்பாட்டு நெறி; வள்ளுவர் வள்ளலார் வழியில் வந்த நமக்கும் அதுவே காலத்துக்கேற்ற நெறியாகும்” என்றும் குறிப்பிட்டார்.

ஒருகால கட்டத்தில் சமயபீடங்கள், சமயாசிரியர்கள், புரோகிதர்கள், குருமார்கள் சமய-சமூக சீர்திருத்தங்களில் வழிகாட்டவில்லை, ஆர்வம் காட்டவில்லை எனும் குற்றச்சாட்டை 1962லும் வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு எனும் நூலில் ம.பொ.சி. பின்வருமாறு மீண்டும் சாற்றியுள்ளார்.

“இந்துக்களின் குருமார்களாகிய வைதிக அந்தணர்கள், புறச்சமயங்களுக்கு எதிராக இந்துக்களிடையே போர் வெறியை வளர்த்தனர். அதற்குமேல் இந்து மக்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்தவோ, சமரச மனோபாவத்தை வளர்க்கவோ, தத்துவச் சண்டைகளைத் தவிர்க்கவோ அவர்கள் துணியவில்லை. சுருங்கச் சொன்னால், சமய பீடங்களும் சமயாச்சாரியர்களும் காலமாறுதலை

உணர்ந்து செயற்பட முன்வரவில்லை. இந்து மதத்தில் மறுமலர்ச்சி காணச் சந்தர்ப்பம் நிர்ப்பந்தப்படுத்தியும் புரோகிதர்களும் குருமார்களும் மனமாற்றம் அடையவில்லை. புறந்தேயிருந்து வந்த அந்நியமத ஆதிக்கத்தை அது விளைவித்த அநீதிகளைக் கண்டு ஆத்திரங்கொண்டு, அவற்றிற்கு எதிராகப் போர் புரிய மக்களைத் தூண்டிவிட்டனர், இந்து மன்னர்களும் மதவாதிகளும். ஆனால், தங்கள் மக்கள் மீதே தாங்கள் செலுத்தி வரும் ஆதிக்கத்தை, ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அவர்களுக்கு இழைத்து வரும் அநீதிகளை விட்டுத் தொலைக்க அவர்கள் விரும்பினாரல்லர்."

சமய பண்பாட்டு நெருக்கடிகளை, முரண்பாடுகளை தீர்த்து வைக்க வள்ளுவர் - வள்ளலார் - காந்தி - பாரதி வழிகளை ம.பொ.சி. வலியுறுத்தினார்.

# 9. ம.பொ.சி.யின் நூல்கள்

ம.பொ.சி. அவர்கள் அரசியலுக்கு ஆற்றிய தொண்டு இலக்கியத்துக்கு ஆற்றிய தொண்டினை விடவும் அதிகம் என்பது வரலாற்றுண்மை. என்றாலும், அது காலத்தால் மறைக்கப்படலாம், மறக்கப்படலாம். ஆனால், அவர் படைத்துள்ள இலக்கியங்கள் மறைக்கப்படவோ, மறக்கப்படவோ முடியாது. தமிழ் உள்ளவரை சிறந்தோங்கி விளங்கும்.

அரசியலிலும், இலக்கியத்திலும் ஒன்று சேர புகழொளி வீச நற்பேறு பெறுபவர் தமிழகத்தில் ஒரு சிலரே. அவர்களுள் ம பொ.சி. ஒருவர் என்பதற்கு அவருடைய நூல்களும் சான்று பகர்கின்றன. தமிழால் ஒருவர் முழு அறிஞராக முடியும் என்பதைத் தம்மைக்கொண்டே நிறுவிக் காட்டும் அளவிற்கு பன்னூலாசிரியராகப் பொலிவுற்றார், ம.பொ.சி.

'என் இலக்கிய வாழ்க்கை' எனும் பொருளில் 1995-ன் பிற்பகுதியில் 'செங்கோல்' இதழில் ம.பொ.சி. எழுதியத் தொடர் கட்டுரை முற்றுப் பெறாமல் நின்றுவிட்டது. 16.7.1995 இல் எழுதிய கட்டுரையில் "இன்னொரு இலக்கியம்தான் என் வாழ்க்கை என்று சொல்லுகிறபோது என் உள்ளத்தில் ஒளி பிறக்கிறது" என்று ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளதையும் அவருடைய நூல்கள் உணர்த்தி நிற்கின்றன.

இந்தக் கட்டுரையில் அறிஞர் அண்ணா பூந்தமல்லியில் நடைபெற்ற விழாவில் ம.பொ.சி.யின் இலக்கியப் பணியைக் குறித்துக் கூறியது பின்வருமாறு பதிவுச் செய்யப் பெற்றுள்ளது.

"ம.பொ.சி. ஆங்கிலம் படிக்காதது தம்மிடம் உள்ள குறையென்று எண்ணி வருந்துவதாகக் குறிப்பிட்டார். அவர் ஆங்கிலம் படிக்காதது தமிழனுக்கும், தமிழிற்கும், தமிழ்நாட்டிற்கும் அதிருஷ்டமாகப் போய்விட்டது. அப்படி இல்லாததனாலே நாமும் உயர முடியும் என்று உறுதிக் கொண்டு தன்னை தமிழுக்கே ஒதுக்கிக் கொண்டு, தமிழனுக்குமே ஒதுக்கிக் கொண்டு தமிழ்நாட்டிற்கே ஒதுக்கிக் கொண்டு அவர் தொண்டு செய்வது தமிழனது அதிர்ஷ்டம்.... ம.பொ.சி. சொல்கிற புதுமைகளையெல்லாம் இப்போது இருக்கிற புலவர்கள் எல்லாம் தாங்கள்தான் கண்டுபிடித்துவிட்டதாக சொல்லும் நிலைமை ஏற்பட்டுப் போயிற்று. அந்த அளவுக்கு பல புதுமைகளை இலக்கியம் மூலம் சொல்கிறார் ம.பொ.சி."

ராஜாஜி, ம.பொ.சி.யின் வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, நூலைப் பாராட்டியபொழுது ஆங்கிலம் படித்தவர்களால் இத்தகைய ஒருநூலை எழுத முடியாது என்று குறிப்பிட்டார்.

ம.பொ.சி.க்கு ஆங்கிலப் புலமையில்லாதது எவ்வகையிலும் அவருடைய படைப்புகளின் திறத்தையும் தரத்தையும் பாதித்துவிடவில்லை என்பதை அண்ணா, ராஜாஜி கருத்துகள் சுட்டிக்காட்டின.

ஓர் அரசியல்வாதி, இலக்கிய ஆய்வாளராக வெற்றி பெற்றார் என்பதைத் தமிழகம் கண்ட இலக்கியச் செம்மல்களுள் ஒருவரான டாக்டர் மு.வரதராசன் கூறியுள்ள பின்வரும் கருத்தில் இருந்து தேர்ந்து தெளிகின்றோம்.

“ம.பொ.சி. மிகச்சிறந்த அரசியல்வாதியாவார். அப்படிப்பட்டவர் ஆராய்ச்சி நூலொன்றை வழங்குகிறாரென்றால், அது எப்படி முடிந்ததென்று நாங்களெல்லாம் வியப்படைகிறோம். பேராசிரியர்கள் ஆராய்ச்சி நூல் எழுதினால், விஷயங்களைப் பட்டியல் தொகுத்து, குறிப்புகளைக் குவித்து, அதற்கு நூல் வடிவந்தருவார்கள். ஆனால், அரசியல் தலைவரான ம.பொ.சி. அப்படி எழுதவில்லை. மிக நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்து, எவர் மனதும் புண்படாத வகையில் தாம் சார்ந்துள்ள அரசியல் கட்சி - தன் அரசியல் கொள்கைகள் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு நடுவு நிலைமையில் நின்று இந்த நூலை எழுதியுள்ளார்.” (12.6.1988 'செங்கோல்').

மேலே 'இந்த நூலை' என்று டாக்டர் மு.வ. குறிப்பிட்டது ம.பொ.சி.யின் 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' எனும்நூலாகும். தமிழ் இலக்கிய களஞ்சியத்திற்கு ஒரு புதிய வரவாகச் சாகித்யஅகாதமியின் 'அறிமுகப்பத்திரத்தில் குறிப்பிடப்பெற்ற 'வள்ளலார்கண்ட ஒருமைப்பாடு' நூலின் மலிவுப் பதிப்பு வெளியீட்டு விழாவில் டாக்டர் மு.வ. மேற்கண்டவாறு ம.பொ.சி.யின் ஆய்வுத்திறனைப் பாராட்டியுள்ளார்.

ம.பொ.சி.யின் அரசியல், இலக்கிய நூல்களின் எண்ணிக்கை 140க்கு மேற்பட்டதாகும். இவற்றுள் அவருடைய 'விடுதலைப்போரில் தமிழகம்' எனும் நூல் 2000 பக்கங்களையும், 'எனது போராட்டம்' எனும் நூல் 1200 பக்கங்களையும் கொண்டது. 16 பக்கங்களைக் கொண்ட அவருடைய சிறு பிரசுரங்களின் எண்ணிக்கை பதினான்காகும்.

அவருடைய முதல் நூலான 'கப்பலோட்டிய தமிழன்' 1944இல் வெளிவந்தபொழுது அவருக்கு வயது, 38. 1995இல் வெளி வந்த 'எம்.ஜி.ஆருடன் எனக்கிருந்த தொடர்பு' அவருடைய இறுதி நூலாகும். அவருக்கு அப்பொழுது வயது 89.

38 வயதில் எடுத்த எழுதுகோலை 89 வயது வரையில் பயன்படுத்திய அவரது படைப்பாற்றல் பிற தமிழக அரசியல் தலைவர்களிடையே காணப்படாததாகும்.

அவருடைய நூல் பள்ளிப்பாட நூல்களா? சிறுகதைகளா? இல்லை அவரையோ, இவரையோ அந்தக் கட்சியையோ, இந்தக் கட்சியையோ, அந்தச் சாதியையோ, இந்தச் சாதியையோ ஏசுகின்ற பிரசார நூல்களா? அப்படியுமில்லை பழம்பெரும் கவிஞர்களின், அறிஞர்களின் எழுத்-தோவியங்களில் இருந்து அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சேகரித்து எடுத்த தொகுப்பு நூல்களா? அதெல்லாமில்லை.

அவருடைய நூல்களிலே சில வரலாறு; மற்றும் சில இலக்கிய ஆராய்ச்சி, இன்னும் சில ஆன்மீக விளக்கவுரைகள். அவரைப் பதிப்பாசிரியராக அடையாளம் காட்டிய நூல் ஒன்றே ஒன்றுதான். அது, 1980இல் வெளிவந்த 'ஔவையார் அருளிச் செய்த கல்வியொழுக்கம்' எனும் நூலாகும்.

அரசியல், இலக்கிய நூலாசிரியரான அவரை சிறுகதையாசிரியராக அறிமுகப்படுத்திய நூல் ஒன்றே ஒன்றுதான்! அது 1980இல் வெளிவந்த 'வைகுந்தம் திறந்தது' எனும் சிறுகதைத் தொகுப்பு நூலாகும்.

மற்றவையனைத்தும் அரசியல், சமுதாயம், வரலாறு, ஆன்மீகம், இலக்கியம் என்று சொல்லத்தக்க, என்றென்றும் நிலைத்திருக்கத்தக்க, சாதி, மத கட்சி பேதமின்றித் தமிழர் எல்லோரும் விரும்பத்தக்க அறிவுச் செல்வங்களாகும். தமது பிறந்தநாளான ஜூன் 26இல் தமது நூலை ஆண்டுதோறும் வெளியிட்டு வந்தார்.

அவருடைய நூல்களின் பல பதிப்புகளையும் சேர்த்துக் கணக்கிட்டால் மொத்த பக்கங்கள் 25000 எனத் தற்பொழுது தெரியவருகின்றது.

## மொழி பெயர்ப்பு நூல்கள்

ம.பொ.சி.யின் 'கப்பலோட்டிய சிதம்பரனார்', 'வீரபாண்டிய கட்டபொம்மன்', 'விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு', 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு', 'விடுதலைப் போரில் தமிழகம் (2 பாகங்கள்)' எனும் நூல்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் பெற்று வெளிவந்துள்ளன.

"The Great Patriot V.O. Chidambaram Pillai" எனும் நூல் 1972இல் வெளிவந்தது. மொழி பெயர்த்தவர் சௌந்திரா மகாதேவன். வெளியிட்டது ம.பொ.சி.யின் பலநூல்களை வெளியிட்ட 'இன்ப நிலையம்' மயிலாப்பூர், சென்னை. "The First Partiort Veerapandya Kattabommon" எனும் நூல் 1980இல் வெளிவந்தது. மொழி பெயர்த்தவர்

எஸ்.சிவராமகிருஷ்ணன். ம.பொ.சி.யின் பலநூல்களை வெளியிட்டு வரும் 'பூங்கொடி' பதிப்பகம், சென்னை, இந்நூலை வெளியிட்டது. "History of the Growth of Tamil during the Indian war of Independence" எனும் நூல் 1980இல் வெளிவந்தது. மொழி பெயர்த்தவர் ஆங்கிலப் பேராசிரியர் முனைவர் க.செல்லப்பன்; வெளியிட்டது சென்னைப் பல்கலைக்கழகம். 'History of Freedom movement in Tamil Nadu' எனும் நூல் 1988இல் வெளிவந்தது. மொழி பெயர்த்தவர் ஆங்கிலப் பேராசிரியர் முனைவர் க செல்லப்பன். தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் இந்நூலை வெளியிட்டது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' எனும் நூலின் ஆங்கில மொழியாக்கத்தை 'The Universal Vision of Saint Sri Ramalinga'(1987) வெளியிட்டது. மொழி பெயர்த்தவர் ஆங்கிலப் பேராசிரியர் முனைவர் ஆர்.கணபதி.

"ஆங்கிலத்தில் புலமைபெற்ற அறிஞர் பெருமக்களும் பல்கலைக் கழகங்களின் வேந்தர்களும், இணைவேந்தர்களும், துணைவேந்தர்களும் தமிழ்மொழிக்கு அப்பாலுள்ள அறிஞர் உலகத்துக்கு என்னை அறிமுகப்படுத்த உதவிபுரிந்ததை என்றென்றும் நன்றியுணர்வோடு நினைவில் கொள்ள யான் கடமைப்பட்டுள்ளேன்" என்று ம.பொ.சி. உளம் நெகிழ்ந்து குறிப்பிட்டுள்ளார். (செங்கோல், 20.8.1989).

## பாடநூல்கள்

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் ஆரம்பக் கல்வியைக்கூட முழுவதுமாகக் கற்க முடியாத ம.பொ.சி.யின் நூல்கள் பல பாடநூல்களாக வைக்கப்பட்டுள்ளன.

வீரபாண்டிய கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன், வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு ஆகிய மூன்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பாடமாக வைக்கப்பட்டுள்ளன. முதல் இருநூல்கள் பெங்களூர் பல்கலைக்கழகம் கல்லூரிகளில் பாடமாக வைத்தப் பிறகுதான் தமிழ்நாட்டிலே உயர்நிலை பள்ளிகளில் பாடமாக வைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' சுருக்கப் பெற்று உயர்நிலைப் பள்ளிகளில் பாடமாக்கப்பட்டுள்ளது.

'பாரதியின் பாதையிலே', 'கம்பர் கவியின்பம்', 'தொல்காப்பியர் முதல் பாரதியார் வரை' எனும் நூல்கள் சென்னை, மதுரை, திருச்சி பல்கலைக்கழகங்களால், கல்லூரிகளில் பாடநூல்களாக வைக்கப்பட்டன. 'கலிங்கத்துப் பரணி' என்னும் ஆராய்ச்சி நூல் மேல் பட்டப் படிப்பிற்குத் (எம்.ஏ) தகவல் நூலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. 'அமெரிக்காவில் ஒரு வாரம்' எனும் நூல் மதுரை லேடி டோக் கல்லூரியில் பாடநூலாக வைக்கப்பட்டது.

## பரிசு பெற்ற நூல்கள்

1966- ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாதமியின் பரிசு 'வள்ளலார்கண்ட ஒருமைப்பாடு' எனும் நூலிற்கு வழங்கப் பெற்றது. 1985ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த தமிழ் நூல்களுக்கானப் பரிசு 'எனது போராட்டம்' எனும் நூலிற்கு அளிக்கப்பட்டது. 1978இல் புதுதில்லியில் நடைபெற்ற புத்தகக் காட்சியை யொட்டி வெளியிடப் பெற்ற மலரில் பல்வேறு மொழிகளில் 1970-77 காலகட்டத்தில் வெளிவந்த 70 நூல்களைப் பற்றிய மதிப்புரைகள் வெளியிடப் பெற்றன. இவற்றுள், 'எனது போராட்டம்' ஒன்றாகும்

## நாட்டுடமையாக்கப் பெற்ற நூல்

1982-இல் வெளிவந்த ம.பொ.சி.யின் 'விடுதலைப் போரில் தமிழகம்', இரண்டாவது பதிப்பாக 1983இல் வெளிவந்தது. அப்பொழுது அன்றைய தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அந்நூலை அரசுடைமையாக்கி ஒரு லட்சம் ரூபாய் வழங்கினார். அரசுடை-மையாக்கப் பெற்றுப் பல ஆண்டுகள் கழிந்தும் அந்நூல் அரசு சார்பில் வெளியிடப்படாததால் பிரசுர உரிமை வேண்டி ம.பொ.சி. கோரிக்கை விடுத்தார். 1993-இல் அன்றைய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அதே நூலை ம.பொ.சி.யின் வேண்டுகோளுங்கிணங்க நாட்டுடைமையாக்கினார். இதனால் எவர் வேண்டுமானும் எவ்வித அனுமதியும் இன்றி அந்நூலை வெளியிடலாம் எனும் நிலைமை தோன்றியது. முதல் இரு பதிப்புகளை வெளியிட்ட 'பூங்கொடி பதிப்பகம்' அந்நூலையும் மூன்றாம் பதிப்பாக வெளியிட்டது. இந்தப் பதிப்பின் முன்னுரையில், 'ஒரு எழுத்தாளருடைய நூல் அவர் வாழுங்காலத்தில் நாட்டுடமையாக்கப்படுவது, அதுவும் அந்த எழுத்தாளரின் விருப்பப்படி அரசு ஆணைப் பிறப்பித்தது, இந்த நூலை ஒட்டிதான் நிகழும் புதுமையாகும்" என்று சற்றுப் பெருமிதத்துடன் ம.பொ.சி. குறிப்பிட்டார். ம.பொ.சி.யின் நூல்களை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று கலைஞர் மு.கருணாநிதி ஆட்சியில் கோரிக்கை எழுந்தபொழுது, ஏற்கனவே நாட்டுடைமையாக்கப்பட்டுவிட்டது என்று சட்டமன்றத்தில் பதிலளிக்கப்பட்டது. 'விடுதலைப் போரில் தமிழகம்' எனும் நூல் ஒன்று மட்டுமே நாட்டுடைமையாக்கப்பட்டது. அவருடைய நூல்கள் அனைத்தும் அல்ல என்பது இந்நூலாசிரியரால் சுட்டிக் காண்பிக்கப் பெற்றது. (ஆசிரியருக்குக் கடிதம் : 'தினமணி' நாளிதழ் - 7.7.2000).

அவருடைய நூல்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்க தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும் என்று குறிப்பிட வேண்டியுள்ளது.

## பலதுறைகளில் முதல் நூல் படைத்தவர்

பலதுறைகளில் வெளிவந்த அவருடைய நூல்கள் அந்தந்தத் துறையில் முதன் முயற்சியாகும். இவ்வுண்மையைச் சில சான்றுகள் வழியே அவர் எழுதியதில் இருந்து தேர்ந்துதெளியலாம்.

'விடுதலைப் போரில் தமிழகம்' எனும் நூல் அத்துறையில் எழுதப் பெற்ற முதல் நூலாகும் என்பதை நூலாசிரியர் ம.பொ.சி.யே பின்வருமாறு சுட்டிக் காட்டியுள்ளார்

''இந்திய விடுதலைப்போர் முழுவதையும் நமக்குக் காட்டும் நூல் ஒன்று தமிழில் இதுவரை வெளிவரவில்லை. அதனால், அந்த வகையிலான முதல் நூலாக இந்நூல் அமைந்திருக்கிறது.''

'விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு' எனும் நூலும் அத்துறையில் வெளிவந்த முதல் நூல் என்பதையும் நூலின் முன்னுரையில் கூறப் பெற்ற பின்வரும் கருத்து வழியே அறிகின்றோம்.

''விடுதலைப்போராட்டக் காலத்திலே, தமிழ்மொழியும் அதன் வழிப்பட்ட கலைகளும் அடைந்த மறுமலர்ச்சியினை, அந்த் மறுமலர்ச்சியைக் காணத் தமிழரிலே ஆன்றோர் பலர் ஆற்றியுள்ள அருந்தொண்டுகளை ஒருநூல் வழியாக அறிந்து கொள்ள தமிழ்மக்களுக்கு வாய்ப்பில்லை. இந்தக் குறையை அகற்றக் கருதியே 'விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு' என்னும் இந்நூலை எழுதி வெளியிட்டிருக்கிறேன்.''

''இந்நூல் தமிழகத்தின் அரை நூற்றாண்டுக்கால அரசியல் வரலாறு. இன அடிப்படையில் தமிழகத்தின் அரசியல் வரலாறாக வெளிவரும் முதல் நூல் இதுவாகும்.'' இந்தக் குறிப்புரை ம.பொ.சி.யின் 'தமிழகத்தில் பிறமொழியினர்' எனும் நூலைப் பற்றியதாகும்.

அவருடைய துறை சார்ந்த முதன்முயற்சி நூல்களுள், 'இலக்கியங்களில் இனவுணர்ச்சி' என்பதும் ஒன்றாகும். இதுகுறித்து அவர் நூலின் முன்னுரையில் எழுதியதாவது :

''தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் தமிழ் இனவுணர்ச்சிக் கண்கொண்டு ஆய்வது இந்நூலின் மூலம் தொடங்கும் முதல்முயற்சியாதலால், ஆராய்ச்சி உலகம் இந்த நூலை நல்லெண்ணத்துடன் வரவேற்கும் என நம்புகிறேன்''

'செங்கோல்' இதழில் 'சிலப்பதிகாரம்' பற்றிய ஆய்வுத் தொடர் வெளிவர விருப்பதைப் பற்றிய ஒருவிளம்பரத்தில் ''அரசியல் பொருளாதாரம் சமூகம் இந்த முக்கோணங்களிலிருந்து சிலம்பை ஆராயும் முதல் முயற்சி'' என்று குறிப்பிடப் பெற்றது.

'தமிழரும் பிரிட்டிஷ் திட்டமும்' எனும் ம.பொ.சி.யின் நூல் 1946இல் வெளிவந்தது. பிரிட்டிஷ் மந்திரிசபையின் தூதுக்குழு இந்திய சுதந்திரம் பற்றி அளித்திட்ட அறிக்கையை 'தேசிய இனம்' என்ற கண்ணோட்டத்துடன் ம.பொ.சி. ஆராய்ந்து எழுதிய நூல், 'தமிழரும் பிரிட்டிஷ் திட்டமும்' எனும் நூலாகும். இந்தத் திட்டத்தைப் பற்றி கட்சிவாரியாகவும், மதவாரியாகவும் பல கருத்துகளும், திருத்தங்களும் கூறப்பட்டன. ஆனால், ம.பொ.சி.தான் முதன்முதலில் 'தேசிய இனம்' எனும் பார்வையில் ஆய்வு செய்து விளக்கியுள்ளார்.

## சோதனை முயற்சி

அரசியல் நூல்கள், இலக்கியப் படைப்புகள் முதலானவற்றை எழுதி வெளியிடுவதிலேயே தமது காலத்தையும், ஆற்றலையும் ஒதுக்கிய ம.பொ.சி; தொடக்கக் காலத்தில் 1946-1947களில் சிறுகதைகளும் எழுதியுள்ளார். இது, அவருடைய சோதனை முயற்சி ஆர்வத்தைக் காட்டியது. அந்தச் சோதனை முயற்சியைப் 'பிள்ளை விளையாட்டு' என்று அவரே 'வைகுந்தம் திறந்தது' எனும் அவருடைய சிறுகதைத் தொகுப்பு நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

சிறுகதை, புதினம் குறித்த நவீனப் படைப்பிலக்கியத்தில் ஓரளவு அறிமுகம் கொண்டவர்,ம பொ.சி. அதை மேலும் வளர்த்தெடுக்க வாய்ப்பில்லாமல் அவருடைய இலக்கிய வாழ்க்கை அமைந்தது

'கிராமணி குலம்', 'தமிழ் முரசு' இதழ்களில் அவர் எழுதிய சிறுகதைகள் ஆறு தொகுக்கப் பெற்று அவருடைய 75-ஆவது பிறந்தநாளில் (26.6.1980) வெளியிடப் பெற்றது . தொகுத்தவர் ம.பொ.சி.யின் இதழ் ஆய்வாளர் முன்னோடியான மா.ரா.இளங்கோவன். ஒவ்வொரு சிறுகதையைப் பற்றியும் திறனாய்வாளர் அறுவர் செய்த விமர்சனங்களும் தொகுப்பில் சேர்க்கப் பெற்றுள்ளன.

'வைகுந்தம் திறந்தது', 'செல்வத்தைத் தேய்க்கும் படை', 'வேறு வழி', 'தந்திரம் பலித்தது', 'வீரத்தாய்', 'நந்தன்-விவசாயி' என்பன தொகுப்பில் உள்ள ஆறு சிறுகதைகளாகும். இவற்றுள் 'தரித்திரம் பலித்தது' எனும் சிறுகதை 'கிராமணிகுலம்' (பிப்ரவரி 10, 1937) இதழில் வெளிவந்தது. பிற, 'தமிழ்முரசு' இதழ்களில் வெளிவந்தவை.

இந்நூலிற்கு அவர் எழுதியுள்ள முன்னுரையின் பின்வரும் பகுதி, குறிப்பிடத்தக்கது.

"அந்தச் சிறுகதைகள் யான் கொண்டுள்ள சமூக பொருளாதாரக் கொள்கைகளையொட்டிய பிரசாரப் படைப்புகளாகும். புதிய தமிழகம் படைக்கும் பணியில் யான் ஈடுபட்ட பின்னர், சிறுகதைஎழுத இயலாதவனாகிவிட்டேன். எழுதிய கதைகளையும் மறந்துவிட்டேன்......

"யான் சிறுகதை எழுதிய காலத்தைவிட இன்று சிறுகதை உலகம் எவ்வளவோ முன்னேறியிருக்கிறது. அதனால், பிள்ளை விளையாட்டாக யான் எழுதிய கதைகளை இன்றைய எழுத்தாளர்கள் அனுதாபத்துடன் பார்ப்பார்கள் என்று நம்புகிறேன்."

தமது சிறுகதைகள், 'சமூக-பொருளாதாரக் கொள்கை-களையொட்டிய பிரசாரம்' என்று ம.பொ.சி. குறிப்பிட்டிருந்ததில் இருந்து சற்று மாறுபட்டகோணத்தில் உள்ளது அவருடைய 'தந்திரம் பலித்தது' (1937) எனும் சிறுகதை. இந்தக் கதையின் களம் காஷ்மீரத்தின் ஸ்ரீநகர் ஆகும். ஸ்ரீநகரில் நதிநீர் வெள்ளப் பெருக்கால் அடிக்கடி சேதமடை-கின்றது ஆற்றின் போக்கை மாற்றிட மக்கள் ஒத்துழைப்பைப் பெற ஒரு தந்திரத்தை கையாண்டார் மதிநுட்பம் வாய்ந்த ஓர் அமைச்சர். தங்க, வெள்ளிக்காசுகளை நீர்ப் பெருக்கில் எறிய, அவற்றை மக்கள் வெளிக் கொணர மண்ணையும், கற்களையும் வெளியேற்ற,மணல் கற்கள் குவி மேடாகி, பள்ளத்தில் நீர்பாய நதி கரைகளுக்குள் கட்டுப் பெற்று செல்கிறது. அமைச்சருடைய 'தந்திரம் பலித்தது' நல்ல நிருவாகத்திறனை வெளிப்படுத்திய சிறகதை இது.

ஒருமுறை திருட்டுக் குற்றத்திற்காகச் சிறைசென்று விடுதலை பெற்ற ஒருவன் மனந்திருந்தி வாழ உழைத்தும் பிழைக்க முயன்றாலும், அவனை 'சிறை சென்று வந்தவன்' என ஏசிப்பேசும் சமூகச் சூழலில் அவன் 'வேறுவழி'யில்லாமல் மீண்டும் களவாடச் செல்கின்றான். இந்தச் சமூகப் பிரச்சினை இந்தச்சிறுகதையில் சித்தரிக்கப் பெற்றுள்ளது.

15 1.1947இல் 'தமிழ்முரசு' இதழில் ம.பொ.சி., 'பாமரன்' எனும் புனைபெயரில் எழுதிய 'வைகுந்தம் திறந்தது' எனும் சமூக நீதிப் பிரச்சாரக் கதை வெளிவந்துள்ளது. இந்தச் சிறுகதை சோதனை முயற்சியேயானாலும் வடிவம், உள்ளடக்கம் இரண்டும் சிறுகதை இலக்கணத்திற்குச் சான்றாக அமைந்துள்ளது.

இந்தச் சிறுகதையின் சமூகநீதி நோக்கைப் புரிந்துக் கொள்வதற்கு, அந்தக் கதை வெளிவந்த அதே இதழில் ம.பொ.சி., எனும் பெயரில் வெளிவந்துள்ள 'ஆலயப் பிரவேசம்' எனும் கட்டுரை பயன்தருகின்றது. கட்டுரையின் பின்வரும் வாசகங்கள் குறிப்பிடத்தக்கன.

'இன்று ஆலயத்திறப்புகளுக்கு முன்னின்று பாடுபடும் பல பெரிய மனிதர்களை நான் நேரில் அறிவேன். அவர்கள் ஆதித்திராவிடர்களை ஆலயத்துக்குள் அழைத்துச் செல்வதில் காட்டும் அக்கறையில் ஐந்தில் ஒரு பங்கேனும் தங்கள் பண்ணைகளில் வேலை செய்யும் ஆதித்-திராவிடர்களின் வாழ்க்கையை உயர்த்துவதில் செலுத்த இயலவேண்டும்.'

'வைகுந்தம் திறந்தது' கதையில் வரும் வடமலை ஐயங்கார்,

திருவரங்கக் கோயிலில் அரிஜனமக்களின் ஆலயப் பிரவேசத்திற்குப் பலவாறு விரிவுரையாற்றினார். இந்த விரிவுரையைக் கேட்டு நெகிழ்ந்து போனவர்களில் செங்கன் என்பவனும் ஒருவன். "அவன் வேறு யாருமல்ல. வடமலை ஐயங்காரின் அடிமை. பங்களாத் தோட்டத்தின் காவற்காரனும்கூட. குடியிருப்பும் அங்கேதான்."

"நாளைக் காலை ஆறுமணிக்கு ஆலயத்துக்குள் செல்ல அனைவரும் வாருங்கள்" என்று ஐயங்கார் ஆணையைச் செவியில் வாங்கி தமது மனைவி சிலம்பாயியைக் காண்பதற்குப் பறந்தோடினான், செங்கன். குடிசையில் அவன் கண்ட காட்சி அவனைக் கதிகலங்க வைத்தது. 'சமீபத்தில் பெய்த மழையால் ஈரம் ஏறியிருந்த பிசுபிசுத்த கூரை. குடிசையில் வடபுறத்தில் சுவர் விழுந்திருந்தது. நோய் வாய்ப்பட்டிருந்த சிலம்பாயின் முனுகல் சப்தம் மட்டும் கேட்டது. அவளை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல, 'எஜமான்' உதவிக்காக ஓடினான். பங்களா டாக்டரை அனுப்பி வைக்குமாறு கெஞ்சினான். "சிலம்பாயியாவது செருப்பாவது!... சீ, நாயே! எல்லாம் பொழுது விடிந்தால் முனிசிபல் ஆஸ்பத்திரி திறக்கும் போ" என்று விரட்டி-விடுகிறார். விடியற்காலையில் ஏற்பாடு செய்துள்ள ஆலயப்பிரவேசச் சிந்தனையில் மூழ்கி விடுகின்றார், வடமலை ஐயங்கார்.

வேதனையும்,விரக்தியும் வாட்டிட குடிசை திரும்பிய செங்கன், சிலம்பாயி தன் ஒரே மகள் செல்லத்தை மார்புறுத் தழுவிய நிலையில் பிணமாகக் கிடந்ததைக் கண்டு கதறினான். இதற்கு மேலே ம.பொ.சி. - பாமரன் - சிறுகதையை எவ்வளவு கலைநயத்துடன் முடித்தார் என்பதை பின்வருமாறு அறிகின்றோம்.

"ஆம், விடிந்தால் திருவரங்கப் பெருமானின் திருக்கோயில் கபாடம் திறக்கும், அவருடைய திருவருள் கிடைக்கும் என்றெல்லாம் எண்ணியிருந்த சிலம்பாயிக்குத் திருவரங்கமல்ல, வைகுந்தமே திறந்துவிட்டது! செங்கன் செல்லத்தை மடியில் வைத்துச் சிலம்பாயின் பிரேதத்தின் பக்கத்திலிருந்து பொழுது விடியும்நேரத்தை எதிர்-பார்த்திருந்தான். அதிகாலை ஐந்து மணி, வடமலை ஐயங்கார் பங்களாவின் வாயிற்புறத்தே இருந்து எழுந்த ஜயகோஷம் செங்கனின் காதைத்துளைக்கிறது. 'தீண்டாமை ஒழிக', 'ஹரிஜன உத்தாரகர் வடமலை ஐயங்கார் வாழ்க!"என்ற கோஷம் '

15.4.1947 'தமிழ்முரசி'ல் 'பாமரன்' எனும் புனைபெயரில் ம.பொ.சி. 'செல்வத்தை தேய்க்கும் படை' எனும் சிறுகதையை வர்க்கப் பார்வை-யில் எழுதியுள்ளார். கோயமுத்தூர் பஞ்சாலையில் வேலை செய்த ஒரு தொழிலாளி, காசநோயால் பீடிக்கப் பெற்ற நிலையில் 'வேலைக்குத் தகுதியற்றவர்' என்று காரணம் காட்டப் பெற்று வேலையில் இருந்து

நீக்கப் பெற்றார். முதலாளித்துவம் பரம்பரையாகத் தொழிலாளர்களை பலிவாங்கி வருவதை எதிர்த்துப் 'பழிக்குப் பழி' வாங்க எழும் புரட்சிப் படையில் தன் மைந்தன் சூரப்பன் சேர வேண்டும் என விரும்பினான், மரணப்படுக்கையில் கிடந்த ஆலைத் தொழிலாளி. சூரப்பன் பதினாறு வயதில், புரட்சிக்காரனாக மாறிவிட்டான். ஆம், 'செல்வத்தைத் தேய்க்கும் படை'யில் தலைமறைவாகிவிட்டான். இதுதான் கதையின் சாராம்சம்.

'புதிய பார்வை' எனும் குறிப்பில் பெரிய புராண நந்தனை பொருளாதார நோக்கில் விவசாயியாகப் படைத்த சிறுகதைதான் 'நந்தன் – விவசாயி' இது, 15.2.1947இல் தமிழ்முரசில் வெளிவந்தது. கதையின் தொடக்க வரிகளாகத் தமது 'புதிய பார்வை'யைப் பின்வருமாறு விளக்கியுள்ளர் ம.பொ.சி.

"நந்தன் கதையை அறியாத மக்கள் இல்லை. ஆனால் புராண முறைப்படி அறிந்திருக்கிறோமே ஒழிய, பொருளாதார முறைப்படி அறிந்தோமில்லை. நந்தனார் சரித்திரக் கீர்த்தனையைப் பொருளாதாரக் கண்கொண்டு நுணுகி ஆராய்வார்க்குத் தீண்டாமை தோன்றியதன் காரணமும் அதன் விளைவாகப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னே நிலப்பிரபுக்களின் காலின்கீழ் வீரத்தமிழர்களான தீண்டாத மக்கள் எப்படி நசுக்கப்பட்டார்களென்பதும் நன்கு விளங்கும்." இனி, கதையை ஆராய்வோம். சிறுகதைத் தொகுப்பில் சேர்க்கப்பட்டிருந்தாலும், 'நந்தன் – விவசாயி' ஓர் ஆய்வுக்கட்டுரையேயாகும்.

ஜூலை 1946 – தமிழ்முரசில் புறநானூறு 278, 279ஆம் பாடல்களைத் தழுவி 'ஞானம்' எனும் புனைபெயரில் ம.பொ.சி. எழுதிய 'வீரத்தாய்' எனும் சிறுகதை வெளிவந்துள்ளது. சிறுகதை வடிவம் நன்கு அமையவில்லை. ஆனால், சங்ககால வீரத்தாய்மார் வீரவுணர்வை விளக்கி, 'இன்றைய அடிமைநாட்டுத் தமிழ் பெண்களுக்கு வழிகாட்டி மறைந்த வீரத்தாய் வாழ்க' எனும் பிரசாரக் குறிப்பு இறுதியில் வைக்கப் பெற்றுள்ளது.

இவ்வாறு சோதனை முயற்சியாக ம.பொ.சி படைப்பிலக்கியத்துறையில் தடம் பதித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிலநூல்களின் தோற்றுவாய்க் குறித்து ம.பொ.சி.

தமது நூல்கள் சிலவற்றின் தோற்றத்திற்கான புறத்தூண்டுதலையும், அகத்தூண்டுதலையும் ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார். இங்கு இருநூல்களின் படைப்புச் சூழலிற்கான ம.பொ.சி.யின் விளக்கம் கூறப்படுகின்றது. முதலாவதாக 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு'-ம், இரண்டாவதாக, 'இலக்கியங்களில் புத்திரசோகம்' என்பதும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' தோற்றத்திற்கானச் சூழலைப் பின்வருமாறு எழுதியுள்ளார், ம.பொ.சி.

"தேச சுதந்திரத்திற்கு ஏற்பட்டுள்ள அபாயத்தை நினைத்து நினைத்து வேதனையடைந்தேன். அந்த வேதனைக்குப் பரிகாரந்தேட ஆன்மீகச் சிந்தனை தேவையென்பதையும் உணர்ந்தேன். அதன் விளைவாக, 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்னும் தலைப்பில் 'செங்கோல்' வார இதழில் தொடர் கட்டுரை எழுதத் தொடங்கினேன். வாரந்தோறும், கட்டுரை எழுதும் நாளிலே, சில மணி நேரம் மௌனத்தையும், வேறு சில விரதங்களையும் கடைப்பிடித்தேன். எனது இதயத்தையே வள்ளற்பெருமானின் கோயிலாக்கினேன். நானே வியப்படையும் வண்ணம் எனது சிந்தனை சிறகடித்துப் பறந்தது. ஆம்; கட்டுரை எழுதும் நாள்களிலே.

"அதற்கு முன்பே பல ஆண்டுகளாக வள்ளலாரின் கவிதைகளையும் கட்டுரைகளையும் படித்தபோதெல்லாம் எனக்குத் தேவைப்படும் கவிதை வரிகளுக்கும் கட்டுரைகளின் பகுதிகளுக்கும் அடிக்கோடிட்டு வைத்திருந்தேன். அவையனைத்தையும் பயன்படுத்தி 36 கட்டுரைகளை தொடர்ந்து எழுதினேன்." (செங்கோல் - 29.5.1988).

1962 நவம்பர் 20இல் 'மக்கள் சீனம்', 'எல்லைத் தகராறு' எனும் பெயரில் ஆக்ரமிப்புப் படையெடுப்பை இந்தியாவின் மீது தொடங்கியபொழுது, ம.பொ.சி. 'ஆன்மீக உணர்வு' கொண்டு ஆறுதல் தேட நூலைப் படைத்தார்.

"அரசியல் துறையிலே ஏமாற்றங்களும் எதிர்ப்புகளும் ஏற்பட்டபோதெல்லாம் - துரோகங்களைச் சந்திக்க நேர்ந்தபோதெல்லாம் - என் மனம் ஆறுதலடையப் பயன்பட்டது எனக்குள்ள ஆன்மீக உணர்வுதான்" என்று ம.பொ.சி. அவருடைய 'ஆன்மீகமும் அரசியலும்' (1980) எனும் நூலின் முன்னுரையில் கூறியுள்ளதும் இங்கு இணைத்துச் சிந்திக்கத்தக்கது.

ம.பொ.சி.யின் ஒரே மகன் திருநாவுக்கரசு 17.2.1986இல் அகால மரணமடைந்தது, ம.பொ.சி.யை பேரதிர்ச்சிக்குள்ளாக்கியது இந்தப் பேரதிர்ச்சியில் இருந்து ஆறுதல் பெற 'இலக்கியங்களில் புத்திர சோகம்' எனும் தலைப்பில் செங்கோல் இதழில் 23.3.1986 முதல் 11.5.1986 வரையில் ஏழு கட்டுரைகள் எழுதினார்.

ஒரே மகனின் அகால மறைவு தந்த மனவேதனையின் வெளிப்பாடாக நூலைப் படைத்தார். 26.6.1986இல் 'இலக்கியங்களில் புத்திரசோகம்' முதற்பதிப்பாக வெளிவந்தது. இதன் முன்னுரையில் கூறப்பெற்றுள்ள பின்வரும் கருத்து, நூலின் தோற்றுவாய் பற்றி விளக்கவல்லது.

"என் மனத்தில் துயரம் நிறைந்துவிடும்போது அதனைக் குறைத்துக் கொள்வதற்கு, யான் தமிழ் இலக்கியப் பூங்காவில் புகுவது உண்டு. அந்த வழக்கத்தையொட்டி, என் மைந்தனுடைய மரணத்திற்குப்பின், அவரது பிரிவுத் துயரை மறக்க ஏதேனும் ஒரு பொருளை எடுத்துக் கொண்டு, 'இலக்கியப் பூங்காவுக்குள் புகுந்து ஆய்வுக் கட்டுரை எழுத விரும்பினேன். எந்தப் பொருளை எடுத்து எழுதுவது என்று புரியாமல் தவித்தேன். கடைசியில் எனக்கு ஏற்பட்டுள்ள புத்திரசோகத்தையே பொருளாக்கி, என்னைப் போல் புத்திர சோகத்தால் பாதிக்கப்பட்ட பாத்திரங்களைத் தமிழ் இலக்கியங்களிலே தேடித்தேடி, அவர்களோடு உணர்வுபூர்வமாக ஒன்றுபட்டு இலக்கியத் தொடர் கட்டுரை ஒன்றை 'செங்கோல்' வார இதழில் எழுதலானேன்."

இராவணனின் புத்திரசோகம், மண்டோதரியின் புத்திரசோகம், தசரதனின் புத்திரசோகம், இராவணன் பெற்றோரின் புத்திரசோகம், மகாபாரதத்தில் புத்திர சோகம், சிலப்பதிகாரத்தில் புத்திரசோகம் எனும் தலைப்புகளில் ம.பொ.சி. எழுதியுள்ளார்.

## நூல்களின் வகைப்பாடுகள்

ம.பொ.சி.யின் நூல்களை பொருள்வகை நோக்கில் பலவாறாக வகைப்படுத்தலாம். அவையாவன :

தன் வரலாறு, படைப்பிலக்கியம், பயணநூல்கள், வாழ்க்கை வரலாறு, வள்ளலார் பற்றியன, பாரதியார் பற்றியன, காந்தியடிகள் பற்றியன. விடுதலைப்போர் பற்றியன. மொழிச் சிக்கல் பற்றியன, மாநில சுயாட்சிப் பிரசார நூல்கள் சிலப்பதிகாரம் பற்றிய நூல்கள், கம்பர் பற்றிய நூல்கள், பொது அரசியல் பற்றியன, திறனாய்வு நூல்கள், கட்டுரைகள் தொகுப்பு நூல்கள், பதிப்பித்த நூல் முதலானவை. இவற்றின் விவரம் இந்நூலின் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.

## மொழி நடை

ம.பொ.சி. நூல்களின் மொழிநடை எடுத்துக் கொண்ட பொருளுக்கு ஏற்ப அமைந்துள்ளது. அவர் நடையனைத்திலும் 'தெளிவு' அடித்தளமாக அமைந்துள்ளது. இந்தத் தெளிவிற்குக் காரணம் அவர் எடுத்துக் கொண்ட பொருளைத் தெளிவுற அறிந்திடுதலில் காட்டும் பேரார்வம் ஆகும். இதழியல் நடை, சொற்பொழிவு நடை, தத்துவ நடை, இலக்கிய நடை, திறனாய்வு நடை என அவருடைய நடை பல்வேறு வண்ணங்களில் ஒளிர்கின்றன.

"எழுத்துக்களில் இனிமையைப் பார்க்கலாம்; உயிர்த்துடிப்புடன் கூடிய இனிய எளிய தூயநடை அவருக்கு உடன்பிறப்பு" என்பது

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் மதிப்பீடு. "தெள்ளிய நடையில் எழுதவல்லவர். இவருடைய நடையில் வேகமும் காட்சியுமுண்டு" என்று ராஜாஜி சான்று பகர்ந்துள்ளார்.

அடுக்குமொழி நடையில் மோகம் கொள்ளாதது இவருடைய நடையில் மலரும் தெளிவுக்கு ஒரு முக்கியக் காரணம்.

மொழிநடையைப் பற்றி ம.பொ.சி, மலேசியா சென்றிருந்பொழுது அங்கு வானொலிப் பேட்டியொன்றில் கேள்வி கேட்கப் பெற்றபொழுது அவர் பின்வருமாறு விளக்கமளித்தார்.

"ஓர் ஆராய்ச்சி நூல் எழுதுகிறபோது, பெரிய இலக்கிய நுணுக்கங்களை - காலவரலாற்றை ஆராய்ந்து சொல்லுகிறபோது பண்டித நடைமிகத் தேவைப்படுகின்றது. அதே நேரத்தில் நம்முடைய பாரம்பரியம், பெருமை, கலாச்சாரக் கருவூலம் ஆகியவற்றை மக்களுக்கு வழங்குகின்றபோது, மக்கள் மொழியில்தான் சொல்லியாக வேண்டும். அதனை எளிய தமிழ், சாதாரணத் தமிழ் என்று சொல்ல வேண்டாம். 'பழகு தமிழ்' என்று சொன்னால் பொருந்தும். மக்களிடம் போகும்போது பழகுத் தமிழ் தேவை. பண்டிதர்களிடம் போகும்போது பண்டிதர் தமிழ் தேவை.

வாய்மொழி உரையில் இடம் பெறும் பேச்சு வழக்கு, வட்டாரச் சொற்கள் வழக்கு, வழக்கிழந்த சொற்கள் வழக்கு முதலானவற்றை எழுத்து நடையில் ஏற்காதவர் ம.பொ.சி. அவருடைய படைப்பில் பெரும்பாலும் வாசகர்களை முன்னிலையாகக் கொள்ளும் விளித் தொடர்கள் குறிப்பிடத்தக்கன. கருத்துக்களை வலியுறுத்துமிடங்களில், சிந்திக்கத் தூண்டும் இடங்களிலும் 'ஆம்' எனும் சொற்பிரயோகம் மீண்டும் மீண்டும் பெய்யப்படுவது அவருடைய மொழிநடையின் ஒருத்தனித்தன்மையாகும்.

## சில நூல்கள், சிலபார்வைகள்

ம.பொ.சி.யின் அரசியல், இலக்கிய நூல்களைப்பற்றிய மதிப்பீடு விரிவான ஆய்விற்குரியது. விரிவஞ்சி அவருடைய சில நூல்களைப் பற்றிய சில பார்வைகள் இங்கு வழக்கப்படுகின்றன விடுதலைப் போரில் தமிழகம், விடுதலைப்பேரில் தமிழ் வளர்ந்த வரலாறு, வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு. இலக்கியங்களில் இனவுணர்ச்சி, தமிழகத்தில் பிறமொழியினர் எனும் சில நூல்கள், சுருக்கமான சில பார்வைகளுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றுள்ளன.

## விடுதலைப் போரில் தமிழகம்

ம.பொ.சி.யின் நூல்களில் பக்கங்களின் எண்ணிக்கையின் மிகுதியால் மட்டுமல்லாமல் கட்டபொம்மன் காலம் முதல் (1792),

காந்தியடிகள் (1947) காலம் வரையிலான மிக நீண்ட காலப்பரப்பின் விடுதலைப் போராட்ட வரலாற்றையும் தக்க ஆவணப்பதிவோடும், ஆய்வு நோக்கோடும் மாபெரும் நூலாக இருபாகங்களில் அமைந்துள்ளது. 'விடுதலைப்போரில் தமிழகம்' (1982).

இந்நூலின் வரலாற்றுச் சிறப்பைக் குறித்து ம.பொ.சி.யே பின்வருமாறு முன்னுரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இந்நூல் 'விடுதலைப்போரில் தமிழகம்' என்னும் பெயரைப் பெற்றிருப்பினும், இந்திய விடுதலைப் போர் சம்பந்தப்பட்ட அனைத்திந்திய நிகழ்ச்சிகள் எல்லாம் இதிலே தரப்பட்டுள்ளன. இதனைப் படித்து முடித்தால், இந்திய விடுதலைப் போர் வரலாறு முழுவதையும் படித்தது போன்ற மனநிறைவு ஏற்படும். இது இந்த நூலுக்குள்ள தனிச் சிறப்பு என்றும் சொல்வேன். இந்திய விடுதலைப் போர் முழுவதையும் நமக்குக் காட்டும் நூல் ஒன்று தமிழில் இதுவரை வெளிவரவில்லை. அதனால் அந்த வகையிலான முதல் நூலாக இந்நூல் அமைந்திருக்கிறது"

'விடுதலைப் போரில் தமிழகம்' ஆற்றியுள்ள பங்களிப்பை மிகச் சுருக்கமாக 1947லேயே ம.பொ.சி. ஒரு கட்டுரையில் எழுதியுள்ளார். 15.8.1947இல் வெளிவந்த 'தமிழ்முரசு' இதழில் 'சுதந்திரப் போரில் தமிழகம்' எனும் தலைப்பில் 'ஞானம்' எனும் புனைபெயரில் பன்னிரண்டு பக்கங்களில் ஒரு கட்டுரையை ம.பொ.சி. எழுதியுள்ளார். இந்த வரலாறு ஒரு தமிழன் கையால் எழுதப்பட வேண்டும் என்றும் கட்டுரையில் பின்வருமாறு ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார்.

"... இதுவரையில் சுதந்திரப் போரில் தமிழகத்தின் தனிப்பங்கை ஒருவாறு தொகுத்துக் கூறினோம். அதுவெளியிடுவதாயின் அது பல பாகங்களாக அமையும். அது ஒரு தனி மனிதரால் ஆகக்கூடிய காரியமும் அல்ல. ஆனால், அந்த வரலாறு என்றேனும் ஒருநாள் எழுதப்பட்டே ஆக வேண்டும் இதை எழுதும் கை தமிழன் என்ற இனவுணர்ச்சி கொண்டவருடையதாயின், அது வாய்மை வரலாறாக அமையும் என்பதில் ஐயமில்லை." (ப.29).

'தமிழ்முரசி'ல் 1947-இல் மேற்கண்டவாறு குறிப்பிட்ட ம.பொ.சி. 1980 ஜனவரி முதல் 'செங்கோல்' இதழில் 'விடுதலைப்போரில் தமிழகம்' எனும் கட்டுரைத் தொடரை இரண்டரையாண்டுக்காலம் எழுதினார்.

மேற்கூறியக் கருத்தில் வரலாறு, 'பல பாகங்களாக' வெளிவர வேண்டும். 'தமிழன் என்ற இனவுணர்ச்சி' கொண்டவர் எழுத வேண்டும் என்று அவர் அவாவியதை அவரே நிறைவேற்றிவிட்டார். "ஒரு தனி மனிதரால் ஆகக்கூடிய காரியமும் அல்ல" என்று குறிப்பிட்டதை, 'தனி மனிதரான' தம்மால் முடியும் என்று சாதனை செய்துள்ளார், ம.பொ.சி.

முற்கூறியக் கட்டுரை 15.8.1948இல் 'சுதந்திரப் போரில் தமிழகம்' எனும் தலைப்பிலேயே 32 பக்கங்களில் முதற்பதிப்பாக வெளிவந்தது. 1967 வரையில் நான்கு பதிப்புகளைக் கண்டது. 1948இல் முதற் பதிப்பின் முன்னுரையில் ம.பொ.சி. வெளியிட்டுள்ள பின்வரும் விளக்கமும், 'விடுதலைப் போரில் தமிழகம்' எனும் நூல் 1982இல் (26.6.1982) வெளிவந்ததற்கான முன்னோட்டமாகவும் விளங்குகிறது.

"ஏகாதிபத்தியம் வெளியேறிவிட்ட இன்று தமிழகத்தில் தமிழரசு வேண்டுமென்ற தமிழினத்தின் கோரிக்கை புறக்கணிக்கப்படுகிறது. ஆகவே, கடந்த கால சுதந்திரப் போரில் தமிழினத்தார் செய்த கடமையை நினைவூட்டி உரிமைக்கும் போராடும்படி மக்களைத் தூண்டவே இந்நூல் வெளிவருகிறது.......

"இந்திய சதந்திரப் போரில் சற்றேறக்குறைய ஒரு கால் நூற்றாண்டாக நேரடியாகப் பங்கு கொண்டவன் என்ற முறையில் நான் கண்டதை - கேட்டதை படித்ததைக் கொண்டு இச்சிறு நூலை வெளியிடத் துணிந்தேன். இதில் எனது எண்ணத்தின் ஒரு ஓரம்கூடப் பூர்த்தியாக-வில்லை. என்றாலும் ஆற்றலும் அவகாசமும் உள்ள அரசியல் தலைவர்கள் எவரேனும் அந்தத் தொண்டை மேற்கொள்ளத் தூண்டு-வதற்காகவே இதை வெளியிடுகிறேன். தமிழகம் ஆதரிக்குமா?"

1947இல் 'எனது எண்ணத்தில் ஒரு ஓரம்கூடப் பூர்த்தியாகவில்லை' என்று குறிப்பிட்ட ம.பொ.சி. 1982இல் 692 பக்கங்களைக் கொண்ட முதல் பாகத்தையும், 628 பக்கங்கள் கொண்ட இரண்டாம் பாகத்தையும் வெளியிட்டு, சுமார் ஒன்றரை நூற்றாண்டுக் கால விடுதலைப் போராட்-டத்தின் பல நீரோட்டங்களையும் இணைத்து முழுமையான வரலாற்றை ம.பொ.சி. படைத்துள்ளது நயந்து வியத்தலுக்குரியது.

இந்நூலின் முக்கியச் சிறப்புகளுள் இந்தியாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரம்மசமாஜம், ஆர்யசமாஜம், தியோசாபிகல் சொஸைடி, இராமகிருஷ்ணா மிஷன், சமரச சுத்த சன்மார்க்க சங்கம் முதலான சமய, ஆன்மீக இயக்கங்கள், அரசியல் தேசிய எழுச்சிக்கு உதவும் வகையில் கலாசார தேசிய எழுச்சியை உருவாக்கியதைப் பற்றிய சிறு ஆய்வு ஒன்றாகும்.

ஹ்யூம் சகாப்தம், திலகர் சகாப்தம்,காந்தி சகாப்தம் என விடுதலைப் போராட்ட வரலாற்றைக் காலப் பகுப்புகளாக வகுத்துக் கொண்டும், தனி நபர் ஆயுதப் போராட்டம், இயக்கரீதியான ஆயுதப்புரட்சிப் போராட்டம், 1857ஆம் ஆண்டு சிப்பாய் புரட்சிக்கு முன்னும் பின்னுமான பிரதேச ரீதியாலானப் புரட்சிகள் முதலான விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு நீரோட்டங்களை விளக்கி ம.பொ.சி எழுதியுள்ளது, மற்றொரு சிறப்பாகும்.

## விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த வரலாறு

தமிழகத்தில் தமிழ்மொழியைப் பல்வேறு சமய, சமூக, அரசியல் இயக்கங்கள் காலந்தோறும் வளர்த்தெடுத்து வருகின்றன. விடுதலைப் போரை மையமாக வைத்து ம.பொ.சி. எழுதிய பத்து நூல்களுள் 'விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு' என்பது ஒன்றாகும். ஒருவகையில், 'சுதந்திரப் போரில் தமிழகம்' (1948) எனும் அரிய ஆய்வுநூலின் தொடர்ச்சியாக, 'விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த வரலாறு' (1970) வெளிவந்தது என்று குறிப்பிடலாம்.

தேசிய இயக்கங்கள்,திராவிட இயக்கங்கள் எனக் கட்சிகளுக்கிடைய தோன்றும் போட்டி, பூசல்கள் காரணமாக, தமிழ்மொழியை வளர்த்த 'பெருமை'யிலே 'முன்னுரிமை'கோரும் ஆய்வுகள் நிகழ்கின்றன. இந்தச் சூழலிலில் விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாற்றை நடுநிலைமையில் ஆவணப்படுத்த வேண்டியப் பொறுப்பை முதன்முதலில் இந்நூலின் வாயிலாக ம.பொ.சி. எடுத்துக் கொண்டார்.

"தமிழ்மொழியை வளர்த்த பெருமையிலே, இன்றுள்ள அரசியல் கட்சிகளிலே எந்த ஒரு கட்சிக்கும் தனியுரிமை இருப்பதாக நான் நம்பவில்லை என்பதனை இங்கு அழுத்தந்திருத்தமாக எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். ஆம்! என் தலைமையின் கீழ் இயங்குகின்ற தமிழ்மொழியை வளர்ப்பதற்கென்றே வாழ்ந்து வருகின்ற தமிழரசுக் கழகத்தையும் நினைவில் கொண்டே இதனைக் கூறுகின்றேன். தமிழ்மொழியை வளர்க்கும் பணி அம்மொழி தோன்றிய காலத்தொட்டே தொடர்ந்து நடந்து வருகின்றது. அதிலே கடவுளுக்கும் பங்குண்டு என்பது பண்டையப் புலவர் பெருமக்களின் நம்பிக்கை." இவ்வாறு ம.பொ.சி. நூலின் முன்னுரையில் எழுதியுள்ளது அவருடைய நடுநிலைமை நோக்கைச் சுட்டிக்காட்டுகின்றது.

இந்நூல் எழுதப்பட வேண்டியதற்கானச் சூழலைப் பற்றி ம.பொ.சி. பின்வருமாறு முன்னுரையில் எழுதியுள்ளார்.

"பழைய இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் புனிதமான வரலாறு கட்சிப்பூசலால் புறக்கணிக்கப்பட்டு வரும் நிலையையும் பார்த்து வருகிறோம். காங்கிரஸ் மகாசபையின் தியாக வரலாற்றை உருவாக்குவதிலே பங்கு பெற்ற தியாகிகளிலேயும் பலர், இன்று காங்கிரசுக்கு வெளியே உள்ளவர்கள், அந்த வீரவரலாற்றை எழுச்சியுடன் எடுத்துச் சொல்வதற்கான மனப்பான்மையைப் பெற்றிருக்கவில்லை. இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் 'விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த வரலாறு' என்னும் இந்நூலை யான் மக்கள் மத்தியில் கொண்டு வந்துள்ளேன்.

மன்னர்கள் சகாப்தம், திலகர் சகாப்தம், காந்தி சகாப்தம்

என்றுகாலகட்டப் பாகுபாடுகளைக்கொண்டு விடுதலைப் போரில் தனிநபர்களும், தனி நிறுவனங்களும் எவ்வாறு தமிழை வளர்த்தன என்பதை இந்நூலில் ம.பொ.சி. ஆய்வு செய்துள்ளார்.

'தமிழ்மொழி உரிமை இழந்த வரலாறு' எனும் முதல் அத்தியாயத்துடன் நூல் தொடங்கப்பட்டுள்ளது, ஒரு வரலாற்றுப் பின்னணியைத் தந்துள்ளது.

'மன்னர் சகாப்தம்' (1792-1801) எனும் தலைப்பில் நாட்டுப்புறப் பாடல்கள், கதைப் பாடல்கள் எவ்வாறு தமிழை வளர்த்தன என்பதை கட்டபொம்மன் கதைப்பாடல், கட்டபொம்மன்கும்மி, கட்டபொம்மு சண்டைக்கும்மி, வீரபாண்டியம், சிவகங்கைச் சரித்திரக்கும்மி எனும் நாட்டுப்புற இலக்கியங்கள் வாயிலாக ம.பொ.சி ஆய்வு செய்துள்ளார். புலவர்கள் மட்டுமல்லாமல் பாமரர்களும் வளர்த்தத் தமிழிற்கும் ம.பொ.சி. முக்கியத்துவம் கொடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

திலகர் சகாப்தத்தில் பாரதியார்,வ.உ.சி., சுப்பிரமணிய சிவாவின் தேசியம் வளர்த்த தமிழை விதந்தோதியுள்ளார் ம.பொ.சி. குறிப்பாகத் தனித்தமிழ் இயக்கத்தின் வேர்கள் சிவாவின் 'ஞானபாநு' இதழ்களில் எவ்வாறு கால் கொண்டுள்ளன என்பதை முதன்முதலில் ம.பொ.சி. இந்நூலில் விளக்கியுள்ளார்.

நாடகமேடை, திரைப்படம், இதழ்கள், பதிப்பகங்கள், சொற்பொழிவு மேடைகள் தொழிற்சங்க இயக்கங்கள் முதலானவை வளர்த்த தமிழ் ஆவணப்படுத்துப்பட்டுள்ளது, குறிப்பிடத்தக்கப் பங்களிப்பாகும்.

## விடுதலைக்குப்பின் தமிழ் வளர்ந்த வரலாறு

'விடுதலைப் போரில் தமிழ்வளர்ந்த வரலாறு' எனும் நூலின் தொடர்ச்சியாக 1978-இல் 'விடுதலைக்குப் பின் தமிழ் வளர்ந்த வரலாறு' வெளிவந்தது. தேசியத் தலைவர்கள் விடுதலைப் போராட்டத்திடையே தமிழை வளர்த்த அரும் பணியை வரலாற்றில் பதிவு செய்த ம.பொ.சி., அதே நோக்கில் 1941 முதல் 1977 வரையில் முப்பது ஆண்டு காலம் மைய அரசும், மாநில அரசும் தமிழை வளர்த்த வரலாற்றையும். ம.பொ.சி. ஆவணப்படுத்திவிட்டார். முதல் நூலைப் போல அல்லாது தனிப்பட்டவர்களும், வேறு தனி நிறுவனங்களும் ஆற்றியுள்ள பணியை இரண்டாம் நூலில் ம.பொ.சி. கூறவில்லை. "அந்த அளவுக்கு எனக்கோ வசதியோ, வாய்ப்போ, சாதனங்களோ இல்லாததுதான் காரணமாகும்" என்று ம.பொ சி. குறிப்பிட்டுள்ளார்.

1947 முதல் 1966 வரையில் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காங்கிரஸ் அரசு, 1967 முதல் 1975 வரையில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த தி.மு.க. அரசு, 1976 முதல் ஒன்றரை ஆண்டுகாலம் தமிழகத்தில் நிலவிய குடியரசுத் தலைவர் ஆட்சி, 1977 முதல் ஆட்சிப் பொறுப்பேற்ற

அண்ணா தி.மு.க. அரசு ஆகியன தமிழை வளர்த்தது இரண்டாவது நூலில் கூறப்பட்டுள்ளது. சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்கள், மாநில - மத்திய அரசுகளால் அமைக்கப் பெற்றுள்ள நிறுவனங்கள் ஆற்றியுள்ள தமிழ் வளர்ச்சிப் பணிகளை மட்டும் இந்த நூலில் பதிவுசெய்துள்ளார், ம.பொ.சி.

முதல் நூலைப் போலவே, இரண்டாவது நூலும் அத்துறையில் வந்த முதல் நூலாகும்.

1947 முதல் 1977 வரையில் தமிழகத்தில் தமிழ் வளர்ச்சிக்கெனப் பலவிதமான சட்டங்களும் திட்டங்களும் ஆணைகளும் அமல் நடத்தப் பட்டு வந்தாலும் "வடபுலத்திலுள்ள குஜராத், உத்தரப் பிரதேசம், பீகார், காஷ்மீர் ஆகிய மாநிலங்களில் ஆங்கில ஆதிக்கம் எந்த அளவுக்கு அகற்றப்பட்டதோ அந்த அளவுக்குத் தமிழகத்தில் அகற்றப்பட-வில்லை" எனும் தமது மனக் குறையையும் ம.பொ.சி. முடிவுரையில் வெளியிட்டுள்ளார்.

## வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு

திருவருட்பிரகாச வள்ளலார் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் (1823-1874), தமிழ்நாட்டின் புதிய விழிப்பிற்கான ஆதிகர்த்தாக்களுள் ஒருவர் என்று மகாகவி சுப்பிரமணிய பாரதியார். 'தமிழ்நாட்டின் விழிப்பு' எனும் சுதேசமித்திரன் கட்டுரையில் (25 ஜனவரி, 1918) குறிப்பிட்டுள்ளார். 'எம்மதமும் சம்மதம்', 'மதபேதங்களைக் கடந்து ஸர்வ ஸமரசக் கொள்கை' ஆகியவற்றைக் கொண்டு வள்ளலாரைப் போற்றியுள்ளார், பாரதியார். எவ்வாறெல்லாம் வள்ளலார் அருளுரைகள் புதிய வாழ்விற்கு ஆதிகர்த்தாக்களுள் ஒருவராகத் திகழ்ந்தார் என்று விளக்கமாக மகாகவி பாரதியார் எழுத வாய்ப்பேற்படவில்லை. ஆனால், சூத்திரமாகக் கூறினார். இந்தச் சூத்திரத்திற்கு விரிவுரையாக 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" எனும் ஆய்வு நூல் புகழ்பெற்றுள்ளது.

நவம்பர் 10, 1963இல் வெளிவந்த 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு நூலின் பதிப்பாளர் "இன்ப நிலையம்" சோம சுவாமிநாதன் பதிப்புரையில் பின்வரும் "உரிமை கோரல்" குறிப்பிடப் பெற்றுள்ளது.

"வள்ளலார் வாழ்க்கை வரலாறு தெள்ளிய முறையில் ஒழுங்காக இதுவரை யாராலும் எழுதப்படவில்லை. வெறும் வரலாறாக மட்டு-மல்லாமல், வள்ளலாரின், அருட் பாடல்களை விமர்சனக் கண்ணோட்-டத்துடன் ஆராய்ந்து எழுதப்பட்ட முதல் நூல் இதுவேயாகும்."

இந்தப் பதிப்புரை வாசகங்கள் பதிப்பாளர் பெயரில் உள்ளன என்றாலும் உண்மையில் அவை ம.பொ.சி.யால் எழுதப் பெற்றவையே என்பதை இந்நூலாசிரியர் நேரில் அறிந்தவர்.

9.2.1971இல் வெளிவந்த வடலூர் தவத்திரு ஊரன் அடிகளின் "இராமலிங்க அடிகள் வரலாறு" எனும் நூலில் அவருடைய நூலிற்கு முன் வெளிவந்த வள்ளலார் பற்றிய நூல்களின் பட்டியலைப் பின்வருமாறு தந்துள்ளார்.

1. திருவருட்பா வரலாறு - 1882- தொழுவூர் வேலாயுத முதலியார்.
2. இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் கீர்த்தனைகள் (264 பாடல்கள்) 1923 - சமரச பஜனை ச.மு. கந்தசாமிப் பிள்ளை.
3. இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் குறிப்புகள் - 1923 - மோசூர் கந்தசாமி முதலியார்.
4. இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும் - 1930 - மாம்பாக்கம் திருக்குறள் பீடம் அழகரடிகள்.
5. இராமலிங்க சுவாமிகள் சரிதம் - 1934 (409 பாடல்கள்) - பண்டிதை அசலாம்பிகை அம்மையார்.
6. Chidambaram Ramalinga Swamiji - His life mission and studies - 1935 T.V.G. Chetty.
7. அருட் சுடர் வள்ளலார் - 1940 - இரண்டாம் பதிப்பு ஆண்டு தெரியவில்லை - கவியோகி சுத்தானந்த பாரதியார்.
8. திருவருட் பிரகாச வள்ளலார் திவ்ய சரித்திரம் - திருத்தியப்பதிப்பு - 1955 - சென்னை சமரச சுத்த சன்மார்க்க சபை.
9. Life of Ramalingar - 1961 - பி.முத்தரசு எம்.ஏ., பி.டி.
10. சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் சரித்திரச் சுருக்கம் - 1963 - பொறையார் சிதம்பரம் சுவாமிகள்.
11. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு - 1963 - ம.பொ.சிவஞானம்.

மேற்காணும் நூல்களைக் கற்றறிந்த, வடலூர் சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம் சன்மார்க்க தேசிகன் 'ஊரன் அடிகளிடம் இந்நூலாசிரியர் முற்கூறிய "உரிமைகோரல்" பற்றி உசாவிய பொழுது, அவர் "அது உண்மையே" என்று ஒப்புதல் அளித்தார்

வள்ளலாரை மதவாதியாகக் கண்டவர்களிடையே, அவரைச் சமய ஞானியாக குறிப்பாகச் சமுதாய ஞானியாக முதன்மைப் படுத்திய நூல் "வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" ஆகும்.

நூலின் தலைப்பில் உள்ள 'ஒருமைப்பாடு' பற்றிய விளக்கம் வள்ளலார் பற்றிய ம.பொ.சி. பார்வையின் தனித்தன்மையைப் பின் வருமாறு எடுத்துரைக்கின்றது.

"வள்ளலார், பாரத தேசிய ஒருமைப்பாட்டை அடித்தளமாக வைத்து, அதன்மேல் மனித சமுதாய ஒருமைப்பாடு என்ற கட்டடத்தை எழுப்பி, அதன் மேல் உயிர்க் குலத்தின் ஒருமைப் பாட்டை வலியுறுத்தும் ஆன்ம நேய ஒருமைப்பாடு என்னும் சமரச சுத்த சன்மார்க்கக் கொடியைப் பறக்க விட்டுள்ளார். இப்படி மூன்று வகையான ஒருமைப்பாட்டினை அடிகளார் வலியுறுத்தியமையால், இந்த நூலுக்கு "வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" என்னும் பெயரைத் தந்துள்ளேன்.

நூல் எழுதியதற்கானக் காரணத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளதும் நூலின் தனித் தன்மையையும் முதன்மைத் தகுதியையும் உணர்த்துகின்றது.

"தெய்வப் பற்று - தேசப் பற்றுகளின் அடிப்படையில் வள்ளலாரின் சீர்திருத்தக் கருத்துக்கள் நாட்டில் பரப்பப் படவேண்டுமென்று என் உள்ளம் கருதியது. சாதிவெறி - மதவெறிகளிலிருந்து மனித சமுதாயத்தை விடுவிப்பதற்காக, சாதித்துவேஷம் மதத்துவேஷம் தெய்வத் துவேஷங்களுக்குப் புறம்பான ஒரு சீர்திருத்த இயக்கம் தோன்றுவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்றும் எண்ணினேன். அதற்கான துவக்கப் பணியாக வள்ளலாரின் பாடல்களிலுள்ள சீர்திருத்தக் கருத்துக்களை, அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளோடு ஒப்பு நோக்கி ஆராய்ந்து ஒரு நூல் எழுத வேண்டுமென்று முடிவு செய்தேன்.

பிரம்ம சமாஜத் தலைவர் ராஜா ராம்மோகன் ராய் (1772-1883), இராமகிருஷ்ண பரம ஹம்சர் (1833-1886), ஆர்ய சமாஜத் தலைவர் சுவாமி தயானந்தர் (1824-1883) ஆகியோருடைய சமய சமூகப் பணிகளோடு வள்ளலார் சமய - சமூகப் பணிகளும் ஒப்பிடப் பெற்று செய்துள்ள ஆய்வும் இந்நூலின், சிறப்புத் தன்மைகளுள் ஒன்றாகும்

"வள்ளலார், தம் காலத்தவரான இராஜா ராம் மோகன்ராய், தயானந்தர், இராமகிருஷ்ண பரமஹம்சர் ஆகியோரை விடவும் தீவிர சீர்திருத்தவாதியாகத் திகழ்ந்தார்" என்று ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார்.

வள்ளலாரின் சமூக சீர்திருத்தக் கொள்கைகளோடு, அவருடைய சமயங்கடந்த சுத்த சமரச சன்மார்க்க ஆன்மிக நெறிக் கொள்கைகளையும் ம.பொ.சி. தமது நூலில் விளக்கியுள்ளார். "மரணமிலாப் பெரு வாழ்வு", "ஆன்ம நேய ஒருமைப்பாடு", "ஜீவகாருண்ய ஒழுக்கம்", முதலான அத்யாயங்களில் வள்ளலாரின் ஆன்மிகக் கோட்பாடுகளை ஆய்வு செய்துள்ளார், ம.பொ.சி. இவற்றுடன் வள்ளலாருடைய வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் இணைந்து - இழைந்து சென்றுள்ளன.

காந்தியடிகள் - வள்ளலார் பற்றிய ஒப்பாய்வும் இந்நூலின் தனிச் சிறப்புகளில் ஒன்றாகும்.

"வள்ளலார் மறைந்த பின்பு அவரது அடிச் சுவட்டைத் தொடர்ந்து சமய - சமூகச் சீர்திருத்தப் பணி நடைபெற்றிருப்பின், தமிழகத்தில் தோன்றிய, வகுப்புவாத - நாத்திகக் கிளர்ச்சிகளைத் தவிர்த்திருக்கலாம்" எனும் கருத்தையும் ம.பொ.சி. இந்நூலில் வெளியிட்டுள்ளார். வள்ளலாரைப் பற்றி எட்டு நூல்கள் எழுதியுள்ளார் என்பதும் நினைவில் நிறுத்தப்பட வேண்டிய தாகும்.

வள்ளலாரிடம் ம.பொ.சி கொண்டிருந்த ஆழ்ந்தகன்ற பரம பக்தியுணர்வு நூலின் இறுதியில் பின் வருமாறு ஒலித்துக் கொண்டிருக்கிறது.

"தமிழகமே! பாரதமே, உலகப் பெரு நிலமே! மனித குலமே! உன்னை வாழ்விக்க வந்த வள்ளல் பெருமானை வாழ்த்து! வாழ்த்து! வாழ்த்து! நீ வாழ அதுவே வழி! - இராமலிங்கம், என்னும் பெயர் ஒவ்வொரு மனிதனும் இடையறாது ஓதவேண்டிய மந்திரமாக வேண்டும். இதுவே என் பிரார்த்தனை!"

## இலக்கியங்களில் இனவுணர்ச்சி

1976-இல் வெளிவந்த "இலக்கியங்களில் இனவுணர்ச்சி" எனும் நூல் தமிழரசு இயக்கத்தின் வார இதழான 'செங்கோலி'ல் 10.02.1975 முதல் 21.07.1976 வரை எழுதி வந்த கட்டுரைகளின் தொகுப்பாகும்.

"இதுவரை யான் எழுதி வெளியிட்டுள்ள 80-க்கும் மேற்பட்ட நூல்களிலே இந்நூலையே தலையாயதாக யான் கருதுகிறேன்" என்று நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார், ம.பொ.சி.

'தலையாயது' என்று ம.பொ.சி. குறிப்பிட்டது ஏன்? இலக்கியத் திறனாய்வில் பல்வேறு துறைகள் தோன்றி வளர்ந்தன என்றாலும், இனவுணர்ச்சியைக் கொண்டு இலக்கியத்தை ஆய்வு செய்யும் நெறியை ம.பொ.சி. தான் முதன் முதலில் தொடங்கி வைத்தார். இனவுணர்ச்சி. தேசிய உணர்ச்சியின் மறுப்பக்கம்; இனவுணர்ச்சி, இன ஒருமைப்பாட்டையும் உருவாக்க வல்லது, உருவாக்கப் பயன்படுத்தப்பட வேண்டும் எனும் கொள்கையில் அசைக்க முடியாத உறுதி கொண்டவர் ம.பொ.சி. இனப்பூசலை, இனப் பகைமையை, பிரிவினையைத் தூண்டவல்ல இனவுணர்ச்சியின் முதல் எதிரி என்றும் ம.பொ.சி. சொல்லாலும் செயலாலும் நிறுவியுள்ளார். இதற்கு, அவருடைய பல நூல்களே, சான்றுகளாகத் திகழ்கின்றன. இந்நூலில் அவர் கூறியுள்ள, பின்வரும் கருத்துக்கள் இனவழி ஆய்வில் அவருடைய அணுகு முறையை எடுத்துக் காட்டுகின்றன.

"தமிழில் உள்ள பண்டைய இலக்கியங்களில் என்ன சொல்லப் பட்டிருந்தாலும் சரி, இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்கு எதிராக எந்த ஓர் இலக்கியத்தையும் பயன்படுத்துவது, தமிழினத்தார் இந்திய சமுதாயத்தோடு இணைந்து வாழ்வதற்குக் கேடு செய்வதாகும். ஆகவே,

இந்நூலில் அவ்வுணர்ச்சியை வலியுறுத்திக் கூறும் இடந்தோறும் இந்திய தேசிய ஒருமைப்பாட்டின் அவசியத்தையும் நினைவூட்டியிருக்கிறேன்.''

''புதிய பாரதம் பூத்து வரும் இந்த நேரத்திலே இந்திய மொழிகள் பெற்றுள்ள இலக்கியங்களிலே அங்குமிங்குமாகக் காணப்படும் இனவுணர்ச்சிக் கருத்துக்களை, இன எழுச்சியோடு உள்ள நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தனி நூல் படைப்பது அவசியமாகிறது. இது, இலக்கிய மறுமலர்ச்சிக்குச் செய்யும் தொண்டாகவும் இருக்கும், சாதிச் சழக்குகளிலிருந்து, சமயப் பூசல்களிலிருந்து, வருணாசிரமக் கொடுமைகளிலிருந்து இந்திய மக்களையெல்லாம் மீட்கும் சமூக சீர்திருத்தப் பணியாகவும் அமையும். இந்தப் பணி இந்தியாவிலுள்ள மொழிதோறும் தொடங்குமனால் நான் மகிழ்ச்சியடைவேன். ஆனால், அதனை நானே தொடங்கி வைக்கும் ஆற்றல் எனக்கு இல்லை.

''இந்திய மொழிகளிலே தமிழ் மொழி ஒன்றில் மட்டுமே யான் புலமை பெற்றிருக்கிறேன். அதுவும் ஓரளவுதான். ஆகவே, இலக்கியங்களிலே இனவுணர்ச்சியைத் தேடுகின்ற திருப்பணியைத் தமிழிலே தொடங்கி வைக்க முயல்கின்றேன். சங்க காலத்திலிருந்து தற்காலம் வரை தோன்றியுள்ள இலக்கியங்களிலே தலையாயவற்றை மட்டும் எடுத்துக் கொண்டு ஆராய முயல்கின்றேன்.''

சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம், நந்திக்கலம்பகம், கலிங்கத்துப் பரணி, கம்ப இராமாயணம், திருத்தொண்டர் புராணம், வில்லிபாரதம், தேசிய இலக்கியங்கள் ஆகியனவற்றைத் தமிழ் இனவுணர்ச்சி எனும் அளவு கோலை மட்டும் கொண்டு ஆய்வு செய்துள்ளார். அந்த நூல்களின் இலக்கியச் சுவை, புலமைச் செறிவு, புனைவுத்திறம் முதலானவற்றை ம.பொ.சி. மறுக்கவில்லை. ஆனால், தமிழ், தமிழன், தமிழகம் பற்றிய இனப் பெருமை போற்றப் பெற்றுள்ளதா? மறைக்கப் பெற்றுள்ளதா? எனும் நோக்கை மட்டும் கொண்டு இனவழி ஆராய்ச்சியை ம.பொ.சி. நிகழ்த்தியுள்ளார்.

''மணிமேகலை, கலிங்கத்துப்பரணி ஆகிய இலக்கியங்கள் பற்றிப் புலவருலகம் கொண்டிருக்கும் முடிவுகளோடு மாறுபடும் கருத்துக்களை இந்நூலில் யான் தெரிவித்துள்ளேன். இனக்கண் கொண்டு இந்நூலைப் படிக்கும் எவரும் என் கருத்துக்களை ஏற்பது உறுதி'' என்று ஆய்வாளர் ம.பொ.சி. கூறியுள்ளார்.

சிலப்பதிகாரம், முத்தொள்ளாயிரம், நந்திக்கலம்பகம், கம்ப இராமாயணம், திருத்தொண்டர் புராணம், வில்லிபாரதம், தேசிய இலக்கியங்கள் ஆகியவற்றில் மொழிப்பற்றும், இனப்பற்றும் வெளிப்பட்டுள்ளன என ம.பொ.சி ஆய்வு செய்துள்ளார்.

மணிமேகலையும், கலிங்கத்துப் பரணியும் தமிழ் இனவுணர்ச்சியை வெளிப்படுத்த வில்லை என கடுமையாகச் சாடியுள்ளார்.

வரலாற்று ஞானம், இலக்கியப் புலமை, திறனாய்வு நுட்பம் யாவும் "இலக்கியங்களில் இனவுணர்ச்சி"யில் ஐயமற நிறுவப் பெற்றுள்ளன.

## தமிழகத்தில் பிறமொழியினர்

இலக்கிய நோக்கில் விளைந்த ஆய்வு நூலான "இலக்கியங்களில் இனவுணர்ச்சி" போன்று அரசியல் நோக்கில் விளைந்த ஆய்வு நூல், "தமிழகத்தில் பிறமொழியினர்." இவ்விரு நூல்களும் பொருட் தொடர்பால் "இரட்டை நூல்கள்" என்றும் குறிப்பிடுதல் பொருந்துவதாகும்.

"பிராமணரல்லாதார் இயக்கமானது நடைமுறையில் தமிழரல்லாதார் இயக்கமாகவே" இருந்தது என்பது ம.பொ.சி.யின் கருத்து. பிராமணரல்லாதார் இயக்கமான நீதிக்கட்சியின் ஆட்சியின் காலத்தில் தமிழரல்லாதார் ஆட்சித் துறையில் செல்வாக்கு பெற்றனர் என்பது ம.பொ.சி.யின் கணிப்பு. இதனால் பிற மொழியினர் ஆதிக்கம் நிலவியதை தமது ஆய்வின் மையப் புள்ளியாகக் கொண்டுள்ளார் ம.பொ.சி.

பிறமொழியினர் என்பவர் யார்? ஆந்திரம், மலையாளி, கன்னடர் - ஆகியோர் என்று ம.பொ.சி இந்நூலில் அடையாளங் காட்டுகின்றார். இவர்களை வைத்து, பிராமணரல்லாதார் இயக்க ஆட்சி அதாவது நீதிக் கட்சி ஆட்சி எவ்வாறு தமிழரலல்லாதார் ஆட்சியாக விளங்கியது என்பதை ம.பொ.சி. இந்நூலில் ஆய்வு செய்துள்ளார்.

## நீதிக்கட்சி ஆட்சியில் பிறமொழியினர் ஆதிக்கம்

"பிராமணரல்லாதார் என்ற வகுப்புணர்வானது ஆந்திரர், கேரளர், கன்னடர் ஆகிய வேற்றினத்தவரையும் தம்மவராகக் கருதும் மயக்கத்தைத் தமிழினத்தாருக்குத் தந்தது. தமிழ் நாட்டுப் பிராமணர்களும் தமிழரல்லாத பிராமணர்களைத் தம்மவராகக் கருதும் வழக்கத்தைக் கடைப்பிடிக்கலாயினர். எதிர் எதிரான இந்தப் போட்டி உணர்ச்சிதான் தமிழகத்தைத் தமிழரல்லாத ஆந்திர, கேரள, கன்னட இனங்களில் உத்தியோக வேட்டைக் காடாக்கி விட்டது எனலாம்." இவ்வாறு ஜஸ்டீஸ் கட்சி ஆட்சியில் தமிழரல்லாத பிறமொழியினர் அரசு பணித்துறையில் ஆதிக்கம் செலுத்தியதைச் சுட்டிக் காட்டியுள்ளார். இதற்கான புள்ளி விவரங்களையும் ம.பொ.சி வழங்கியுள்ளார்.

நீதிக்கட்சியின், கட்சி அமைப்பிலும், அமைச்சரவையிலும் பிறமொழியினர். ஆதிக்கமே நிலவியதாக ம.பொ.சி. பின்வருமாறு எமகியள்ளார்.

“1916-ல் ஜஸ்டிஸ் கட்சி தோன்றியதிலிருந்து 1936-ல் அந்தக் கட்சியின் ஆட்சி அஸ்தமித்தது வரையுள்ள 17 ஆண்டு காலத்திலே சுத்தத் தமிழர் எவரும் அந்தக் கட்சியின் தலைவர் பீடத்தில் ஏறியதில்லை. அது சட்டமன்றத்தில் எதிர்க் கட்சியாக இருந்த போதும் அதன் தலைமை ஆந்திரரிடமே இருந்தது.

“பிராமணர் ஆதிக்கத்திலிருந்து பிராமணரல்லாதாரைக் காப்பதற்குப் பிறந்த ஜஸ்டிஸ் கட்சியின் ஆட்சியிலே அரிசனர் எவரும் அமைச்சராக்கப்படவில்லை என்பதும் இங்கு நினைவில் கொள்ளத்தக்கதாகும். திரு. இரட்டைமலை சீனிவாசன், திரு. எம்.சி.ராசா, திரு. வி.ஐ.முனுசாமிப் பிள்ளை, திரு. தர்மலிங்கம்பிள்ளை, திரு. என். சிவராஜ் ஆகிய பட்டதாரிகளான அரிசனத் தலைவர்கள் ஜஸ்டிஸ் கட்சியில் முன்னணியில் இருந்தனர். அவர்களில் ஒருவரை அமைச்ச-ராக்கியிருக்கலாம். ஆனால், அப்படி ஒரு நீதியை அரிசன மக்களுக்கு வழங்கவில்லை ‘நீதிக் கட்சி’. பிராமணர் ஆதிக்கத்தை அழிக்கப் பிறந்த ‘நீதிக் கட்சி’யின் ஆதரவோடு திரு. என்.ஆர். சேதுரத்தினம் ஐயர் கூட அமைச்சராக முடிந்தது. ஓர் அரிசனருக்கு அந்தப் பேறு கிடைக்கவில்லை. மூன்றரை மாதகாலமே பிழைத்திருந்த இடைக்கால ஆட்சியில் தான் திரு எம்.சி. ராசா என்ற அரிசனர் அமைச்சர் பதவியைப் பெற்றார் அது ஆங்கிலேய கவர்னர் தயவால் நிகழ்ந்த அற்புதமாகும்.” (தமிழகத்தில் பிறமொழியினர் - பக்.33-34.)

நீதிக்கட்சிக்குப் பேராதரவு அளித்து வந்த ஆதி திராவிடர்கள், அந்தக் கட்சியின் ஆட்சியில் ‘சாதி இந்துக்களே’ செல்வாக்கு பெற்றனர் என்று கூறத் தொடங்கி விட்டனர். ஆதிதிராவிடர் தலைவர் எம்.சி. ராஜா (1883-1947) 1929இல் ஆட்சிக்கு வந்த நீதிக்கட்சியினரை சாதி இந்துக்கள் ஆட்சி என்று விமர்சித்தார். இந்தக் குற்றசாட்டு இன்றைய தலித் விழிப்புணர்வில் எதிரொலித்து வருகின்றது.

## பகைமை இல்லை காழ்ப்பில்லை

பிறமொழியினரிடம், ம.பொ.சி. பகைமை பாராட்டியோ, காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்தியோ எழுதவில்லை. தமிழர்கள் ஆட்சித் துறையில் அவர்கள் பெறவேண்டிய பங்கினைப் பெறவில்லையே எனும் ஆதங்கத்தை வெளிப்படுத்தவே எழுதினார். இவ்வுண்மையை பின்வரும் அவர் கருத்தில் அறிகின்றோம்.

“தமிழ் நாட்டிலுள்ள மொழிவழிச் சிறுபான்மையினர் ஆதிக்கம் பற்றி இந்நூலில் விருப்பு வெறுப்பின்றி விமர்ச்சித்துள்ளேன். அவர்கள் மீது எனக்குத் துளியளவும் காழ்ப்பில்லை. நான் இந்தியன்; தேசியப் பாரம்பர்யத்தைச் சேர்ந்தவன்; புத்தி தெரிந்த நாள் தொட்டு, பாரத மண்ணை மாதாவாக மதித்து வந்தே மாதரம் என்ற மந்திரத்தை

உச்சரித்து வழிபட்டவன். மற்றும் நான் காந்தியவாதி. உயிர்க்குலம் முழுவதையும் நேசித்த வள்ளலார் பக்தன். ஆகவே, தமிழரலல்லாதாரை அந்நியராகக் கருதும் மனப்பான்மை எனக்கு அறவே இல்லை.

"ஆயினும், ஒரு தேசத்தை இன்னொரு தேசம் ஆக்கிரமிப்பதை எதிர்ப்பது உலக சமாதானத்திற்குச் செய்யும் தொண்டாகக் கருதப்படும் காலமிது. அது போல், இந்திய தேசத்திற்குள்ளே ஓர் இனம் இன்னொரு இனத்தின் மீது ஆதிக்கஞ் செலுத்துவதை எதிர்ப்பதையும் அத்தகைய ஆதிக்கத்தை அகற்ற அமைதியான வழியில் பாடுபடுவதையும் உள்நாட்டுச் சமாதானத்திற்குச் செய்யும் தொண்டாக நான் கருதுகிறேன்."

## இரு மொழியாளர் பிரச்சினை

'தமிழகத்தில் பிறமொழியினர்' ஆய்வில் மிக முக்கியமான ஆய்வு இரு மொழியாளர் பிரச்சினை என்பதாகும்.

"மொழிவழிச் சிறுபான்மையினர் வேறு; இரு மொழியாளர் வேறு" எனும் கருத்தை தெளிவுற ம.பொ.சி. விளக்கியுள்ளார்.

"மொழிவழிச் சிறுபான்மையினர் என்போர் தமிழ் நாட்டில் வாழ்ந்தாலும் - அவர்களுக்கு வேற்று மாநிலத்திலே சொத்து, சுதந்திரம் உண்டு. பெண் கொடுக்கல் வாங்கலும் உண்டு. அவர்கள் தமிழ் நாட்டில் வாழ்ந்தாலும் தமிழின் மூலம் கல்வி பயிலாமல், தங்கள் வீட்டு மொழி - அதாவது, தாய் மொழி மூலமே கல்வி பயில்கின்றனர்" இவ்வாறு மொழி வழிச் சிறுபான்மையினர் பற்றி விளக்கி விட்டு, 'இரு மொழியாளர்' பற்றி பின்வரும் விளக்கத்தை எழுதியுள்ளார், ம.பொ.சி.

"இரு மொழியாளர்" நிலைவேறு. அவர்கள் பிரிட்டிஷ் ஆட்சி காலத்திற்கு முன்பே தமிழகத்தில் குடியேறியவர்கள். தமிழகத்தில் தெலுங்கு நாயக்கர்கள் ஆட்சி நடைபெற்ற காலத்தில், 'ரெட்டி', "நாயுடு", "ராஜுக்கள்" எனப்படும் பல்வேறு தெலுங்கு சாதியினர் நாயக்க அரசர்களைப் பின்பற்றி - அவர்கள் ஆதரவோடு - தமிழ்நாட்டில் குடியமர்ந்தனர். இது நிகழ்ந்தது சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் அவர்களின் சந்ததியார்தான் இன்று நம்மிடை வாழும் இரு மொழியாளர்கள்.

"இவர்களிலே தெலுங்கருமுண்டு; கன்னடருமுண்டு. இவர்கள் காலப் போக்கில் தமிழரோடு தமிழராகக் கலந்து வருகின்றனர் எனலாம். இவர்களில் பெரும்பாலோர் தெலுங்கையோ, கன்னடத்தையோ வெறும் பேச்சளவில்தான் - அதுவும் வீட்டளவில்தான் - பயன்படுத்துகின்றனர். மற்றபடி நாட்டு மொழியான தமிழையே பாடமொழியாகக் கொண்டு கல்வி பயில்கின்றனர். ஆம்; வீட்டு மொழியாகத் தெலுங்கையும் நாட்டு மொழியாகத் தமிழையும் அன்றாட வாழ்க்கை மொழியாகக் கொண்டு இரு மொழியாளராகி விட்டனர்."

## கட்டபொம்மன்

இரு மொழியாளரான கட்டபொம்மனை ம.பொ.சி. விடுதலைப் போராட்டத்தைத் தொடங்கி வைத்த மாவீரனாக அறிமுகப்படுத்தி வரலாற்றில் இடம் பெறவைத்தார். கட்ட பொம்மன் "ஆந்திர பாரம்பர்யத்தில் இருந்து வந்தவனாயிருந்தும், கடைசிவரை தெலுங்கை வீட்டு மொழியாகக் கொண்டவனாக இருந்தும், இன்று வரை ஆந்திர நாட்டார் அவனைக் கொண்டாடுவதில்லை. ஏகாதிபத்தியத்தை எதிர்த்த தேசபக்த இந்தியன் என்றவகையில் கூட ஆந்திர நாட்டார் கட்டபொம்மனை மதிப்பதில்லை. காரணம், அவன் தமிழ் நாட்டவன் என்பது தான்" என்றும் எடுத்துக் காட்டி இரு மொழியாளர் தமிழ் நாட்டாரே எனும் தமது வாதத்திற்கு வலிமை சேர்த்துள்ளார். ம.பொ.சி.

"விடுதலைப் போராட்டக் காலத்தில், நாடு விடுதலை பெற்றபிறகும் இரு மொழியாளரைத் தமிழர் விலக்கி வைத்ததில்லை, அவர்களும் தமிழரிடமிருந்து விலகிச் சென்றதில்லை" எனும் உண்மையையும் உணர்த்தியுள்ளார் ம.பொ.சி.

## தமிழ்மொழித் தொண்டில்

இருமொழியாளர்களின் தமிழ் வளர்ச்சித் தொண்டை, ஏற்றிப் போற்றி பின் வருமாறு எழுதியுள்ளார், ம.பொ.சி.

"தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய இரு மொழியாளர் ஏராளம், ஏராளம்! தமிழ்த் தாய்க்குக் காவடிச் சிந்து என்ற புதிய அணியைப் பூட்டிய அண்ணாமலை ரெட்டியாரின் தமிழ்த் தொண்டை நன்றியுள்ள தமிழர் மறக்க முடியுமா? இன்றும் கல்லூரி மட்டத்திலே தமிழைச் சிறப்பு மொழியாக ஏற்று, அதிலே எம்.ஏ. பட்டம் பெற்று வருவோரில் இருமொழியாளர் ஏராளமாக இருந்து வருகின்றனர்."

## முடிவுரை

'தமிழகத்தில் பிற மொழியினர்' பின் வரும் விளக்கத்துடன் நிறைவு பெற்றுள்ளது.

"இந்நூல் தமிழகத்தின் அரை நூற்றாண்டுக் கால அரசியல் வரலாற்று இன அடிப்படையில் தமிழகத்தின் அரசியல் வரலாறாக வெளிவரும் முதல் நூல் இதுவாகும். இந்நூலில் சாதிவெறி - கட்சிவெறி - இனவெறி மத வெறி ஆகியவற்றின் தீய விளைவுகளை நான் படம் பிடித்துக்காட்டியிருக்கிறேன். இதனால் பாதிக்கப்படுவோர் இருக்கலாம். அவர்களும் தமிழராதலால், தங்கள் தாய் இனத்தின் நன்மையைக் கருதி, என்னைப் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்."

# பின் இணைப்பு - I

## ம.பொ.சி. படைத்த நூல்கள்

**1.** தன் வரலாறு

1. எனது போராட்டம் - 1974

**2.** சிறுகதை நூல்

வைகுந்தம் திறந்தது (சிறு கதைத் தொகுப்பு) - 1980

**3.** பயண நூல்கள்

1. மலேசியாவில் ஒரு மாதம் - 1965
2. மாஸ்கோவிலிருந்து லண்டன் வரை - 1972
3. மொரிசியஸ் தீவில் ஒருவாரம் - 1987
4. அமெரிக்காவில் மூன்று வாரம் - 1987

**4.** வாழ்க்கை வரலாறுகள்

1. கப்பலோட்டிய தமிழன் - 1944
2. வீரபாண்டிய கட்டபொம்மன் - 1949
3. கயத்தாற்றில் கட்டபொம்மன் - 1950
4. தளபதி சிதம்பரனார் - 1950
5. சுதந்திரவீரன் கட்டபொம்மன் - 1950
6. கப்பலோட்டிய சிதம்பரனார் (விரிவானபதிப்பு) - 1972
7. தோழர் சிங்காரவேலர் வீர வாழ்க்கை - 1985
8. நாடகப் பேராசிரியர் - சதாவதானி கிருஷ்ண சாமிப் பாவலர் வாழ்க்கை வரலாறு - 1988
9. முப்பெரும் ஞானியர் - 1989

**5.** வள்ளலார் பற்றிய நூல்கள்

1. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு - 1963
2. வள்ளலாரும் பாரதியும் - 1965
3. வள்ளலார் வளர்த்த தமிழ் - 1966
4. வள்ளலார் வகுத்த வழி - 1970
5. வள்ளலார் கண்ட சாகாக் கலை - 1970
6. வானொலியில் வள்ளலார் - 1976
7. வள்ளலாரும் காந்தியடிகளும் - 1977
8. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு (பள்ளி பதிப்பு) - 1978

**6.** பாரதியார் பற்றிய நூல்கள்

1. எங்கள் கவி பாரதி - 1953
2. பாரதியாரும் ஆங்கிலமும் - 1961

3. பாரதி கண்ட ஒருமைப்பாடு - 1962
4. உலக மகாகவி பாரதி - 1966
5. பாரதியார் ப்ாதையிலே - 1974
6 பாரதியின் போர்க்குரல் - 1979
7. பாரதியார் பற்றிய ம.பொ.சி. பேருரை - 1983

**7. காந்தியடிகள் பற்றிய நூல்கள்**

1. தமிழர் கண்ட காந்தி - 1949
2. காந்தியடிகளும் ஆங்கிலமும் - 1961
3. காந்தியடிகளும் சோசலிசமும் - 1971
4. மகாத்மாவும் மதுவிலக்கும் - 1979
5. காந்தியடிகளைச் சந்தித்தேன் - 1979
6. பயங்கரவாதமும் காந்திய சகாப்தமும் - 1994

**8. திருவள்ளுவர் பற்றிய நூல்கள்**

1. வள்ளுவர் வகுத்த வழி - 1952
2. திருவள்ளுவரும் கார்ல் மார்க்சும் - 1960

**9. கம்பர் பற்றிய நூல்கள்**

1. கம்பர் கவியின்பம் - 1966
2. கம்பரிடம் யான் கற்ற அரசியல் - 1979
3. கம்பரும் காந்தியடிகளும் - 1981
4. கம்பரின் சமயக் கொள்கை - 1983

**10. சிலப்பதிகாரம் பற்றிய நூல்கள்**

1. சிலப்பதிகாரமும் தமிழரும் - 1947
2. கண்ணகி வழிபாடு - 1950
3. இளங்கோவின் சிலம்பு - 1953
4. வீரக்கண்ணகி - 1958
5. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் (உரை) - 1961
6. மாதவியின் மாண்பு - 1968
7. கோவலன் குற்றவாளியா? - 1971
8. சிலப்பதிகாரத் திறனாய்வு - 1973
9. சிலப்பதிகார யாத்திரை - 1977
10. சிலப்பதிகார ஆய்வுரை - 1979
11. சிலப்பதிகார உரையாசிரியர்கள் சிறப்பு - 1980
12. சிலப்பதிகாரத்தில் யாழும் இசையும் - 1990
13. சிலம்பில் ஈடுபட்டதெப்படி? - 1994

**11. மாநில சுயாட்சிப் பிரசார நூல்கள்**

1. தமிழகத்தில் தமிழரசு - 1946
2. த்மிழருக்குச் சுயநிர்ணயம் - 1946

| | | | |
|---|---|---|---|
| 3. | புதிய தமிழகம் | - | 1946 |
| 4. | தமிழரும் பிரிட்டிஷ் திட்டமும் | - | 1946 |
| 5. | தமிழரசுக் கழக முதலாவது மாநில மாநாட்டுத் தலைமயுரை | - | 1947 |
| 6. | தமிழன் குரல் | - | 1947 |
| 7. | சுயாட்சித் தமிழகம் | - | 1949 |
| 8. | பிரிவினை வரலாறு | - | 1950 |
| 9. | திராவிடத்தாரின் திருவிளையாடல்கள் | - | 1950 |
| 10. | திராவிடர் கழகமே, வேங்கடத்திற்கு வெளியே போ! | - | 1951 |
| 11. | தமிழரசா திராவிடஸ்தானா? | - | 1952 |
| 12. | தமிழரசுக் கழக இரண்டாவது மாநில மாநாட்டுத் தலைமை உரை | - | 1952 |
| 13. | வடக்கெல்லைப் போர் | - | 1953 |
| 14. | முரசு முழங்குகிறது | - | 1955 |
| 15. | தி.மு.க.வின் கொள்கை மாற்றம் | - | 1957 |
| 16. | சுயாட்சியா, பிரிவினையா? | - | 1959 |
| 17. | மொழிச் சிக்கலும் மாநில சுயாட்சியும் | - | 1968 |
| 18. | மாநில சுயாட்சிக் கிளர்ச்சியின் வரலாறு | - | 1973 |
| 19. | சட்ட மன்றத்தில் சுயாட்சிக் குரல் | - | 1974 |
| 20. | புதிய தமிழகம் படைத்த வரலாறு | - | 1986 |

**12. மொழிச் சிந்தனைகள் பற்றிய நூல்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | தமிழும் கலப்படமும் | - | 1960 |
| 2. | தமிழா? ஆங்கிலமா? | - | 1961 |
| 3. | இன்பத் தமிழா? இந்தி - ஆங்கிலமா? | - | 1963 |
| 4. | ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு வரலாறு | - | 1964 |
| 5. | தமிழை வளர்க்கக் கோரி ஆளுநர்க்கு விண்ணப்பம் | - | 1976 |
| 6. | நாடகத் தமிழ் | - | 1979 |
| 7. | கல்வி மொழி தமிழா? ஆங்கிலமா? (ம.இரா. இளங்கோவன் தொகுத்தது) | - | 1981 |
| 8. | சென்னைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரை | - | 1981 |
| 9. | ஆங்கிலம் வளர்த்த மூட நம்பிக்கை | - | 1982 |
| 10. | தமிழும் சமஸ்கிருதமும் | - | 1984 |
| 11. | ஆங்கில ஆதிக்கம் அகல பத்துக்கட்டளைகள் | - | |

**13.** விடுதலைப் போராட்டம் பற்றிய நூல்கள்

1. சுதந்திரப் போரில் தமிழகம் – 1948
2. முதல் முழக்கம் – 1968
3. விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு – 1970
4. காந்தியடிகளுக்கு முற்பட்ட காலத்தில் விடுதலைப் போர் – 1974
5. வந்தேமாதரம் வரலாறு – 1977
6. விடுதலைக்குப் பின் தமிழ் வளர்ந்த வரலாறு – 1978
7. சுதந்திரப் போர்க்களம் – 1980
8. விடுதலைப் போரில் தமிழகம் (2 தொகுதிகள்) – 1982
9. இந்திய தேசியத்திற்கு ஒரு நூறு வயது – 1986
10. வேதாரணியத்திலிருந்து டில்லி ராஜ்காட்வரை – 1988

**14.** இனவழி ஆராய்ச்சி நூல்கள்

1. கலிங்கத்துப் பரணி திறனாய்வு – 1975
2. தமிழகத்தில் பிறமொழியினர் – 1976
3. இலக்கியங்களில் இன வளர்ச்சி – 1978
4. வில்லிபாரதத்தில் தமிழுணர்ச்சி – 1981
5. இலக்கியங்களில் இனவுணர்ச்சி – 1985

**15.** பேச்சுக்கலை பற்றிய நூல்கள்

1. பேச்சுக் கலை – 1950
2. மேடைப் பேச்சும் பொதுக்கூட்டமும் – 1951

**16.** கட்டுரை நூல்கள்

1. ஏன் வேண்டும் எதிரணி – 1946
2. ஆந்திரப் பொங்கல் – 1947
3. கம்யூனிஸ்டுகள் முடிவை மாற்ற முயல்வார்களா? – 1947
4. வானொலியில் ம.பொ.சி. – 1947
5. மே தினப்புரட்சி – 1949
6. சீர்திருத்தப் போலிகள் – 1950
7. தமிழர் திருநாள் – 1951
8. இலக்கியத்தின் எதிரிகள் – 1953
9. இலக்கியச் செல்வம் – 1955
10. ம.பொ.சி. கூறுகிறார் – 1955

| | | | |
|---|---|---|---|
| 11. | பொம்மன் புகழிலும் போட்டியா? | - | 1956 |
| 12. | கட்டுரைக் களஞ்சியம் | - | 1956 |
| 13. | இன்பத்தமிழகம் | - | 1956 |
| 14. | ம.பொ.சி. பேசுகிறார் (பர்மா சொற்பொழிவு) | - | 1956 |
| 15. | சிந்தனை அலைகள் | - | 1964 |
| 16. | இலக்கியத்தில் சோசலிஸம் | - | 1965 |
| 17. | தமிழிசை வரலாறு | - | 1966 |
| 18. | ஔவை - யார்? | - | 1967 |
| 19. | சான்றோரின் சாதனைகள் | - | 1970 |
| 20. | ஆன்ம நேய ஒருமைப்பாடு | - | 1970 |
| 21. | திருக்குறளில் கலைப்பற்றிக் கூறாததேன்? | - | 1974 |
| 22. | தமிழிசை வாழ்க | - | 1978 |
| 23. | கல்வி நெறிக் காவலர் (திரு. நெ.து. சுந்தர வடிவேலு மணிவிழாச் சொற்பொழிவு) | - | 1974 |
| 24. | தொல்காப்பியரிலிருந்து பாரதியார் வரை | - | 1979 |
| 25. | ஆன்மீகமும் அரசியலும் | - | 1980 |
| 26. | நவபாரதத்தை நோக்கி | - | 1982 |
| 27. | சிலம்புச் செல்வரின் பல்கலைப் பேருரை | - | 1984 |
| 28. | இலக்கியங்களில் புத்திர சோகம் | - | 1986 |
| 29. | நானறிந்த ராஜாஜி | - | 1987 |
| 30. | இராமன் சீதாபிராட்டி வாக்குவாதம் | - | 1989 |
| 31. | எனது பார்வையில் நாமக்கல் கவிஞர் | - | 1989 |
| 32. | நேருஜி என் ஆசான் | - | 1989 |
| 33. | தமிழர் திருமணம் | - | 1990 |
| 34. | எனது பார்வையில் பாவேந்தர் | - | 1991 |
| 35. | ஈழத் தமிழரும் நானும் | - | 1992 |
| 36. | எம்.ஜி.ஆருடன் எனக்கிருந்தத் தொடர்பு | - | 1995 |
| 37. | எழுத்துச் சீர்திருத்தம் | - | 1995 |

**17.** பதிப்பித்த நூல்

ஔவையார் அருளிச்செய்த கல்வியொழுக்கம் மூலமும் திரு.ஜே.எஸ். அவர்களின் ஆங்கில மொழி பெயர்ப்பும் - 1980

# பின் இணைப்பு - II

## உதவிய நூல்கள், மலர்கள், இதழ்கள்

நூல்கள்

1 இளங்கோவன் மா ரா. - எம்.ஏ., 1980, சிலம்புச் செல்வரின் தலையங்க இலக்கியம்.

2 மணி பெ.சு. 1982, - பாரதி புகழ் பரப்பும். ம.பொ.சி.

3. மணி பெ.சு. 1985 - தடைகளை வென்று தலைமை பெற்ற ம.பொ.சி.

4. மணி பெ.சு. 2001 - இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - மூன்றாம் பதிப்பு

5 மணி பெ.சு. 2004 - ம.பொ.சி.யின் பார்வையில் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு.

மற்றும் நூலில் குறிப்பிடப்பெற்றுள்ள ம.பொ.சி.யின் நூல்கள்.

மலர்கள் :

1. செங்கோல் - தமிழரசுக் கழக வெள்ளிவிழா மலர் - 1972
2. செங்கோல் - வெள்ளி விழா மலர் - 1976
3. ம.பொ சிவஞானம் 75-வது பிறந்தநாள் விழா மலர் - 1980
4. ம.பொ.சிவஞானம் முத்துவிழா மலர் - 1986
5. ம.பொ.சி. 87-வது பிறந்த நாள் விழா மலர் - 1992
(வெளியீடு தமிழ்நாடு காங்கிரஸ்கமிட்டி)
6. ம பொ.சிவஞானம் - தொண்ணூறாம் ஆண்டு பிறந்தநாள் மலர் - 1995

இதழ்கள் :

கிராமணி குலாம் - ம.பொ.சி.

தமிழ் முரசு - ம.பொ.சி.

தமிழன் குரல் - ம.பொ.சி.

செங்கோல் - ம.பொ.சி.





**ம.பொ.சி.** என்று தமிழ் நெஞ்சங்களால் போற்றிப் புகழப்படும் ம.பொ.சிவஞானம் (1906–1995) தமிழக வரலாற்று நாயகர்களில் ஒருவர். விடுதலைப் போராட்ட வீரர்; சிறை சென்ற தியாகி; மேடைத் தமிழ் வளர்த்த மேதை; இதழாசிரியர்; அரசியல், சமூகம், இலக்கியம், ஆன்மீகம் எனும் நோக்குகளில் 140 நூல்களுக்கு மேல் படைத்தளித்தப் பேராற்றல் மிக்க எழுத்தாளர். இந்திய தேசியத்தையும் தமிழ் தேசியத்தையும் இரு விழிகளாகக் கொண்டவர். புதிய பார்வையில் இலக்கியங்களை அரசியல், சமூக மாற்றங்களுக்குப் பயன்படுத்தியவர். அரசியலிலும், இலக்கியத்திலும் ஒன்று சேரப் புகழொளிப் பெற்றவர். சாகித்திய அகாதெமிப் பரிசு பெற்றவர். தமிழகத்தின் எல்லைகளையும், தலைநகரத்தையும் காத்து 'புதிய தமிழகம்' படைக்கப் பாடுபட்டவர்.

**பெ.சு.மணி:** வரலாறு, சமூகம், இலக்கியம், தேசியம், ஆன்மீகம் முதலானத் துறைகளில் 50 நூல்களைப் படைத்தவர். வீரமுரசு சுப்பிரமணியசிவா, இராமகிருஷ்ணர் இயக்கமும் தமிழ்நாடும், பத்திரிகையாளர் பாரதியார் எனும் நூல்கள் தமிழ்நாடு அரசு பரிசுகளை பெற்றுள்ளன. தமிழ்நாடு அரசின் 2001ஆம் ஆண்டிற்கான 'பாரதி விருதும்' பெற்றவர். அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்க நிறுவனர்களில் ஒருவராகவும், பொதுச் செயலாளராகவும் பணியாற்றியவர். இலங்கையில் மும்முறை (1992, 1994, 1996) இலக்கியம் – ஆன்மீகச் சுற்றுப்பயணங்கள் மேற்கொண்டவர்.

•

*Maa.Po. Sivagnanam* (Tamil) Rs. 25
ISBN 81-260-2085-7

சாகித்திய அகாதெமி